P. N. APPUSWAMI AIYAR

சுடர்

2080



தில்லித் தமிழ்ச் சங்கம்

FROM *Coast* TO *Coast*



AIR TRAVEL

For business or pleasure anywhere in the country hop in few hours.

We are twenty - four hours on duty on the net--work of scheduled services. Travel in comfort and luxury of your nationalized Airlines to help make India great & prosperous.

Our courteous service, personal attendance, free lunch and refreshments & other transport facilities have set a standard of flying comfort.

BOMBAY
Gateway of India

CALCUTTA
Victoria Memorial

MADRAS
Bhuwaneswar Temple

INDIAN AIRLINES CORPORATION

PLEASE CONTACT THE NEAREST OFFICE

FOR BEST QUALITY

S. V. SWAMINATH

DIAMONDS

Remember

MANILAL & SONS

'Manilal Mansions'

172, Netaji Subashchandra Bose Road,

MADRAS I.

Telephone : 3630

13817

Telegrams : 'MILKYWAY'

" ஹெர்குலிஸ்-இந்தியா " சைக்கில்கள்
அதிகம் தயார் ஆவதினால், தேசம், இந்த
முக்கிய போக்குவரத்தில் தன் சுயதேவையைப்
பூர்த்தியடைய உதவும் மார்க்கத்தில்
நாங்கள் வெகு வேகமாக
முன்னேறிக்கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில்
தயாரிப்பாளர்கள் :

டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்,
சென்னை.

TOMCO COCONUT OIL SHAMPOO
CASTOR HAIR OIL
LAVENDER
HAMAM
TOILET SOAP
Tomco EAU DE COLOGNE
80°
Tomco EAU DE COLOGNE SOAP
Tata Products of Quality
THE TATA OIL MILLS COMPANY LIMITED

P. N. APPUSWAMI AIYAR

With the compliments of:

The South Madras Electric Supply Corpn. Ltd.,
Power House, Tennur, Tiruchirapalli.

&

The Mettur Chemical & Industrial Corpn. Ltd.,
Mettur Dam, R. S.

Managing Agents:

SESHASAYEE BROTHERS LTD.

The Aluminium Industries Ltd.,
Kundara.
(Travancore-Cochin State)

The Fertilisers & Chemicals, Travancore Ltd.,
Udyogamandal P.O., Alwaye.

&

The Travancore-Cochin Chemicals Ltd.,
Udyogamandal P.O., Alwaye.

Managing Agents:

SESHASAYEE BROS. (Trav.) LTD.

R. CHAKRAVARTHY, M.A., B.L.,
Resident Representative,
SESHASAYEE BROTHERS LTD.,
TROPICAL BUILDINGS,
Cannaught Circus,
NEW DELHI.

சிலவு குறைக்க டயர்...

புதுப்பிக்கவும்

பத்து வருட நுண்ணிய அனுபவ முறையில். பஸ், கார் பழைய டயர்களை செப்பனிட்டு புதுப்பிக்கிறோம்.

முன்னணி இயந்திர முறையில், நாட்டின் ரஸ்தாக்களுக்கு உகந்த "ட்ரெட்" அமைத்து நீடித்த உழைப்பைக்காண பணியாற்றுகிறோம்.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

புதுக்கோட்டை

P. N. APPUSWAMI AIYA

சுடர் ஜய மலர்

பொருளடக்கம்

			பக்கம்
மழைப் பாட்டு	...	யோகி சுத்தானந்த பாரதி	10
விந்தையுள் விந்தை	...	டாக்டர் மு. வரதராசன்	13
சிரித்துவிடுங்கள்	...	'தேவன்'	15
இப்படிச் செய்யலாமா, பாருங்கள்	...	ஓ. வி. அளகேசன்	19
அமெரிக்க மாமாவைப் பாரு	...	கொத்தமங்கலம் சுப்பு	25
உயிர் நாடி	...	"அநுத்தமா"	27
கண்ணன் பிறந்தான்!	...	கி. வா. ஜகந்நாதன்	34
பாராளுமன்றம்	...	ஜி. எச். ஜி. ராமன்	38
இரு கடிதங்கள்	...	டி. என். விச்வநாதன்	43
ராதை பாட்டு	...	பெ. தூரன்	50
ஆரூடம் பலிக்குமா, தந்திரம் பலிக்குமா?		ஸி. ஆர். மயிலேறு	53
தாரகை ராணிக்கு	...	டி. வி. சுவாமிநாதன்	59
டில்லி நிருபர்	...	கே. ஸ்ரீனிவாசன்	63
பொழுதுபோக்கு	...	டாக்டர் நீ. ரா. ஸ்ரீநிவாசன்	67
கடலும் மதியும்	...	ஹா. பார்வதி	72
அல்லாமா சொன்ன கதை	...	பூ. சோமசுந்தரம்	73
சத்தியமே ஜெயம்	...	'சுப்புடு'	78
லண்டன் தமிழன்	...	பராங்குசம்	81
ஹாஸ்யக் குறள்கள்	...	"அழகன்"	85
மதமும் அனுபவமும்	...	பேராசிரியர் அ. முத்துசிவன்	88
நீர் என்னும் அற்புதம்	...	பெ. நா. அப்புஸ்வாமி	92
கற்பனே பேசுவையோ!	...	'வேணு'	95
ஒய்யாரி உலா	...	"சுந்தா"	96
தாயுமானுரின் கவிதை	...	முத்துசாமி வரதராசன்	100
மன மாற்றம்	...	ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன்	105
நட்சத்திரம்	...	பாக்கியம் சங்கர்	111
வாழ்க்கை மலர—கலை	...	பாலு சகோதரர்கள்	112
நினைவு அலைகள்	...	டி. என். ராஜரத்தினம்	117
அசோகவனம்	...	S. ஸ்ரீநிவாசன்	123
கலைஞர் உள்ளம்	...	"ராணு"	125
செத்துப் பிழைக்கலாம்	...	டி. என். சிவதாணு	132
இரவல் ஒரு கலை	...	சாந்தா ஜயராமன்	135
இதென்ன மறதி!	...	பூர்ணம் விச்வநாதன்	137
அதிர்ஷ்டசாலி	...	ச. மகாதேவன்	147
"தில்லியிலே புது தில்லியிலே"	...	தி. ர. பஞ்சாபகேசன்	153
அணுச்சக்தி	...	Dr. கே. எஸ். கிருஷ்ணன்	154
நடனம்	...	V. S. கணபதி சாஸ்திரிகள்	158

ஜய வருஷம்
சித்திரை மாதம்
விலை ரூபாய் 1.

சுடரில் காணும் கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல. கட்டுரைகளில் தெரிவிக்கப் பட்டுள்ள அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியோரின் அபிப் பிராயங்களே யன்றி, சங்கத்தின் அபிப்பிராயங்கள் அல்ல.

INDEX TO ADVERTISERS

	PAGE
Arni Silk House	24
Asiatic Government Security Life & Gen Ass. Co., Ltd.	51
Atlas Cycle Industries	86
Balasundaram Chettiar, S.M.S.R.	133
Balbir Bros. Ltd.	158
Balu Bros.	52
Bhagwant Singh & Co.	97
Bliss & Cotton	18
British Medical Hall	83
Butterways Dairy	122
Central News Agency	60
Chaudhry Tailors	31
Co-operative Photo Service	54
Dhanalakshmi Stores	20
Empire of India	134
Ensa Trading Co.	75
Farbenfabriken Bayer Aktiengesellschaft	163
Gemini Studios	(4th Cover)
Goodluck & Co.	58
Indian Airlines	(2nd Cover)
Indian Bank Ltd.	114
Indian Globe Insurance	102
Indian Restaurant	142
Jupiter Gen. Insurance Co.	104
K. G. K. & Co.	71
K. G. K. Sambar Powder	145
Koolaire Ltd.	79
Lakshmi Appalam Depot	14
Lakshmi Insurance Co.	37
Lever Bros.	110
Madras Electricals	46
Madura Mills	164
Mahabeer & Co., Ltd., J.	152
Manilal & Sons	1
Marina Fans	103
Metro	124
Muthukumaraswamy Chettiar	99

	PAGE
Natesan (Indtrs.) Ltd., P.	7
National Insulated Cables Co., Ltd.	61
National Savings	162
Narayan Bros.	74
New Asiatic Insurance Co., Ltd.	87
New Stationery Mart	77
Northern Railway	42
Palai Central Bank Ltd.	33
Pearey Lal & Sons	93
Poornima Silk House	12 & 65
Pindi Tent House	101
Prithvi Insurance Co., Ltd.	131
Rajkumar, Dr. N.	113
Ramanujams'	150
Rana Ink	126
Rangoon Studio	39
Rathnam & Co.	106
Selection Stores	130
Seshasayee Bros. (Trav.) Ltd.	3
South India Boarding House	80
South India Club Co-operative Supply Society Ltd.	12
Sugandh Coffee Works	29
Sun Electric Co.	37
Sundaram Industries	4
Sundaram N.	149
Superabhat Electrics	28
Swastik Vedaranyam Tobacco Company	88
Tata Oil Mills	2
T. I. Cycles	1
Union Dairy Farm	146
United India Life Assurance Co.	62
United India Provident Ass. Co.	23
Vaithyanatha Iyer's Provision & Oilman Stores	16
Vummudiars	161
West End Rehabilitation Co-operative Stores	94

We thank all the above Advertisers for their ready and generous assistance and wish them all success in their undertakings during the 'Jaya' year. —*The Editor*, "CHUDAR"

"NATCO"

AIR CIRCULATOR

Ventilates
Circulates
Cools

Ideal for Offices, Theatres, Cinemas, Hotels, Shops and all kinds of Public Places

LOW COST
with top features

STURDY
and trouble-free

ENSURES
complete satisfaction

For further details and prices, please apply to :

P. NATESAN (Industries) LTD.

'JAMMI BUILDINGS', MADRAS-4

Manufacturers of
Air Circulators & Air Break Switches.

ஆசாரவாசல்

வணக்கம்,

அன்பிற்குரிய பெரியோர்களை தலைவாயிலில் நின்று வரவேற்பது நமது மரபு. நம்முடைய முயற்சிக்கு ஒப்பிலா மாணிக்கமும், உத்தம புருஷனும், உலகம் போற்றும் ராஜதந்திரியுமான நேருஜி ஆசி கூறுகிறார். யோகி சுத்தானந்த பாரதி அருள் வாக்குத் தருகிறார். தமிழ் நாட்டு அறிஞர்கள், சிறந்த இலக்கிய விருந்தளித்து மகிழ்விக்கிறார்கள்.

நம்முடைய பணிக்கு இம்மலர் சான்று. தமிழ் மக்களுக்கு அன்புக் காணிக்கையாக இம்மலரைச் சமர்ப்பிக்கிறோம்.

ஆசிரியர்.



NEW DELHI,
March 18, 1954.

. . . . . . The Delhi Tamil Sangam has my good wishes and I am glad to know that it brings out a Literary Annual which has been commended. I think that it would be a good thing if people in the North develop a better acquaintance with Tamil. . . . . .

J. Nehru.

மழைப் பாட்டு

[யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதி]

[சுடர்மணி வாழ்க, டில்லித் தமிழ்ச் சங்கம் வெற்றிச் சுடர் வீசிப் பொலிக !

சென்ற ஏப்ரல் மே மாதங்களில் வட இந்தியா கொதித்துக் கொண்டிருந்தது. டில்லி, ஆக்ரா, மதுரை, ஹரித்வாரம் எல்லாம் சூடேறியிருந்தது. டில்லியில் தமிழன்பர்கள் செய்த அன்பும், குளிர் முகப்புன்னகையும் ஈரமளாவிய விருந்தும், சூட்டைத் தணித்து இயற்கையின் கொடூரத்தையும் வென்றன.

நான் வடலூரில் எனது யோக சமாஜத்திற்குத் திரும்பினேன். இங்கும் சூடு தாங்கவில்லை. அரசியற்சூடு, கருஞ்சூடு, செஞ்சூடு, வறட்டுக் குரல்களின் வசைச்சூடு, வறுமைச்சூடு, கானலின் சூடு எல்லாம் சேர்ந்து உடலும் மனமும் புண்பட்டன.

ஏழைமக்கள் கண்ணீர் வடித்துப் பசியோபசி என்று அலறினர். பலர் கடலைப் பிண்ணாக்குச் சாப்பிட்டுக் குடலைப் பிசைந்தனர். பயிர்கள் வாடியுலர்ந்து மண்ணாயின; மண்கூடத் தீப்பிடித்து எரியும் போலிருந்தது. அப்போது ஒருவாரம் பட்டினியிருந்து நிட்டைகூடி இறைவனைத் தொழுதேன். மழைப்பாட்டு உதித்தது. ஏழைகளுக்கு ஆக்க வேலை தொடங்கிக் கூலியும் உணவும் அளித்தேன். அப்போது மாலை நேரத்தில் எல்லாருடனும் இந்த மழைப் பாட்டைப்பாடி முறையிட்டதும் வானம் மேகம் கட்டியது: சடசடவென்று மழை பொழிந்தது. தொடர்ந்து ஆறு மாதங்கள் மழைவளங் கண்டோம்; பயிர் செழித்தது; உயிர் செழித்தது. இறைவனை மனமுருக வேண்டினல் எண்ணிய நலத்தைப் பெறுவது திண்ணம். இந்த ஆண்டும் மழைப் பாட்டைப் பாடுவோம்.

இன்பமே சூழ்க ! எல்லோரும் வாழ்க !!

சுத்தானந்த பாரதி.]

1

விண்ணமுதே உலகுயிராய்
விளையாடும் அமுதே
பெண்ணமுதாய்ச் சேய்வளர்க்கும்
பிரியமுள்ள பரிவே
கண்ணமுதே, பண்ணமுதே
கலையமுதே இன்பக்
கடலமுதே, காரமுதே
கைகுவித்தோம் உனக்கே!
மண்ணமுத விளைவேற
மண்ணுயிர்கள் செழிக்க
மழை பொழிவாய் மழை பொழிவாய்
நல்ல மழை பொழிவாய்

2

பயிர் வேகப் புல்லின்றிப்
பசுமெலிந்து வேகப்
பருகிட நீர் இன்றியிந்தப்
பாலை வனப் பாழில்
உயிர் வேக, மனம் வேக
உணர் புலனும் வேக,
உடல் வெந்து புண்ணாகக்
குடல் வெந்து குழையத்
துயர் வேகும் கண்ணீரும்
துன்பத் தால் வேகச்
சொல் வாயும் வேகமிகத்
தொல்லையினித் தாங்கோம்—
தயவான தண்ணருளே
தஞ்ச முனை யடைந்தோம்
தருண மழை பொழிந்திடுவாய்
வருணபக வானே!

3

வேலை யில்லை : கூலி யில்லை
விளைவுகளும் இல்லை ;
விதியென்று மயங்குகிறார்
கதியறியா வறியர்.
காலையிலும் மாலையிலும்
கனலேறிக் கொதித்துக்
கவலைபிணி துயரமெல்லாம்
காலனுக்கே சொல்வார்
பாலைவனப் பொட்டலிலே
பரிதவிக்கும் மக்கள்
பச்சை வளங் கண்டுலகில்
பஞ்சமின்றிப் பிழைக்க
சோலை வளங் குலுங்கிடவே
சோதியருட் கடலே
சோவென்று மழை பொழிவாய்
சுத்தசக்தி யமுதே!

சிம்லா—டெல்லி தென்னிந்தியர்களின் கூட்டுறவின் வெற்றி!

ஸௌத் இந்தியா கிளப் கோவாபரேடிவ் ஸப்ளை ஸொஸைடி லிமிடெட்.

(ஸ்தாபிதம்: 26-7-1929)

நிகழும் ஆண்டு ஜூபிலீ 25வ

வெள்ளி விழா வைபவம் கொண்டாடும்

இனிய வாழ்வு நாடுங்கள்! இவ்வருஷம் சேருங்கள்!!
ஏன் இன்னும் தயக்கம்?

விபரங்களுக்கு — எழுதுங்கள்.

காரியதரிசி,
9, ஜந்தர்மந்தர் ரோடு.

The Sarees That Are Master - pieces ;
The Master - pieces That Are Sarees !

The Sarees that have thrilled the hearts of Maharanis, Rani-sahebas and Princesses all over India. The Sarees that have pleased all ladies who always buy quality sarees that last longest in durability and yet add glamour to their individual personality.

POORNIMA SILK SAREES

Poornima Silk House, Chickpet, Bangalore City, is the One and the only House in India that possesses the Biggest Stocks and the Richest Varieties of Exceptionally Superb Quality Bangalore Silk Sarees and Mysore Silks; Poornima enjoys all over India the Largest Reputation, Honour, Popularity, Confidence and Patronage.

Here is the unique opportunity to see the exhibits and to buy your requirements from S. S. Sivasankar, Brother of S. S. Chandrasekar, at Room No. 29, South India Boarding House (Sunny Coffee House), Connaught Circus, New Delhi.

Please phone No. 47328 for your requirements and for prompt attention.

விந்தையுள் விந்தை

டாக்டர் மு. வரதராசன்

இயற்கையில் உள்ள விந்தைகளில் விந்தையானது ஒன்று உண்டு என்றால், அது இமயமும் அன்று; கங்கையும் அன்று; நயகரா அருவியும் அன்று; வான மண்டலமும் அன்று. இவைகள் எல்லாம் படைப்பில் உள்ள விந்தைகளே; இவற்றில் உள்ள வியக்கத் தகுந்த பெருமைகள் எல்லாம், புதுமைகள் எல்லாம் ஒரு வகையானவை; இவை உயிருள்ளவை அல்ல; சடம் என்று கூறப்படுபவை.

உயிருள்ள பொருள்களில் நாங்கூழ்ப் புழுவின் செயல், தூக்கணங் குருவியின் கூடு, சிலந்தியின் வலை, கிளியின் உடல் மென்மை, குயிலின் குரலினிமை, மயிலின் சாயல், தேனீக்களின் வாழ்வு முதலிய பற்பல வியக்கத் தக்கவாறு உள்ளன. இவற்றினும் சிறப்புள்ள விந்தைப் பொருள் ஒன்று உள்ளது. அது எது?

தோட்டத்துக் கீரையின் பெருமை தோட்டக்காரனுக்குத் தெரியாததுபோல், மனித உடம்பின் பெருமையும் அருமையும் மனிதனுக்குத் தெரிவதில்லை. மேற் குறித்த உயிரற்ற விந்தைப் பொருள்கள் எல்லாவற்றையும் கண்டு உணர்ந்து போற்ற வல்ல திறமை மனிதனுக்கு உள்ளது. அந்தத் திறமை மனித உடம்பில் தான் அமைந்திருக்கிறது.

✲

மனித உடம்பு, அழகால், அமைப்பால், மென்மையால், ஆற்றலால் சிறந்தது என்று கூறுவதற்கில்லை. இந்த வகைகளில் சில பறவைகளும் விலங்குகளும் எவ்வளவோ மேம்பட்டு விளங்குகின்றன. மனிதனுடைய சிறப்புக்குக் காரணம் அவனுடைய மூளையே. அந்த மூளையின் வளர்ச்சியாலேயே, மனிதனிடம் பேச்சு என்னும் அருமையான திறன் அமைந்தது. அதிலிருந்து அறிவு வளர வளரப் பலவகைக் கலைகளைப் படைத்தான்; செயற்கை விந்தைகள் பலவற்றைச் செய்யக் கற்றான்; விஞ்ஞானம் வளர்த்தான்; இயற்கையின் ஆற்றல் பலவற்றையும் தனக்குப் பயன் படுத்திக்கொள்ளக் கற்றான்.

✲

இவ்வளவு முற்போக்குக்கும் காரணமான மூளை மனித உடம்பில்தான் பண்பட்டிருக்கிறது. அதன் ஒரு வகை இயக்கமே மனம் என்று கூறப்படுவது. அந்த மனம் எத்தன்மையானது என்று ஆராய்ந்தால், அதைப் போல் விந்தையானது படைப்பில் வேறு ஒன்றுமே இல்லை என்று கூறலாம்.

மனிதன், இந்த மனம் என்னும் குதிரையை அடக்கியாள முயல்கிறான்; மனத்தின் தலைவனாக இருக்க முயல்கிறான்; முழு வெற்றி

பெற முடியாமல் திகைக்கிறான். ஒரு சிலர் மட்டும் வெற்றி பெறுகிறார்கள்; வாழ்வில் உயர்கிறார்கள். அவர்களைப் போல் உயர முடியாமல் திகைக்கும்போது மனத்தோடு போராட நேர்கிறது. அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனத்தை வெறுத்துக் கூறியிருக்கிறார்கள். மனத்தைக் 'கொள்ளித் தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க் குரங்கு' என்று தாயுமானவர் கூறுவதும் இதனாலேயே.

இந்தப் போராட்டத்தைக் கருதாமல், தனியாட்களுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பையும் கருதாமல், பொதுவாக உலகத்தையும் அதனோடு தொடர்பு பட்டுள்ள பலவகை மனங்களையும் கருதினால், மனம் எவ்வளவு விந்தையானது என்பது விளங்கும். இதைத் திரு. வி. க. அவர்கள் பாடியுள்ள 'பொதுமை வேட்டல்' என்ற நூலில் உள்ள ஒரு பாட்டு நன்றாக விளக்கும்.

மலையா ஓங்கும் அணுவாகும்
மற்போர் செய்யும் அமைதியுறும்
புலியாய்ப் பாயும் கோவாகும்
புயலாய் வீசும் சிறுகாற்றாம்
கலையாய் வளரும் கசடாகும்
கருணை பெருக்கும் கொலைபுரியும்
நிலையா மனம்செய் நடம்என்னே
நினைவுக் கெட்டா மெய்ப்பொருளே.

கல்யாணத்திற்காக கவலை வேண்டாம்!

பார்ட்டிகளானாலும் பாடு இல்லை!!

முதல் தரமானது **விலை சகாயம்**

★ உளுந்து அப்பளாம், அரிசி அப்பளாம், அப்பளாம் சிப்ஸ்,
★★ வடாம், தளி வடாம், அரிசி வடாம்,
★★★ மணத்தக்காளி வத்தல், சுண்டைக்காய் வத்தல், கொத்தவரை வத்தல், அவரை வத்தல், பாவக்காய் வத்தல்,
★★★★ நேந்திரங்காய் வருவல்,
★★★★★ பருப்புப் பொடி, கொத்தமல்லிப் பொடி,
★★★★★★ சாம்பார் பவுடர், ரசப் பவுடர்.

முதலிய போஜன உபகரணாதிகளுக்கு

லக்ஷ்மி அப்பளாம் டிப்போ

பாஷ்யம் மார்க்கெட், 75, இராயப்பேட்டை ஹைரோடு,
மயிலாப்பூர் :: **மதராஸ்-4**

(போஸ்டு/ரயில்வே பார்சல் மூலம் எங்கிருந்தாலும் பக்குவமாக சாமான்களை அனுப்பமுடியும்)

Prop. : **K. N. Venkatachalam Iyer.**

சிரித்துவிடுங்கள்!

'தேவன்'

குழந்தை அழுதுகொண்டிருந்தான். தாயார் ஓடிவந்து, அவனை அணைத்து, "கண்ணே! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாள்.

"அப்பா ஏணியில் ஏறினார்; ஏணி சறுக்கிவிட்டது!" என்று கேவினான் குழந்தை.

"இதற்கு அழுவார்களாடா, தங்கம்! சிரிக்க அல்லவா வேண்டும்!" என்று தாயார் சமாதானம் செய்தாள்.

"முதலில் நான் சிரித்தேன், அம்மா!" என்று பெரிதாகக் கேவினான் குழந்தை!

—ஒரு விகடத் துணுக்கு.

*** *** ***

போட்டோகிராப்பர் சிரமம் எடுத்துக்கொண்டு யோசனை செய்து, உட்கார்ந்திருப்பவர்களில் பலரை எழுந்திருக்கச் சொல்லி, நிற்பவர்களை உட்காரும்படி சொல்லி, கண்ணாடி போட்டவரைக் குனியச் சொல்லி, ஒருமாதிரி திருப்தி அடைந்து, 'குரூப்' போட்டோ பிடிக்கத் தயாராகிறார். கடைசியாக அவர் கேட்டுக்கொள்வது: "எங்கே!...... எல்லாரும் இங்கே பார்த்துக் கொஞ்சம் சிரியுங்கள்!.........இன்னும் கொஞ்சம்!......யெஸ்......ஸ்டெடி ப்ளீஸ்!......தாங்க் யூ!"—அவ்வளவே. படத்தில் எதற்காகச் சிரித்தமாதிரி விழவேண்டும், இயற்கை அழகுடன் முகம் இருந்துவிட்டால் என்ன தவறு என்று நான் யோசித்துப் பார்த்திருக்கிறேன். அதுமட்டும் இல்லை; சிரிப்பதாக நினைத்துக் கொண்டு அநேகர் முகத்தை மேலும் கோரமாகச் செய்துகொண்டு விட்டார்களே, சிரிப்பில் இருக்கும் மர்மம் என்ன?—என்றும் நான் எண்ணியிருக்கிறேன்.

தெருவில் ஒருவரை மற்றொருவர் சந்திக்கும்போது உதடுகளைக் காதுவரையில் இழுத்து, சிரிக்கிறமாதிரி ஒரு பாவனை (பாசாங்கு?) செய்கிறார்களே, அதற்கு என்ன அர்த்தம்? "நான் சௌக்யமாக இருக்கிறேன். நீயும் அப்படியே இரு!" என்று அதன் பொருளா? அல்லது, "நான் உன் வழிக்கு வரவில்லை. நீயும் உன் விஷமத்தைக் காட்டாமல் ஒதுங்கியே போ!" என்று எச்சரிக்கையா?

எனக்கு என்னவோ சில சமயங்களில் மனிதனை மனிதன் ஏமாற்றுவதற்குச் சிரிப்பையும் ஓர் ஆயுதமாக உபயோகப்படுத்துகிறான் என்று தோன்றுகிறது. நான் சொல்வது தவறாக இருந்தால், கட்டுரைத் தலைப்பில் நான் கேட்டுக்கொண்டபடி, "சிரித்து விடுங்கள்!" நான் கோபித்துக் கொள்ளவே மாட்டேன். "அவனா! சிரித்துச் சிரித்துக் கழுத்தை அல்லவா அறுத்து விடுவான்!" என்று ஒருவரைக் குறித்து மற்றவர் அபிப்பிராயம் சொல்வது உண்மையானால், என் அனுமானமும் நூற்றுக்கு நூறு தவறாக இருக்க முடியாதென்று நான் நம்புகிறேன்.

இந்தக் கூற்றை வைத்துக்கொண்டே மேலும் சிறிது ஆராய்ச்சியில் இறங்கினால், சில புதிய உண்மைகள்கூட வெளியாகலாம். ஒரு ஆசாமியின் சிரிப்பைக்கொண்டே அவன் எப்பேர்ப்பட்டவன் என்று சொல்லிவிட முடியும். சிரிப்பையே ஒரு திறவுகோல் மாதிரி உபயோகித்து, அவனுடைய இதயப் பூட்டைத் திறந்து, அதிலே என்னென்ன சேமித்து வைத்திருக்கிறான் என்று கண்டுபிடித்து விடலாம். சிரிக்கிறவன் மனத்திலே நல்லெண்ணம் இருக்கிறதா? கவலை இருக்கிறதா? கோபத்தை மறைக்க, பொறுமையை ஒளிக்க, உதட்டிலே விளையாடும் சிரிப்புதானா அது?—இப்படியெல்லாம் துப்பறியும் வேலை செய்யலாம். கடகடவென்று சத்தம் போட்டுச் சிரித்துவிட்டால் உள்ளத்திலே கவடு இல்லை என்று சொல்லுவார்கள். "எல்லாராலும் அப்படிச் சிரித்துவிட முடியுமா?" என்பது ஒரு பெரிய கேள்விதானே?

பிறரைச் சிரிப்பு எப்படி பாதிக்கும் என்பதும் ஆராய்ச்சிக்கு உட்பட வேண்டிய ஒரு விஷயம்தான். சந்திரிகை போன்று தண் கிரணங்களை வீசிக் குளுமையுடன் அன்பை வளர்த்தும் சிரிப்புகள்—புன்சிரிப்புகள்—இருக்கின்றன. வெள்ளை மனத்தை வெளியிடும் வெகுளிச் சிரிப்புகள் இருக்கின்றன. அகந்தையைக் காட்டும் அட்டகாஸச் சிரிப்புகளும் உள்ளன. சிரிப்பு சிரிப்பவரை பொறுத்த விஷயம்; சின்னஞ்சிறு சிரிப்பிலேயும் சந்தோஷம் கொள்ளுபவர்கள் இருக்கிறார்கள். "பிரதம மந்திரி என்னைப் பார்த்தார்; சிரித்துவிட்டுப் போனார்" என்று ஆயுள் பூராவும் பெருமை கொள்பவர்கள் எத்தனை பேர்! காந்தி மகானின் சிரிப்பின் ஒலியை மானஸீகமாக வருவித்து ஆனந்தம் கொள்ளும் ஆத்மாக்கள் இன்றைக்கும் எத்தனை இருக்கின்றன! ஆலயங்கள் தோறும் முருகன் திவ்ய வதனத்திலே தவழும் புன்னகையைக் கண்ணை மூடும்போதெல்லாம் கண்டு களிகொள்ளும் பக்தர் குழாம் எத்தனை பெரியது!

சிரிப்பு! அது நன்மையையும் செய்திருக்கிறது! தீமையையும் செய்திருக்கிறது! ஸீதா தேவியின் திருக் கல்யாணம் மிதிலாபுரியில் கோலாகலமாக நடந்தது. கேட்க வேண்டுமா? தேவ தேவர்கள் எல்லாம் வெகுமதிகளுடன் ஸீதையையும் ராமச்சந்திரனையும் மணவைபவத்திலே கண்டு மகிழ்வெய்த வந்தார்கள். கடைசியிலே வந்தான், திருபுரம் எரித்த பிரபு, மகாதேவன்—திகம்பரனாக வந்தான். பிராட்டிக்கு என்ன கொடுப்பது என்று க்ஷணகாலம் யோசனை செய்தான். கையில் யாதும் இல்லை; பிக்ஷாடனன் ஆயிற்றே! திரிபுரம் எரித்த சிரிப்பு ஒன்றே அவன் முகத்தில் இருந்தது. அதை தேவிக்குக் கொடுத்தான்; ஜனக ஸுதையும் அதை ஏற்றுக்கொண்டாள். அதற்கு ஓர் உபயோகமும் இருந்தது. பின் ஒரு காலத்திலே அசோக வனத்தில் ராவணன் தகாத வார்த்தைகளைச் சொன்ன மாத்திரத்தில், அந்தப் பதிவ்ரதா ரத்னம் ஒரு துரும்பைக் கிள்ளிப்போட்டு, சிரித்துப் பேசினாள். திகம்

For Quality Service, Satisfaction and Reliability
ever at your Service

N. VAIDYANATHA IYER'S

Provision & Oilman Stores

Ajmal Khan Road, Karolbagh, New Delhi-5

பரன் அளித்த சிரிப்பு! அன்றைய தினமே லங்கா நகரம் தீப்பற்றி திகுதிகு வென்று எரிந்தது! அஞ்சனாபாக்யன்—ஸ்ரீ ராமதூதன்—ஆஞ்சநேயன் வீடு வீடாகப் புகுந்து தீ வைத்துக்கொண்டிருந்தான்! பேரபராதியான ராவணன் தன் செய்கையால் அந்தச் சிரிப்பையும், தொடர்ந்து வந்த நெருப்பையும் ஏற்றுக்கொண்டான்.

மகாபாரதத்திலுள் ஒரு சிரிப்பு. மயன் கட்டின மாளிகையில் துர்யோதனன் தரை என்று கால் வைத்த இடம் ஜலமாகவும், தடாகம் என்று ஆடையை விலக்கிக்கொண்டு இறங்கின இடம் பூமியாகவும் இருந்தன. அதைக் கண்டு திரௌபதை சிரித்தாள்—பரிகாசச் சிரிப்பு அது. அதன் பலன் குருக்ஷேத்திர யுத்தம். தாயாதிகள் ஒருவரை யொருவர் தாக்கிக்கொண்டு, கொன்று குவித்தார்கள்.

இப்போதுள்ள சூழ்நிலையில் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது. ஒருவரை மட்டந் தட்டச் சிரிப்பென்னும் கருவியை உபயோகிக்கும் மேடைப் பிரசங்கிகள் இருக்கிறார்கள். கடவுளைப் பற்றிக் கேலி செய்து, சிரிப்பை எழுப்பி, தாங்கள் ‘வெற்றி’ கண்டதாக எண்ணும் கோஷ்டிகள் இருக்கின்றன. இவர்களைக் குற்றம் சொல்வதற்கில்லை. இந்தக் கூத்துகளை உட்கார்ந்து பார்த்து, கேட்டுச் சிரித்து, அனுபவித்து ஆர்ப்பரிக்கும் சபையோரைப் பார்த்துத்தான் வருத்தப்பட வேண்டும்!

ஒரு மனிதன் தரத்தை அறியச் சிறந்த வழி, அவன் எப்போது எதற்காகச் சிரிக்கிறான் என்று காண்பதுதான். எதைப் பார்த்தால் அல்லது கேட்டால் சிரிக்கலாம் என்று ஒருவனுக்குத் தோன்றுகிறதோ, அதுவே அவனை எடை போடும் ஒரு கருவி! சிரிக்கும் தன்மை என்பது மனிதனுக்கு மட்டும் ஆண்டவன் அளித்த வரம். மனிதத் தன்மையுடன் மட்டுமே அதை உபயோகிக்க வேண்டும். தன்னையே கண்டு சிரித்துக் கொள்ளலாம்; உலகத்தின் அறியாமையைக் கண்டு சிரிக்கலாம். ஆனால், அனாவசியமாக மட்டும் சிரித்துவிடக் கூடாது! அகாரணமாகச் சிரிக்கிறவனைப் பயித்தியம் என்று உலகம் ஏசுகிறது. அந்த ரீதியில் மட்டும் பார்த்தால், உலகத்திலே எத்தனை பயித்தியங்கள் இருக்கின்றன!

சிரிப்பு என்பது மனித ஜன்மத்திற்கு மட்டும் அளிக்கப்பட்ட தனிப்பெரும் குணம்; என்றாலும், எல்லாரும் ஒரே காரணத்திற்காக ஒரே சமயம் சிரிப்பதில்லையே! ஒரு ஹாஸ்யத்தைக் கேட்டுவிட்டு, மறு நாள் வரை மௌனமாக இருந்துவிட்டு, திடீரென்று புரிந்து கொண்டு சிரிப்பவர்கள் உண்டு; அல்லது, அதைப் பாதி சொல்லும்போதே, “போன வருஷம் இதற்கு நான் சிரித்து விட்டேன்!” என்பவர்களும் உண்டு. ஆபீஸ் மானேஜர் சொல்லி விட்டார் அதை என்பதற்காக உரத்துச் சிரிக்கும் பரிதாபப் பிறவிகளும் இருக்கிறார்கள்!

வார்த்தைகளின் ஓசையின்பத்திலே மனத்தைப் பறி கொடுத்துச் சிரிப்பதும், பளிச்சுப் பளிச்சென்ற ஹாஸ்யத்தின் ஒளி வீச்சிலே அடி பட்டுச் சிரிப்பதும், மளமளவென்று பதிலுக்கு பதில் வந்து சொற் போர் நடக்கும்போது சிரிப்பதும், படித்த அறிவாளிகளின் உரிமை யாகி விட்டது. குற்றமற்ற ஹாஸ்யத்தை—வாழ்க்கை ரஸத்திலே தோய்த்தெடுத்த ஹாஸ்யத்தை, பொது மக்கள் பாகுபாடின்றி அனுப விக்கிறார்கள். துயரத்திலுங்கூட ஹாஸ்ய அம்சத்தைக் காணும் பண்பு

தமிழ் நாட்டிலே இருக்கிறது. தமிழர்களே சிறந்த ஹாஸ்ய உணர்ச்சிக்குப் பெயர் போனவர்கள்.

ஒரு திருடன் தென்னை மரத்தில் ஏறுகிறான். வீட்டுக்காரன் அதைக் கண்டு கொள்ளவும், வேகமாக இறங்குகிறான். "அடே! ஏண்டா தென்னை மரத்தில் ஏறினாய்?" என்று கேட்கிறான் வீட்டுக்காரன்.

"கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்க!" என்கிறான் திருடன்.

"ஓஹோ! தென்னை மரத்தில் புல் இருக்குமோ?"

"இல்லை; அதனால்தான் இறங்கிக் கொண்டிருக்கிறேன்!"

நாலு வயது முதல் நாற்பது வயது வரையில் இதற்கு நான் சிரித்திருக்கிறேன்.

திருத்துறைப்பூண்டி ஸ்டேஷனை விட்டு 'ஷட்டில்' கிளம்பி விட்டது. ஒரு சாஸ்திரிகள் இறங்கி, கூடவே வேகமாக நடக்கத் தொடங்கினார். ஒரு பிரயாணி "என்ன சாஸ்திரிகளே! ரயிலில் வரவில்லையா?" என்று கேட்கிறார்.

"இல்லை......எனக்கு அவசரமாக முன்னாடி போக வேண்டிய வேலை இருக்கிறது!" என்கிறார் சாஸ்திரிகள்.

பழைய ஹாஸ்யம்தான். ஆனால் சிரிப்பு மூட்டத் தவறியதில்லை. அனுபவிக்கும்போது நெஞ்சிலிருந்து ஒரு பாரம் இறங்கிவிட்ட உணர்ச்சியே ஏற்படுகிறது. கேலி செய்வதனால் இதுபோன்ற பலன் கிட்டுவதில்லை. பரிகாசம் ஒரு நண்பனைச் சேர்த்துக் கொடுத்ததில்லை; ஆனால் நிச்சயம் ஒரு விரோதியையேனும் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது! சிரிப்பினால் அன்பை வளர்ப்பதுதான் முறை. சிரிப்பு நெருப்பின் உருவாகவும் இருக்கட்டும், பாதகம் இல்லை. நெருப்பினால் விளக்கேற்றலாம், குளிர் காயலாம், சமையல் செய்யலாம். இதயத்தில் உள்ள ஒளியைக் காட்டச் சிரிப்பைப் பயன்படுத்துபவன்தான் மனிதன்!

BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS

12-E, CONNAUGHT PLACE
NEW DELHI

PHONE: 47176

FOR ALL MEDICINAL & TOILET REQUIREMENTS

இப்படிச் செய்யலாமா, பாருங்கள்

ஓ. வி. அளகேசன்

நமது தேசத்து மக்களுடைய மனசிலே எழும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் உள்ளபடி அறிய வேண்டுமானல் இன்று நம் தேச பாஷைகளில் எழுதி வருவதைப் பார்க்க வேண்டும். ஆனல், ஒரு பாஷையை மற்ற பாஷைக்காரர்கள் அறியாத காரணத்தால் நாம் அதற்கு ஆங்கிலத்தின் துணையை நாடுகிருேம். ஆங்கிலத்தில் நமது மனம் மேலெழுந்தவார்யாகத் தெரிகிறதே ஒழிய முழுவதும் தெரிவதில்லே. அதனல் நாம் ஒருவரையொருவர் நன்ருக அறிந்து கொண்டு அன்பு பெருக ஒன்றுபட்டு வாழ்வது தடைப்படுகிறது.

இன்று தமிழன் தமிழின் பெருமையையும், தெலுங்கன் தெலுங்கின் வளமையையும், ஹிந்திக்காரன் ஹிந்தியின் உயர்வையும் இவ்வாறே அந்தந்த பாஷைக்காரன் அந்தந்த பாஷையின் மகிமையையும் பேசுகிருன். இதுகூடப் பரவாயில்லே. ஒரு பாஷை பேசுவோன் இன்னெரு பாஷையில் ஒன்றுமில்லே என்று வேறு நினேக்கிருன். அவனுடைய அபிமானமும் அறியாமையுமே இதற்குக் காரணம். இது நீடிக்குமானல் நமது புதுவாழ்வு குந்தகம் அடையும். எப்படி நம் தேச க்ஷேமம் அபின்னமாக இருக்கிறதோ அப்படியே நம்முடைய பாஷைகளின் முன்னேற்றம் ஒன்றையொன்று தழுவி நிற்கிறது. உயர்வு தாழ்வுப் பேச்சுக்கு இடமின்றி எல்லாப் பாஷைகளேயும் சேர்த்தே நாம் பார்க்க வேண்டும்.

ஒரு தேசத்தின் வாழ்வுக்கும் உயர்வுக்கும் அதன் பாஷை கருவியாகவும் உறுதுணையாகவும் விளங்குகிறது. புராதன இந்தியாவின் ஆத்மீக வாழ்வுக்கும் அற்புத ரசனேக்கும் அதன் பாஷைகள் துணைபுரிந்தன. ஆனல் கடந்த பல நூற்ருண்டுகளாக நமது வாழ்வு தேங்கிவிட்டது. நமது பாஷைகளும் தேங்கிவிட்டன. உலகத்தின் புதிய சிந்தனேயிலும் சாதனேயிலும் நாம் பூரணமாகக் கலந்துகொள்ள வேண்டுமானல் அதற்கு ஏற்ப நாம் நமது பாஷைகளே-சொற்களே-புதிதாக சமைத்துக் கொள்ளவேண்டும்.

முதலில் நமது பாஷைகளே ஒரே எழுத்தில் எழுத ஆரம்பிக்க வேண்டும். இது உடனே ஆகிற காரியம் இல்லே. எல்லாரையும் எதிர்த்துக்கொண்டு இதைச் செய்ய முடியாது. சிறிது சிறிதாக இதற்கு எல்லாருடைய சம்மதத்தையும் ஆதரவையும் பெறவேண்டும். எவ்வளவுதான் நல்லதாயிருந்தாலும் அதைப் பலவந்தமாகத் திணிப்பதென்ருல் கெடுதல்தான் ஏற்படும். ஆரம்பத்தில் இப்போது வழங்கும் எழுத்திலும் பொது எழுத்திலும் நமது பாஷைகளே எழுதி வரலாம். ஒரே பாஷையாகிற ஹிந்தியை தேவநாகரி எழுத்து, பாரசீக எழுத்து இரண்டிலும் எழுதுகிருர்கள் அல்லவா? அதைப் போல, ஒரு பாஷையில் ஒரு புஸ்தகம் எழுதினல் ஒரு பக்கம் அதன் எழுத்திலும் எதிர்ப்பக்கம் பொது எழுத்திலும் அதை அச்சிடலாம். அப்போது அதை அந்தப் பாஷைக்காரர் படிப்பதோடு வேற்று பாஷைக்காரரும் படிக்க முடியும். இதனல் வேலேயும் செலவும் இருமடங்கு ஆனலும் பொதுவாக தேசத்துக்குப் பலமடங்கு லாபம் ஏற்படும்.

இதை சாத்தியமாக்குவதற்கு நம் தேச பாஷைகளின் கனத்தைக் குறைத்து நடையைத் துரிதப்படுத்த வேண்டும். அதாவது அவற்றின் எழுத்து வைப்பிலும் அமைப்பிலும் சில மாறுதல்கள் செய்ய வேண்டும். மாறுதல் வேண்டும் என்ற ஆசையில் நான் இதைச் சொல்லவில்லே. அவசியத்தை முன்னிட்டே இதைச் சொல்லுகிறேன்.

தமிழில் உயிர் எழுத்து பன்னிரண்டு. அவற்றில் இரண்டைக் குறைத்துவிடலாம். "ஐ," "ஔ," இரண்டு எழுத்தும் அநாவசியம். "ஐயர்" என்ற சொல்லை "அய்யர்" என்றும் "ஔவையார்" என்ற சொல்லை "அவ்வையார்" என்றும் இப்போதே நாம் எழுதி வருகிறோம். இப்படியே **கைகால் - கய்கால்; சைலம் - சயிலம், தைமாதம் - தய் மாதம், விபூதிப்பை - விபூதிப்பய், மைக்கண் - மய்க்கண்** என்றும் **ஔஷதம் - அவுஷதம், பௌருஷம் - பவுருஷம், மௌவல் - மவ்வல், "பௌவம்" - பவ்வம், சௌரியம் - சவுரியம், கௌதாரி - கவுதாரி** என்றும் எழுதலாம். இப்பொழுதே சில சொற்களை மேலே உள்ளபடி இரண்டு விதமாகவும் எழுதி வருகிறோம்.

ஐயும் ஔவும் போய்விடுவதால் மயக்கமோ குறைவோ தோன்றுது; பாரம் குறையும்.

"ஆங்கில உச்சரிப்புச் சில தமிழில் இல்லை. Act என்ற சொல்லை 'ஆக்ட்' என்றும் Bank என்ற சொல்லை பேங்க் என்றும் எழுதி வருகிறோம். இந்த இரண்டு சொற்களில் வரும் A உச்சரிப்பு தமிழில் வர ஒரு புது எழுத்து அவசியம். இந்த ஒலியைக் குறிக்கும் எழுத்து தமிழுக்கு மட்டுமின்றி எல்லா இந்திய மொழிகளுக்கும் தேவை.

மெல் எழுத்துக்களைப் பார்ப்போம்.

ர, ற என்று இரண்டு எழுத்துகள் இருக்கின்றன. திராவிட பாஷைகள் அல்லாத இந்திய பாஷைகளில் "ர" மட்டும்தான் உண்டு. தமிழில் "ற" என்று ஒரு எழுத்து அவசியமா? "ற"வை எடுத்துவிட்டால் சொற்களின் பொருள் வேறுபாட்டைக் குறிக்க முடியாதே என்று கூறலாம். **அறம்—அரம்** இரண்டும் வெவ்வேறு பொருள் உடையன. "ற" போய்விட்டால் **அரம்** என்ற சொல்லுக்குச் சந்தர்ப்பம் நோக்கிப் பொருள் சொல்லவேண்டியது அவசியமாகும். இப்பொழுதும் அவ்வாறு செய்து வருகிறோம். **வரை** என்ற ஒரே சொல் **மலை, மூங்கில், அளவு** என்று பல பொருளில் வழங்குகிறது. "ற" இரட்டித்து வரும் சொற்களின் உச்சரிப்பு தமிழில் தனியானது. சற்றுக் கஷ்டமானதுங்கூட. எழுதுவதுபோல் உச்சரிப்பதில்லை. **சொற்கள்** என்பதை **சொல்கள்** என்று எழுதலாம். முதலில் பார்ப்பதற்கு இது சரியாகத் தோன்றுது. இப்பொழுதுகூட "ல்" என்ற எழுத்து நெடிலுக்குப் பின் வரும்போது அவற்றின் பன்மையை மேற்கண்டபடி எழுதுகிறோம். கால் - கால்கள், நூல் - நூல்கள், வேல் - வேல்கள் என்பது போல, குறிலுக்குப் பின் வரும்போதுதான் பன்மை மாறுகிறது. கல் - கற்கள், பல் - பற்கள், வில் - விற்கள் என்று. இதை கல்கள், பல்கள், வில்கள் என்று எழுதுவதில் அதிக வேற்றுமை இல்லை. "ற" இரட்டித்து வரும் சொற்களை எழுதுவது இன்னும் சற்று கஷ்டம். **சற்று இதற்கு** முற்பட்ட என்ற சொற்களை எடுத்துக்கொள்வோம். **சற்று** என்பதை **சர்ரு** என்றோ **சட்ரு** என்றோ

தனலக்ஷ்மி ஸ்டோர்ஸ்

கரோல் பாக்—நியூ டெல்லி

(Prop. ரத்னம் & பிரதர்ஸ்)

குறைந்த விலை! நயம் சரக்கு!! தினசரி மார்கட் விலை!!!

எங்களிடம் தென்னிந்தியர்களுக்கு வேண்டிய சகலவிதமான சாமான்களும் கிடைக்கும். சாமான்கள் வீடுகளில் டெலிவரி செய்யப்படும்.

வாடிக்கைக்காரர்களின் திருப்தியே எங்கள் மேலான நோக்கம்.

எழுதலாம். சுற்று, பற்று, போன்ற சொற்களையும் இவ்வாறே எழுதலாம். உச்சரிப்பு பழையபடியே இருக்கும். இப்பொழுதுகூட **கற்று** என்ற சொல்லை **கட்ரு** என்று தொனிக்கிற மாதிரி உச்சரிப்பவர்கள் அநேகர். அடுத்தபடி **இதற்கு** என்பதை **இதர்க்கு** என்றும், **முற்பட்ட** என்பதை **முர்ப்பட்ட** என்றும் எழுதலாம்.

ஆகவே ' ற ' என்ற எழுத்தை நமது அகர வரிசையிலிருந்து நீக்கிவிடலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. கன்னடத்தில் அவ்வாறு நீக்கிவிட்டிருக்கிறார்கள். அப்பொழுது **திருக்குறள், திருக்குரள்** ஆகும். முதல் குறளைப் பின்வருமாறு எழுதலாம் :

" அகர முதல் எழுத்தெல்லாம் ;
ஆதிபகவன் முதர்ரே உலகு "

அடுத்தாற்போல் " ந " " ன " என்று இரண்டு எழுத்துகள் தேவையா என்று பார்ப்போம். " ன " என்ற எழுத்து தமிழில் தவிர வேறு எந்த பாஷையிலும் இல்லை. மலையாளத்தில் இரண்டையும் ஒரே எழுத்தால் குறிக்கிறார்கள். அந்த ஒரே எழுத்தை மொழிக்கு முதலில் வரும் போது 'ந' போலவும் இடையிலோ கடையிலோ வரும்போது 'ன' போலவும் கொள்கிறார்கள். இதை நாம் நீக்கிவிடலாம். 'ற'வை நீக்குவதற்கு ஒப்புக்கொண்டால் அதைச் சேர்ந்த "ன" வையும் நீக்கி விடுவதில் ஆட்சேபனை இராது. அப்பொழுது ' **வந்தான்** ' என்பதை ' **வந்தாந்** ' என்றும் '**போனான்**' என்பதை '**போநாந்**' என்றும் எழுதுவோம். இப்பொழுதுகூட தமிழில் '**வெரிந்**' என்று ஒரு சொல் இருக்கிறது. முதுகு, பின்புறம் என்று அதற்கு அர்த்தம். புஸ்தகங்களில் மட்டும் காணலாம். பேச்சு வழக்கில் இல்லை. இதை எழுதிப் பார்க்கும்போது இது தமிழ்ச் சொல்லா என்ற சந்தேகம் தோன்றும். '**ன**'வை எடுத்துவிட்டால் '**ந்**' என்று முடியும் சொற்கள் சாதாரணமாகவும் அதிகமாகவும் ஆய்விடும். இப்பொழுதுகூட கனவு — கநவு, மனம்—மநம், அந்நியன்—அன்னியன், தனம்—தநம், விநோதம்—வினோதம் என்று இரண்டு எழுத்துக்களையும் பேதம் பாராமல் எழுதி வருகிறோம். '**ன**'வை நீக்கிவிட்டால் கனி, சுனை, வினை, பனுவல் என்பன கநி, சுநை, விநா, பநுவல் என்று ஆகும்.

தமிழுக்கே சிறப்பான எழுத்து என்று சொல்லும் "ழ"கரம் அவசியமா என்ற கேள்வி பிறக்கிறது. இந்த எழுத்து மலையாளத்திலும் உண்டு. பாண்டி நாட்டைச் சேக்கிழார் தமிழ் நாடு என்று ஆசையோடு அழைப்பார். சங்கம் இருந்தது மதுரையில் தானே ! அப்பேற்பட்ட பாண்டி நாட்டில் 'ழ'வைச் சரியாக உச்சரிப்பதில்லை. வாழைப்பழத்தை வாளப்பளம் என்றே சொல்லுகிறார்கள். தமிழை அநேகர் தமிள் என்றே சொல்லுகிறார்கள். குமிழ்—குமிள், சிமிழ்—சிமிள், என்று ழகரத்தையும் ளகரத்தையும் பேதமின்றிச் சொல்லுகிறோம். ஆகவே, 'ழ'வை நீக்கி விடுவதால் அதிக நஷ்டம் ஏற்படும் என்று தோன்றவில்லை. ஆங்கிலம் கற்ற தமிழர், பெரும்பாலோர் தமிழை டமில் என்று நாக்கோணாமலும் கூசாமலும் கூறுவதைக் கேட்டு நாம் வியப்பும் திகைப்பும் அடையக் காணோமே ? ' **டமில்** ' என்பதைவிட " **தமிள்** " எவ்வளவோ மேல் அல்லவா ?

உயிர் மெய் எழுத்து வரிசைகளில் "**ங**", "**ஞ**" போன்ற எழுத்துகளுக்கு வேலையே கிடையாது. அவற்றை உபசாரத்துக்காகவே வைத்துக்கொண்டிருக்கிறோம். அவை வெறும் பாரம் ; இருப்பதும் ஒன்றுதான், இல்லாததும் ஒன்றுதான். அவற்றை அச்சுட்டு குழந்தைகளுக்கு காட்டவேண்டிய அவசியமே இல்லை. அவ்வாறே சொற்களில் பயிலாத உயிர் மெய் எழுத்துகள் எல்லாவற்றையும் நமது அகர வரிசையிலிருந்து நீக்கிவிடலாம். 'ஞமலி, ஞாழல், ஞெண்டு,' என்ற சொற்களை இப்போதே நமலி, நாழல், நெண்டு என்று எழுதுகிறோம். 'ஞிமிறு' என்பதை ' நிமிறு ' என்று எழுதுவ

தில்லை போலும்! "ஞ" போன்ற எழுத்துக்களை "னா" என்று எழுதுகிறார்கள். இது சாதாரணமான விஷயம்.

க—ச—ட—த—ப ஆகிய எழுத்துக்கள் சொற்களில் வரும் இடத்திற்கு ஏற்ப மாறி ஒலிப்பது யாவரும் அறிந்ததே. கழகம், குடகு என்ற சொற்களில் வரும் 'க' வும் 'கு' வும் இடத்திற்கு ஏற்ப வெவ்வேறு ஒலியை ஏற்கிறது. இதே போல மற்ற எழுத்துகளும் இரண்டு விதமாக ஒலிக்கின்றன. இந்த இரண்டு ஒலிகளையும் குறிப்பதற்கு தேவநாகரியில் வெவ்வேறு எழுத்துகள் இருக்கின்றன. தமிழை தேவநாகரியில் எழுதும்போது அந்த இரண்டு எழுத்துகளையும் இடத்திற்கு ஏற்ப எழுதலாம்.

இடையில் வந்த வடமொழி எழுத்துகள் ஐந்தில் ஜ, ஷ, ஹவை மட்டும் வைத்துக்கொண்டு ஸ, க்ஷ இரண்டையும் நீக்கிவிடலாம். அவற்றால் வீண்கஷ்டம், தவறு இரண்டும் ஏற்படுகிறது.

இவற்றை ஒத்த மாறுதல்களை தமிழில் மட்டுமின்றி மற்ற இந்திய பாஷைகளிலும் செய்ய வேண்டும் என்பது என் அபிப்பிராயம். முக்கியமாக தேவநாகரியில், க-ச-ட-த-ப ஆகிய ஐந்து வர்க்கங்களிலும் நாலு நாலு எழுத்துகள் உள்ளன. அவற்றில் அழுத்தி உச்சரிக்கவேண்டியிருக்கும். இரண்டாவது எழுத்தும் நாலாவது எழுத்தும் நீக்கிவிட வேண்டியவை. மேலும் தேவநாகரியில் எழுத்துகளை வெட்டிச் சேர்க்கும் கூட்டெழுத்து முறை வழங்கிவருகிறது. அதை மாற்றித் தமிழில் எழுதுவது போல் எழுத்துகளை தனித்தனியாக எழுத வேண்டியது அவசியம். தமிழைப் போற்றியும் பேணியும்வரும் அறிஞர் பெருமக்களை இதைச்சற்றே சிந்தித்துப் பாருங்கள் என்று மட்டும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுவேன்.

எவ்வளவோ துறைகள்!

புது இலக்கியங்கள் இயற்றுவதற்கு எவ்வளவோ துறைகள் இருக்கின்றன. பல பாஷைகளிலும் விஷயங்களை அறிவதனால் இத்துறைகள் இன்னும் விரிவடையும். நாளடைவில் மனிதர்களுடைய வாழ்க்கை நிலை மாறுபடுகின்றது; அதற்கேற்ப கொள்கைகளும் மாறுபடுகின்றன. அக்கொள்கைகளுக்கேற்றபடி இலக்கியங்களும் நல்வழியில் மாற வேண்டியது இயல்பேயாகும்.

—டாக்டர் ஐயரவர்கள்

The United India Provident Assurance
Company, Limited.
MADRAS

★

Life Insurance

Without Medical Examination
AND
Policies issued on Both Male
and Female Lives

Upto Rs. 1000

Bonus Declared Rs. 9 per Thousand
Sum Assured per annum

UNIQUE IN THE ANNALS OF THE HISTORY OF PROVIDENT SOCIETIES WORKING IN INDIA

ENQUIRIES FOR REPRESENTATION OF THE COMPANY ARE INVITED

For particulars apply to:
The Secretary:

The United India Provident Assurance Co., Ltd.
"UNITED INDIA LIFE BUILDING"
ESPLANADE, MADRAS-1

எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்கள்

அழகு மிக்க ஆடைகள்

அழகிற்கு அழகு செய்யும் ஆடைகள்

என்றும் தங்களுக்கு அளிக்கும்

↓

ஆரணி ஸில்க் ஹவுஸ்

சந்நதி தெருவு

மைலாப்பூர், மதராஸ்.

எங்கள் டெல்லி ஏஜன்ட் :

சவுத் இந்தியா கிளப் கோ-ஆபரேடிவ் சப்ளை ஸொஸைடி, லிமிடெட்,

9, ஜந்தர் மந்தர் ரோடு, புது டெல்லி.

அமெரிக்க மாமாவைப்பாரு

கொத்தமங்கலம் சுப்பு

1. காசுக்கு ஆசைப் படாதே—பாப்பா
காசிருந்தா லுன்னை கர்வம் விடாதே
ஆசைக்கு அடிமைப்படாதே—பாப்பா
அதிகாரப் பேய்வந்து தொடவே விடாதே.

2. ஊருக்குப் பெரிதாகச் சொல்லும்—ஒன்றுக்கும்
உதவாத உபதேசம் செய்யவே சொல்லும்
பேருக்கு ஆசைப் படச் சொல்லும்—உன்னை
பேயாக்கி நாயாக்கி பிழை செய்யச் சொல்லும்.

3. சண்டைக்கு ஆள் தேட வைக்கும்—உன்னை
சண்டாளப் பாவியெனப் பலர் பேசவைக்கும்
கண்டாலும் பயந்தோட வைக்கும்—அந்த
காசாலே நீ செய்த பாவம் நிலைக்கும்

4. காசாலே அடிமைகொள்ளப் பார்ப்பாய்—கொஞ்சம்
கடன் தந்து பலருடைய கையெழுத்துக் கேட்பாய்
கம்பு கத்தி தருவதாய்ச் சொல்வாய்—பல
வம்புகளை உண்டாக்கி வசைக்கு ஆளாவாய்.

5. அமெரிக்க மாமாவைப் பாரு—உலகை
அழிக்கவே கங்கணம் கட்டுறார் பாரு
அமரிக்கை அவராலே போச்சு—அந்த
அய்ட்ரோசன் குண்டாலே அவருக்கு ஏச்சு

6. காசாலே அவருக்கு நாசம்—ஊரை
காப்பாத்துரோ மென்று போடுறுர் வேசம்
கூசாமல் பொய்சொல்லுவாரே—ஆட்டம்
குண்டாலே உலகத்தை அவர் கொல்லுராரே.

7. சன்மார்க்கம் இதுவென்று பாரார்—காரியம்
சாதிக்கும் மார்க்கமே சன்மார்க்க மென்பார்
துன்மார்க்கம் என்றென்று இல்லை—நாலு
துட்டுக்கு உடையாரே பெரியவர் அங்கே.

8. அஞ்ஞானம் மிகுந்திட்ட தேசம்—அந்த
விஞ்ஞானப் பாவைகள் அவருக்கு நேசம்
மெய்ஞ்ஞானம் கிடையாது அங்கே—மேனி
மினுக்கியே வாழ்வதே மேலான ஞானம்.

9. ஆட்டம் போட்டார்கள் பேயாட்டம்—அந்த
ஆயுதத்தின் வெறியாலே அகந்தை கொண்டார்கள்
ஆட்டம் குண்டென்றொன்றைச் செய்தார்—அதை
ஆசியாக்காரனின் தலைமேலே போட்டார்.

10. இறந்தார்கள் ஆயிரம் லட்சம்—அப்போ
இடிந்ததே நகரங்கள் ஏசுவும் இடிந்தார்
அலறினர் பல கோடி மக்கள்—அந்த
ஆப்ரகாம் லிங்கனும் ஆடினுன் குண்டால்.

11. அதிகார வெறிமீறிப் போச்சு—கையில்
ஆயுதம் இருக்குதென்று அகந்தை வரலாச்சு
அய்ட்ரோசன் குண்டுகளைச் செய்தார்—அதனை
ஆழியில் போட்டு வெள்ளோட்டமும் பார்த்தார்.

12. சமுத்திரமும் நீர்கெட்டுப்போச்சு—அதன்
சாம்பலால் பலருக்கு சீக்கு வரலாச்சு
கடல் மீன்கள் நஞ்சாகிப் போச்சு—அந்தக்
கார்மேகம் கூடவே நஞ்சாகிப் போச்சு

13. மழை மேகம் நஞ்சாகிப் போனல்—பெய்யும்
மாரியும் நஞ்சாகும் வயல் நஞ்சு ஆகும்
விளைவெல்லாம் நஞ்சாகிப் போகும்—நல்ல
வெள்ளாமை நஞ்சாகி விஷமாக விளையும்.

14. உணவெல்லாம் நஞ்சாகிப் போகும்—அதனை
உண்பவர் நஞ்சாலே உயிரற்றுப் போவார்
குடிதண்ணீர் நஞ்சாகிப் போகும்—இந்த
குண்டாலே வந்திடும் கொடுமைகளைப் பாரும்.

15. ஆவியொடு காயமழிந்தாலும்—உலகில்
பாவியென்ற நாமத்தைப் படையாதே பாப்பா
பூமியிலே பிறந்த பேர்க்கெல்லாம்—என்றும்
புண்ணியமும் பாபமும் தான் நிஜம் பாப்பா.

16. அமெரிக்க மாமாவைப் போலே—ஏச்சுக்கு
ஆளாகக்கூடாது காசு பணத்தாலே
ஆயுதம், காசு பணம் எல்லாம்—உலகத்தை
அழிக்கவே உபயோகம் ஆவதைப் பாரு.

உயிர் நாடி

"அநுத்தமா"

"எங்கள் கலைக் கண் காட்சிக்குத் தங்கள் கைவேலை ஏதேனும் கொடுத்து உதவ வேண்டும்" என்று சுந்தரம் கேட்டான்.

"என்னிடம் என்ன அப்பா, கை வேலை இருக்கிறது? உனக்கு யார் சொன்னார்கள் நான் உங்களுக்கு உதவக்கூடியவன் என்று" என்று நிதானமாகக் கேட்டார் ராஜன்.

"என்ன, சார், இது கூடத் தெரியாதா? நீங்கள் இந்த ஊருக்கு வந்ததுமே உங்களைப் பற்றிய எல்லா விவரங்களும் வெளி வந்து விட்டனவே? நாங்கள் பாரதிதினம் கொண்டாடப் போகிறோம். அதை ஒட்டி கலெக்டர் வருகிறார். ஒரு கலைக்கண் காட்சியும் வைத்துச் சிறப்பாக நடத்த வேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம். தங்களையும் அழைத்துச் சொற்பொழிவு ஆற்றச் சொல்ல வேண்டும் என்பதும் எங்கள் அவா......"

"எனக்குப் பேசவே தெரியாதே, அப்பா?"

"அப்படி இல்லை சார். தங்கள் சாதாரணமாகப் பேசும் போதே நகைச் சுவை ததும்பப் பேசுவீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்."

"என்னைப்பற்றி என்ன வெல்லாமோ கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அவை அனைத்தையும் நம்புகிறீர்களா?" என்று மெதுவாகக் கேட்டார் ராஜன்.

"நம்பாமல் என்ன? தங்களுடன் நெருங்கிப் பழகிய சுப்பரத்தினம் அவர்களே சொன்னார்கள். தாங்கள் பட்டிலும், காகிதத்திலும், நெட்டியிலும் புஷ்பங்கள் செய்து வைத்தால் எப்பேர்ப் பட்டவர்களும் ஏமாந்து போவார்கள் என்றும், களிமண்ணில் சின்னஞ்சிறு சிலைகளோ, கோவில்களோ அமைத்தால் அவை நம் பண்டையச் சிற்பிகளின் கைத்திறனையும் மிஞ்சக்கூடியவை என்றும், ஓவியங்கள் தீட்டினால் அவைகளைக் காணப் பதினாயிரம் கண்கள் வேண்டுமென்றும் கூறினார் அவர். சுப்பரத்தினம் உலகம் போற்றும் கலை ரசிகர். அவரே அவ்வாறு கூறுவாரானால்......"

"நீங்கள் நினைக்கும் அளவு இப்பொழுது என்னிடம் ஆற்றல் இல்லை, அப்பா. சுப்பரத்தினம் அதைச் சொல்ல வில்லையா உங்களுக்கு?"

"அவர் கூறினார் — தங்கள் வாழ்க்கையில் பெரியதொரு துயரம் நேர்ந்து விட்டதென்று. தங்களுக்கு இளைஞர்களிடம் அபார அன்பு உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இறைவனிடம் சேர்ந்துவிட்ட தங்கள் தம்பியாக என்னைப் பாவித்து நீங்கள் அன்பு காட்டவேண்டும். தயை கூர்ந்து ஏதேனும் சில அளித்து எங்கள் கண்காட்சியைச் சிறப்பித்தால் அது எங்களை வெகுவாகக் கௌரவித்ததாகும்." கண்களில் மெத்த கனிவும் குரலிலிருந்த குழைவும் அவனுடைய வேண்டுகோள் விசுவாசமானதே என்பது தெளிவாக்கின. ராஜன் அதைக்கண்டு முன்பிருந்த சலனங்கூட இல்லாமல் அசைவற்று இருந்தார்.

"நான் வருகிறேன் சார். என் வேண்டுகோளை நினைவில் வைத்துக்

கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டுச் சுந்தரம் விடை பெற்றுக் கொண்டான்.

ராஜன் அதே இடத்தில் அதே நிலையில் வெகு நேரம் வீற்றிருந்தார். அவரது உடல் அசைவற்று இருந்தாலும் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. கொந்தளிக்கும் உணர்ச்சிகள் உருமாறி சூடான கண்ணீராக தாரை தாரையாகப் பொழிந்தன. வெகு நேரம் அவர் அதே போல் இருந்தார்.

✲

"சீனு! அடே எங்கேடா போய் விட்டாய்? அண்ணுவை விட்டுப் போய்விட்டாயே?" என்று வாய் விட்டுக் கூறிக் கதறிக்கதறி அழுதார் ராஜன். அவர் தோளில் ஒரு கைமெதுவாகவிழுந்தது. நிமிர்ந்து பார்த்தார்: மனைவி அருகே நின்று கொண்டிருந்தாள்.

"அந்தப் பையன்தான் எவ்வளவு ஆர்வத்துடன் கேட்டான்! அவனுக்காக ஏதேனும் செய்து கொடுங்களேன்" என்று கூறிக் கொண்டே நின்றுள்.

"செய்து பார்க்கிறேன். ஆனல் மனத்தில் சுருதி சேரவில்லையே?" என்று அவர் பரிதாபமாகக் கூறினார்.

"இப்படித்தான் சிரமமாக இருக்கும். ஆனல் இது நிலையாக இருக்கக் கூடிய பொக்கிஷம். நிலையற்றதை நினைத்து இதைப் பலியிடுவது எனக்குச் சரி எனத் தோன்றவில்லை." என்று கூறிவிட்டு மீனு சென்றுள்.

✲

ராஜன் வெள்ளைக் களிமண்ணைப் பிசைந்து வைத்துக் கொண்டார். எத்தனையோ நாட்களாகச் செய்யாமல் வேலையே மறந்து விட்டிருந்த கைகள் இன்று வேலைக்கு ஆரம்பித்தன. ஏதோ ஓர் உருவம் சமைக்க எண்ணினர் அவர். ஆயின், இப்பொழுது அவருடைய கலைக் கண்கள் திறக்கவில்லை. கலைக்கண்ணிலே எழுந்து நின்று அவருடைய கைக்கு வழிகாட்டக் கூடியகருத்து இன்று எழவில்லை. களிமண் மொத்தையாகவே காட்சி அளித்தது. அவர் தம் மேஜைமீது தலையை வைத்துக்கொண்டு தோல்விக்கு முற்றும் இடம் கொடுத்தார்.

சிறிது நேரம் கழித்து வர்ணத் தட்டுகளை எடுத்து வைத்துக் கொண்டார். கலைவாணியை மனத்தில் இருத்தி, கண்களை மூடித் தியானித்தார். ஆயின், இறந்த தன் தம்பியின் முகமே காட்சி அளித்

Grams: "HOLDER"

Wholesale Dealers in everything Electrical

SUPRABHAT ELECTRIC CO.,

Kucha Lattushah, Dariba Kalan, Delhi.

Distributors and stockists for:

C.M.A., I.C.C., & NICCO Wires, I.C.I., & I.C.P.,

Conduit Pipes and Accessories.

தது. அவர் மீண்டும் தூக்கத்தில் ஆழ்ந்தார்.

அன்று முழுவதும் இதே விதமாகக் கழிந்தது. காலையில் அவர் வெளியே உலாவச் சென்றபோது சுந்தரம் எதிர்ப்பட்டான். அவனுடன் ஒரு நண்பன் இருந்தான். அந்த நண்பன் ராஜனிடம் பேச்சுக் கொடுத்தான்.

“சார், நீங்கள் எங்கள் கலைக் காட்சிக்கு உதவப் போகிறீர்களாமே? ரொம்பவும் ஸந்தோஷம். கல்லூரியில் அனைவரும் அதைப் பற்றியே பேசுகிறார்கள். முன்பு ஒரு சித்திரக் காட்சியில் தங்கள் ‘ராஜகுமாரி’ என்ற படத்தைப் பார்த்திருக்கிறேன்” என்றான் அவன்.

ராஜன் இலேசாகப் புன்முறுவல் பூத்தார். பிறகு சுந்தரத்தைப் பார்த்து “என்னை நம்பாதே, அப்பா” என்று சொன்னார்.

“அதெல்லாம் சொல்லக் கூடாது நீங்கள்” என்று அவர் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளவே மறுத்து விட்டான் சுந்தரம்.

ராஜன் வீடு திரும்பியதும் அவ்வாலிபனின் அன்பு அவர் நினைவில் வந்து வந்து நின்றது. தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவர் சித்திரம் எழுத முயன்றார், முயன்றார்—போராடினார். ஆம் அது போராட்டமேதான். திடீரென ஓர் அசுர வேகம் வந்து விட்டது. துயரப்பேய்கள் ஒதுங்கி நின்றன. கலைத்தேவி ஆவாகனமாகிவிட்டாள். ஒரே மூச்சில் முடித்துவிட்டார். முடிந்ததும் வீட்டில் உள்ளோர் அதைக்கண்டு மிகவும் புகழ்ந்தனர்.

கலைக்காட்சியில் இவருடைய அம்சம் தவிர மற்ற எல்லாம் அமைத்தாகிவிட்டது. சுந்தரம் வந்து கேட்டபோது அவர் ஒரு

For

Quality Purity and Taste

“Sugandh Coffee”

(Raw, Roasted and Ground)

For all household needs

At your service

SUGANDH COFFEE WORKS

Ajmal Khan Road,

&

4/70, Krishna Market,

KAROL BAGH, NEW DELHI-5

கித்தானை அவனிடம் கொடுத்தார். அவன் மகிழ்ச்சியுடன் அதை வாங்கிக் கொண்டான். ஆனால் ராஜனுக்கு மட்டும் உற்சாகமே இல்லை.

✲

அடுத்த நாள் இரவு ஏழு மணிக்கு அவர் கல்லூரிக்குச் சென்றார். அப்பொழுது சொற்பொழிவுகள் முடிந்து எல்லோரும் கண்காட்சி சாலையில் குழுமியிருந்தனர். அந்தக் கும்பலிலே தானும் ஒருவராக அவர் சேர்ந்து கொண்டார்.

அவர் படத்திற்கு முக்கிய இடம் கொடுத்திருந்தது. தக்க விளம்பரமும் இருந்தது. அவர் தம் படத்தை நிதானமாகக் கவனித்தார். அப்பொழுது அருகே ஒரு மாணவன் மற்றொருவனிடம் பேசிக்கொண்டது அவர் செவியில் விழுந்தது.

"அடே, நம்ப சுந்தரத்துக்குப் பயித்தியம் சரியாகப் பிடித்தது. இந்தப் படத்துக்குப் போய் என்ன மகிமை! 'ஒளி படைத்த கண்ணினாய் வா, வா, வா,' என்ற பாட்டுக்கு விளக்கமாம் இப்படம். ஒளி இழந்த கண்ணினைத்தான் இங்கே இருக்கிறது!" என்று கூறிச்சிரித்தான் அவன்.

ராஜன் தம் கண்ணொளி பெற்றவர்போல் மீட்டும் நோக்கினார். அந்த மாணவன் கூறியது போல் சித்திரத்தில் பெண்களும், ஆடவரும், பட்சியும், செடியும் வனப்பான வர்ணங்களுடன், அழகான தோற்றங்களுடன் நின்றன. ஆயின், ஒரு முகத்திலேனும் உயிர்க்களை என்பது மருந்துக்கும் கூட இல்லை. 'வா, வா, வா,!' என்று யாரையும் அழைக்கவில்லை படம். உண்மை என்று வாய் முணுமுணுத்தது. அவருக்கு அங்கே இருப்புக்கொள்ளவில்லை; தலை கவிழ்ந்து கொண்டு வெளியேறினார். நேரே வீட்டிற்குச் சென்று தமது அறையில் தாளிட்டுக்கொண்டு படுத்து விசும்பி விசும்பி அழுதார்.

"அடே, கண்ணா, ஏனடா என்னைத் தனியே விட்டு விட்டுப் போய் விட்டாய்? இங்கு நீ இல்லாத உலகில் எனக்கு என்ன வேலையடா? என்ன வேலை, சொல். 'அண்ணா, இது நீ என்னிடம் சொன்ன அளவு நன்றாக அமையவில்லையே?', 'அண்ணா, இது உயிர் ஓவியம்!' என்ற உன் பேச்சு இல்லாமல், உன் குரல் கேளாத, உலகம் எனக்கு எதற்கடா? 'அண்ணா, நீ என் கண்ணையும் கருத்தையும் கெடுத்து வாழ்க்கைக்கு பயன்படாதவனாக ஆக்கிவிட்டாயே என்னை?' என்று என்னை ஒரு நாள் திடுக்கிட வைத்தாயே! நான் கேட்டபோது, 'பின்னே என்ன, அண்ணா, என் கண்ணிலும் கருத்திலும் எழிலுணர்ச்சியைக் கரைத்துப் புகுத்தி விட்டாயே? இனி இந்த உலகில் எந்தச் சாதாரணப் பெண்ணை மணந்து கொண்டோ, எந்தச் சாதாரண மக்களைப் பெற்றோ, எந்தச் சாதாரண வாழ்க்கை வாழவோ முடியும்? இலட்சியவாதி யாக்கிவிட்டாயே? அவனுக்கு உலகத்தில் ஏமாற்றமே யல்லவா பிறவிச்சொத்து!' என்று சிரித்துப் பதில் சொன்னாயே, நீ வாழப் பிறந்தவன். நீ போய் விட்டாய்? இனி எனக்கு வாழ்வா! ஐயோ, இது என்ன கொடுமை? என் உயிர் நாடி போனபிறகு எனக்கு வாழ்வா?" என்று அவர் வாய்விட்டுப் புலம்பிப் புலம்பிப் புழுங்கினார்.

இரவு முழுவதும் கதவு தாளிடப்பட்டே இருந்தது. வீட்டில் யாவரும் கவலையுடன் இரவைக் கழித்தனர். காலையிலும் திறக்கப் படாமையால் கவலையுற்றுக் கதவை இடித்துக் கொண்டிருக்கையில் சுந்தரம் வந்தான். அவன் குரல் கொடுத்ததும் கதவைத் திறந்த ராஜன் கண்கள் சிவந்து வீங்கி, தலை பிய்க்கப்பட்டு, ஆடை அலங்கோலமாக இருக்க, பயித்தியக்காரனைப்போல் தென்பட்டார்.

"சார் நீங்கள் நேற்று கலைக் காட்சிக்கு......" என்று சுந்தரம் ஆரம்பிப்பதற்குள் ராஜன் இடைமறித்துப் பேசினார்.

"......வந்திருந்தேன். உங்கள் சகபாடிகள் சிறந்த ரசிகர்கள் அப்பா. ஒரு பையன் உண்மையைக் கூறினான். என் தம்பியின் குரலைக் கேட்பது போலிருந்தது. நான் வந்து விட்டேன். என் கைத்திறனை மெச்சவில்லை என்று அல்ல. அன்போடு கேட்ட உனக்கு இந்த

மாதிரி உயிரற்ற ஒன்றைக் கொடுத்தேனே, என்ற வெட்கத்துடன்.”

“நீங்கள் அவ்வாறு வருந்தக் கூடாது. நான் கேட்டதற்கு மறுக்காமல் நீங்கள் அளித்ததே தங்களது அன்புள்ளத்தைக் காட்டுகிறது. என் நண்பன் சொன்னான், தங்கள் காது படத் தான் ஏதோ உளறி விட்டதாக. மன்னிக்க வேண்டும்”

“மன்னிப்பு எதற்கு, அப்பா? உண்மையைக் கூறினதற்கா? நீயே சொல்—அது என்ன சித்திரமா?” என்று அவர் கேட்கவும், சுந்தரம் தலை குனிந்தான்.

“உங்கள் துயரத்தைக் குறைக்க எங்களால் இயலுமானால் நாங்கள் செய்து விடுவோம். தங்கள் கலை இப்படியே நாடி இழந்து போவதைச் சகியாமல் தவிக்கும் உள்ளம் இதோ தங்கள் எதிரே இருக்கிறது என்று கூறினால் தாங்கள் எழக் கூடுமானால் கூறுகிறேன். என் உள்ளத்தைத் திறந்து காட்டி விட்டேன்.”

ராஜன் தன் செவியைப் பொத்திக் கொண்டார். “வேண்டாம் அப்பா சுந்தரம், பாசத்தைக் காட்டி என்னை மீண்டும் மயக்காதே. என்னால் பேச முடியாது. அவன் தான் பேசவேண்டும் என்று துடித்தான். ‘அண்ணா, நீ உலகெலாம் போற்றத் தக்க கலைப் பொக்கிஷங்களைச் சமைப்பாய்! ஆனால் எது என்ன என்று பெயர் கூட உனக்குச் சொல்லத் தெரியாது. அன்று நான் தான் மேடையேறி கர்ஜிப்பேன். ஒவ்வொன்றின் நுண்ணிய அம்சங்களையும் பிரமாதமாக எடுத்துக் கூறுவேன். அப்படியே அன்பர்கள் உள்ளத்தில் அமர வாழ்வு வாழச் செய்வேன். என் பேச்சைக் கேட்டு நீ பிரமிப்பாய்!’ என்று அவன் தான் அடிக்கடிச் சொல்லுவான். அவனுக்கில்லாத நாக்கா எனக்கு? அவனது உயிரிழந்த உடலைப் பார்த்த இந்தக் கண்கள் இனிக் கலைக் கண்கள் ஆகுமோ? என்ன பயித்தியம் உனக்கு?

“கலைகளுக்கு அஸ்திவாரம் பக்தியாக இருக்கவேண்டும். நான் பாசம் கொண்டேன். ஆத்மாவை அர்ப்பணம் செய்ய அரிய வழி கலை. ஆனால் அஞ்ஞானத்தை வெளிக்காட்டும் கருவியாகக் கருதினேன் நான். கண்ணன் என்ன நினைப்பான், அவன் என்ன கூறுவான் என்றே நான் யோசித்தேன். நான் அனுபவித்ததை அவன் அனுபவிப்பான், அதைக் கண்டு நான் சுவைப்பேன். சுவைத்தது சித்திரமாகவோ, சிற்பமாகவோ வெளியாகும். பரம்பொருளிடம் உள்ளத்தைக் கொடுத்து விட்டவன் தான் உண்மையான—நிலையான—கலையை

EXPERT TAILORING

at moderate rates

CHAUDHRY TAILORS

(OF LAHORE)

CUTTERS & OUTFITTERS

27, Naiwala

Abdul Rehman Road,

KAROL BAGH.

வெளியிட முடியும். நிலையற்றதை உயிர் நாடியாகக் கொண்ட என் கலை இனி எழ முடியாது—சுந்தரம் என்னை விட்டு விடு" என்று கூறி விட்டு ராஜன் எழுந்து சென்று தன் அறைக்குள் புகுந்து கொண்டார்.

சுந்தரம் அப்படியே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான். அவன் கண்களில் நீர் வழிந்து கொண்டே இருந்தது. அப்போது அங்கே வந்த மீனு அவனைச் சமாதானப்படுத்தினாள்.

"அப்பா, சுந்தரம் அவர் அப்படித்தான். நான் பார்த்து மகிழ்கிறேனே என்றாலும் எழுந்திருப்பதில்லை. எங்கள் வேண்டுகோள் அவர் இதயத்தில் சுருதி மீட்டவில்லையாம். கண்ணன் ஒருவன் உள்ளமும் அவர் உள்ளமும்தான் சுருதியுடன் இயங்கியவாம். அவன் மறைவுக்குப் பிறகு உனக்குத் தான் அவர் சிறிது இளகி இணங்கி இருக்கிறார்" என்றாள் மீனு.

"அம்மா, என் இருதயம் படும் பாட்டை அவரிடம் நான் எப்படித் தெரிவிப்பேன்? அவர் கலை உயிரிழந்திருப்பதைக் காண என் மனம் கொதிக்கிறதே! என் உள்ளத்தை விண்டு அவருக்குக் காண்பிக்கக் கூடுமானால் காட்டி விடுவேன். இனி எந்த மகான் எந்த உன்னதக் கலை பொக்கிஷங்களை எனக்குக் கற்றுக் கொடுத்தாலும், எனக்குப் பரிசாக அளித்தாலும், இவர் கலை இறந்து விட்டது என் வரையில் ஆறாத புண்ணாகவே இருக்கும் அம்மா. அவர் கைத்திறன்தான் என் உயிர் நாடி என்பதை அவருக்குத் தெரிவிக்க ஓர் உபாயம் தெரியவில்லையே!" என்று துக்கம் தொண்டை அடைக்க, உணர்ச்சி மிகக் கூறினான் சுந்தரம்.

சுந்தரம் தலை குனிந்து உட்கார்ந்திருந்தான். அவன் நண்பன் அருகில் உட்கார்ந்து சமாதான மொழிகள் கூறிக் கொண்டிருந்தான்.

"என்னடா செய்வது? நீயும் இப்படி மாய்ந்து போகலாமா?"

"அவர் கலை—எத்தகைய பொக்கிஷமடா அது! மடிய நாம் பார்த்துக் கொண்டிருப்பதா?"

இந்தச் சமயத்தில் வாயிலில் யாரோ கூப்பிடுவது கேட்டு இரு நண்பர்களும் எழுந்து வெளியே வந்தனர். ஓர் ஆள் ஓர் அழகிய கோயில் பொம்மையைக் கொண்டு மேஜைமீது வைத்தான். வெள்ளை மண்ணில் வெகு அழகாக மிக்க நேர்த்தியாக, அதீதமானதோர் எழிலுடன் அது செய்யப்பட்டிருந்தது. வந்த ஆள் ஒரு கடிதத்தையும் நீட்டினான். சுந்தரம் அதை வாங்கி அவசரமாகப் பிரித்தான். ராஜனின் பெயரைக் கண்டதும் அவன் வியப்பு மேலிட்டது. படிக்கலானான்.

"அன்பான சுந்தரம்,

கோயில் கோபுரம் என்பது கடவுள் சந்நிதிக்கு அழைத்துச் செல்லும் வாயிற்படி. கலையும் ஒரு கோபுரம். ஆகவே நம் முன்னோர்கள் அக்கோபுரத்தையே கலைப் பொக்கிஷமாகச் அமைத்ததில் வியப்பில்லை. தெய்வ வழிபாட்டுக்குக் கலை ஒரு சாதனம். நமது ஆள்காட்டி விரலைப்போல் நிமிர்ந்து நின்று என்றும் பரம்பொருளை சுட்டிக் காட்டிக்கொண்டு எல்லாவற்றையும் விட உயர நிற்பது நம் கோயில் கோபுரம். உன் கலையுள்ளம் பரிணமித்து அது உன்னதமாகக் கோபுரத்தைப்போல் ஓங்கி விளங்க வேண்டும் என்று என் ஆசிகளைத் தெரிவிக்க உனக்காக இந்தப் பரிசைச் செய்து முடித்

தேன். பெற்றுக்கொண்டு சிரஞ்சீவியாக வாழ்வாயாக.

ராஜன்."

சுந்தரம் மீண்டும் மீண்டும் படித்தான். நண்பனும் படித்தான். இருவரும் ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டனர். உடனே ராஜனிடம் ஓடினர். அவர் கால்களில் வீழ்ந்தனர்.

"எழுந்திரு, அப்பா, கண்ணா" என்று எழுப்பினார் ராஜன். அவர் வாய் தவறிதான் "கண்ணா" என்று குறிப்பிட்டார். எனினும், தான் அவர் இருதயத்தில் ஏறக்குறைய அதே இடத்தைப் பெற்று விட்டோம் என்று அறிந்து அக மகிழ்ந்தான் சுந்தரம்.

"நான் அன்று ஏதோ தெரியாத்தனமாகக் கூறிவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்றான் சுந்தரத்தின் நண்பன்.

அவனை அடையாளம் கண்டு கொண்டார் ராஜன்.

"என்னையல்லவா நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்கள் கலையுள்ளத்தைப் புண்படுத்தியதற்காக! எழுந்திருங்கள்" என்று அவர் பேசும்போது அவர் குரலில் முன்பிருந்த சோர்வில்லை. நடக்கும் போது அவர் உடலில் பழைய அசதி இல்லை. அவர் கண்களில் பழைய உறக்கமுமில்லை.

புத்தொளி வீசும் அவருடைய தேஜஸான முகத்தைக் கண்டு வீட்டில் எல்லோரும் மகிழ்ந்தனர்.

"அவருக்கு மட்டுமல்ல. எங்கள் எல்லாருக்கும் உயிர் நாடி அளித்தவன் நீதான் சுந்தரம்" என்றாள் மீனா.

"4 SIMPLE PLANS to help you live a happier life!"

This booklet tells you of four interesting savings and investment plans offered by the Palai Bank. One or other of these schemes is sure to suit your needs. Ask our Branch Manager for your FREE copy today!

PALAI CENTRAL BANK LTD.

ESTD. 1927

(Incorporated in Travancore-Cochin with Limited Liability).

Branches:

461, CHANDNI CHOWK, DELHI

★

CONNAUGHT CIRCUS, NEW DELHI

கண்ணன் பிறந்தான் !

ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்

['கண்ணன் பிறந்தான் !' என்ற இக்கவிதை பிறந்த கதை ரஸமானது. 28-8-53ல் தமிழ் விழாவுக்காக டெல்லி வந்து சேர்ந்தது முதல் ஸ்ரீ ஜகந்நாதன் அவர்கள் விழா நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள். அன்று 31-8-'53, கோகுலாஷ்டமி. தமிழ் விழாவின் கடைசி நாள். இலக்கியப் பரிசுகள் வழங்கப்பட்டன. 'பவள மல்லிகை' என்ற சிறு கதைத் தொகுப்புக்காக ஸ்ரீ ஜகந்நாதன் அவர்களும் பரிசு பெற்றார்கள்.

'பவள மல்லிகை' என்ற சிறு கதையைப் படித்தவர்கள், கோகுலாஷ்டமியையும், கண்ணனையும், கண்ணனின் பக்தையான குழந்தைப் பெண்ணையும் மறக்க மாட்டார்கள். கண்ணனுக்குப் பரிசாக ஆசிரியர் அளித்த 'பவள மல்லிகை,' அவர்களுக்குப் பரிசு வாங்கித் தந்த பெருமை கொண்டது. அன்று அவர்களுக்குக் காலையிலிருந்து உபவாசம். காலையில் பரதனையும், ராமனையும் பற்றிய இனிய கம்பராமாயணப் பிரசங்கம். மாலை நிகழ்ச்சிகளிலும் பங்கு. பின் கால் கடுக்க ஸ்ரீலக்ஷ்மீ நாராயணர் கோவில் முழுவதும் தரிசனம். தாம் தங்கியிருந்த ஜாகைக்கு நண்பர்களுடன் திரும்பியபோது இரவு மணி ஏழு. உடனே ஸ்நானம், சந்தியாவந்தனம் செய்து விட்டு, அங்கு நடந்துகொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணபகவானின் பூஜையைத் தரிசித்துக்கொண்டே மெய் மறந்திருந்தார்கள். இரவு பத்தரை மணி சுமாருக்குப் பூஜை முடிந்து, ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீ கிருஷ்ணவதார கட்டம் பாராயணம் செய்யப்பட்டுத் தீபாராதனை நடந்தது. பேனாவும் காகிதமும் கேட்டார்கள். அவை கிடைத்த உடனே பகவான் சந்நிதியில் மடிமீது காகிதத்தை வைத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார்கள். என்ன எழுதுகிறார்கள் என்று அருகில் இருந்தவர்கள் கவனிப்பதற்குள் ஒரு பக்கம் எழுதி முடித்து அடுத்த பக்கத்தில் எழுதத் தொடங்கி விட்டார்கள். ஓர் அடிப்புக்கூட இல்லாமல் எழுதப்பட்ட சுந்தர அக்ஷரங்கள். எழுத எடுத்துக்கொண்ட நேரமோ பதினைந்து நிமிஷங்களே ! எழுதிய தாள்களை ஸ்ரீபாகவத புத்தகத்தின்மேல் வைத்து, தீபாராதனை செய்து கண்ணனை வணங்கியபின், அப்பாடல்களை ராகத்தோடு கம்பீரமாகச் சுமார் இருபது நிமிஷங்களுக்குமேல் பாடி எல்லோரையும் பரவசப் படுத்தினார்கள்.

கண்ணன் பிறந்த நன்னாளில் அவன் சுடரடி போற்றி அவனுக்கு அருள் தேன் சொட்டும் தெய்வத்தமிழில் பாமாலை சாற்றிக் களித்த ஸ்ரீ ஜகந்நாதன் அவர்களின் அன்புப் பரிசாக இக்கவிதையை நம் 'சுடரி'ல் பெருமிதத்துடன் வெளியிடுகிறோம்.]

மதியுரோ கணியோ டாங்கே வானத்தில் இலங்க யாண்டும்
விதியுறு மக்கள் யாரும் வேதனை யின்றி நிற்கக்
கதுவுறு தென்றல் வீசக் கன்றுகள் தாயோ டார
நதியினில் வெள்ளம் ஓட நன்மலர் மணத்தை வீச. (1)

இதயங்கள் உவகை வீங்க எழிலுறு கொடிகள் எல்லாம்
மதுநிறை மலர்கள் ஏந்த வானத்தில் மேகம் மூள
இதுவது உதுவென் றுரும் எண்ணுதற் கியம்பற் காகா
அதிசயப் பொருளாங் கண்ணன் அவதரித் தருளி னானே. (2)

சங்குசக் கரங்க ளேந்தித் தயங்குநன் முகத்திற் சோதி
பொங்குறத் திருமார் பத்தில் புரண்டிடுந் துளவம் ஓங்க
அங்குறு மறுவும் மாலை யணிகளும் அமையக் கண்கள்
மங்கிய உயிரைக் காக்க வயங்கரு ளலைகள் தாங்க. (3)

தேவகி மதலை யாகித் தேவருக் கறிய லாகாத்
தேவர்தந் தேவன் இந்தச் செறிகடற் புவனந் தன்னில்
யாவர்தன் அடியைக் காண என்றுய ரன்பு செய்தா
ராவர்அன் னவரைக் காக்க அவதரித் தருளி னானே. (4)

புண்ணியங் குறைந்து பாவம் பொங்கிடும் காலந் தன்னில்
நண்ணிய அல்லோர் தம்மை நலிந்துநல் லோர்கள் தம்மை
எண்ணியே காக்க இவர்க் கின்னருள் ஈய மக்கள்
அண்ணியே புகழக் கண்ணன் அவதரித் தருளி னானே. (5)

கமலம்போற் கண்ணன் வந்தான்
கமலம்போற் கையன் வந்தான்
கமலம்போல் தாளான் வந்தான்
கமலம்போல் இதழான் வந்தான்
கமலம்போல் உந்தி கொண்ட
கவினுடை ஐயன் வந்தான்
கமலத்தின் மேலுள் ளான்தன்
கணவனிப் பூவில் வந்தான். (6)

கீதையைச் சொல்ல வந்தான் கேட்டினைக் கெடுக்க வந்தான்
மாதயை காட்ட வந்தான் கஞ்சனை மாய்க்க வந்தான்
ஓதியே அன்பு செய்தார்க் குறுதுணை யாக வந்தான்
சீதரன் வந்தான் என்றும் திருவுடைக் கண்ணன் வந்தான். (7)

எவனிந்த உலக மெல்லாம் ஆக்கி னானோ
எவனிந்த உலகமெல்லாம் இயக்கி னானோ
எவனிந்த உலகமெல்லாம் அழிக்கின் றானோ
எவன்மறையும் காணமல் இருக்கின் றானோ
எவன்மோன ஞானியர்தம் மனத்துள் ளானோ
எவனுயிர்க்குள் உயிராகி இலகு வானோ
அவனிந்த உலகத்தில் யதுகு லத்தில்
அவதரித்தான் கண்ணனெனும் நாமம் பூண்டே. (8)

கமலமென விளங்குகின்ற பாதக் கண்ணன்
கருதிடையில் பொன்னுடை உடுத்த கண்ணன்
விமலமுறு மார்பிலணி துழாய்கொள் கண்ணன்
மேருவென விளங்குதிருத் தோளார் கண்ணன்

அமலவனை யெனுமெழிலார் கழுத்துக் கண்ணன்
அம்புயம்போல் விளங்குகின்ற வதனக் கண்ணன்
எமையுமொரு பொருளாக எண்ணி உள்ளே
இருந்துமுறு வல்செய்யும் கண்ணன் அம்மா. (9)

அடியெல்லாம் மிகமதுரம் மேனி எங்கும்
அழகொழுகும் லாவண்யம் மதுரம் என்றும்
படியொன்றில் லாதமுகம் மதுரம் வாயும்
பழகுகுழற் பாட்டொலியும் மதுரம் கண்ணன்
முடியழகு மயிற்பீலி மதுரம் அன்னான்
முறுவலொளி மிகுமதுரம் கீதை பேசிக்
குடிபுகுந்து பார்த்தன்நெஞ் சதனில் வாழும்
குளிரருளும் மிகமதுரம் மதுரம் அம்மா. (10)

சூதினால் நலமில்லை எனவே சொல்லிச்
சூதியற்றும் பாண்டவர்க்குத் தூத னானான்
ஓதுகின்ற களவுசெய்வார் பொல்லார் என்றான்
உறியிலுறு வெண்ணெய்தயிர் திருடி யுண்டான்
காதலினால் உளங்கெடுமென் றுரைத்தான் ஆயர்
கவின்மகளிர் தம்பாலே காதல் கொண்டான்
சீதரன்வான் முகில்வண்ணன் கண்ணன் செய்த
செயல்களெல்லாம் இன்னவெனக் கணித்தலாமோ.

கல்லுருவ வன்மனத்தை வெண்ணெ யாக்கிக்
கையிலெடுத் துண்பதற்கு வழியொன் றுண்டோ
மல்லர்இரு வர்க்குமைத்தோய் ஆயர் தங்கள்
மங்கையர்தம் இற்புகுந்து யாரும் காணு
தெல்லுறுநற் பால்தயிரை வெண்ணெய் தன்னை
எடுத்துண்டாய் அவ்வெண்ணெய்க் கென்னே
பல்லுருவும் பல்லுயிரும் ஆகி இந்தப் [மேன்மை ?
பாரினிலே அவதாரம் செய்த கண்ணு. (12)

வேத நான்கினும் காணரி தாமலர், வித்தகர் உளத்துள்ளே
சீத மேவுறத் தேனமு தூறல்செய் செங்கழல், கோகுலத்தில்
போது மாயர்தம் பெண்டிரோ டாடிய பொற்புறு திருப்பாதம்,
காதல் மேவிய கண்ணனல் அடிஎன்றன் கண்ணைவிட்
[டகலாவே. (13)

வாழி கோகுல மாதவன் சிறடி
வாழி ஆயர்தம் மாமண வாளன்சீர்
வாழி தேவகி மைந்தன்றன் காதைகள்
வாழி வாழியம் மாயவன் வாழியே. (14)

THE LAKSHMI INSURANCE CO., LTD.

Head Office : **NEW DELHI**

FOUNDED IN 1924

BY

Late Pt. MOTILAL NEHRU

AND

LALA LAJPAT RAI

Stands for:

PROTECTION, STRENGTH AND SECURITY

LATEST VALUATION RESULTS,
BONUS
Rs. 11/- per thousand per annum for Whole Life.
Rs. 9/- per thousand per annum for Endowment.
(on Current Premium Policies)

Branches : ALL OVER INDIA & B. E. AFRICA

SUN ELECTRIC CO.

Cloth Market, Delhi :: Chandni Chowk, Delhi

★

Distributors and Stockists for:

Indian Conduit Pipes and Conduit Accessories

All Types of Cables and Electrical Accessories

பாராளுமன்றம்

ஜி. எச். ஜி. ராமன்

'பாராளுமன்றம்' என்ற சொல், பொதுமக்களிடையே மேல் சபையையும் (Council of States) கீழ் சபையையும் (House of the People) மட்டுமே குறிக்கிறது. உண்மையில், இரு சபைகளும் ராஷ்டிரபதியும் அடங்கியதே பாராளுமன்றம். இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட மசோதாவுக்கு ராஷ்டிரபதி சம்மதித்து கையொப்பம் இட்ட பிறகே, அம்மசோதா சட்டமாகி அமுலுக்கு வரும்.

இவ்வளவு முக்கிய நிலைமையைத் தாங்கும் ராஷ்டிரபதி, பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை பார்க்கவோ கேட்கவோ வருவது வழக்கமில்லை. வருஷந்தோரும், ஒரு தடவைக்குக் குறையாமல், இருசபை அங்கத்தினர்களையும் வரவழைத்து, கூப்பிட்ட காரணத்தை ஒரு உரைமூலம் ராஷ்டிரபதி தெரிவிப்பார். இந்த உரையைத் தயாரிக்கும் பொறுப்பு பெரும்பாலும் மந்திரி சபையைச் சார்ந்தது.

ராஷ்டிரபதி பேசும் தினம், பாராளுமன்றத்தின் நடவடிக்கை தினங்களில் ஒன்றாகக் கணக்கிடப்படுவதில்லை. ஆரம்ப விழா மாதிரி மட்டுமே கருதப்படுகிறது. உரிய அரசாங்க முஸ்தீப்புக்களுடன் பாராளுமன்றக் கட்டிடத்திற்கு அவர் வருவதும், உரை நிகழ்த்துவதும், பின்னர் திரும்பிப் போவதும், பொது ஜனங்கள் அனைவரும் ஜனநாயக ஆட்சியைக் கண்கூடாகப்பார்த்து, உணர்வதற்கே முக்கியமாகப் பயன்படுகிறது.

பாராளுமன்றம் மற்ற சபைகளைப் போன்றது அல்ல. அங்கத்தினர்கள் பல சம்பிரதாயங்களையும், பழக்க வழக்கங்களையும் அநுசரித்தாக வேண்டும். உதாரணமாக, ஒரு அங்கத்தினர் சபைக்குள் பிரவேசிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். தம்முடைய இடத்தை அடைந்ததும், அவர் உடனே உட்காரக்கூடாது. அக்ராசனருக்கு, தலை குனிந்து வணங்கிவிட்டே உட்காரவேண்டும். இதுபோலவே, இடத்தைவிட்டு எழுந்திருந்து போகும்போதும், தலை வணங்கிவிட்டுப் போகவேண்டும்.

இந்தப் பழக்கம் நாமாக ஏற்படுத்திக் கொண்டதல்ல. 1910-ம் ஆண்டுக்குப் பிறகு, இங்கிலாந்தைப் பின்பற்றி, கையாளப்பட்டு வருகிறது. அங்கு இப்பழக்கம் ரொம்பவும் பழைமையானது. அவர்களது மக்கள் சபை ஆரம்ப காலத்தில் ஒரு மாதா கோயிலில் கூடியது. அவ்விடம், அக்கிராசனரின் ஆசனத்திற்குப்பின், தெய்வபீடம் இருந்ததால், அதற்கு மரியாதை செய்வதற்காக ஆரம்பித்த இப்பழக்கம், கடைசியில் அக்கிராசனரின் ஆசனத்திற்குச் செய்யும் மரியாதையாகத் திரிந்து, இன்றுவரை இருந்து வருகிறது.

இன்னொரு வேடிக்கையான பாராளுமன்ற விதியின்படி, அங்கத்தினர்கள் பேசும்போது ஒருவர் பெயரைச் சொல்லி மற்றொருவர் அழைக்கக்கூடாது. சண்டைக்காரர்களிடையே மட்டும் காணப்படும் இப்பழக்கம், இங்கு வேறு காரணங்களுக்காக அநுசரிக்கப்படுகிறது. நேரிடையாக ஒருவரையொருவர், 'நீ', 'நீங்கள்' என்று

குறிப்பிடுவதும் தடை செய்யப் படுகிறது. காரசாரமான விவாதம் நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். 'நீர் சொல்வது பூராவும் பொய்' என்று எதிர்க் கட்சி அங்கத்தினரைப்பார்த்துக் கூறமுடியாது. எல்லாவற்றையும் அக்கிராசனரைப் பார்த்தே சமர்ப் பிக்க வேண்டும்.

ஒரு சமயம், ஒரு அங்கத்தினர் பேசுகையில், "அக்கிராசனர் அவர்களே, நீங்கள் கொண்டு வந் துள்ள இம்மசோதா ஜனநாயகத் துக்கு விரோதமானது. உங்க ளுக்கு அது அவசியமாகத்தோன்ற லாம். எனக்கு அது வெறுப் பையே அளிக்கிறது" என்று கூறியதும், அக்கிராசனர், "நான் ஒரு மசோதாவும் கொண்டு வர வில்லையே. மந்திரியல்லவோ கொண்டு வந்திருக்கிறார்?" என்று கேட்டுவிட்டார். அங்கத்தினர் சளைக்கவில்லை. "நமது விதிகளின் படி நான் உங்களைப் பார்த்தே பேசவேண்டியிருப்பதால், இப்படி யாகிவிட்டது. 'நீங்கள்' என்று நான் குறிப்பிட்டது உங்களை யல்ல; கனம் மந்திரியைத்தான்" என்றார்.

இதைவிட விநோதமான ஒரு சம்பிரதாயம், அங்கத்தினர்கள் ஒருவரை யொருவர் 'எனது கௌரவம் மிக்க நண்பர்' என்று குறிப்பிடுவது. உதாரணமாக, காங் கிரஸ் அங்கத்தினருக்கும், கம்யூ னிஸ்ட் கட்சி அங்கத்தினருக்கும் இடையே உள்ள நட்பு நாம் அறிந் ததே. இவர்கள் இருவரும், ஒருவர் மற்றவரை கௌரவம் அற்றவர் என்றுகூட எண்ணலாம். ஆனால், பேசும்போது, "எனது கௌர வம் மிக்க நண்பர் சொல்வது எல் லாம் தப்பு; செய்வதெல்லாம் புரட்சி" என்றுதான் கூறவேண் டும்.

பாராளுமன்றத்தில், அங்கத் தினர்கள் ஜலம்கூடக் குடிக்கக் கூடாது; புஸ்தகமோ பத்திரிகை களோ பொழுதுபோக்குக்காகப் படிக்கக்கூடாது; அண்டை அயல் அங்கத்தினருடன் வம்பளக்கக் கூடாது! ஆனால், தூங்கினால் ஆக்ஷேபணை இல்லை; ஒரு ஷரத் துடன்-குறட்டைவிடாமல்!!

பாராளுமன்றமோ, பேச்சு மன்றமோ என்று பலர் கேட்ப துண்டு. பார்க்கப்போனால், பாராளுமன்ற அங்கத்தினர்கள் அனைவரும் பேசுவதில்லை. பொறுக்கியெடுத்த நாற்பது-ஐம் பது பேர்கள் எப்பொழுதும் பேசு வார்கள்; இன்னும் நாற்பது-ஐம் பது பேர்கள் எப்பொழுதாவது பேசுவார்கள்; அல்லது கேள்வி கேட்பார்கள். எஞ்சியுள்ள நூற் றுக் கணக்கான அங்கத்தினர்கள் பேசவேமாட்டார்கள்; பேசினு லும் ஒன்றிரண்டு வார்த்தைகளே பேசுவார்கள். அதாவது வோட் எடுக்கும் சமயம் 'ஆம்' அல்லது 'இல்லை' என்று. இந்தச் சிரமம் கூட ஏற்படாமலிருக்க, வோட் பதிவு செய்யும் யந்திரம் ஒன்று வரப்போவதாகக் கேள்வி.

FOR ALL PHOTO-CINE SUPPLIES & SERVICE

CONTACT

RANGOON STUDIO

58, QUEENSWAY, NEW DELHI

Phone: 47861 Gram: PHOTOCINE

பாராளுமன்றத்தில் பேச்சு சுதந்திரம் மட்டுமின்றி உடை சுதந்திரமும் இருக்கிறது. கோடையில் கம்பளிக் கோட்டையும் "டையையும்" அணியும் அங்கத்தினரிலிருந்து பனிக் காலத்தில்கூட சட்டையே அணியாத அங்கத்தினர் வரையிலிருக்கின்றனர். காஷாயம் தரித்த ஒரு ஸ்வாமிஜிகூட இருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளலாம். இவ்வளவு சுதந்திரம் அங்கத்தினர்களுக்கு இருந்தபோதிலும், பாராளுமன்றத்தின் இரு சபைகளும், சொந்த விஷயத்தில் ரொம்பவும் கண்டிப்பாக இருக்கின்றன. கீழ் சபையின் ஆசனங்கள், கேள்வித்தாள்கள், கீழே விரிக்கும் கம்பளங்கள் எல்லாம் பச்சை நிறம்; மேல் சபையில் எல்லாம் சிகப்பு நிறம். இன்னொரு கவனிக்கத் தக்க விஷயம். பாராளுமன்றத்தின் சபா மண்டபங்களில், தேவைக்கு குறைவாகவே இட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. 499 அங்கத்தினர்களுடைய மக்கள் சபையில் 400 இடங்களே உள்ளன. காரணம், எல்லா அங்கத்தினர்களும், ஒரே சமயத்தில் ஒரு முறைகூடக் கூடினது கிடையாது; கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படவில்லை. இங்கிலாந்திலும் இவ்வாறே, 600 அங்கத்தினர்களுடைய சபையில் 400 இடங்களே உள்ளன.

தாங்கள் நினைத்த வேளையில் அங்கத்தினர்கள் பேசுவது கடினம். சபாநாயகரின் 'கண்ணைக் கவர' வேண்டும். அவருடைய கண்ணில் பட்டு, அவர் கூப்பிட்டாலொழிய பேச முடியாது. கண்ணைக் கவரும் சிரமத்தை நீக்குவதற்காக, பலர் 'ஐயா' என்று கூவி, அவரது செவியைக் கவருவது வழக்கம்.

இப்படிக் கஷ்டப்பட்டாவது பாராளுமன்றத்தின் அங்கத்தினர்கள் பேசுகிறார்களே, அவர்களுடைய பேச்சுக்கும் மற்றச் சபைகளில் பேசப்படும் பேச்சுக்கும் என்ன வித்தியாசம்? ஒரு வித்தியாசம் சட்டென நினைவிற்கு வரும். லக்ஷத்தில் ஒருவன் என்று நாம் குறிப்பிடுகிறோமல்லவா? பாராளுமன்ற அங்கத்தினர்களில் பலர் எட்டரை லக்ஷத்தில் ஒருவர். அவர்களுடைய உரைகளில், இலக்கணம்—சொல்வன்மை இவைகளை விட, பிரதிநிதித்வம் தொனிப்பது தான், அவர்களுடைய பேச்சிற்கு சக்தியையும் செல்வாக்கையும் கொடுக்கிறது.

ஒரு பாராளுமன்ற அங்கத்தினரின் கேள்விக்கு பதிலளிக்க, சர்க்காருக்கு குறைந்தது 60 ரூபாய் செலவாகிறது. பாராளுமன்றத்தின் ஒரு நிமிஷ நடவடிக்கைக்கு பல நூறு ரூபாய்களும், ஒரு நாளைய ஐந்துமணி நேர நடவடிக்கைக்கு பல ஆயிரம் ரூபாய்களும், ஒரு வருஷ எட்டுமாத நடவடிக்கைக்கு பல லக்ஷ ரூபாய்களும் செலவாகின்றன. ஒரு வருஷத்தில் பதினாயிரத்திற்கு குறையாமல் கேள்விகள் கேட்கப்படுகின்றன; ஒரு கோடிக்குக் குறையாமல் வார்த்தைகள் பேசப்படுகின்றன. இதைக் கவனிக்கும்போது, பாராளுமன்றத்தின் பேச்சுக்கள் அதிக மதிப்புள்ளவை என்பதை யார்தான் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்?

பாராளுமன்றத்தில் ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோ தான் அலுவல்களை நடத்த வேண்டும் என்று அரசியல் சாசனம்

கூறியிருக்கிறது. இரண்டு பாஷைகளும் பழக்கமில்லாத ஒருவர் தனது தாய் பாஷையில் பேசலாம் என்றும் கூறியிருக்கிறது. டாக்டர் ஜான் மத்தாய் நிதி மந்திரியாயிருந்த சமயம், ஒரு ஹிந்திவாதி வேண்டுமென்றே அவரிடத்தில் ஹிந்தியில் கேள்வி கேட்டார். டாக்டர் மத்தாய்க்கு ஹிந்தி தெரியாது என்று அவருக்குத் தெரிந்தும் இப்படிச் செய்ததைக் கண்டு டாக்டர் மத்தாய் அழுத்தந் திருத்தமாய் மலையாளத்தில் பதிலளித்தார். பாராளுமன்றத்தில் ஒரே கரகோஷம். இம்மாதிரியே, காலஞ்சென்ற மந்திரி கோபாலசாமி அய்யங்காரும், ஒரு ஹிந்தி உற்சாகிக்கு, சுடச்சுட தமிழில் பதிலளித்தார்.

ஹிந்தியை வலுக் கட்டாயமாய் அனுசரிக்க முயலுவதைக் கண்டித்து, ஆங்கில பாஷை தெரிந்த சில குறிப்பிட்ட அங்கத்தினர்கள் தெலுங்கு, தமிழ், வங்காள பாஷைகளில், பாராளுமன்றத்தில் பேசியிருக்கின்றனர். பிரதம மந்திரி நேரு ஹிந்தியை அவ்வளவாக, பாராளுமன்றத்தில் உபயோகிக்க ஆரம்பிக்கவில்லை. யாராவது ஹிந்தியில் கேள்வி கேட்டால் மட்டுமே, பதிலை ஹிந்தியில் கொடுப்பார். இல்லாவிடில் ஆங்கிலத்திலேயேதான் பேசுகிறார்.

பாராளுமன்றத்தைப் பார்க்க அனுமதிச் சீட்டு பெறும் பொது ஜனங்கள், உயரே மாடியிலிருந்து நடவடிக்கைகளை கவனிப்பர். பன்னிரண்டு வயதுக்கு குறைவானவர்களுக்கு அனுமதிச் சீட்டு கிடையாது. மாடியில் பிரவேசிக்கு முன், குடை, புஸ்தகங்கள், கைத்தடி, தொப்பி, முதலிய சாமான்களை வெளியே வைத்து விட்டுச் செல்லவேண்டும். சுவாரசியமான விவாதம் நடக்கும்போதுகூட, பொது ஜனங்கள் தங்களுடைய உணர்ச்சிகளை கைதட்டுவது மூலம் தெரிவிக்கக் கூடாது. இது முக்கியமான நிபந்தனை.

பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை நேரில் பார்த்துக் கேட்டுத்தான் அனுபவிக்க வேண்டும். ஏனெனில், புகைப்படம் எடுப்பதும், வானொலியால் நடவடிக்கைகளை அகில இந்தியாவுக்குப் பரவச் செய்வதும் தடை செய்யப்பட்டவை. படத்தில் பார்த்தும், ரேடியோவில் கேட்டும் அனுபவிக்க முடிந்து விட்டால், பாராளுமன்றம் சாதாரண மன்றமாகிவிடும் என்பதே முக்கியமான காரணம். இது தவிர வேறு காரணங்களும் உள்ளன.



NORTHERN RAILWAY

Concessional Return Tickets to Hill Stations

With effect from 1st April 1954, upto 31-10-1954

Second, Inter, Third & Servants,

Hill Concession Tickets

★ at one and half single Journey Fares

★ available for 3 months from date of issue

★ will be issued from All Stations

★ on Northern Railway and other Indian Railways from which the chargeable distances is 150 miles or more for the undermentioned Hill Stations.

Simla, Solan, Dharampur-Punjab, Dehra-Dun, Pathankot, Kathgodam, Ootacamaund, Kodaikanal Road, Abu Road, Coonour, Darjeeling, Kurseong, Shillong & Pipariya.

Break journey on the outward trip is not permitted. Reservation for Return journey can be made only from the hill stations, from which the return Halves are available.

GENERAL MANAGER (Commercial)

NEW DELHI

இரு கடிதங்கள்

டி. என். விச்வநாதன்

அன்பான அத்தைக்கு,

நான் உங்களுடன் பேசத்தான் வந்தேன். நீங்கள் வெளியே சென்றிருக்கிறீர்கள், வரச் சற்று தாமதம் ஆகும் என்றார்கள். உங்கள் அறையில் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கையில், நான் சொல்ல வந்ததை நேரே சொல்வதைக் காட்டிலும், இப்படி ஒரு கடிதமாக எழுதுவது சுலபம் என்று பட்டது.

உண்மையிலே நீங்கள் எனக்கு அத்தை இல்லை தான்—ஏன் ஒரு வித உறவு கூட இல்லை. ஆனால் இளம் வயதிலேயே தாயை இழந்து, அந்த அரவணைப்பின் சுகம் என்னவென்றறியாத என் வாழ்க்கையில் நீங்கள் அன்னையாகத்தான் அருளினீர்கள். எதிர் வீட்டில் குடி வந்த புதிசில், நீங்கள் என் கற்பனையில் ஒரு அதிசயப் பிறவியாகத் தோற்றமளித்தீர்கள். ஒரு ஸ்திரீ, இப்படி புருஷன்—குழந்தைகளில்லாமல், உற்றார் உறவினரையும் துறந்து, பொதுநலசேவைக்கென்றே வாழ்வது சாத்தியமா என்பது எனக்கு வியப்பாக இருந்தது. ஆனால், தொடர்ந்து உங்களையும், உங்கள் எளிய தூய வாழ்க்கையையும் அறியும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டிய பொழுது உங்கள் சேவையின் சிறப்பையும், தியாகத்தின் தன்னலமற்ற தன்மையையும் கண்டு மெய்சிலிர்த்தேன். இன்று வாழ்க்கைப் பாதையில், செல்லும் திசை புரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் எனக்கு உங்களைவிடச் சிறந்த வழி காட்டி யார் இருக்க முடியும்?

எத்தனையோ சந்தர்ப்பங்களில், நீங்கள் கேட்டிருக்கிறீர்கள்—என் குடும்ப வாழ்க்கை சந்தோஷமாக நடைபெறுகிறதா என்று. அப்பொழுதெல்லாம், எனக்கு ஒரு குறையுமில்லையென்று மழுப்பியிருக்கிறேன். ஆனால் உண்மையைச் சொல்ல, எத்தனை தடவைகள் துடிதுடித்திருப்பேன் தெரியுமா?

*

ஆனால் இன்று பொய், மழுப்பல்களுக்கு அவசியமில்லை. என் வாழ்க்கைச்சக்கரம் சரியாக ஓடத்தானில்லை. மாமி, நாத்தி—இவர்களின் அன்பை மட்டும் பெறவில்லையென்றால் நான் அதைப் பொருட்படுத்தி இருக்க மாட்டேன். ஆனால் கணவனும் என்னை மதிக்கவில்லை.

என் கணவர் ஒரு டாக்டர் என்பதை நீங்கள் அறிவீர்கள். பத்து வருஷங்களுக்கு முன், அவர் வீட்டிற்கு வந்தபொழுது, நானும் என் வயதுப் பெண்களைப்போல், வருங் காலம் பற்றி எத்தனையோ இன்பக் கனவுகள் கண்டேன்.

பல நாட்களுக்குப் பிறகுதான், நான் புருஷனுடன் சரளமாகப் பேசிப் பழகி வந்தது, வீட்டில் உள்ள மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதை அறிந்தேன்.

கல்யாணத்திற்கு முன்பே என் மாமனார் காலம் ஆகிவிட்டார். வீட்டில் அச்சமயம் என்னையும் என் புருஷனையும் தவிர, மாமியும், நாத்தியும் இருந்தார்கள். நாத்திக்கு விவாகமாகி யிருந்தது. ஆனால் அவள் கணவன் மேல்ப் படிப்பிற்காக அமெரிக்கா சென்

திருந்தபடியால், அவள் தாய் வீட்டில் இருந்தாள். கிட்டத் தட்ட என் வயதுதான் அவளுக்கும். என்னைப் போலவே தானும் தன் புருஷனுடன் இல்லையே என்ற ஏக்கமோ என்னவோ, ஆரம்பத்திலிருந்தே அவளுக்கு என்னைப் பிடிக்கவில்லை. அனுவசியமாகக் கடுமையும், கண்டிப்புமாக இருப்பாள். அவள் அன்பைப் பெற நானும் என்னென்னவோ செய்தேன். ஆனால் முடியவில்லை. ஆரம்பத்தில் என்னிடம் அன்பாக இருந்த மாமியைக்கூட தன்வசப் படுத்தி என்னை வெறுக்கும்படி செய்து விட்டாள். என் கணவர் என்னவோ என்னிடம் அன்பாகத் தானிருந்தார். அந்த அன்பில் இறுமாந்திருந்த என்னை, அவர்கள் உதாசீனம் அச்சமயம் வெகுவாக பாதிக்கவில்லைதான்.

ஆனால் நாளடைவில் என் கணவரே என்னிடம் ஒருவித வேற்றுமையுடன் நடந்து கொள்வதை உணர்ந்தேன். குடித்தனம் ஆரம்பித்த புதிதில், டிஸ்பென்ஸரியிலிருந்து மாலை ஆறு மணிக்கே நேரே வீட்டிற்கு வந்து கொண்டிருந்தவர், இரவில் வெகு நேரம் கழித்து வீடு வர ஆரம்பித்தார். நான் சாப்பிடாமல், கொள்ளாமல், வாசற் பக்க ஜன்னலில் உட்கார்ந்து கொண்டு, இருட்டைக் கண்களால் துழாவிக் கொண்டு, அவர் வருகைக்காக தவங்கிடப்பேன். தான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டதாகப் பாதி நாட்கள் சொல்வார். எனக்கு அழுகை பீறிக்கொண்டு வரும். ஏன் தாமதமென்று கேட்பேன். ஏதோ கேஸுக்காகப் போனேன், நாழிகையாகி விட்டது என்று பசப்புவார். ஆனால், நாளாக—ஆக, நான் அப்படிக் கேட்டாலே எரிந்து விழ ஆரம்பித்தார். "தொழிலுக்கு முழுக்குப் போட்டு விட்டு, தேவியின் பாதாரவிந்தங்களில் விழுந்து கிடக்கச் சொல்கிறாயா?" என்று வசை பேசுவார். அவர் வாயிலிருந்து அன்பைத் தவிர வேறொன்றையுமே அறியாத என்னை இந்தச் சொற்கள் சுட்டெரிக்கும். தனிமையில், பொருமி, துடிதுடித்து அழுவேன்.

தெய்வத்திற்கே என் கஷ்டம் பொறுக்கவில்லை போலும். ஒரு நாள் தகவல் வந்தது; என் நாத்தியின் கணவருக்கு அமெரிக்காவிலேயே பெரிய வேலை கிடைத்து விட்டதாகவும், கூடிய சீக்கிரம் அவளை அங்கே அழைத்துப்போகப் போவதாகவும் பேசிக்கொண்டார்கள். இந்தச் செய்தி வந்ததிலிருந்து, என் நாத்தியின் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது—என்னைப்பற்றிய வரை அது நல்ல மாறுதல்தான். வரவர என்னிடம் கூட க்ஷாத்திரம் காட்டாமல் அன்புடன் நடந்து கொண்டாள். அவளிடம் மலர்ந்த மாறுதல் சீக்கிரத்திலேயே மற்றவர்களையும் தொத்திக் கொண்டது. என் கணவர்கூட பழைய நாட்களைப் போல், என்னிடம் நகை முகத்துடன் உரையாட வருவார். நாங்கள் எல்லோருமே நாத்தியின் அமெரிக்கப் பிரயாணத்திற்கான முஸ்தீபுகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டோம். என் கெட்ட காலம் முடிந்து விட்டது என்றுதான் நினைத்தேன்.

ஆச்சு, நாத்தி புறப்படும் நாளும் வந்தது. அவளை விமானத்தில் அனுப்ப என் மாமி விரும்பவில்லை. என் கணவர் துணையில் பம்பாய் சென்று அங்கிருந்து தெரிந்தவர்கள் சிலருடன் கப்பலில் அனுப்புவதாகத் தீர்மானித்து டிக்கெட்டும்

வாங்கியாகி விட்டது. கிளம்ப வேண்டிய தினம் காலை, "புறப்பட வேண்டாம்" என்று அவள் புருஷனிடமிருந்து 'கேபிள்' வந்தது. அதைத் தொடர்ந்து, பிறகு வந்த கடிதத்தில், தானே லீவில் வரப்போவதாகவும், அப்போது அழைத்துச் செல்வதாகவும் எழுதியிருந்தார்.

பாவம், நாத்தியின் ஏமாற்றத்தை என்னால் பார்க்கவே முடியவில்லை. அன்று அவளுக்கு மேலாக அழுதுவிட்டேன். நாட்கள் ஓடி மறைந்தன. சொன்ன கெடுவில் அவர் நம் நாடு திரும்பவில்லை. அதற்குப்பின் என் நாத்தி, தானே திட்டமிட்டுக்கொண்டு, புருஷனிடம் போக, பல தடவைகள் கிளம்பினாள். ஆனால் ஒவ்வொரு சமயமும், கடைசி நிமிஷத்தில், அவளை வரவேண்டாமென்று அவள் புருஷன் தடை செய்து விட்டார். பல மாதங்களுக்குப் பிறகு அமெரிக்காவிலிருந்து ஊர் திரும்பிய சிலரிடமிருந்து உண்மை தெரிய வந்தது. அவர் அங்கேயே ஏதோ கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டதாகவும், திரும்பி நம் தேசத்திற்கே வரமாட்டார் என்றும் பேசிக் கொண்டார்கள்.

✲

மாதங்கள் பல சென்றன. எனக்கு என் நாத்தியைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. புருஷனிடம் வாழப்போகிறோம் என்ற நம்பிக்கையில் பூரித்துக் குலுங்கிக் கொண்டிருந்த அவள் மீண்டும், வாடிக் கருகிப் போனாள். ஒருவருடன் பேசாமல், தன்னந்தனியே, மணிக்கணக்காக பிரமை பிடித்தவள் போலிருப்பாள். அவள் மனத்தை வேறு வழிகளில் திருப்ப என்னாலான பாடுபட்டேன். சில சமயங்களில் நான் அருகிலிருப்பதைக்கூட உணரமாட்டாள்.

என் மாமியைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. தன் ஒரே மகளின் விதியை நினைந்து நினைந்து கண்ணீர் பெருக்குவார். பாதி நாட்கள் சாப்பிடக்கூட மாட்டார். தங்கையின் தலைவிதியை தாங்கமுடியாமலோ, என்னவோ, என் கணவர் வீட்டிற்கு வருவதையே நிறுத்தி, நர்ஸிங் ஹோமிலேயே வசிக்கத் தொடங்கி விட்டார்.

கொஞ்சம் கொஞ்சமாக தாய், மகள் இவர்களின் துக்கம் வெறுப்பாக மாறியது—என்னிடம்தான். தன் மகளின் வாழ்வு சீர்குலைந்தது, எனக்கு மட்டும் என்ன வாழ்வு என்று என் மாமி நினைத்தாளோ என்னவோ?

என் கணவரிடம் என்ன தூபம் போட்டார்களோ! நாளடைவில் அவர் என்னுடன் பேசுவதையே நிறுத்திவிட்டார். சில சமயங்களில், துக்கத்தை மறந்து, முகம் மலர்ந்து அவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருப்பார்கள். அங்கு நான் போக நேர்ந்தால் அவர்கள் பேச்சுத் தடைப்பட்டுவிடும். என் கணவர் என்னை எரித்து விடுவார்போல் பார்ப்பார். அப்பொழுதெல்லாம் துக்கத்தினாலும், ரோசத்தினாலும் நான் துடிதுடித்தது உங்களுக்குப் புரியுமா......?

சென்ற பொங்கல் திருநாளன்று நடந்தது. எப்பொழுதோ ஒரு சமயம் அப்பாவிடம் கிளிப்பச்சை நிறத்தில் மைசூர் ஸில்க்ப்புடவை வேண்டுமென்று கேட்டிருந்தேன். காரணம் என் கணவருக்கு அந்தக் கலர் மிகவும் பிடிக்கும். அப்பா, பாவம், அதை நினைவில் வைத்திருந்து வாங்கி பார்சலில் பொங்கலன்று அனுப்பி இருந்தார். அன்று மாலை அதை உடுத்திக்கொண்டு, அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். அவரும் வந்

தார். அவரைப் பின்தொடர்ந்து, ஆபீஸ் அறைக்குச் சென்று "சற்று திரும்புங்கள். நமஸ்காரம் பண்ண வேண்டும்" என்றேன். "எதற்கு?" என்றார். ஒருவித உணர்ச்சியுமின்றி "உங்களுக்குத் தெரியவில்லே?" என்றேன். "இதோபார், ஏதேனும் ஒழுங்காகப் பேசுவதாக இருந்தால் பேசு, இல்லே, உள்ளே போ. உன்னுடன் கொஞ்ச எனக்கு அவகாசமில்லே" என்று அவர் அங்கிருந்து போய் விட்டார். வெட்கத்தாலும், துயரத்தாலும் குன்னிப்போன எனக்கு உலகமே சுற்றுவதுபோலிருந்தது. என் கால்களிலிருந்து பூமி நழுவிவிடக் கூடாதா என்று விரும்பினேன். ஒருவாறு சமாளித்துக்கொண்டு, கூடத்தைத் தாண்டி சமையல் அறைக்குச் சென்று கொண்டிருந்தேன். அச்சமயம் என் கணவர்தான் பேசிக்கொண்டிருந்தார். அன்று அம்மாவின் கட்டாயத்தின் பேரில் அவர் தங்கையும் புதிசு கட்டிக்கொண்டிருந்தாள். "அடேடே! இதேது பச்சைப் புடவை! உன் உடம்புடன் அது ஒட்டிண்டிருக்கிற அழகு ரொம்ப ஜோராக இருக்கே?" என்று அவர் சொன்னது எனக்குக் கேட்டது.

வாய்விட்டு அலற வேண்டும்போலிருந்தது எனக்கு.

பொங்கல் வந்துபோய் இரண்டு மாதங்களுக்கு மேலாகி விட்டன. அன்று முதல் ஒருவருமே என்னிடம் சரியாக முகங்கொடுத்துப் பேசுவதில்லே. ஒவ்வொரு நாளும்,





வீடுகளே அலங்கரிக்கும் அழகிய பிட்டிங்குகள், பிராகட்டுகள், எலெக்ட்ரிக் விசிறிகள், மற்றும் எல்லா எலெக்ட்ரிக் சாமான்களும்

கிடைக்குமிடம்:

மதராஸ் எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்,

55/57, ராட்டன் பஜார், மதராஸ்-3.

ஒவ்வொரு விஞடியும், எனக்கு அங்கே இடமில்லை என்பதை அவர் கள் தங்கள் போக்கின் மூலம் தெரிவித்துக் கொண்டுதானிருக் கிருர்கள்.

இன்றுவரை அப்பாவுக்கு விஷ யம் தெரியாது. தன் ஒரே குழந்தை, தாயை இழந்தவள், புருஷன் வீட்டில், ஏதோ சுவர்க்க போகத்தில் திளைத்துக்கொண் டிருப்பதாக அவர் நினைப்பு. நான் எப்படி அவர் இன்பக் கனுக்களைத் தகர்ப்பேன்? உண்மை மட்டும் அவருக்குத் தெரிந்தால், பாவம்— அவர் துடிதுடித்துப் போய் விடு வார். இந்த ஒரு விஷயத்தில் எனக் கிருந்த நிம்மதிகூட அவர்களுக்குப் பொறுக்கவில்லைபோலும்! நேற்று கூடத்தில் பேசிக்கொண்டிருந்தார் கள். மாமிதான் பேச்சை ஆரம் பித்தாள். என்னை வருஷப்பிறப் பிற்கு ஊருக்கு அனுப்பப் போகி ருர்களாம். அவரும், "அதற் கென்ன! போய்விட்டு வரட்டுமே," என்று ஆமோதித்தார். அவர் நர் ஸிங்ஹோமிற்குப் போன பிறகு, நான் மாமியின் கால்களைப் பிடித் துக்கொண்டு, "என்னை இப்போ ஊருக்கு அனுப்ப வேண்டாம்" என்று கெஞ்சினேன். ஆனல் மாமி எங்கே விட்டாள்? "போடி, போ, உன்னைக் கேட்டுதான் எல்லா விஷ யத்திலும் நாங்கள் நடக்கணுமோ! பிறந்தகம் போய் நான்கு வருஷங் கள் ஆகப்போகின்றன. உங்கப்பா எங்களைப்பற்றி என்ன நினைப் பார்?" என்று அடுக்கிக்கொண்டே போனள்.

இந்தப் பிறந்தகப் பிரயாணம், எதற்கு முதல் படியோ,—நான் அறியேன்.

இன்று காலை, அவர் ஆஸ்பத்தி ரிக்குப் போனபின், மாமியும் நாத் தியும், மாலையில் திரும்பி வருவ தாகச் சொல்லிவிட்டு, எங்கேயோ புறப்பட்டுப் போனர்கள். என் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு, வெட்கத்தை விட்டு உங்கள் மடி யில் தலை வைத்து அழத்தான் இங்கு வந்தேன்.........

நான் உங்களிடம் கேட்க வந்த தெல்லாம் இதுதான்: எனக்கு இனிமேல் இங்கே என்ன இருக்கி றது? பழைய நாட்களைப்போல் கணவர் என்பேரில் எங்கே அன்பாக இருக்கப்போகிருர்? ஆகையால் அப் பாவிடம் உண்மையைச் சொல்லி, ஊரிலேயே தங்கி விடட்டுமா? அப்படி நேர்ந்தால், எனக்கும் உங் களைப்போல் பொதுநல சேவை யில் ஈடுபட வசதிகள் அளிப்பீர் களா—என்ன சொல்கிறீர்கள்.....?

வேலைக்காரி வந்தே விட்டாள். நான திரும்பி வந்து கடிதத்தைப் பூர்த்தி செய்வேன்.................

* * *

என் அருமை சாந்தாவுக்கு,

இன்று பிற்பகல் எதேச்சையாக நான் வீடு வரும்படி நேரிட்டது. மேஜையின்பேரிலிருந்த உன் கடி தத்தை வாசித்தேன். திரும்பி வந்து அதைப் பூர்த்தி செய்வ தாக எழுதியிருக்கிருய். ஆனல் அதில் மேலும் நீ சொல்லி நான் தெரிந்து கொள்ள என்ன இருக் கிறது? மாலை நீ வரும் வேளையில் நான் இருக்க மாட்டேன். ஆனல் என் இந்தப் பதில் உன் பிரச்னைக்கு பதில் சொல்லி, உனக்கும் ஆறுத லளிக்குமென்று நம்புகிறேன்.

ஏதோ சொல்ல முடியாத வேத னையால் நீ உருகிப்போகிருய் என்று நான் நினைத்ததுண்டு. ஆனல் என் கேள்விக்கு "நான் சந் தோஷமாகத்தானிருக்கிறேன். வீட்டில் எல்லோரும் என்னிடம் அன்பாகத்தான் இருக்கிருர்கள்." என்று நீ விடை அளித்த பொழு தெல்லாம் உன்னிடம் எனக்குள்ள மதிப்புபன்மடங்குபெருகி, விம்மு

வேன். குடும்ப வாழ்வில் வெற்றி காண வேண்டுமானால் தன் வீட்டைப்பற்றி மூன்றும் மனிதரிடம் வம்பு அளக்காமலிருத்தல் அவசியம்.

ஆம், சாந்தா! என்னை நீ அன்னையாகக் கொண்டது கூட ஒரு விதத்தில் நியாயந்தான். இன்று எனக்கு ஒரு மகளிருந்தால், அவள் உன்னைப்போல் இருக்கத்தான் விரும்புவேன். ஆகையால் இனி மேல் நான் சொல்லப்போவதை ஒரு தாய் தன் உயிருக்குயிரான மகளுக்குச் சொல்வது போல் நீ கொள்ளலாம்.

நீயும் பொறுத்துப் பார்த்தாய். அவர்கள் உன்னை வீட்டை விட்டே கிளப்பத் திட்டமிட்டவுடன் அஞ்சி இன்று என்னிடம் வந்திருக்கிறாய்.

ஒரு விஷயத்தை மட்டும் என்னால் சரியாக நிர்ணயிக்க முடியவில்லை. பிறந்தகம் போனால், அப்பாவுக்கு விஷயம் தெரிந்து தள்ளாத வயதில் அவர் துடிதுடிப்பாரே என்ற பயம் உன்னை என்னிடம் அழைத்து வந்ததா— இல்லை, இனி என்ன முயற்சி செய்தாலும் புருஷனுடன் நல் வாழ்வு வாழ்வது சாத்தியமில்லை, ஆகவே ஒரு தினுசாக இல்லறத்திற்கு முழுக்குப் போட்டுவிட்டு என் போன்ற நாடோடி வாழ்க்கையை மேற்கொள்ளலாமென்று வந்தாயா?

ஆனால், உன் காரணம் எதாக இருந்தாலும் என் பதில் ஒன்றுதான். அதையும் இப்பொழுதே சொல்லி விடுகிறேன், உன் இடம் உன் புருஷனிடந்தான். வேண்டுமானால் அவர்கள் விருப்பப்படி தற்காலிகமாக தகப்பனார் வீடு போய் வா. இதனால் ஒரு வேளை அவர்கள் மனக்கசப்பு மாறினாலும் மாறலாம். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் அங்கேயே தங்கி விடாதே. நீ நினைக்கிறபடி அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லி அவர் மனத்தையும் புண்படுத்துவதில் என்ன புண்யம்? ஆகையால் அவர் பற்றியவரை, ஏதோ பல நாட்களுக்குப் பிறகு சில நாட்கள் அவருடன் தங்க வந்தவள் போல் நடித்துவிட்டு கணவன் வீடு திரும்பிவிடு. பாவம், அவர் வயசில் அதுதான் நீ அவருக்குச் செய்யக் கூடிய சிறந்த கைம்மாறு.

“நடித்துவிட்டு வா” என்று சொன்னேன்? எத்தனை பொருத்தமான சொற்கள்! எல்லாத்துறைகளிலுமே வாழ்க்கை வெறும் நடிப்புதானே. இதில் எத்தனைக்கெத்தனை உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துகிறோமோ அத்தனைக்கத்தனை தான் வெற்றியும் காண முடிகிறது. ஆகையால் இல்லறத்திற்கு முழுக்குப்போடும் மகத்தான தவறைச் செய்துவிடாதே. மனிதர்கள் தாங்கள் செய்யும் தவறுகளை யெல்லாம் ஒன்றாகக் குவித்து ஒரு ராட்சசனைச் சிருஷ்டிக்கிறார்கள். பிறகு, அவனுக்குத் தலைவிதி என்று பெயர் சூட்டுகிறார்கள். என் அருமைப் பெண்ணாகிய நீயும் இந்தப் படுகுழியில் விழுந்துவிடக்கூடாது.

இன்று நீ வீட்டைவிட்டு வெளியேறி விட்டால், திரும்பிப் போவது சாத்தியமாகாமல் போய்விடலாம். ஏற்கனவே கசப்பேறியிருக்கும் அவர்கள் உள்ளங்களில் இன்னும் வெறுப்பேறி, அந்த ஆத்திரத்தில் அவர்கள் ஏதேனும் செய்து உன் வாழ்நாட்களை வீண் நாட்களாக்கிவிடலாம். ஆனால் இன்று நீ பொறுத்துக் கொண்டிருந்தால், கட்டாயம் நல்ல காலம் வரும். அப்பொழுது என் வார்த்தைகளின் முழு உண்மையையும் நீ உணர முடியும்.

இன்று உன்னை வாட்டும் பிரச்னை, பல வருஷங்களுக்கு முன், நான் அறிந்த இன்னொருத்தியை வாட்டிற்று. உன்னைப் போல் அவளும் சொல்லொண்ணாக் கொடுமைகளைப் பொறுத்தாள். போகாத கோவில்கள் இல்லை, வேண்டாத தெய்வங்கள் இல்லை, செய்யாத பரிகாரங்கள் இல்லை. முடிவில் கொடுமைதான் வென்றது. இனிமேலும் புருஷன் வீட்டில் நமக்கிடமில்லை என்று ஏங்கிக் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தவளை, ஒரு நாள் அவள் புருஷன் வீட்டிற்கு வெளியே தள்ளி, கதவைத் தாளிட்டு விட்டான். நடுத்தெருவில் அழுது, அழுது உள்ளம் வெதும்பிய அவள் கடைசியில் வேறு வழியின்றி அன்னையின் அரவணைப்பை நாடிப் பிறந்தகம் சென்றாள்.

ஆம், உன்னைப் போலில்லாமல் அவளுக்குத் தாயிருந்தாள். மகளின் கண்ணீர் தாயை உருக்கியது. அலறி அவளை அணைத்துக் கொண்டவள், தன்னிடமிருந்ததை யெல்லாம் விற்றுச்சுட்டு, மகளைப் படிக்க வைத்து வேறு வழியில் அவள் வாழ்வை மலர வைக்கத் திட்டமிட்டாள். ஒரு நாள் ஆட்டபாட்டங்கள் அடங்கி, மனைவியைத் தன்னிடம் வரும்படி அவள் கணவன் அழைத்தான். தொடர்ந்து, ஊர்ப்பிரமுகர்கள் சிலரைத் தன் சார்பில் மத்தியஸ்தம் செய்ய அவள் தாயிடம் அனுப்பினான். ஆனால் அவள் தாய் அதற்கு சம்மதிக்கவில்லை. ஒரு தரம் பட்டது போதும், இனிமேல் உனக்கு அந்த வாழ்க்கை இல்லையென்று மனதைக் கல்லாக்கிக் கொள் என்று மகளைத் தன்னிடமே நிறுத்திக் கொண்டாள். இனிமேல் தன் மனைவி தன்னிடம் வரமாட்டாள் என்றறிந்த அவனும் மறுமணம் செய்து கொண்டான்.

இது பழய கதை தான். ஆனால் இதே கதை, திரும்பத் திரும்ப, எத்தனை வீடுகளில், எத்தனை சந்தர்ப்பங்களில் நடைபெறுகிறது தெரியுமா? அன்று புருஷனைத் துறந்த அவள் இன்று வேறு துறைகளில் தன் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறாள். காலப் போக்கில், பதட்டமும், படபடப்பும் அடங்கிய அவளுக்கு அன்று தான் செய்தது சரிதானா என்று இப்போது அடிக்கடி தோன்றுகிறது. சுருங்கச் சொன்னால், பெண்களுக்கு உகந்த இடம். கணவனின் காதலும், மதலைகளின் மந்தஹாஸமும் நிரம்பிய வீடுதான். இவற்றை ஒரு க்ஷணப் பித்தத்திற்காக துறந்து விட்டோமே என்று, இன்று அவள் ஏங்குவதை யார் அறிவார்கள்?

என்னைக் கேட்டால் அன்று அவள் நடந்த வழிக்கு எதிர்ப் பாதையில் சென்று, வெகு சீக்கிரத்திலேயே கணவனின் அன்பையும், ஆதரவையும் பெற்றுக் குதூகல வாழ்க்கை நடத்து என்று தான் சொல்லுவேன்.

ஆனால் இந்த ஏழையின் சொல் அம்பலம் ஏறுமா? எத்தனையோ யுகக் கணக்காக—நேற்றும், இன்றும், நாளையும்—நம்மைச் சுற்றி கோடிக்கணக்கான பேர் மாண்டு, மடிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் காலபாசத்தில் விழும் வரை, தான் மட்டும் அதற்கு விலக்கு என்றுதானே ஒவ்வொருவரும் நினைக்கிறார்கள்?

அதே போல் 'சோதனைத் தீயால் சுட்டெரிக்கப்பட்ட உனக்கு மட்டும் ஒரு நியாயம், எனக்கு வேறு நியாயமா' என்று நீ கேட்டால்?

உன் பிரிய

அத்தை.

ராதை பாட்டு

பெ. தூரன்

கையிலுள்ள கண்ணாடி நீ
　　கார் குழலில் தேன் மலரும் நீ
மைவிழியில் பாவையுமே நீ
　　மார் பகத்தில் கஸ்தூரி நீ
என்ற னுயிர் மூச்சின் மணம் நீ
　　என் கழுத்தில் இன்பமாலை நீ
இந்த உடல் தந்த சுகம் நீ
　　என் னகத்தின் களஞ்சியமும் நீ
பறவைகளின் நீள் சிறகும் நீ
　　பாய்ந்து மிளிர் மீனுக்குநீர் நீ
உறவெனக்கு நீயெனவே நான்
　　உள்ளமதில் இன்புறுவேன் காண்
உயிரின் உயிர் என்று னையே நான்
　　உவந்துள துன் சம்மதமோ சொல்
மயல் பெருகும் வேய்ங்குழலில் என்
　　மாதவனே கீதம் வந்ததே.

[வித்யாபதி பாடலைத் தழுவியது]

THE

ASIATIC GOVERNMENT SECURITY LIFE & GENERAL ASSURANCE CO., LTD.

Regd. Office :

"PRITHVI BUILDINGS"

KEMPEGOWDA ROAD, BANGALORE CITY

Paid-up Capital	**Rs. 5 Lakhs**
Total Assets Exceed	**Rs. 84 Lakhs**

TRANSACTS

Life - Fire - Marine - Motor

AND

All other classes of Insurance Business

Central Office :

"PRITHVI BUILDINGS"

364/366, NETAJI ROAD, MADRAS-1

Divisional Offices :

No. 7, Chittaranjan Avenue, CALCUTTA 13

No. 8, Agarwal Buildings, Connaught Place, NEW DELHI

T. B. Road, KOTTAYAM

எங்களது கலைக்கண்காட்சி முதலில் தஞ்சையிலும், பிறகு டெல்லி, பம்பாய், சென்னையிலும் இப்பொழுது (ஸிலோன்) யாழ்ப்பாணம் மஹாஜனக்கல்லூரியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் பார்த்து ரசித்து வருகிறார்கள். இம்மாதம் 18-ந் தேதி தஞ்சையில் கலைக்கண்காட்சியில் கலந்து கொள்வதால் எங்கள் சிங்கப்பூர் விஜயம் செப்டம்பர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.



ஆர்ட்டிஸ்ட்ஸ்

பாலு பிரதர்ஸ்

2. தாயார் சாகிப் தெரு, சென்னை.2

PHONE : 85515

இதுவரையில் தமிழ் நாட்டில் தயாரித்த தமிழ்ப் படங்களில் சிறந்தது

ஜெமினி ஔவையார்

அப்படத்திற்கு நாங்கள் செய்த சிறந்த போஸ்டர்களையும், பானர்களையும், பாராட்டிய பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு எங்கள் நன்றி.

ஆருடம் பலிக்குமா, தந்திரம் பலிக்குமா?

பேராசிரியர்: ஸி. ஆர். மயிலேறு, எம். ஏ.

நாடகபாத்திரங்கள்:

இராமநாதன்	—	ஒரு உத்தியோகஸ்தர் —	வயது	40
கமலம்மாள்	—	இராமநாதனின் மனைவி —	,,	35
சரோஜா	—	,, பெண் —	,,	15
சுப்பம்மாள்	—	,, ஒன்றுவிட்ட சகோதரி	,,	45
இராமகிருஷ்ணன்		சுப்பம்மாளின் கணவர் —	,,	52

காலம்: தற்காலம், எங்கேயும் நடக்கலாம்.

காட்சி—1

[இராமநாதனின் வீடு. ஒரு நாள் காலை 8 மணி இருக்கும். இராமகிருஷ்ணனும், அவர் மனைவி சுப்பம்மாளும் மிகவும் இரகசியமாய், 'குசுகுசு' வென்று ஏதோ தங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

சுப்பம்மாள்: உங்களைத்தான்! இங்கு சற்று வந்துவிட்டுப் போங்கள்!

இராமகிருஷ்ணன்: (அருகில் வந்துகொண்டே) என்ன சேதி! ஏன் அவ்வளவு அவசரமாய் கூப்பிட்டாய்?

சுப்ப: (மிகவும், மெல்லிய குரலில்) இங்கே அருகில் வாருங்கள். ஒரு முக்கியமான சமாசாரம் சொல்லுகிறேன்.

இராம: (கிண்டலாக) அதென்ன அது? அவ்வளவு முக்கியமான சமாசாரம்? இவ்வளவு இரகசியம் என்ன, எதற்கு?

சுப்ப: ஐயோ! இராமா! இராமா! இந்த புருஷர்களுக்கு எப்பொழுதுதான் புத்தி வருமோ? எந்த விஷயத்தை எப்படிப் பேசவேண்டுமென்பதுகூடவா தெரியாது? (இன்னும் அருகில் வரச் சொல்லி) இங்கே பாருங்கள்! உங்களுக்கு 50 ரூபாய் அவசரமாய் வேண்டுமென்று சொன்னீர்களல்லவா? எனக்கு இராமுவைக் கேட்க வெட்கமாயிருக்கிறது. என்னமோ, பாவ புண்ணியத்திற்கு சோறு போடுகிறான்; அதுவே, பெரிய விஷயம். பணம் கேட்பதற்கு என்றால் முடியாது....ஆகையால்....

இராம: அதற்கு, இப்பொழுது என்ன செய்வது? பணம் மிகவும் அவசரமாய் வேண்டுமே?

சுப்ப: (அருகில் வந்து) எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. கமலம் (அதுதான், நம் ராமுவின் மனைவி) வீட்டைக் கவனிப்பதே கிடையாது. வீட்டிலே என்ன இருக்கிறது, என்ன இல்லையென்றுகூட அவளுக்கு தெரியாது. ஆகையினால், சுவாமி அறையில் ஒரு தகர டப்பாவில், ஒரு ஜோடி தங்க வளையல் போட்டு வைத்திருக்கிறாள். அவளுக்கு

அவை எங்கே நினைவில் இருக்கப்போகின்றன? அவைகளை மெதுவாய், எடுத்துக்கொண்டு விட்டால் விற்றுவிடலாம். இப்போதைய விலைக்கு 150 ரூபாய்க்குமேல் கிடைக்கும். இதுதான் என் யோசனை! உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

இராம: பேஷ்! பேஷ்! நல்ல யோசனை! நீதான் எப்பொழுதும் கெட்டிக்காரி என்று, எனக்கு முன்பே தெரியுமே! உன் புத்திக்குச் சொல்லவா வேண்டும்?

காட்சி—2

[கமலம்மாளும், சரோஜாவும் எதையோ தேடிக்கொண்டு வருகிறார்கள்; மிகவும் கவலையாகப் பேசுகிறார்கள்.]

கமலம்: அடீ, சரோஜா! நம்ம சுவாமி அறையில் ஒரு தகர டப்பா வைத்திருந்தேனே, அதைப் பார்த்தாயா? எனக்கு அகப்பட வில்லை. தேடிக் கொண்டுவா பார்க்கலாம்.

சரோஜா: இதோ! ஒரு கொடியில் கொண்டுவருகிறேன்! அங்கேயே, சுவாமி படத்திற்குக் கீழே, பலகையின் மேலிருந்ததே. (என்று சொல்லிக் கொண்டு, சரேலென்று சுவாமி அறைக்குள் ஓடுகிறாள். "தடால் புடால்" என்று அநேக சாமான்கள் கீழே உருளும் சத்தம் கேட்கிறது; சிறிது நேரம் கழித்து திகைப்புடன், சரோஜா திரும்பி வருகிறாள்.) ஐயோ! அம்மா! அந்த "டப்பா"வை அங்கே காணவில்லையே!

கம: என்னடீ இது? நன்றாகப் பார்த்தாயா? எல்லாம் அங்கே தானிருக்கும்; இன்னொரு தடவை தேடிப் பார்! அதை யார் எடுத்துக்கொண்டுபோகப் போகிறார்கள்?

சரோ: இல்லையம்மா! தேடிப் பார்த்தாய் விட்டது. கிடைக்க வில்லையே!

கம: உன் அத்தையைக் கூப்பிடு! அவளைக் கேட்கலாம். அங்கு இல்லாமல் எங்கு போய்விடும்?

சரோ: (அங்கிருந்துகொண்டே, உச்சஸ்தாயியில்) அத்தை! அத்தை! உன்னை அம்மா கூப்பிடுகிறாள்! சீக்கிரம் வாயேன்! [சுப்பம்மாள் பிரவேசம்]

சுப்ப: கமலா! என்னை எதற்கு கூப்பிட்டாய்?

கம: ஒன்றுமில்லை. சுவாமி அறையில் ஒரு தகர டப்பாவில் என் கைவளையல் இரண்டை வைத்திருந்தேன். அந்த டப்பா அங்கே இல்லையாம். அதை நீங்கள் பார்த்தீர்களா என்றுகேட்கக் கூப்பிட்டேன்.

சுப்ப: (ஒன்றும் தெரியாதவள் போல்) இதென்ன ஆச்சரியமா

<u>FOR</u> DEVELOPING, PRINTING, ENLARGING, LIFE-LIKE PORTRAITS AND OTHER PHOTOGRAPHIC MATERIALS

<u>VISIT</u> **CO-OPERATIVE PHOTO SERVICE**

(REX STUDIOS)

25/7, EAST PATEL NAGAR, NEW DELHI

யிருக்கிறதே! யார் எடுத்துக் கொண்டு போவார்கள்? ஐயோ! எனக்கு ஒன்றுமே தெரியாதம்மா.........(சிறிது யோசிப்பவள்போல், பாசாங்கு செய்து) ஆம்! ஆம்! இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. நேற்றைக்கு காலை நேரத்தில், நம் வீட்டில் குடியிருக்கிறாரே, அவர்கள் வீட்டு சமையல்காரன் சங்கரன், அந்த சுவாமி அறையின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும், கையை மறைத்துக்கொண்டு, மெதுவாய் நழுவிவிட்டான். அதுவுமல்லாமல், நேற்று இரவே ஊருக்கு வேறு போய்விட்டானும்; இனிமேல் வர மாட்டானும். அவன் தான் எடுத்திருக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது; இல்லாவிட்டால் என்னைக் கண்டதும், அவன் ஏன் மெதுவாய் நழுவவேண்டும்? ஏன் திடீரென்று ஊருக்குப்போக வேண்டும்? எதற்கும் என் வீட்டுக்காரரை வரச்சொல்கிறேன். அவரையும் கேட்கலாம். (சுப்பம்மாள் போகிறாள்.) [இராமகிருஷ்ணன் வருகிறார்.]

இராம: கமலா! இதென்ன அநியாயம்? ஏதோ நகை காணமல் போய்விட்டதாகச் சொன்னார்களே, என்ன மோசம்? கொஞ்சம் பொறு! எனக்குத் தெரிந்த ஜோசியன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் போய், ஆரூடம் கேட்டு விட்டு வருகிறேன்; எல்லாம் தெரிந்துபோய்விடுகிறது. ஒன்றும் பயப்படாதே! (இராமகிருஷ்ணன் போகிறார்.)

காட்சி—3

[அன்றுமாலை; இராமகிருஷ்ணன் ஜோசியனிடம் ஆரூடம் கேட்டுவிட்டு, மிகவும் சந்தோஷமாக, கமலாவுடனும் இராமநாதனுடனும், பேசிக்கொண்டிருக்கிறார்.]

இராம: அடடா! என்ன ஆச்சரியம்! எவ்வளவு, பளிச்சுப் பளிச் சென்று ஆரூடம் சொல்லுகிறான், நம் ஜோசியன், தெரியுமா? நான் போனதுதான் தாமதம், உடனே, "நீங்கள், ஒரு நகை திருட்டு விஷயமாய் வந்திருக்கிறீர்கள்; இல்லையா?" என்று கேட்டான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஆம்" என்றேன். பிறகு சொன்னான், பாருங்கள். மிகவும் கணக்காயிருந்தது. அந்த நகையை எடுத்த ஆசாமி, கருப்பாம், ரொம்ப உயரமுமில்லையாம், குட்டையுமில்லையாம், கிராப்பு தலையாம், முகம் முழுவதும் அம்மைத் தழும்பாம், வீட்டிலேயே இருப்பானும்! எப்படி, அவன் சொன்னது?

சுப்ப: நான் அப்பொழுதே சொன்னேன். பார்த்தீர்களா? அந்த சங்கரன் தான், அதை எடுத்திருப்பான், சந்தேகமே இல்லை. ஆரூடம் கூட பார்த்தீர்களா, நான் நினைத்தபடியே

இருக்கிறது. அவனுக்கு, சுவாமி அறையின் பக்கத்தில், ஒருவரும் இல்லாத பொழுது என்ன வேலை? என்னைப் பார்த்ததும் கையை ஏன் மறைத்துக்கொண்டு போக வேண்டும்? கண்டிப்பாய், அவன் தான் அதை எடுத்திருக்கவேண்டும்; சந்தேகமேயில்லை.

இராமநாதன்: ஆ! என்ன ஆச்சரியம்! அற்புதம்! இவ்வளவு சரியாகச் சொல்லும் ஜோசியர்களும் இருக்கிறார்களா? ஆம்! ஆம்! அந்தச் சங்கரனைப்பார்த்தாலே, எனக்கு எப்பொழுதும் சந்தேகம் உண்டாகும். அவன் முகத்தைப் பார்த்தாலே, அவன் ஒரு பெரிய திருடன் என்று தெரிகிறதே! மேலும், அவன் ஏன் திடீரென்று ஊருக்குப் போயிருக்கவேண்டும். அந்தச் செய்கையே அவன் மீது சந்தேகம் கிளப்பிவிட்டிருக்கிறதல்லவா? வீட்டில் குடியிருப்பவரை விசாரிக்கட்டுமா?

இராம, சுப்ப: (ஒரே குரலில், ஒரே சமயத்தில்) ஆம்! ஆம்! அப்படியே செய்யுங்கள்! இதை சும்மாவே விடக்கூடாது! விடவே கூடாது!

[இருவரும் இராமநாதனை ஏமாற்றிவிட்டதாக, சந்தோஷமாயிருக்கிறார்கள்; பிறகு போகிறார்கள்.]

காட்சி—4

[இராமநாதனும், கமலம்மாளும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

கம: ஊஹூம்! நீங்கள் என்ன, அவர்களிருவரும் அது தான் உங்கள் சுப்பம்மாளும், அவர் புருஷரும்—சொன்னதை நம்புகிறீர்களா? அதில் சிறிது கூட உண்மையில்லை என்று அவர்களிருவரும் சொல்லும் போதே தெரிந்துவிட்டது. புருஷன், பெண்சாதி இருவரும், ஒருவர் சொல்வதற்கு சரியாக, இன்னொருவர் ஒத்துப் பாடியதைப் பார்த்தீர்களா? பெண்சாதி காலையில் சொன்ன மாதிரியே, சாயங்காலம், புருஷனும், ஜோசியன் சொன்னதாகச் சொன்னதை கவனித்தீர்களா? இதில் சந்தேகமில்லாமல் ஏதோ சூதிருக்கிறது. எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், அவர்களிருவரும் தான் இதை எடுத்திருக்கிறார்கள். சந்தேகமேயில்லை. சில நாட்களாய் வீட்டில் சில்லரைச் சாமான்கள் திருட்டுப்போய்க் கொண்டிருக்கின்றன. உங்கள் இராமகிருஷ்ணனுக்குச் சிறிது 'கை நீளம்' என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயம். (சிறிது யோசித்து) இதற்கு நான் ஒரு யுக்தி பண்ணுகிறேன். பார்க்கிறீர்களா? பிறகு ஆருடம் பலிக்குமா, தந்திரம் பலிக்குமா பார்க்கலாம். நகை வீட்டிலே தானிருக்கிறது. சிறிது நேரத்திற்குள் மாயமாய்த் திரும்பி வருகிறதா இல்லையா பாருங்களேன்!

இராமநாதன்: சரி! ஆரம்பித்து விட்டாயா உன் புராணத்தை?

சுப்பம்மாளைப்பற்றியும், இராம கிருஷ்ணனைப்பற்றியும் பேசா விட்டால், புகார் செய்யாவிட்டால், உனக்கு தூக்கம் வராது. அவர்கள் ஏதோ கஷ்ட தசையிலே, நம் வீட்டில் இருக்கிறார்கள், பாவம்! அவர்கள் இங்கிருப்பதே உனக்குப் பிடிக்கவில்லை. அவர்களை இங்கிருந்து கிளப்பப் பார்க்கிறாய். நீ என்ன வேண்டுமென்றாலும் செய் எனக்கு ஒன்றும் தெரியாது. (போகிறார்.)

காட்சி—5

[கூடத்தில், இராமகிருஷ்ணனும், சுப்பம்மாளும் சந்தோஷமாய் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கமலம்மாள் திடீரென்று அந்த இடத்திற்கு வந்து, அழுத்தம் திருத்தமாய் பேசுகிறாள்.]

கம: அக்கா ஒரு சமாசாரம். அந்த இரண்டு வளையல்களையும், ஏழுமலையாண்டவன் சுவாமி வெங்கடாசலபதிக்கு வேண்டிக்கொண்டு எடுத்து டப்பியில் போட்டுவைத்திருந்தேன். சரோஜாவுக்கு உடம்பு சரியில்லாமலிருந்தபோது, எடுத்து வைத்தேன். ஆகையால் சுவாமி வேங்கடாசலபதியின் சொத்து. அவை, திருப்பதி மலைக்குப்போய் உண்டியில் போடவேண்டும். சுவாமி சொத்தை யாராவது எடுத்தால்—அதுவும் திருப்பதி வெங்கடாசலபதியின் சொத்தை—என்ன ஆகுமென்று உங்களுக்கே தெரியும். ஆறு மாதத்திலே ஆசாமி 'அவுட்' அவ்வளவுதான். உங்களுக்கு இந்த சமாசாரம் தெரியுமோ தெரியாதோவென்று சந்தேகமாயிருந்தது. அது தான் சொல்லவந்தேன். (என்று சொல்லிவிட்டு, சரேலென்று உள்ளே போய்விடுகிறாள்.)

சுப்ப: (ஒருவரும் பக்கத்தில் இல்லையென்று, நிச்சயம் பண்ணிக்கொண்டு பயந்த குரலில் மெதுவாக) கேட்டீர்களா, கமலா சொன்னதை? சுவாமிக்கு—அதுவும் ஏழுமலையாண்டவனுக்கு—வேண்டிக் கொண்டு வைத்திருந்தாளாம்! ஐயோ! அதைத் தொட்டாலே, பெரிய ஆபத்தாயிற்றே! இப்பொழுதே நம் பிழைப்பு நன்றாயிருக்கிறது! இந்த கூத்தில் சுவாமி அபசாரம் ஏதாவது ஏற்பட்டுவிட்டால், வேறு வினையே வேண்டாம்.

இராம: (அரண்டுபோய்) இதை ஏன் நீ முன்னமே சொல்லவில்லை? ஐயோ! சாமி சொத்தை மனத்தில்கூட நினைக்கக்கூடாதே! பேசாமல், அது எங்கே இருந்ததோ அங்கேயே கொண்டுபோய் வைத்துவிட்டு, தேடுவதுபோல் தேடிவிட்டு, அங்கேயே இருந்தது என்று சொல்லிவிடலாம் வா. நல்ல வேளையாக நகையை விற்றுவிடாமல் இருந்தேன்! அதுவே நாம் செய்த புண்ணியம் என்று நினைத்துக் கொள்ளவேண்டும்.

[இராமகிருஷ்ணன் மெதுவாய், சுவாமி அறைக்குள் சென்று, வளையல் டப்பாவை சுவாமி படத்தினருகில் வைத்துவிட்டு, வெளியில் வந்து, தான் ஏதோ கண்டு பிடித்துவிட்டமாதிரி.]

கமலா! இராமு! நகை இங்கேயே இருக்கிறதே, டப்பாவுடன்! யாரது இங்கே இல்லையென்று சொன்னது பாருங்கள்! நான் இப்பொழுதான், சிறிது விபூதி வைத்துக்கொள்ளலாம் என்று சுவாமி அறைக்குள் போனேன், அங்கே சுவாமி படத்திற்கு பக்கத்திலேயே, இருக்கிறதே!

[கமலம்மாளும், இராமநாதனும் அவசரமாய் பிரவேசம்]

கம: (இராமநாதனிடம் குசுகுசுவென்று) பார்த்தீர்களா என் யுக்தி எப்படி? (வெளியில் பலமாக) எங்கே அது? சுவாமி அறையிலா, படத்தின் அருகிலா? சரோஜா தான் காலையில் நன்றாய்த் தேடிப் பார்த்துவிட்டு, காணவில்லை என்றாளே!

[சரோஜாவும் இதைக்கேட்டு, ஓடிவருகிறாள்.)

சரோ: என்ன ஆச்சரியம் இது அம்மா! நான்தான் காலையில் எவ்வளவு தடவை தேடினேன்? என் கண்ணுக்கு அகப்படவே இல்லையே. (சற்று தணிந்த குரலில்) ஒரு வேளை இந்த மாமாதான் எடுத்து வைத்துக்கொண்டிருந்துவிட்டு, இப்பொழுது திருப்பி வைத்திருப்பார்! (பலமாக) ஆம்! ஆம்! அப்படித்தானிருக்கவேண்டும்! சந்தேகமே இல்லை!

இராமநாதன்: சீ! சீ! வாயில் வந்தபடி உளருதே! பெரியவர்களை அப்படியெல்லாம் சொல்லக்கூடாது! சரி! அது கிடக்கட்டும்! ஆகக்கூடி எப்படியோ நமக்கு நகை கிடைத்து விட்டது. அதுவே போதும்.

கம: என்ன? உங்களைத்தான்! என் யுக்தி எப்படி? இப்பொழுது ஆருடம் பலிக்குமா, தந்திரம் பலிக்குமா? நீங்களே சொல்லுங்கள், பார்க்கலாம். (சிரிக்கிறாள்)

[இராமகிருஷ்ணனும், சுப்பம்மாளும், பேந்த பேந்த விழிக்கிறார்கள்.]

திரை

For all your Stationery Requirements :

VISIT

GOODLUCK & CO.

STATIONERS, GENERAL SUPPLIERS & DIE PRINTERS

25-C, PREM HOUSE, CONNAUGHT PLACE

NEW DELHI.

தாரகை ராணிக்கு

டி. வி. சுவாமிநாதன்

விண்மீனே சுடர்த்துகளே
வித்தாரத் தாரகையே
பெண்ணெழிலாள் சந்திரிகை
பேசிமகிழ் தோழியளே
கண்குளிரத் தண்ணிலவுக்
கடலாடும் குணவதியே
எண்ணமெனும் வான்முகட்டில்
ஏறிவர மாட்டாயோ!

பண்ணிசைக்கச் சுதிகூட்டிப்
பாட்டெழுதச் சொல்தேடி
வண்ணமனப் பூங்காவில்
வழிநடந்து உணர்வுமலர்
கொய்துவரப் புறப்பட்டேன்;
கொடிய இருள் சூழ்கிறது.
வெய்துயரைப் போக்குதற்கு
விடிவெள்ளீ, தோன்றாயோ!

வயிரத்தைப் பொடிசெய்து
வாரிவிட்ட விந்தைபோல்
உயரத்(து) இருள்வானில்
ஊஞ்சலிடும் ஜோதிமணிப்
புள்ளிகளின் மத்தியிலே
பூத்ததனிப் புன்சிரிப்பே!
தெள்ளமுதே! மின்விளக்கே!
தேவீநீ வாராயோ?

புனைகின்ற சொல்லாரம்
புதுமலரின் தேன்மணக்க
நினைவென்னும் கடலோரம்
நெஞ்சத்து வான்விளிம்பில்
பட்டுத் தனைமறக்கும்
பரவசத்தென் குமரிமுனை
தொட்டுவர வேண்டு(ம்), ஒளித்
தோரணமே வழிகாட்டு.

வையத்து வீதியிலே
வானின்பம் கொண்டுவர
பையஅடி மேல்வைத்து
பாதைகண்டு பலனில்லை;
படியெல்லாம் கதிர்ச்சரடால்
பண்ணியதோர் நூலேணி
கொடிமின்னல் விளக்கரத்தால்
கோமகளே, போட்டுவிடு.

இதயத்து யாழ்மீட்ட
இருளுக்குத் தெரியாது;
விதவிதமாம் பாடல்கள்
வீணைகத் துயில்பயிலும்.
தளிர்விரலால் மனயாழின்
தந்திகளை மீட்டியகங்
குளிருமிசை பொழியச்செங்
குமுதம்நீ மலராயோ!!

பச்சைக் கனவுப்பூப்
  பட்டாடை சலசலக்க
கச்சைச் சிலம்பொலிக்கக்
  காசினிப்பெண் ஆடுகிறாள்.
பவளக் குன்றுச்சி
  படுத்துறங்கும் முகிலுமிடை
துவளக் குடந்தூக்கித்
  தோகைபோல் நடக்கின்றாள்.

மாந்தளிரில் குயிலென்னும்
  மஹாராணி வீற்றுத்தன்
வேந்தன்வரக் காணாத
  வேதனையைப் பாட்டிசைப்
கன்னல் கருங்குருவி [பாள்.
  ககனமழைக் காற்றாது
மின்னல் புழுவெடுத்து
  விளக்கேற்றும் கார்காலம்

தென்றல் மிதந்துவரத்
  தேன்வண்டு ரீங்கரித்து
மன்றல் முடிக்கநறு
  மலர்நாடும் வசந்தருது.
காட்சிபல கோடியுண்டு
  காவியங்கள் வேய்ந்திடலாம்,
மாட்சிவடி வானவள்நீ
  மந்திரச்சொல் தந்துவிடில்...

கண்ணுக்கு மைதீட்ட
  காரிருளை நீகுழைத்தால்
மண்ணுக்கு ஒளியேது?
  மானுடனென் காதலினால்
நாணித்தன் கண்புதைக்கும்
  நட்சத்திர வதனீ!
வீணுக்கு ஊட்டாதிவ்
  வீணைக்கு அமுதேற்று.

✲

FOR

THE HINDU

(AIR MAIL EDITION)

SPORT & PASTIME

AND

Leading Tamil Dailies, Weeklies and Monthlies

Contact:

CENTRAL NEWS AGENCY

CONNAUGHT CIRCUS,

NEW DELHI

Telephone: 44762, 43799

India's own India's best



Nicco Produces

Copper Conductors, Solid, Stranded, Aluminium Conductors, Rubber Insulated Cables, Flexibles, Cotton Covered Wires, Enamelled Wires. All Strictly to Standard Specifications.

NICCO is on Government of India Rate Contract and is a regular Supplier to all Government and quasi-Government bodies.

THE NATIONAL INSULATED CABLE CO., OF INDIA LIMITED

STEPHEN HOUSE, 4, DALHOUSIE SQUARE, CALCUTTA—I.

Agents and Branches all over India.

Delhi Office :— **Kashmere Gate, Delhi.**

INSURANCE is the answer to Man's
SEARCH FOR SECURITY
SECURITY means
Income when earnings cease;
Cash for dependents in case of death.

★

THE UNITED INDIA RETIREMENT INCOME SCHEME
offers

1. Retirement Income (payable monthly) commencing from age 55 or 60 for 15 years certain;
2. Cash options, if it is desired to have a lump sum in lieu of the annuity;
3. Cash benefits payable to the heirs in case of prior death.

For full particulars please write to:

THE
UNITED INDIA LIFE ASSURANCE
COMPANY, LIMITED.

Head Office:
"United India Life Building"
Post Box No. 281, MADRAS-1.

Branches and Chief Agencies throughout
INDIA, CEYLON, MALAYA, SINGAPORE & BR. EAST AFRICA.

Delhi Branch:
Connaught Place, P. B. No. 63,
NEW DELHI.

டில்லி நிருபர்

கே. ஸ்ரீனிவாசன்

புதுடில்லியில் இரண்டு இடங்களில் நாள் பூராவும் சில நபர்கள் மாறி மாறி இருந்து கொண்டே இருப்பார்கள். ஒன்று இந்தியா காப்பி ஹவுஸ். மற்றொன்று ஸௌத் இந்தியா போர்டிங் ஹவுஸ். இவற்றை வட்டமிடுபவர்கள் பத்திரிகை நிருபர்கள். பத்திரிகைக்குச் செய்தி இங்குதான் உற்பத்தி செய்யப்படுவது என்று.

எப்படி இருந்தாலும் நிருபர்களுக்கு அவர்கள் வேலைக்கு இடையில் உள்ள ஓய்வு நேரத்தில் எங்காவது தங்க இடம் வேண்டுமல்லவா ? ஆகவே ஒரு கப் காப்பிக்கு ஆர்டர் கொடுத்து விட்டு இட குத்தகை எடுப்பது தொழில் ரகசியம்.

" உங்களுக்கென்ன ஐயா, நாழியா ? மணியா ? எப்பொழுதும் ஊர் சுற்றலாம். நாடகமோ, நாட்டியமோ எங்கும் போகலாம். தேநீர் கச்சேரிகளுக்கு அழையா விருந்தாளியாகப் போகலாம். நீங்கள் நுழையாத இடம்தான் எது ?" என்று சொல்வார்கள். ஒன்று மட்டும் வாஸ்தவம். அவசர அவசரமாக சாப்பிட்டுவிட்டு காலையில் ஆபீஸை நோக்கி ஓட வேண்டியதில்லை. ஆனால் அதிகாலையில் வானாம்பட்டி ராஜப்பிரமுகர் விமான மூலம் டெல்லிக்கு வருகிறார் என்றால் நாங்கள்தான் ஓடுகிறோம். ஊர் சுற்றுகிறோம் ! வாஸ்தவமான வார்த்தை. ஆனால் ஊர் சுற்றாவிட்டால் செய்தி சேகரிப்பது எப்படி ? டில்லிக் கோடை பிரசித்தம். மே, ஜூன் மாதங்களில் தெருவில் நெருப்பு டன் கணக்கில் கொட்டினாற்போல் இருக்கும். இந்த மாதங்களில் மத்தியான்ன வேளையில் மற்றெல்லோரும் கதவைச் சாத்திக் கொண்டு பங்காவுக்கு அடியில் சுகமாக உட்கார்ந்து கொண்டிருக்க இரு ரக விசித்திரப் பிறவிகள்தான் தெருக்களில் சஞ்சரிக்கப் பார்த்திருக்கிறேன். ஒன்று நிருபர்கள். மற்றொன்று நாய்கள் !

சங்கீதக் கச்சேரிகளோ அல்லது மற்ற கேளிக்கைகளோ யாருக்குப் பிடிக்கும் ? பிடிக்காது ! இவைகளைப் பார்த்துவிட்டு ஆனந்தமாக வீட்டுக்குத் திரும்புபவர்களுக்கு அவைகளைப் பார்த்த பின் எழுதவும் வேண்டும் என்ற தண்டனைக் கிடையாது.

ரசிப்பது வேறு விஷயம். குறிப்பு எழுத வேண்டுமென்ற—விமர்சனம் செய்யும்—கவலையுடன் அனுபவிப்பது வேறு விஷயம். என்னைப் பொறுத்தவரை மணிப் பிரகாரம் ஆபீஸ் போகப் பிடியாதவன். அதனால்தான் இந்தத் தொழிலை மேற்கொண்டேன். இதில் நுழைந்த பிறகுதான் தெரிந்தது பத்திரிகை நிருபர்களுக்கு மற்றவர்களைப் போல கூடி, கிளப், சங்கங்களில் பொழுது போக்க நேரம் கிடையாது ; மற்ற காரியாலயங்களில் உள்ளது போன்று வேலை பாக்கி என்று "பைல்களை" மூட்டைக் கட்டிக்கொண்டு வராவிட்டாலும் அன்றன்று கடனை தீர்க்க இரவு பன்னிரண்டு மணியானாலும் உட்கார்ந்து முடித்து விட்டே வரவேண்டி இருக்கிறது.

டில்லியில் நிருபர்களின் வாழ்க்கை எப்படி என்பதை அவர்களின் தினசரி அலுவல் திட்டத்தைத் தெரிந்து கொண்டால் போதும். சென்னையைப் போல் டில்லியில் நிருபர்களுக்குத் தலைவர் பிரதம நிருபர் அல்ல ; செய்தி ஆசிரியர். காலையில் காரியாலயத்திற்குச் சென்றதும் " இன்றைய நிகழ்ச்சிகள் " தலைப்பில் உள்ள அலுவல்களை அவர் நிருபர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பார்.

சமீப வருடங்களில் டில்லியில் தினசரி அலுவல்கள் ஏகமாக அதிகரித்து விட்டன. குறைந்த பட்சம் அரை டஜனாவது இருக்கும். அரசியல் கட்சிக் கூட்டங்கள் முதல் சர்வதேச மகா நாடுகள், அகில இந்திய கண் காட்சிகள் வரை நடக்கும் விஷயங்கள் அனந்தம். அதுவும் மத்திய சர்க்காரில்

மந்திரிகள் எண்ணிக்கை அதிகரித்த பிறகு க்ஷவர சலூன் முதல் டேரா சினிமாத் திறப்பது வரை எல்லாம் மந்திரிகள் வேலை!

மகாநாடுகளும் 'பிரதர்சினிகளும்' தான் டில்லிக்குப் பெருமை. அவற்றைப் பிரசித்திப்படுத்த பத்திரிகை நிருபர்கள் அவசியம். அவர்கள் தான் பொது ஜனங்களுக்கும் சர்வதேச (டில்லி) நிகழ்ச்சிகளுக்கும் தினசரி பத்திரிகை மூலம் இணைப்புச் செய்கிறவர்கள். இதில் இன்னொரு வேடிக்கையும் உண்டு! டில்லியில் வசிக்கும் நிருபர்களும் போட்டோ நிருபர்களும் சேர்ந்தாலே மகாநாட்டுக் கூட்டம் ஒன்று கூடிவிடும்.

டில்லியில் சில விடாக்கண்டர்களும் இருக்கிறார்கள். அவர்கள் நிருபர்கள் வந்தாலும் வராவிட்டாலும் விழாவில் எடுத்த புகைப்படங்களுடன் பத்திரிகைகளுக்குச் "செய்திச் சுருக்கம்" அனுப்புவார்கள். இவைகளில் பிரமுகர் அந்த ஸ்தாபனங்களைப்பற்றி சொல்லாத புகழ் வார்த்தைகள் அமோகமாகக் காணப்படும். படங்களிலோ பிரமுகர் பக்கத்தில் இந்த விடாக்கண்டர்கள்தான் நின்றிருப்பார்கள். கோர்ட்டில் ஜட்ஜுக்கு சாக்ஷியத்தில் எது உண்மை எது உண்மையில்லை (பொய் என்பது எங்களைப் பொறுத்தவரை தவிர்க்கப்பட வேண்டிய சொல்) என்று பழக்கத்தில் தெரிவது போல் எங்களுக்கும் தெரியும் வெளியிலிருந்து வரும் "வெளியீட்டில்" உள்ள உண்மை விகிதாசாரம்! நன்றாக வடிகட்டி விடுவோம்.

செய்தி என்பதெல்லாம் பொதுக் கூட்டமும் கண்காட்சிகளும் தான் என்று எண்ணுதீர்கள். ஒவ்வொரு நிருபருக்கும், போலீஸ்காரனுக்கு "ரோந்து" போல், சில இடங்களும் காரியாலயங்களும் உண்டு. இவைகளுக்குக் கூடுமானவரை தினமும் போயாக வேண்டும். ஆனால் இந்த இலாகாக்களில் மிகவும் மோசமானவை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள். இவைகளை "பிரத்யட்ச நரகங்கள்" என்றே கொள்ளவேண்டும். பாழடைந்த கட்டிடங்கள், அறைகள் தாங்காத கூட்டம், நேரக்கணக்கற்ற காவல் வேலை. இந்தக் கோர்ட்கள் எண்ணிக்கை அதிகமாகையால் பல பத்திரிகைகளின் நிருபர்கள் அவைகளைப் பகிர்ந்துகொண்டு செய்தி சேகரிப்பது வழக்கம். இப்படிச் சேகரிக்கும் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளத்தான் காபிஹோட்டல் சந்திப்பு. இப்போது விளங்குகிறதா 'செய்தி உற்பத்தி' இடத்தின் அவசியம்!

யமனுக்கும் தெரியாமல் உயிர் போகும்—தப்பும் என்பார்கள் அல்லவா? சிற்சில சமயங்களில் பிரத்யேக பேட்டிகள்கூட பத்திரிகைளில் வெளிவரும். அப்படிச் செய்தி சேகரிப்பது அலாதிக் கலை. ஆனல் செய்தி நிருபர்களுக்கும் "டோக்கர்" காட்டுபவர் உண்டு. பிரதமர் நேருவைப் பொறுத்தவரை அவர் பத்திரிகை நிருபர்களை கூட்டமாக ஒவ்வொரு மாதமும் பார்ப்பது வழக்கம். அனுபவம் என்பது ஒரு இணையற்ற வஸ்து. சில வருடங்களுக்கு முன் நேருவை பத்திரிகை நிருபர்கள் எந்தத் தேசத்தைப்பற்றியும் எந்த விஷயத்தைப் பற்றியும் பேசவைத்து விடுவது வழக்கம். இப்பொழுது அரசியலில் அடிபட்டு, சர்க்கார் நடத்துவதில் ஊறிப் பழுத்து அவர் கழுவுக்கேற்ற கோமுட்டியாகி விட்டார்!

நேருவை பழைய மோஸ்தரில் கண்டு பேசவேண்டுமென்றால் அவரை சர்க்கார் கட்டிடங்கள் அல்லாத ஸ்தலத்தில் பார்க்கவேண்டும். வேலைத் தொந்தரவு, பொறுப்பின் பாரம் இவைகளை நினைவுறுமல் சிறு பையன் போல் சமீப காலத்தில் நான் பார்த்தது பார்லிமெண்ட் கிரிகெட் விளையாட்டின் பொழுதுதான். இரண்டு தினங்களிலும் அவர் காலேஜ் மாணவனைப்போல் ஒடிக்குதித்தார். இறுதி தினத்தில் தாம் கையெழுத்திட்ட மட்டை, பந்து முதலியவைகளை அவர் ஏலம்கூறினர். தன் குல்லாவையும் அவர் ஏலம் போட ஆரம்பித்த பொழுது நான் "பண்டிட்ஜி உங்கள்

‘வெயிஸ்ட்டையும்’ கொடுப்பீர்களா” என்றேன். அவர் கொடுத்த பதில் பழையநாள் நேருவை ஞாபக மூட்டியது. என்னை மட்டையினால் துரத்துவதுபோல் பாவனை செய்து பக்கத்தில் நின்ற உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் சொன்னார்: “நிருபர்கள் என் வெயிஸ்ட்டை ஏன் கேட்கிறார்கள் தெரியுமா! அத்துடன் என் பிரதமர் பதவியும் இருக்கிறது என்பதால்தான்.” எல்லோரும் சிரித்தார்கள்.

டாக்டர் ராஜேன்பாபு இதற்கு விதிவிலக்கு. ஜனாதிபதி என்பதால் அவர் ராஷ்டிரபதி பவனில் இருக்கலாமே தவிர, அவரைச் சுற்றியுள்ள பரிவாரம் சில மணிநேரம் நடக்காவிட்டால் அவருக்கு எங்கிருந்தோ சுதந்திரம் வந்துவிட்டதாக எண்ணம் உண்டாகி விடுகிறது.

ஜனாதிபதி என்ற ஹோதாவில் அவருக்கு தினப்படி அலுவல்களைப்பற்றி பத்திரிகை நிருபர்களிடம் பேசப் பிரமயமே ஏற்படுவதில்லை. ஆனால் விசேஷ தினங்சளில் அவர் ஏதாவது அலுவல்களில் பங்கெடுத்துக்கொள்ளும் பொழுது அவர் தம்மை மறந்து நிருபர்களைப் பெயரைச் சொல்லி அழைத்து அளவளாவுவார். உண்மை காந்தி பக்தரான அவருக்கு காந்திஜியின் ஜன்மதினம், அமரத்வமெய்தின தினம் எல்லாம் சொந்த பிதாவின் கிரியைகளைப்போன்றவை.

நேரு, ராஜேன்பாபு இவர்களைப் பார்க்காமல் இந்தியா விஜயம் செய்யும் எந்தப் பிரமுகரும் மேற்கொண்டு செல்வதில்லை. இவர்களில் ஒருவரான ஸ்ரீ அனூரின் பெவான் ஆங்கிலத் தொழிற் கட்சித்தலைவர்களுள் ஒருவர். இவர் சொன்னார்: பண்டித நேருவும் டாக்டர் பிரஸாதும் இரட்டைகள் போன்றவர்கள். எதையும் குறித்து ஆரயோசிப்பதற்கு இருவரும் தேவை. ஒருவர் தூரதிருஷ்டியுள்ளவரென்றால் இன்னொருவர் ஆழ்ந்த திருஷ்டியுள்ளவர். ஆனால் இருவரும் தங்கள் அபிப்பிராயத்தை எதைக் கொண்டும் சீக்கிரத்தில் மாற்றிக் கொள்பவர்கள் அல்ல.

SAREES

For Brides, for Parties, for Special occasions, for daily wear; and for Summer or Winter; Sarees for Diwali, Pongal or New Year

If it is of Mysore Silks and in Bangalore Pure Silk Sarees that you want the above sarees,

Poornima

Silk House

Bangalore City

and they alone can give the best what others cannot give, and it is only they that can give what others give, but in a much Better Quality and in far Richer Varieties, (anything in Crepes, Georgettes, Chiffons and hand woven Sarees).

Poornima Silk House, Bangalore are exhibiting a few masterpiece Sarees at

South India Boarding House,
(Sunny Coffee House)
Connaught Circus, New Delhi.
Telephone No. 47328

Every Saree is a Masterpiece; Every inch is woven with *QUALITY, PURITY* and *LIFE!*

Poornima Silk House, Chickpet, Bangalore City is the one and the only House in India that possesses the Biggest Stocks and the Richest Varieties of Exceptionally Superb Quality Bangalore Silk Sarees and Mysore Silks; Poornima enjoys all over India the largest Reputation, Honour, Popularity, Confidence and Patronage.

சென்னைக்கும் டில்லிக்கும் செய்தி சேகரிப்பதில் உள்ள வித்தியாசங்கள் பல. சென்னையில் காலையிலேயே செய்தி சேகரிப்பு வேலை முடிந்து விடும். சாயந்திரம் பொதுக்கூட்டங்கள் இல்லாவிட்டால் நிருபர்களுக்கு ஓய்வு உண்டு. டில்லியில் இது முடியாத காரியம். ஏனென்றால் செய்தி சேகரிப்பெல்லாம் மத்தியானம்தான் நடக்கும். ஆகவே காலையில் கிளம்பும் நிருபர்கள் செக்குமாடுதான்.

டில்லியில் நடக்கும் விஷயம் எதுவாக இருந்தாலும் அதற்கு நிருபர்கள்தான் ஜவாப்தாரி என்பது வழக்கம். ஆதலால் நாங்கள் மிகவும் பயப்படுவதெல்லாம் நெருப்புப் பற்றும் சம்பவங்கள்தான்! டில்லியில், அகதிகள் வந்தாலும் வந்தார்கள், ரெடிமேட் கடைகள் கணக்கில்லாமல் இருக்கின்றன. இவற்றில் நெருப்புப் பற்றிக் கொள்வதற்கு சமயா சந்தர்ப்பம் என்பது ஒன்றுமில்லை. கோடையானாலும், குளிரானாலும், மழையானாலும் திடுப் திடுப்பென்று பற்றிக்கொண்டு எங்கள் உயிரை வாங்கி விடுவதாக இருக்கின்றன! இரவு ஒரு மணிக்கு நெருப்புப் பிடித்துக்கொண்டாலும் போலீஸிற்கு முன்பாக ஸ்தலத்திற்கு விரைந்தோடுகிறவர்கள் நாங்கள் தான். எங்களுக்கு எப்படிச் செய்தி எட்டும் என்று கேட்கிறீர்களா? அது தான் தொழில் அனுபவம். கழுகுக்கு மூக்கு வியர்ப்பது ஏன்!

நெருப்பு மாத்திரம் எங்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டி விடும் என்று எண்ணவேண்டாம். யாராவது பிரமுகர் அசௌக்கியமாக இருந்தால் அவர் எப்படி தினந்தோறும் அபிவிருத்தியோ அல்லது அதற்கு எதிரிடையாகவோ அடைகிறார் என்பது எங்கள் கழுத்தறுப்பு. இது விஷயமாக ஒரு சிறிய சம்பவம் ஞாபகம் வருகிறது எனக்கு. ரைட் ஆனரபிள் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி சென்னையில் நோய்வாய்ப்பட்டிருந்த சமயம். அவர் தேக நிலையைப்பற்றி டெலிபோனில் தினம் இரவு விசாரிப்பது வழக்கம். அவரது நிலைமை மோசமாக ஆக அவர் வீட்டில் டெலிபோனில் கூப்பிட்டு விசாரிப்பது அதிகமாயிற்று. பதில் கூற போனடியில் இருந்த ஒரு வயதான மாது "உங்களைக் க......ல வைக்க! நீங்கள் நாசமாகப் போக!" என்று திட்ட ஆரம்பித்து விட்டாள். இந்த ஆசீர்வாதத்தை நேரில் பெற இரவில் ஒரு நடை போகலாம் என்று சென்றால் அவருடன் பல வருஷங்களாக இருந்த வேலைக்காரன் எங்களில் ஒருவரை கடுமையாகத் துரத்த ஆரம்பித்து விட்டான். பாவம், உறவினர்களுக்குக் கவலை நோய்வாய்ப்பட்டிருப்பவர்களைப் பற்றி. நபர் எங்களுக்குத் தெரியாமல் பிராணனை விட்டுவிடப் போகிறாரே என்று எங்களுக்குக் கவலை!

ஆனால் டில்லியில் இதற்கு மாறான நிலை. ஏதாவது பிரமுகருக்கு ஆபத்து என்றால் பத்திரிகை காரியாலயத்திற்கே டெலிபோனில் செய்தி கிடைக்கும். சமீபத்தில் ஒரு காங்கிரஸ் தலைவர் இறந்தபொழுது அவர் வீட்டிற்கு நான் சென்றேன். அங்கு ஜனங்கள் ஒருவருமில்லை. இறந்தவருடைய ஸ்வீகாரப் புத்திரி புழக்கடையில் இருந்தாள். நான் இறந்தவருடைய அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டு வெளி வராந்தாவில் வந்து உட்கார்ந்து கொண்டேன். அப்பொழுது தான் வந்த டில்லியின் சுகாதார மந்திரி என்னைச் சரியாகப் பார்க்காமல் "பாவம், இன்னும் கொஞ்ச காலம் இருந்திருக்கலாம்" என்றார். இதில் நமக்கு என்ன நஷ்டம் என்று "ஆம்" என்று தலையசைத்து நிமிர்ந்தேன். "அட, நீங்களா" என்றவுடன் நான் "பரவாயில்லை" என்று எழுந்து நடையைக் கட்டினேன்.

நிருபர்களுடைய வாழ்க்கையைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் மாளாது. ஆனால் நிருபரைப் பற்றியும் அவருடைய கஷ்டங்களைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ள இது போதும். தவிர எங்களைப் பற்றி எப்பொழுதுதான் எழுதுவது?

பொழுது போக்கு

டாக்டர் நீ. ரா. ஸ்ரீநிவாசன், M. Sc., Ph. D.

உலகில் மாந்தர் பலர், தத்தம் வேலை நேரம் போக எஞ்சிய ஓய்வு நேரத்தில் பொழுதுபோக்காகப் பற்பல வேலைகளை மேற்கொள்கின்றனர். இசையில் விருப்பமுள்ளவர்கள் வாய்ப் பாட்டிலோ வாத்தியத்திலோ ஈடுபட்டு ஆனந்திக்கின்றனர். நாடகத்தில் திறனுடையோர் நடிக்கின்றனர். ஓவியத்தில் தேர்ச்சியடைபவரும் உண்டு. புத்தகங்களைப் படிப்பதில் இன்புறுவர் கணக்கிலர். இவையல்லாது புகைப்படம் பிடித்தல், கதை எழுதல், தோட்டம் வளர்த்தல், விநோதச் சாமான்களைச் சேகரித்தல் போன்ற பொழுது போக்கும் உண்டு.

இதுமாதிரி ஒன்றுதான் தபால் வில்லைகளைச் சேகரித்தலும். பல நாடுகளில் வெளியாகும் அழகிய தபால் வில்லைகளை ஒழுங்காக ஒட்டிவைத்துப் பார்த்து ஆனந்திப்பவர் பலர். இவர்கள் எல்லா நாடுகளிலும் இருக்கின்றனர். ஆண் பெண் இருபாலரும், சிறுவரும் முதியோரும் இதில் நாட்டம் செலுத்துகின்றனர். அதற்கென அவர்கள் மேற்கொள்ளும் சிரமம் எழுத்தில் அடங்காது: செலவழிக்கும் பணமும் ஒரு பொருட்டல்ல. அரிய வில்லைகளைச் சேகரிப்பதே அவர் நோக்கு. தபால்வில்லை சேகரித்தலை ஒரு பொழுது போக்கு என்று சொன்னால் போதாது; அதை ஒரு தனிக் கலை என்றுகூட கூறலாம்.

தபால்ப் போக்குவரத்து ஏற்பட்டு பல்லாண்டுகள் ஆகின்றன. முதன்முதலில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தபால் செல்ல அதிக காலம் பிடித்தது. முறையே நடைமூலமாகவும், பின்னர் மாட்டு வண்டி, ஒட்டகம், குதிரைமேலும், ரயில், மோட்டார், கப்பல் மூலமாகவும் தபால் எடுத்துச் செல்லும் வேகம் அதிகரித்தது. அதன் பின்னரே வானவூர்திவழியாகத் தபால் பறக்கத் தொடங்கியது. தபால் எடுத்துச் செல்லப்படும் விதத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு நிகழ்ச்சிச் சித்திரம் முற்கூறியபடி பல தபால் வில்லைகள் மூலம் 1937ல் நம் நாட்டில் விளக்கப்பட்டது. இதனை ஒரு அரிய சம்பவமாகவே கருதவேண்டும். இன்று வேகமான போக்குவரத்துகள் ஏற்பட்டதின் விளைவால் உலகின் ஒரு மூலையிலிருந்து, பல்லாயிரம் மைல்களைக் கடந்து, மற்றோர் மூலைக்கு சில நாட்களுள் செல்லுதல் இயலுகிறது. இதனால் வணிகம் பெருகி, தபால் போக்குவரத்தும் ஏராளமாகி வருவதைக் காண்கின்றோம். தபால் வில்லைகள் செலாவணியும் அதிகமாதல் இயல்பு. ஆகவே இந்நாளில் தபால் வில்லைகளைச் சேகரிப்போருக்கு ஆர்வமும் பன்மடங்காயிருக்கிறது.

சின்னங்களும் வண்ணங்களும்:

ஒவ்வொரு நாட்டிலும் கட்டணத்திற்கு ஏற்ப தனித்தனியான தபால் வில்லைகள் உண்டு. நம் நாட்டிலேயே பார்த்தால், காலணா முதல் பதினைந்து ரூபாய்வரை பலதரப்பட்ட வில்லைகள் விற்கப்படுகின்றன. இவைகளில் பொறிக்கப்பட்டிருக்கும் . சின்னங்களும், திகழும் வண்ணங்களும் பல.

வில்லைகள் பலவும் ஊதா, பச்சை, பழுப்பு, சிவப்பு, நீலம் முதலிய கண்கவர் வண்ணங்களுடன் விளங்குகின்றன. பொதுவாக நோக்குமிடத்து, தபால் வில்லைகளில் அநேகமாக, ஒரு நாட்டின் அரசனோ அல்லது குடியரசின் தலைவனோ அவனது உருவமோ அல்லது தலையோ இடம் பெறும். இங்கிலாந்து வில்லைகளில் மன்னனது திருமுடி மாத்திரம் தோற்றமளிக்கும். சில சமயங்களில் ஒரு நாட்டின் விசேடக் காட்சிகளைக் காணலாம். உதாரணமாக ஸ்விட்சர்லாந்து வில்லைகளில் ஆல்ப்ஸ் மலையின் அழகிய தோற்றம் காட்சியளிக்கின்றது. அமெரிக்காவில் பெயர் பெற்ற பூங்தோட்டம் (Yellow Stone Park) இடம் பெறுகிறது. திருவாங்கூர் வில்லைகளில் நாட்டிற்கே உரித்தான தென்னந் தோப்புகள் விளங்கின. பர்மாவிலும் சிங்களத் தீவிலும், தேயிலை ரப்பர் தோட்டக் காட்சிகளும் அவைகளில் பெண்கள் தோட்டப் பொருள்களைச் சேகரிப்பதும் சித்தரிக்கப்படுகின்றன. சில மிருகங்களும் வில்லைகளில் பொறிக்கப்படுகின்றன. நம் நாட்டில் யானையும், ஆஸ்திரேலியாவில் வேடிக்கையான கங்காரூவும் உதாரணங்களாம்.

இந்தியாவில் இதுகாறும் தபால் வில்லைகளில் மன்னனது தலையே அச்சிடப்பட்டு வந்தது. இப்பொழுது சமீபத்தில் இந்நாட்டின் பழம்பெரும் சின்னங்களை மேன்மைப்படுத்தவேண்டும் என்ற நோக்குடன் பல அரிய தலைகள் தயாரிக்கப்பட்டன. இவை நாசிக் என்னுமிடத்தில் அச்சிடப்பெறுகின்றன. இவைகளில் தொன்மைப் பெருமைவாய்ந்த அஜந்தா குகைக் காட்சியும், சாஞ்சி ஸ்தூபியும், மகாதேவர் கோவிலும் சீக்கியர் தங்கக் கோவிலும், அமைந்துள்ளன. தில்லை நடனத் திருவுருவும் ஒன்றுளது. சரித்திரப் புகழ்பெற்ற டில்லி செங்கோட்டை, அழகில் ஒப்பற்ற ஆக்ரா தாஜ்மஹால், டில்லி குதுப்மினார் முதலியனவும் காட்சியளிக்கின்றன. இவற்றைப் பிறநாட்டில் உள்ள வில்லைப் பித்தர்கள் ஆர்வத்துடன் சேகரிப்பர் என்பதில் ஐயமில்லை.

புகைப்பட விளக்கம் :

மேல். இடது. லூயி பாஸ்சர் [பிரான்ஸ்]
வலது. பென்ஜமின் ப்ராங்க்ளின் [அமெரிக்கா]

நடு மேல். [இடமிருந்து வலம்]
1. பர்தெலாட் [பிரான்ஸ்]
2. துணி நெய் தொழில் [பெல்ஜியம்]
3. விக்டர் ரிட்பர்க் [ஸ்வீடன்]

நடு கீழ். [இடமிருந்து வலம்]
1. ரேடியோ அரை நூற்றுண்டு விழா [இத்தாலி]
2. கரித்தொழில் ஒன்றரை நூற்றுண்டு விழா [ஆஸ்திரேலியா]
3. வாஸ்கோடகாமா [போர்த்துகீஸ் இந்தியா]

கீழ். இடது. தாமஸ் ஆல்வா எடிஸன் [அமெரிக்கா]
வலது. பாலமர் வான் நிலை அறியும் கூடம் [அமெரிக்கா]

[விளக்கம்—எதிர்ப்புறம்]

சில சமயங்களில் முக்கியமான சம்பவங்களை ஒட்டிப் பிரத்தியேகமான வில்லைகள் வெளியிடுவதும் உண்டு. அகில உலக தபால் சங்கத்தின் விழாவை ஒட்டி சமீபத்தில் இங்கிலாந்தில் விசேட வில்லைகள் அச்சாகி விற்பனையாகின. ஆஸ்திரேலியாவில் கரிததொழில் சிறந்தோங்கும் நியூகாசில் என்னுமிடம் உளது. அத்தொழிலின் 150-வது ஆண்டு விழாவை முன்னிட்டு ஒரு அரிய வில்லை வெளியாகியது. இன்று மிகவும் இன்றியமையாத சாதனமாகக் கருதப்படும் ரேடியோவின் அரை நூற்றாண்டு விழாவிற்கென, இத்தாலியில் ஒருதனி வில்லை வந்தது. இப்பொழுது காசநோய்க்கு உற்ற மருந்தெனப் போற்றப்படுவது பி. சி ஜி. சமீபத்தில் அம்மருந்தின் பயனை விவாதிக்க ஒரு உலக மகாநாடு கூடியது. அப்பொழுது பிரான்ஸில், மருந்தைக்கண்டுபிடித்தவரான கால்மெட் என்பவரைக் கௌரவிக்க ஒரு தனி வில்லை வெளிவந்தது. இந்தியாவுக்கு முதலில் வந்த போர்த்துஜீசியரான வாஸ்கோடகாமா என்பவரின் ஞாபகார்த்தமாக ஒரு வில்லை வந்துள்ளது. அதுபோல் ஆஸ்திரேலியாவைக் கண்ட காப்டன் குக் என்பாரும் சிறப்பிக்கப்பட்டார். உலகுக்கு நன்மை ஈந்த பல பெரியாரின் ஞாபகார்த்தமாகப் பல வில்லைகள் இருக்கின்றன. அவைகளுக்கு எடுத்துக்காட்டாக நம் நாட்டில் காந்தியடிகளின் படத்தை நினைவு கூரலாம்.

வில்லைகளும் விஞ்ஞானமும்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விஞ்ஞானம் வெகுவாக விருத்தியடைந்து, மனித வாழ்க்கையைப் பெருவாரியாக மாற்றியமைத்தது. அதற்குக் காரணமாயிருந்த விஞ்ஞானிகள் பலர். அவர்களைக் கௌரவிக்க வேண்டிப் பல நாடுகளிலும் அவர்கள் உருவம் சமைந்த தபால் வில்லைகளை வெளியிட்டனர். அமெரிக்காவில் விஞ்ஞானியும் அரசியல்வாதியுமான பெஞ்ஜமின் ப்ராங்கிளின் என்பவர் படம் பல வண்ணங்களில் வெளியாகியது. கம்பியில்லாத் தந்தி, கிராமபோன் முதலிய பல அரிய சாதனங்களைக் கண்டுபிடித்து அழியாப் புகழ் பெற்ற தாமஸ் ஆல்வா எடிஸனையும் அமெரிக்கா கௌரவித்தது. ஐரோப்பாவில் பல விஞ்ஞானிகளுக்கு தபால் வில்லைகளில் இடம் கிடைத்தது. கண்ணுக்குப் புலனாகாத கிருமிகள்தாம் வியாதிகளை விளைக்கின்றன என்ற மகத்தானதொரு உண்மையை உலகுக்கு வெளியிட்ட பிரான்ஸ் தேசத்து விஞ்ஞானியான லூயி பாஸ்சர் என்பார் அவர் நாட்டால் மதிக்கப்பட்டார். அதேபோல் பர்தெலாட் எனும் மற்றொரு விஞ்ஞானிக்கும் தபால் வில்லையில் இடம் கிடைத்தது. புற்றுநோய்க்கு இன்று உற்ற மருந்தாகத் திகழும் ரேடியம் எனும அரிய பொருளைப் பல இன்னல்களுக்கிடையே கண்டுபிடித்துப் பேரும் புகழும் எய்திய பெண்கள் திலகமாகிய க்யூரி அம்மையாரது படமும் வெளிவந்தது. அன்னாரை ஆப்கனிஸ்தான், க்யூபா, பனாமா முதலிய பல நாடுகளும் மதித்துத் தங்கள் வில்லைகளில் சேர்த்துக்கொண்டன. எக்ஸ்ரே எனப்படும் ஒருவிதக் கதிர்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானி ராண்ட்ஜனின் படமும் வில்லை வடிவில் உலாவுகிறது. மனிதனும் உயிரினங்களும் தோன்றிய வகையை ஆராய்ந்த அறிஞர் டார்வின் படம் ஈக்வேடார் நாட்டில்

வெளியாகியது. இதுபோல் இன்னும் எவ்வளவோ பல தொழிலபி விருத்தியைச் சித்தரிக்கும் வில்லைப்படங்களுள், துணி நெய்தல், இயந்திர சாதனங்களால் வளர்ந்து வருவதைக்காண்பிக்க பெல்ஜியம் ஒரு படம் வெளியிட்டது. உலகம் போற்றும், வானிலை அறியும், அமெரிக்காவிலுள்ள பாலமர் வானிலை ஆராய்ச்சி நிலையம் படம் சமீபத்தில் வெளிவந்துள்ளது.

இந்தியாவில் இதுவரை இம்மாதிரி விஞ்ஞானிகளின் படங்கள் வெளியானதில்லை. இன்று பௌதீகத்துறையில் தலைசிறந்தவர்கள் என்று கருதப்படும் ஸர். சி வி. ராமன், டாக்டர் கே எஸ். கிருஷ்ணன் ஆகியோரின் படங்களைத் தபால் இலாகா ஏன் வெளியிடலாகாது? இவ்விருவரும் தமிழர்கள் என்பதில் தமிழ் மக்கள் பெருமிதம் அடைகின்றனர். இம்மாதிரிச் செய்தால் பொதுமக்களிடையே விஞ்ஞானம் பரவ இதுவும் ஒரு வழியாகும். இன்னும் உலகில் பல நாடுகளிலும் அரிய பெரிய விஞ்ஞானிகள் உள்ளனர்; பல விஞ்ஞான, தொழில் சாதனைகள் காணப்படுகின்றன. இவைகளையும் உலக தபால் வில்லைகளில் அந்த அந்த நாட்டினர் சேர்த்துக் கொண்டால் பல சிறந்த தபால் வில்லைகள் வெளிவரும். அதனுல் தபால் வில்லைகளைச் சேர்ப்பதே ஒரு ரசமானப் பயனுள்ளதான, பொழுது போக்காகும். பல நாடுகளில் வெளியாகும் தபால் வில்லைகளைச் சேகரிப்பது ஒரு சிறந்த பொழுது போக்கோடல்லாது அறிவு வளர்ச்சிக்கும் ஆதாரமாகிறது.

K. G. K. & Co.,

Betal Leaf Merchants & Commission Agents

S. I. B. H. Buildings,
M-40, Con. Circus.
NEW DELHI

Post Box: 604
Telephone: 47328

கே. ஜி. கே. யின் சிறப்பான தயாரிப்புகள்:

★ சுகந்த பாக்குத்தூள், வாசனை சுண்ணும்பு, பீடா,

★★ சாம்பார் பொடி, ரஸப் பொடி, ஊறுகாய் வகைகள்,

★★★ சந்தனுதித் தைலம், அரைக்கீரை தைலம், ப்ளவர் டஸ்டு, ஊதுபத்தி.

மற்றபடி டீ பார்டிகள், கல்யாணங்களுக்கு வேண்டிய புஷ்பம், சந்தணம் முதலியவைகள் சப்ளை செய்யப்படும்.

Sole Prop.: **K. G. Kumaran.**

கடலும் மதியும்

ஹா. பார்வதி

பொங்கிப்பொங்கி வீசுகின்றாய் பெருங்கடலே
திங்களிடம் கண்டதென்ன திரைகடலே?
அம்புவியில் என்னுடலம் கரித்திருக்க*
அம்புலியும் அமுத மதை ஊட்டுகின்றான்.
துள்ளித்துள்ளிப் பாய்கின்றாய் திரைகடலே
மெள்ள எழும் சந்திரனில் என்ன கண்டாய்?
பாயும் அலை நீண்ட உடல் கருத்திருக்க
தேயுமவன் சிறு உடல் வெளுத்திருப்பான்.
அள்ளிஅள்ளி அலையை நீட்டும் அருங்கடலே?
உள்ளம் பொங்கி மதிகண்டு உவந்த தென்ன?
மங்கி மங்கி தினகரனின் ஒளியைப் பெற்றும்
தங்கிடாது தண்மையூட்டும் மதியைக்கண்டே.
தாவித்தாவி விண்ணை எட்டும் சாகரமே
தாவிச்சென்று பெற்றுவிடும் பெருமை என்ன?
சந்திரனைக்கண்டு பொங்கும் தண்கடலே
இந்துவிடம் பூர்ணிமையில் கண்டதென்ன?
வாழ்வதனில் சிலதினங்கள் தேய்ந்திடினும்
வீழ்வதில்லை தூய்மையெனும் உண்மை கண்டேன்.

*[கரிப்பு = உப்பினால் உண்டாவது]

அல்லாமா சொன்ன கதை

பூ. சோமசுந்தரம்

டில்லி செங்கோட்டை சரித்திரப் பிரசித்தி பெற்றதென்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதன் எதிரே இருக்கும் புல் வெளியில் இன்னும் சரித்திரம் புதுமையாக நிர்மாணிக்கப் படுகிறதென்பதை வெகு சிலர்தான் அறிவார்கள். தற்செயலாகத்தான் எனக்கே அது தெரியவந்தது.

ஒரு நாள் மாலை அங்கே உட்கார்ந்து ஏதோ யோசனையிலாழ்ந்திருந்தேன். திடீரென்று அருகாமையில் பேச்சுக் குரல் கேட்டுத் திரும்பினேன். அங்கே ஒரு தொண்டு கிழவரைச் சுற்றி ஏழெட்டுப் பெயர் உட்கார்ந்திருக்கக் கண்டேன். அந்தக் கிழவரின் அலை மோதும் தும்பைப்பூ தாடியும் கண்களில் தோன்றிய விஷமக் குறியும் என்னை அவர்பால் ஈர்த்தன. அவர்தான் அல்லாமா ஸாஹெப் என்பதைப் பேச்சிலிருந்து தெரிந்துகொண்டேன். அனேகமாக தினமும் அவர் அந்தப் புல்வெளியில் உட்கார்ந்து நண்பர்களுடன் சர்ச்சை செய்வதுண்டு என்று சொன்னார்கள். சர்ச்சை எல்லாம் முகலாய சரித்திரத்தின் ஏதாவது ஒரு அம்சத்தைப் பற்றித்தான்.

சர்ச்சை என்று மரியாதைக்குத்தான் சொல்லவேண்டும். அல்லாமா ஸாஹெப் மற்றவர்களைப் பேசவிட்டால் தானே? யாராவது ஒருவர் ஏதாவது பிரச்னையைக் கிளப்புவார். அல்லாமா ஸாஹெப் தொண்டையைக் கனைத்துக்கொண்டு தாடியை ஒரு முறை உருவி விட்டுக்கொள்ளுவார். அப்புறம் அருவி வீழ்வதுபோல அவருடைய கதாப்பிரசங்கம் ஆரம்பித்து விடும். குறுக்கே யாராவது பேசினால், "தும் க்யா ஜானோ?" (உனக்கு என்ன தெரியும்?) என்று உதறித் தள்ளிவிடுவார். "சரித்திரப் புத்தகத்தில் அப்படி இல்லையே," என்றால் அவருக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். "எழுதினவன் முட்டாள். அதற்கு என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?" என்று உறுமுவார்.

அன்று நான் போனபோது ஔரங்கஜேபைப் பற்றிச் சர்ச்சை ஆரம்பித்திருந்தது. "ஔரங்கஜேப் மிகுந்த மதப்பற்றுள்ளவனாயிருக்கலாம், ஆனால் அவன் தாராவை—சொந்த அண்ணனை—சமாதானம் பேசுவதாக ஏமாற்றிக் கொலை செய்தது மன்னிக்க முடியாத குற்றம்," என்றார் ஒருவர்.

"டில்லி கேட்டுக்கு வெளியே இருக்கிறதே, 'கூனி தர்வாஜா' (ரத்த வாயில்) அங்கேதானே கொலை நடந்தது?" என்றார் இன்னொருவர்.

அல்லாமா ஸாஹெப் தொண்டையைக் கனைத்துக்கொண்டு தாடியை உருவி விட்டுக்கொண்டார். "தாராவை—அல்லா அவன் மீது கருணை புரிவானாகை— ஔரங்கஜேப் கொல்லவுமில்லை, அந்தக் கொலை 'கூனி தர்வாஜா'வில் நடக்கவுமில்லை. உங்களுக்கு என்ன தெரியும்?..."

"ஆனால் சரித்திரப் புத்தகங்களில்..."

"சரித்திரம் எழுதினவன் மடையன். உண்மையான கதையை என்னிடம் கேள்," என்று ஆரம்பித்தார் அல்லாமா ஸாஹெப்.

*** *** ***

ஷாஜஹான் கொடிய நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறான். டில்லி செங்கோட்டையில் தாராதான் ராஜரீகம் செய்கிறான். என்ன ராஜரீகம்? பகல் முழுதும் உபநிஷதப் பாராயணம். சூரியன் அஸ்தமித்தது முதல் நடுநிசிவரை குடி, கேளிக்கைகள். இந்தச் சமயத்தில்தான் ஔரங்கஜேப் பெரிய சேனையுடன் படையெடுத்து வரும் செய்தி கிடைத்தது. தாராவுக்குச் சண்டைபோட மனமே இல்லை. அவன் தங்கை ஜஹானாராதான் அவனைத் தூண்டி, உற்சாகப் படுத்தி அனுப்பினாள்.

ஔரங்கஜேபுக்கு தாராவின் மன நிலை நன்ருகத் தெரியும். குள்ளநரி ஆயிற்றே அவன்? சமாதான தூதர் களை அனுப்பினுன். இரண்டு சகோ தரர்களும் இப்போது 'கூனி தர்வாஜா' என்று அழைக்கப்படும் இடத்தில் ஒரே ஒரு மெய்க்காவலனுடன் சந்திக்க வேண்டியது. இருபக்கத்துச் சைனியங் களும் அந்த இடத்திலிருந்து இருநூறு கஜம் அப்புறமும் இப்புறமும் விலகி நிற்கவேண்டியது.—இதுதான் ஔரங் கஜேப் சொல்லி அனுப்பிய நிபந்தனை.

தாராவின் தளபதிகள் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்று தடுத்தார் கள். ஆனல் தாரா அவர்கள் பேச்சை மதிக்கவில்லை. ஜஹானரா போர்க் களத்துக்கு வந்திருந்தால் சரித்திரமே மாறிப் போயிருக்கும். ஆனல் அவள் தான் செங்கோட்டையில் ஒரு தனி அறையில் நோயாளிக் தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிருளே?

தனது பட்டாணிய மெய்க்காப்பா ளன் பின் தொடர, அரையில் உடை வாளும், குத்துவாளும் அணிந்து 'கூனி தர்வாஜா'வை தாரா நெருங்கினுன். எதிரே ஔரங்கஜேப், 'ஹஜ்' யாத் திரிகன் போல, வெள்ளை உடை அணிந்து, நிராயுதபாணியாக, ஒரு மெய்க்காப்பாளனுடன் வந்தான். தம் பியின் இந்தத் துறவிக்கோலம் தாரா வின் மனதை இளக்கிவிட்டது. கை களை விரித்துக்கொண்டு அருகே வந்த தம்பியை, மனப்பூர்வமான பரிவுடன் தழுவிக்கொண்டான். கண்ணீர் அவன் தொண்டையை அடைத்து விட்டது.

நாத் தழுதழுக்க, குரல் நடுங்க, ஔரங்கஜேப் "அண்ணு," என்ற ழைத்து, குனிந்து ஸலாம் செய்தான். "அப்பாஜான் படுத்த படுக்கையாகத் தான் இருக்கிருரா?" என்று விம்மும் குரலுடன் விசாரித்தான்.

தாராவுக்கு அப்போதும் குரல் கிளம்பவில்லை. "ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தான். உதடுகள் துடித்தன.

"அண்ணு! எனக்கு ராஜ்யத்தில் ஆசையில்லை என்பது உனக்கே தெரி யும். அப்பாஜான்கூட "முல்லா" என்று என்னைக் கேலி செய்வாரே! உடம்பில் வலிமை இருக்கும்போதே மக்கா ஷரீபுக்கு 'ஹஜ்' செல்ல வேண்டும் என்பது ஒன்றுதான் என் ஆசை. ஆனல் அதற்காக ராஜ்யத் தைக் கேட்பாரற்றுப் போக விட்டு விடலாமா? அதனல் தான் உன்னிடம் பேச வந்தேன்......."

தாரா பரிவு நிறைந்த கண்களால் தம்பியைப் பார்த்துக் கொண்டு நின் முன். ஒன்றும் பேசவில்லை.

ஔரங்கஜேப் சொல்லிக்கொண்டு போனுன்.

"அப்பாஜான் உடம்பு சரியா யிருந்தால் ஒரு கவலையுமில்லை. ஆனல் அவரோ படுத்த படுக்கையாய்க் கிடக் கிருர். வயதும் ஆகிவிட்டது. திடீ ரென்று அவருக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்—அல்லா அவ்வாறு நேரா திருக்க அருள்வானுக—ஒரே குழப்ப மாக அல்லவா முடியும்? அதனல் தான் நான் சொல்லுகிறேன், அண்ணு!

NARAYAN BROTHERS

NEWS AGENTS

Hindu, Hindustan Times, Indian Express, Dinamani, Shankar's Weekly, Illustrated Weekly, Reader's Digest, Ananda Vikatan, Kalki, Dinamani Kadir, Kalaimagal, Amudasurabhi, Pesum Padam, Companion (Ananda Vikatan Tips) & Vanoli are but a few Magazines, periodicals and news papers that are available with us.

For more particulars kindly contact us at :

M/s. Vaidyanatha Iyer's Stores

Ajmal Khan Road, Karolbagh.

ராஜ்யம் ஆளும் பொறுப்பை அப்பா இப்போதே உன்னிடம் ஒப்படைத்து விடவேண்டும். அவர் வேண்டுமானுல் யோசனை சொல்லிக்கொண்டிருக்கட்டும். டில்லி சிங்காதனத்தில் நீ அமர்ந்த மறுதினமே நான் அல்லாவின் பெயரைச் சொல்லிக் கொண்டு நிச்சிந்தையாக 'ஹஜ்' யாத்திரைக்குப் புறப்பட்டுவிடுவேன். அண்ணு! மறுக்காதே இதை."

இவ்வாறு சொல்லிக்கொண்டே ஒளரங்கஜேப், பிரமை பிடித்தவன் போல் நின்றுகொண்டிருந்த தாராவின் வலக்கையை இருகைகளாலும் மெல்லத் தூக்கி, முழந்தாள் படியிட்ட வண்ணம் முத்தமிட்டான். பின்பு தன் கைகளை, நெஞ்சில் வைத்துக் கொண்டான், பரம விசுவாசத்துக்கு அறிகுறியாக.

தன் காதுகளையும் கண்களையும் நம்ப முடியாமல் திகைத்து நின்ற தாராவுக்கு இப்போதுதான் உயிர்ப்பு வந்தது. "தம்பி! ஆண்டவன் என்னை மன்னிப்பானுக! உன்னைப்பற்றி எவ்வளவு தவருக நினைத்துவிட்டேன்! உன் போன்ற உத்தமனைத் தம்பியாகப் பெற எனக்குத் தகுதி உண்டா?" என்று சொல்லிக்கொண்டே, பணிவுடன் நின்றுகொண்டிருந்த ஒளரங்கஜேபை மீண்டும் தழுவிக்கொண்டான்.

வளர்த்துவானேன்? ஒளரங்கஜேப் விரித்த வலையில் தாரா விழுந்து விட்டான். சகோதரர்களின் சமாதான ஒப்பந்தத்தைக் கொண்டாடுவதற்காக, செங்கோட்டை அந்தரங்க தர்பாரில் கேளிக்கை நடத்துவதென்ற ஒளரங்கஜேபின் யோசனையையும் தாரா ஏற்றுக் கொண்டான்.

தாராவும் ஒளரங்கஜேபும் கைகோத்துக்கொண்டு டில்லி தர்வாஜாவை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். அப்போது ஒரு வேடிக்கை நடந்தது.

தாராவின் மெய்க்காப்பாளனை பட்டாணியன் பிறவிச் செவிட்டுமை. ஆனுல் தாராவிடம் அவனுக்கு நாய் போன்ற விசுவாசம். இந்த மனிதன் திடீரென்று ஒளரங்கஜேபுக்கு முன்னே பாய்ந்து கைகளை நீட்டி அவனை முன்னே போகவிடாமல் தடுத்தான்.

Peacocks
MEDICATED TOOTH POWDER
An ideal one for daily use

PAINOL (Regd.)
BEST PAIN BALM FOR
HEADACHE, SPRAINS, CUTS, COLDS & INSECT BITES ETC.

We also stock
Many South Indian Products, Mysore Sandalwood Soap, Mysore Finest Agarbathies and AYURVEDASRAMAM GOODS Etc.

AGENTS:
ENSA TRADING CO.,
CHANDNI CHOWK, DELHI.

தாரா என்னென்னவோ சைகைகள் செய்தும் பயனில்லை. செவிட்டுமைகளுக்கு 'இல்ஹாம்' (வரப்போவதைப்பற்றிய உணர்வு) ஏற்படும் என்பார்கள். இந்தப் பட்டாணியனுக்கும் அப்படி ஏதோ தோன்றியிருக்க வேண்டும்.

ஒளரங்கஜேப் புன்சிரிப்புடன் தன் மெய்க்காவலாளனை நோக்கி "என்ன சொல்கிருன், புரிகிறதா?" என்று மட்டும் கேட்டான். ஜாடை தெரிந்து கொண்ட அந்த முரடன் திடீரென்று வாளை உருவி ஒரே வீச்சில் பட்டாணியனை இரண்டு துண்டாக விழ்த்தி விட்டான்.

ஒளரங்கஜேப் உடனே பதைபதைப்புடன் (எல்லாம் நடிப்புத்தான்!) "அட முட்டாள்! என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்று சொல்லிக் கொண்டே மெய்க்காவலாளன் கையிலிருந்த வாளைப் பிடுங்கி ஒரே வீச்சில் அவன் தலையைத் தரையில் உருட்டி விட்டான். பின்பு இரத்தம் ஒழுகும் வாளைத் தரையில் வீசி எறிந்துவிட்டு "உனக்கு துரோகம் செய்த நாயை

தண்டித்துவிட்டேன், அண்ணு கோபித்துக் கொள்ளாதே,'' என்று தாராவின் முன் பணிந்தான்.

கணப்பொழுதில் நடந்த இந்த விபரீதங்களைக் கனவோ நினைவோ என்று பார்த்து பிரமித்துக் கொண்டிருந்த தாராவுக்கு, தம்பியின் வார்த்தைகளைக் கேட்டதும் கண்ணீர் பொங்கிக் கொண்டு வந்துவிட்டது. ஒன்றுமே பேசாமல் அவனைத் தூக்கி நிறுத்தி மார்புடன் அணைத்துக் கொண்டான்.

"இருக்கு மிடத்திலேயே டேரா போடுங்கள்,'' என்று தன் வீரர்களுக்கு உத்தரவிட்டுவிட்டு, அண்ணனுடன் நகரை நோக்கித் தன்னந்தனியனுய், ஆயுதம் எதுவுமின்றிச் சென்ருன் ஔரங்கஜேப்.

"தம்பி, உன் மனைவியும் குழந்தைகளும் இங்கே இருக்கிருர்களே! அவர்களை நீ போய் பார்க்க வேண்டாமா?'' என்ருன் தாரா.

"அந்தப் பற்றை எல்லாம் என்றைக்கோ நீக்கி விட்டேன். இருந்தாலும் அவர்களுக்கு ஆறுதலாயிருக்கும். நீயும் சொல்கிருய். அதற்காகப் போய்ப் பார்க்கிறேன்,'' என்ருன் குள்ளநரி.

தாரா சிரித்தான்.

அந்தப்புரத்தில் மனைவியைக் கண்டதுமே ஔரங்கஜேப் அவள் காதில் ஏதோ சொன்ஞன். அதன்படியே அவள் தனக்கு நம்பகமான ஒரு பணிப் பெண்ணை நகருக்கு வெளியே இருந்த ஔரங்கஜேபின் சைனியத்தை நோக்கி அனுப்பிஞள்.

"குழந்தை முகம்மது எங்கே?''

"அந்தரங்க தர்பாரிலிருக்கிருன்.''

"ரொம்ப நல்லது. நீ ஜஹாஞராவை கவனித்துக்கொள். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவள் தர்பாருக்கு வரக்கூடாது,'' என்ருன் ஔரங்கஜேப்.

"நீங்கள் வரச்சொன்னுலும் அவளால் முடியாது. பாதுஷாவின் உடம்பு இன்று ரொம்ப மேசமாயிருக்கிறது,'' என்ருள் மனைவி.

தர்பார் ஹாலுக்கு ஔரங்கஜேப் வந்தபோது நாட்டியம் நடந்துகொண்டிருந்தது. தாரா, சந்தோஷ மிகுதியால் அளவு மீறிக் குடித்துவிட்டு, மயிலாசனத்தில் சாய்ந்து கிடந்தான். மயிலாசனத்தில் அவன் உட்கார்ந்தது அதுதான் முதற் தடவை. ஔரங்கஜேப் மெள்ள அவனருகே சென்று வணங்கி, "எனக்காகப் பார்க்க வேண்டாம். முல்லாவுக்கு என்ன தெரியும் மதுவின் சுவை?'' என்ருன்.

கொஞ்சம் உணர்வுடனிருந்த தாரா அதைக் கேட்டு "ஹஹ் ஹஹ் ஹா!'' என்று பெருஞ் சிரிப்புச் சிரித்தான். ஔரங்கஜேப் சற்று தூரத்திலிருந்த ஓர் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு மதுக் கலயம் ஏந்திய பணிப் பெண்ணைக் கூப்பிட்டு, "ஷாஹ்ஜாதாவுக்கு ரோமாபுரிச் சாராயம் நிறையப் பருகக் கொடு,'' என்று கட்டளையிட்டான்.

ஔரங்கஜேப் கண்களைச் சுழற்றி நாற்புறமும் பார்த்தான். அந்தரங்கக் கேளிக்கை யாதலால், பாடகிகள், நர்த்தகிகள், பணிப்பெண்கள் தவிர, அரச குடும்பத்துச் சிறுவர், சிறுமியர் மட்டுமே அங்கிருந்தார்கள். ஔரங்கஜேபின் ஐந்து வயது மகன் முகம்மது, தந்தையைக் கண்டதும் ஓடி வந்தான். ஔரங்கஜேப் மிகமிக அன்புடன் அவனைத் தூக்கி மடியில் உட்கார்த்திக் கொண்டு கொஞ்சினுன்.

சிறிது நேரம் சென்றது. தாரா முழு போதையில் மயங்கிக் கிடந்தான். ஔரங்கஜேப் அதை ஜாடையாகப் பார்த்துவிட்டு, தன் மகனிடம், "இதோ பார்! பெரியப்பா மயங்கிக் கிடக்கிருர். அவர் அறையில் உடைவாளும், குத்துவாளும் சொருகியிருக்கும் தோல்பட்டையை மெதுவாக அவிழ்த்துக்கொண்டு வந்துவிடு. உனக்கு ஒரு மோஹாரா இனும்,'' என்று சிரித்துக்கொண்டே சொன்ஞன். குழந்தை "இதுதானு பிரமாதம்?'' என்று சொல்லிக்கொண்டே ஓடிற்று.

குழந்தை அவிழ்க்க முடிந்தால் நல்லது. இல்லை, தாரா விழித்துக் கொண்டான் என்ருலும் குழந்தை விஷமம் செய்கிறதென்று நினைப்பானே தவிர, எதுவும் சந்தேகம் கொள்ளமாட்டான். இதுவே ஔரங்கஜேபின் திட்டம்.

அவன் திட்டம் பலித்துவிட்டது. குழந்தை, தாராவின் அரைப்பட்டையை அவிழ்த்து எடுத்துக்கொண்டு வந்துவிட்டது. "சபாஷ்!" என்று முதுகில் தட்டிக்கொடுத்து ஒரு மோஹாரா ஔரங்கஜேப் கொடுத்தான். குழந்தை சந்தோஷத்தால் துள்ளிற்று.

இன்னும் கொஞ்சநேரம் கழிந்தது. ஔரங்கஜேப் மெதுவாக தாராவின் குத்துவாளை எடுத்துக் குழந்தையிடம் காட்டி, "இதால் ஓங்கிக் குத்தத் தெரியுமா உனக்கு?" என்று கேட்டான்.

"ஓ, தெரியுமே" என்றது குழந்தை.

"இதைக் கொண்டுபோய் பெரியப்பாவின் நடுவயிற்றில் ஓங்கிக் குத்து. அப்பொழுதாவது அவருக்கு மயக்கம் தெளிகிறதா பார்க்கலாம். தெளிந்தால் உனக்கு இன்னொரு மோஹாரா இனம்," என்றான்.

குழந்தைக்கு என்ன தெரியும்? குத்துவதும் அதன் தினப்படி விளையாட்டில் சேர்ந்ததுதானே?

"யா அல்லாஹ்!" என்றான் தாரா. உடம்பிலிருந்து ரத்தம் பீறிட்டடித்தது.

இதைப் பார்த்துக் குழந்தை அலறியபோதுதான் நர்த்தகிகளுக்கும் பணிப் பெண்களுக்கும் ஏதோ விபரீதம் நடந்துவிட்டதென்பது தெரிந்தது. ஆனால் அப்போது ஔரங்கஜேப் அங்கே இல்லை.

அந்தரங்க தர்பாரில் ஏற்பட்ட குழப்பமும் கூச்சலும் எங்கும் பரவின. ஷாஜஹானுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த ஜஹானரா ஓடி வந்தாள். அவள் அந்தரங்க தர்பாரில் நுழைந்த அதே சமயம் மறுபுறத்திலிருந்து ஔரங்கஜேப் நுழைந்தான்.

"தொழுகை படித்துக் கொண்டிருந்தவன் திடீரென்று கூச்சலைக் கேட்டுப் பாதியில் எழுந்து வந்தேன். அல்லா என்னை மன்னிப்பானாக! என்ன நடந்தது?" என்றான் அவன்.

ஜஹானரா தீப்பொறிப் பறக்கும் கண்களால் அவனை உறுத்துப் பார்த்தாள். அதே சமயம் கோட்டை வாயிலில் பெருத்த ஆரவாரம் கிளப்பியது. ஔரங்கஜேபின் வீரர்கள் திடீரென்று தாக்கி, செங்கோட்டையைக் கைப்பற்றிவிட்டார்கள்.........

*** *** ***

"ஆமாம்! இதற்கெல்லாம் ஆதாரம் என்ன?" என்று அல்லாமா ஸாஹெபைக் கேட்டேன்.

"ஆதாரமா? அல்லா கொடுத்த மூளைதான். அது இல்லாதவர்களல்லவா ஆதாரம் தேடவேண்டும்?" என்றார் அவர்.

NEW STATIONERY MART

8/C, Prem House, Connaught Place

have pleasure in announcing their appointment as

AUTHORISED SERVICE STATION

For

PARKER PEN

AND

PENCILS

IN

NEW DELHI

Parts and service available at approved rates

சத்தியமே ஜெயம்

'சுப்புடு'

நமது நெறி "சத்யமேவ ஜயதே" என்று அலறுகிறது, சத்யமே ஜெயம் என்பது பொருள். தொன்று தொட்டு விளங்கி வரும் வாக்கு. இதிகாசங்களும், சாத்திரங்களும் இதை மெய்ப்பிக்க பல உதாரணங்களைப் பறைசாற்றுகின்றன.

அனுபவ பூர்வமாய்ப் பார்க்கும்போது இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று நான் சிந்தித்துப் பார்த்ததுண்டு. எல்லோருமே உண்மை பேச ஆரம்பித்து விட்டால் நிலைமை எப்படியிருக்கும் என்று ஒரு மாதிரி கற்பனை செய்து பார்த்து அதனால் விளையும் பயங்கர நிலையை எடுத்துரைக்க முன் வந்துள்ளேன்.

1. பிரசங்கி

என்னை இன்று எதற்காகப் பேசச் சொல்லியிருக்கிறீர்கள் என்பது எல்லாம்வல்ல அந்தப் பழனியாண்டிக்குத்தான் தெரியும். அதுவும் பாரதியாரைப் பற்றி நடக்கும் கூட்டம் இது. இன்று காலை தான் நான் பாரதியின் கட்டுரைகளைப் புரட்டிப் பார்த்து இரண்டொரு விஷயங்களைச் சேகரித்து வந்திருக்கிறேன். போதாக் குறைக்கு உங்கள் காரியதரிசி என்னை 'நான் கண்ட பாரதி' என்ற விஷயம் பற்றிப் பேசச் சொல்லியிருக்கிறார். பாரதி இருந்தபோது நான் இருந்தேன் என்பதைத் தவிர நான் வேறு ஒரு பாவமும் அறியேன். ஆனால் இப்படியெல்லாம் இருக்கும்போது ஏன் பேச ஒப்புக்கொண்டேன் என்பது உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். உண்மையை ஒளிக்கும் வழக்கம் என்னிடம் கிடையாது. இன்று யார் தலைமை வகிக்கப் போகிறார்கள் என்று உங்கள் காரியதரிசியை கேட்டதற்கு தீனதயாளு நாயுடு என்று சொன்னார். இதைக் கேட்ட வுடன் நான் சிரித்த சிரிப்பு எனக்கு ஒரு தலைமுறைக்கு மறவாது. இந்தக் கடன்காரனுக்குப் பாரதியைப் பற்றி என்ன தெரியும் என்று கேட்டதற்கு அவர் சங்கத்திற்கு ரூ. 1000/- நன்கொடையளிப்பதாக வாக்களித்திருக்கிறார் என்றும் அவர் பேச வேண்டிய விஷயத்தை யும் காரியதரிசியே எழுதிக்கொடுக்க வேண்டுமென்ற ஒப்பந்தத் தின் பேரில் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டாரென்றும் உங்கள் காரியதரிசி கருணாகரன் தெரிவித்தார். கடைசியாகச் சொல்லு கிறேன். தீனதயாளு நாயுடு தலைமையில் தன் நினைவுக் கூட்டம் ஒன்று பின் காலத்தில் நடக்கும் என்று பாரதியார் அறிந்திருந்தால் தமிழ்த் தாயின் உதரத்தில் ஜனித்தே இருக்க மாட்டார்.

2. எழுத்தாளர்

தேச வீரர் தோசாவாலா தேசாய் நேற்று மாலை ஆறு மணிக்கு பரமண்டலம் எய்தினர். மூன்று மனைவிகளும் முறையே இரண்டு

பிள்ளைகளும் விட்டு விட்டுப் போகிறார். இது தவிர கள்ள மார்க்கட் பணம் பத்து லக்ஷம் ரூபாயும் விட்டு விட்டுப் போகிறார். அவர் நடத்தி வந்த நவசனி என்ற பத்திரிகை சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. சம்பளம் தராமல் பத்திரிகை நடத்துவது எப்படி யென்று பார்க்கவேண்டுமென்றால் நவசனி காரியாலயக்காரர்களைக் கேட்டால் போதும். வருமான வரியிலிருந்து வஜா கிடைக்குமள வுக்குத் தானதருமம் நிறையச் செய்திருக்கிறார். இவ்வளவு சீக்கிரம் இறைவன் தம்மருகில் இவரை இழுத்துக் கொண்டது ஆஸ்திகர் களுக்கு அவன் இருப்பதில் நம்பிக்கை உண்டாக்கி யிருக்கிறது. இம்மாதிரிப் புண்ணியவான்களைப் பற்றிய மரணச் செய்திகள் அடிக்கடி இந்தப் பத்தியில் வருமாக.

3. விமர்சகர்

நேற்று மாலை கொத்தவால் சபையில் நடனமாடிய குமாரி (?) குசலாவின் பரதநாட்டியத்தைப் பற்றி எழுத வேண்டிய துர்ப் பாக்கியம் எனக்குக் கிட்டியுள்ளது. இந்தக் குமாரியின் நடனம் அந்தக் கலைக்கு ஆபத்து என்பதை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் நடன மேடைக்கே ஆபத்து என்பதை நினைக்கும் போது தான் கவலையாயிருக்கிறது. குமாரிக்கு கழுத்தையும் சேர்த்த இடுப்பு இருக்கிறது. ஒவ்வொரு அசைவின்போது அஸ்ஸாமிலிருப்பது போன்ற ஒரு உணர்ச்சி—பயம்—முதுகிலே ஒரு குளிர்—உண்டா கிறது. "உணவு செல்வதில்லையே" என்ற பதம் அபிநயம் பிடித்த போது எனக்கு அந்தப் பதத்திற்கே வேறொரு அர்த்தம் தோன்றி யது. இந்தக் குமாரியின் வயிற்றைத் தவிர உணவு வேறெங்கும் செல்வதில்லையென்பது நிதர்சனமாயிருக்கிறது.

இவ்வளவு எல்லாம் இருக்கும்போது இவளைப் பற்றி விமரிசனம் ஏன் என்று கேட்கிறீர்களா? அந்த எழவை ஏன் கேட்கிறீர்கள்? இந்தக் குமாரி எங்கள் பத்திரிகையின் விளம்பர இலாகாத்தலைவரின் திருக்குமாரி! கடவுளே! எங்களுக்கு விமோசனமே கிடையாதா?

4. அரசியல்வாதி

மூட ஜனங்களே! எனக்கு வோட்டுப் போடுங்கள். எலெக்ஷன் ஆனால் நீங்கள் இருக்கும் பக்கம் தலைவைத்துக்கூடப் படுக்க மாட்

Just Received

THE NEW 4.25 CUBIC FEET

FRIGIDAIRE REFRIGERATORS

Prices Reduced

KOOLAIRE LIMITED

44, QUEENSWAY

NEW DELHI

Telephone: 47744

டேன். ரூ. 75,000 வள்ளிசாக செலவழித்தது எனக்குத் தெரியுமா உங்களுக்குத் தெரியுமா? ஜெயித்தவுடன் இந்த அபாதண்ட நஷ்டத்தை ஈடுசெய்வதுதான் என் முதற் காரியமாக இருக்கும். மௌடீக ஜனங்களே! மேலும் கேளுங்கள். என்னுல் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நான் சுயேச்சை வாதியாய் நிற்கிறேன். பணம் இருக்கிற தைரியத்தில் நிற்கிறேன். படிப்பு வாசனையோ, பேச்சுத் திறமையோ இருந்தால் ரூபாய் செல வழிப்பேனு? இருந்தாலும் உங்களையெல்லாம் விலைக்கு வாங்க முடியும் என்ற தைரியத்தில் நிற்கிறேன். வாழ்க மௌடீகம்! எனக்கே ஓட்டு!! என் சின்னமாகிய களிமண் பொம்மையை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

5. ஹோட்டல் ஸர்வர்

ஸார் ஒண்ணுமே புதிசில்லே. இந்த டபிள்யூ கேசரி போன வாரத்து உப்புமாவிலே செய்தது. மைசூர்ப்பாகை உதிர்த்தா பாத்திரம் பளபளன்னு தேய்க்கலாம். தித்திப்பெல்லாம் நெய்யில் பண்ணரதான்னு கேட்கிறீர்களா? ஆமாம். இந்த நெய் மரத்திலே காய்க்கிறது. உங்களைப் பார்த்தா நல்லவாளாத் தோன்றது. இந்த மாதிரி உயிரைத் திரணமா மதிச்சு இங்கே எதையும் சாப்பிட்டு வைக்காதேயுங்கோ. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். கேட்க மாட்டீர்களா? விதி யாரை விடறது. ஸரி. மஸாலா தோசை இரண்டு, டபிள்யூ கேசரி ஒண்ணு. ரைட்

Visiting Delhi?
Then
Remember us for

Excellent Boarding and Lodging

in South Indian Style

THE SOUTH INDIAN BOARDING HOUSE

And for

European Style Refreshments, Dinners etc.

THE SUNNY COFFEE HOUSE

(Opp. Telephone Exchange)

CONNAUGHT CIRCUS, **NEW DELHI**

Tel. No. 47328 **Grams: SIBHOUSE**

லண்டன் தமிழன்

பராங்குசம்

தமிழன் என்ற சொல்லிற்கு அரசியல் அர்த்தம் முளைத்துவிட்டது. ஆகையால் காரசாரமான அபிப்பிராயங்களும், உற்சாகங்களும் இல்லாத என் போன்ற மிதவாதப் பிராணிகளுக்கு தமிழன் என்று சொல்லிக்கொள்ள பயமாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவைவிட்டு வெளியேறி இங்கிலாந்தில் இரண்டு வருஷங்கள் லண்டன் தமிழனாக வாழ்வது ஆத்மீகத் தற்கொலை செய்துகொள்ளாமல் தப்ப ஒரு சிறந்த வழி.

லண்டன் தமிழனுக்கு தன் குலத்தில் அந்தரங்கப் பெருமை; ஆனால் அந்த பிறப்புப் பிரிவினையை சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள இடமில்லை; அந்தப் பிதிரார்ஜிதத்தை பாகம் பிரித்துக் கொள்ள முயன்று வழக்குத் தொடுத்து, வீட்டுக்குப்பையை தெருவில் கொட்டி மானம் இழக்கவும் இடமில்லை; அந்தச் சாதாரண உண்மையை ஏதோ ஒரு அபூர்வ, அபார மேதையாகக் கற்பனை செய்துகொண்டு, தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டும், பிறரை ஏமாற்ற முயன்றுகொண்டும், தன் அறிவின் பலவீனத்தை வெளியிடவும் இடமில்லை. இம்மாதிரி வெளிநாட்டு சூழ்நிலையில் தனது இயற்கைப் பண்பிலிருந்தும், வாழ்க்கை முறையிலிருந்தும் பிரிந்து வாழ்வது ஒருவிதம். பார்க்கப் போனால் சூன்யத்தில் மூச்சுவிட முயலுவதுபோல் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்னொரு விதம் நோக்கினால் காற்று மாற்றத்தால் நோயாளிக்குப் பெரும் ஆரோக்யம் கிடைக்கவும் இடமுண்டு. லண்டன் தமிழன் ஒரு நாடிழந்த அனாதை அல்ல; அதிர்ஷ்டவசத்தால் உதகமண்டலம் சென்று கோடையின் வெப்பத்தைத் தப்ப வாய்ப்புக் கிடைத்த பாக்யசாலி.

லண்டனில் பலவிதத் தமிழர் உண்டு. நான் குறிப்பிடுவது திராவிடத் தமிழர், அக்ரகாரத் தமிழர், கைத்தறித் தமிழர், சுத்தத் தமிழர், இங்கிலீஷ் தமிழர், பாட்டாளித் தமிழர், முதலாளித் தமிழர், தஞ்சாவூர்த் தமிழர், திருநெல்வேலித் தமிழர் என்ற விசித்திரப் பாகுபாடல்ல. லண்டனுக்குப் பலர் பல்வேறு ஜோலியாக வருகின்றனர். அவ்விதம் லண்டன் தமிழரிலும் பலவிதம் உண்டு. பெரும்பான்மையோர் மாணவர்; சிலர் லண்டனில் வேலை செய்ய வந்துள்ளவர்; வேறு சிலர் மாற்றலாகி வந்துள்ளவர்; ஒரு சிலர் லண்டனில் சாச்வதமாகக் குடியேறியுள்ளவர். இது தவிர அவ்வப்போது வந்துபோகும் தமிழரும், வேறெங்கோ போகும் வழியில் லண்டன் வரும் தமிழரும் உண்டு. இவர்கள் யாவருக்கும் பொதுவான ஒரு லட்சணம் உண்டு. அதுதான் ஒரு குடும்ப அன்யோன்யம். இவர்கள் சந்திக்கும்போதும், பேசும்போதும் ஒரு

குடிவிசுவாசம் காணப்படும். குடிவிசுவாசம் என்று சொல்லவும் பயமாக இருக்கிறது. அரசியல் பிரம்மரிஷிகளுக்கும் தமிழ் முனிவர்கட்கும் இடையே வார்த்தைகள் படாதபாடு படுகின்றன. நான் எந்தப் பெரும் விவாதத்திலும் புக விரும்பவில்லை. சில இந்தியர்கள் வெளிநாட்டில் எங்காவது - லண்டனில் என்றுதான் வைத்துக் கொள்வோமே - சந்தித்தால் அவர் சம்பாஷணை, இரண்டில் ஒருவிதம் தான் செல்லும். ஒன்று இந்தியாவைப்பற்றிப் பெருமிதத்துடன், சற்று கர்வத்துடன் என்றே சொல்லலாம், சம்பாஷணை நடக்கும். அல்லது அங்கிருக்கும் அத்தனை வசதிகளும் இந்தியாவில் இல்லையே என்று வெறுப்பும், வருத்தமும் கலந்து பேச்சு ஓடும். (லண்டனிலேயே வெகுகாலம் இருந்தவர்கள், அங்கத்திய ஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்கள், தனித்தனி நபர்களைப்பற்றி இங்குபோல் அங்கும் வம்பளப்பார்கள். அவர்கள் போகட்டும்.) இம்மாதிரிப் பேச்சில் அன்யோன்யம் இருக்காது. பெருமிதம், சந்தோஷம், சிநேகபாவம் எல்லாம் இருக்கும் இம்மாதிரி சந்திப்புகளில். ஆனால், இரு தமிழர் சந்திக்கும்போது இருக்கும் குடும்ப உணர்ச்சி இராது.

ஒரு குடும்பத்துப் பல நபர்களுக்கிடையே மனஸ்தாபங்களும், சண்டைச் சச்சரவுகளும் இருப்பது சகஜமே. ஆனால் அவர்களே வெகுநாட்கள் கழித்தோ, வெளி ஊரில் எங்காவதோ சந்தித்தால் அதெல்லாம் மறந்துவிடும். இம்மாதிரியான ஒரு உறவுத்தத்துவம் தமிழர்களிடையே லண்டனில் தெளிவாகக் காணப்படும். இங்கு ஒன்று குறிப்பிட வேண்டும். சில பெரிய வீட்டுப் பிள்ளைகளிடம் ஒரு குடும்பக்கர்வம் இருக்கும். வேறு சிலரிடம் தங்கள் குடும்பத்தைப்பற்றிப் பேச ஒரு கூச்சம் இருக்கும். இவ்விருசாராரும் சந்தித்தால் மமதை ஒருபுறம், தாழ்வு மனப்பான்மை ஒருபுறம்; பார்க்கவே அருவருப்பாக இருக்கும்; மனித கௌரவத்திற்கே ஒரு தூஷணையாகத் தோன்றும் இருவாது நடத்தையும். இதே போல்தான் பாஷாபிமானிகள் இடையேயும். லண்டன் தமிழனிடம் நாம் முதல் முதல் கவனிப்பது இவை தான். தனது மொழிப்பரம்பரையில் அவனுக்கு கர்வமும் கிடையாது, தாழ்வு மனப்பான்மையும் கிடையாது. நம்மில் பெரும்பாலரும் சாதாரண குடும்பத்தவர். நம் குடும்பத்தைப்பற்றிப் பெருமை யடித்துக்கொள்ளவும் ஒன்றுமில்லை ; வெட்கித் தலைகுனியவும் அவசியம் இல்லை. அந்தக் குடும்பத்தில் பிறந்தது உண்மை ; ஆனால் அதை நம் பூர்வஜன்மத்து தபோபலன் என்றோ, விதியின் சோதனை என்றோ கருதவேண்டியதில்லை. அது, காரணம், அர்த்தம், விளைவு ஒன்றும் இல்லாத ஒரு நிதர்சன உண்மை. இந்தப் பக்குவமனம் லண்டன் தமிழனுக்கு உண்டு. தன் நாட்டையும், தன் மக்களையும் விட்டுப் பிரிந்து வாழ நேரிட்டிருக்கும் சந்தர்ப்ப நிர்ப்பந்தமே, இந்தப் பரிணாமத்திற்கும் காரணம்.

ஆனால் லண்டன் தமிழனுக்கும், உதாரணமாக, டெல்லித் தமிழனுக்கும் என்ன வித்தியாசம்? டெல்லியில் இருப்பவரும் தமிழ் நாட்டைவிட்டு, தமிழ் மக்களைவிட்டுப் பிரிந்து வாழவேண்டியிருக்கிறது. இவர்களும் லண்டன் தமிழன்போல்தானா? இல்லை என்றே நினைக்கிறேன். முதல் வித்தியாசம் அளவில். பிரிவில் பல அளவைகள் உண்டு. கூட்டுக் குடும்பமே இயற்கையாக இருப்பவருக்கு பக்கத்து வீட்டில் வாழ்வதும் பிரிந்து போவதுதான். அது போல் குறிப்பிட்ட தூரம் செல்லும்வரை பிரிவு நம் மனப்போக்கை மாற்றுவது இல்லை; இன்னும் பார்க்கப் போனால் சிறிய தூரங்கள் மனப்பண்பிற்குச் சாணை ஏற்றி இன்னும் கூர்மையானதாகத்தான் செய்யும். பிரிக்கும் தூரம் அதிகரிக்க அதிகரிக்க இந்தக் கூர்மை மங்கி, கத்தி எழில் மிகுந்த கலைப்பொருளாக மாறுகிறது. குடும்பத்தில் பல தலைமுறைகளாக இருக்கும் ஒரு அபூர்வ ஆபாணத்திற்கும், தினசரி காய்கறி நறுக்க உதவும் அரிவாள்மணைக்கும் வித்யாசம் உண்டல்லவா?

அளவைத் துறையிலேயே லண்டனுக்கும் டெல்லிக்கும் இடையே இன்னொரு வித்யாசமும் உண்டு. என்னதான் வட இந்தியா என்றாலும் டெல்லியில் தமிழரின் எண்ணிக்கை கணிசமானது. ஆகையால் டெல்லியில் தமிழர் சமூகம் என்று ஒன்று உண்டு. இந்த சமூகத்திற்கும் உட் பிரிவுகள் இருப்பதும் இயற்கையே. ஆனால் ஒப்பிட்டுப் பார்க்கையில் லண்டனில் தமிழர் வெகு சிலர். அவர்களை ஒரு தனிச்சமூகம் என்று குறிப்பிட முடியாது. சமூகத்தன்மை இல்லாமையில், உட்பிரிவுகளுக்கும் இடமில்லை.

மேலும் சில இடங்களுக்குச் சென்றால் நம் நடையுடை பாவனைகளை, நம் வீட்டுப் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்ள அவசியம் இல்லை. நம்முடைய நடையுடை பாவனைகளும் நம் பழக்கவழக்கங்களும் மாறிவிட்டால் நம்மிடையே இருக்கும் வேறுபாடுகள் மறைவதில்லை. லண்டனுக்குச் சென்றுவிட்டால் நடையுடைபாவனைகள், வீட்டுப் பழக்க வழக்கங்கள் எல்லாம் மாறியாக வேண்டும். மாறின

PHONE NO. 43881

"AT YOUR SERVICE"

BRITISH MEDICAL HALL

QUALIFIED DISPENSING CHEMISTS & AUTHORISED SUPPLIERS TO GOVERNMENT HOSPITALS.

Head Office: 103, BAIRD ROAD, NEW DELHI

Branch: 3, Main Market, Lodi Colony, New Delhi.

பிறகு யாவர் வாழ்க்கை முறையும் லண்டன் தேவைக்கு ஏற்ப அமைந்து வித்தியாசம் வேறுபாடு தென்படாத ஒரேமாதிரியாகி விடுகிறது. இதுவும் நான் குறிப்பிட்ட குடும்ப அந்யோன்யத்திற்கு அனுகூலமான சௌகர்யமாக அமைகிறது.

சந்தர்ப்பம் கிடைத்தவர் யாவரும் இந்த அப்பியாசம் பெற வேண்டும். மொழிப்பற்றுதலுக்கும், பண்பாட்டுப் பெருமிதத்திற்கும் ஒரு எல்லையுண்டு. தேச பக்தியே ஒரு பழங்காலத்து விநோதமாகி வரும் இன்றைய உலகில், தமிழில் இல்லாதது எங்கும் இல்லை, தமிழர் செய்யாதது எவரும் செய்யவில்லை என்று உளறுவது பேதமை. நம் போன்ற சாதாரண மனிதர் அப்பேதமையிலிருந்து அடையப்போகும் பயன் யாதுமில்லை. காலத்தோடு முன்னேறாமல் பின்தங்க நேரிடும்; அதுமட்டுமல்ல. எவ்வித தீவிரப் பற்றுதலாலும் மனத்தின் அடிவானம் குறுகிப் போகத்தான் செய்யும். வேறொரு பாஷையும் தெரியாத ஒரு தமிழன் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்..." என்று பாடுவதைப்போன்ற விசனிக்கத்தக்க விஷயம் வேறொன்றும் கிடையாது.

முடியுமானால் கட்டாயம் எங்காவது கண்காணாத தேசத்திற்கு கொஞ்சகாலம் போய் வாருங்கள். லண்டன்தான் போகவேண்டும் என்றில்லை. எங்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள் கொஞ்ச காலம். திரும்பி வர மறந்துவிடக்கூடாது. போன இடத்திலும் ஒரு குட்டி மதராஸோ, தஞ்சாவூரோ, கும்பகோணமோ, திருநெல்வேலியோ சிருஷ்டித்துக்கொள்ளக் கூடாது. அந்தக் கண்காணாத தேசத்திற்குச் சென்று, உங்கள் நடையுடை பாவனைகளை முற்றும் மாற்றிக்கொண்டு சிறிது காலம் வாழ்ந்து பாருங்கள். மன ஆரோக்கியத்திற்கு நல்ல அப்பியாசம். ஐயாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து பார்த்தால் நம் சண்டை சச்சரவுகளும், அல்பப் பெருமிதங்களும் என்ன குழந்தைத்தனமாகத் தோன்றுகிறது என்று பார்த்து வாருங்கள்.

ஒரே ஒரு யோசனை. போனால் மனைவி குழந்தைகளுடன் போய் வாருங்கள். போகிற இடத்தில் இல்லறமின்றி வாழ முடியாது என்று சொல்லவில்லை. மனைவி, குழந்தைகளிடமிருந்தும் அவ்வப்போது விடுமுறை தேவை. கல்யாணமானவர் விட்டுவிட்டு பிரம்மசரியம் அப்பியசிப்பது போன்ற ஆரோக்கியம் வேறில்லை. நான் சொல்லக்கூடியது இதுதான். என் மனைவி குழந்தைகளுடன் நான் லண்டன் சென்றிராவிட்டால், அந்த நாட்டையும் அந்த வாழ்க்கையையும் இவ்வளவு அருமையாக ரசித்து அனுபவித்திருக்க முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது.

*


உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.
பாலு சகோதரர்கள்

ஹாஸ்யக் குறள்கள்

" காரோடு சேர்ந்த கற்பக தருவும்
வேரோடு சாய்ந்து விழும் "

இந்த நவீனக் குறளை, பதினைந்து பதினாறு வருஷங்களுக்கு முன்னால், என் நண்பன் ஒருவன் சொல்லக் கேட்டதும், " யாரப்பா இந்தக் குறளைக் கட்டியவர் ?" என்று கேட்டேன். " வண்ணார்ப் பேட்டை வள்ளுவர் " என்று அவன் பதில் சொன்னான். நான் மேலும் விவரம் கேட்கவே, அவர்தான் சர்க்கார் வக்கீல் ஆவுடையப்ப பிள்ளை என்றும், மற்றும் பல ' கிறள் 'களையும் அவர் கட்டி இருக்கிறார் என்றும் அவன் தெரிவித்தான்.

அதற்குப் பிறகு, ரஸிகமணி டி. கே. சி யை, நான் வண்ணார்ப் பேட்டையில் முதல்முதலாக சந்தித்தபோது, ஆவுடையப்ப பிள்ளை அவர்களையும் சந்தித்தேன். அன்பாகப் பேசுவதில், அவர்கள் இருவரில் யாரைவிட யார் மேல் என்று, அன்று எப்படி என்னால் மதிப்பிட முடியவில்லையோ, அதே போல பின்னரும் முடியவில்லை.

டி. கே. சி. யின் வட்டத்தொட்டிக் கூட்டங்களுக்கு, ஆவுடையப்ப பிள்ளை அவர்கள் அடிக்கடி வருவதுண்டு. சமயம் பார்த்து, டி. கே. சி. யின் அனுமதி பெற்று, தமது கிறள்களை அங்கே விளம்புவார்கள். எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துவிட்டுச் செல்லுவார்கள்.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால், அவர்கள், முதல் முறையாக நண்பர்களையெல்லாம் வருந்த வைத்துவிட்டுப் பிரிந்தார்கள்.

அவர்களுடைய ஹாஸ்யக் குறள்களைத் திரட்டி உதவிய அவர்களுடைய குமாரர் ஸ்ரீ. ராஜனுக்கு நன்றி.

" அழகன் "

வகை வகையாய்ச் சேர்ந்த பொருளெல்லாம்
புகை புகையாய்ப் போகுது பார்.

டைகட்டி வாழவாரே வாழ்வார் ; மற்றவர்
கைகட்டிப் பின்செல் பவர்.

முள்ளங்கோ இங்கோ என்றிருக்கத்
துள்ளி வருவார் துரை.

என்னென்ன செல்வம் இருந்தென் ? எவர்மதிப்பார்
பென்ஷனிலாப் பேதை யரை.

உருட்டும் புரட்டும் உலகத்தில் உண்டு ;
சுருட்டும் சேர்ந்ததே பார்.

சொன்ன சொல்லை சுருதிபோல் கேட்டுப்
பின்னர் மறந்து விடு.

குல்லாய்க்குள் குல்லாய்க்குள் குல்லாய்க்குள்
குல்லாய்க்குள் எல்லாம் தலை. [குல்லாய்க்குள்

எதிர்த்துப் பேசின் எறிந்து விடுவான் ;
முதுகைத் தடவிக் கொடு.

முகத்தைத் திருப்பி முந்தாணியால் மூடுவதேன்
அகமுடையானைக் கண்டு.

காலால் உதைப்பான் கரடு முரடன்
வாலை உருவி விடு.

பழுக்கக் காய்ச்சிய பொன்போலிருக்கும்
அழுக்குக் கூடையின் அழகு.

கற்றதனா லாய பயனென் கணவனை
விற்றுச் சுருட்டலே தான்.

நியூ ஏஷியாடிக்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

தலைமை ஆபீஸ் : நியூ டெல்லி

சேர்மன் : எல். என். பிர்லா

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்,

முதலிய எல்லாவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களும் உண்டு. எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன. நல்ல திறமையுடன் வேலை செய்யும் ஆர்கனைசர்களுக்கு தகுந்த சம்பளம் அளிக்கப்படும்.

★

தென் டிவிஷனல் ஆபீஸ் :

289, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ்-1.

அ. சுப்பையா,
மானேஜர்.

மதமும் அனுபவமும்

பேராசிரியர் ஆ. முத்துசிவன்

ஒழுக்கத்தைப் பேணி வளர்ப்பதற்குரிய உயர்ந்த சாதனங்களுள் மதம் ஒன்று; ஆகவே அதைக் கருதியாயினும் மதத்தை ஆதரிக்கவேண்டும் என்று சிலர் கூறிவருகிறார்கள். வாஸ்தவம். இதை மறுப்பதற்கில்லை. ஏனென்றால் சிறந்த ஒழுக்கத்தை வற்புறுத்தாத மதமே கிடையாது.

> "ஆலயங்கள் ஏனையா; அபிஷேகங்கள் ஏனையா;
> பாலும் பழமும் ஏனையா"

என்று இவ்வாறாகக் கேட்டுவிட்டு, முடிவில்,

> "சீலம் நிறைந்த உள்ளத்தைத் தெய்வம் தேடி வாராதோ"

என்று கவிமணி அவர்கள் முடிக்கின்றார்கள்.

சீலத்தை உருவாக்குவதுடன் மதத்தின் சேவை நிறைவேறி விடுகிறதா, அல்லது அதற்கு மேலும் செல்லுகிறதா என்பதை இப்பொழுது ஆராயவேண்டும்.

தமிழ்நாட்டுச் சிற்பக்கலைக்குக் காரணம் என்ன?

"தஞ்சை பிரஹதீஸ்வரர் கோவிலிலுள்ள அற்புதச் சிற்பத்திற்கு உருவத்தை மட்டும் அளிக்காமல் உயிரையும் அளித்த சிற்பிக்கு, வேலைத்தடங்கலின்றி உற்சாகத்தை மூட்ட, ராஜராஜ சோழனே அடைப்பக்காரனாக பணி ஆற்றினார்" என்பது சரித்திரக் கதை ....

உங்கள் உற்சாகத்திற்கு தாம்பூலத்துடன் திகட்டாத இன்பத்தை நாங்கள் அளிக்கக்கூடியது ஒப்புயர்வற்ற

ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலையே

உற்பத்தி ஸ்தலத்திலேயே உயர்ந்த சரக்குகளால் தயாரிக்கப்படுவதால் புகையிலை வாங்கும்போது

"ஸ் வ ஸ் தி க்"

வேதாரணியம் புகையிலையே கேளுங்கள்.

தில்லி விற்பனையாளர்:

K. G. K. & Co., South India Boarding House Block, New Delhi.

மதத்தின் பெயரால் எத்தனை எத்தனையோ அட்டூழியங்கள் நடைபெறுகின்றன. அவற்றையெல்லாம் மறந்துவிட்டு மதத்தின் உண்மை நிலை யாது என்பதைக் காணவேண்டும்.

மதம் மூட நம்பிக்கையின் திரட்சியில்லை. அனுபூதியின் மலர்ச்சி. விஞ்ஞானிகள் பதார்த்தத் துறையிலுள்ள உண்மைகளைக் கண்டு தருவதுபோல் மெய்ஞ்ஞானிகள் ஆன்மீகத் துறையிலுள்ள உண்மைகளைக் கண்டு தருகிறார்கள். கடவுள் நம்பிக்கை அற்ற நாடு உரமுள்ள நாடாக இருக்க முடியாது என்கிறான் பிளேட்டோ. கடவுள் நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கையும் வெறும் தத்துவச்செறிவாக இருந்து விட்டால் போதாது. ஏனென்றால் நைந்து, நொந்து, நலிவுற்றுக்கிடக்கும் உள்ளங்களுக்கு அது அமைதி தராது. தெய்வம், நடமாடும் தெய்வமாக இருக்கவேண்டும். அதாவது **உள்ளத்தால் தழுவுதற்குரிய உருவுடையதாக** இருக்க வேண்டும். அவ்வாறு உள்ளத்தால் தழுவுதற்குரிய உருவைக் கற்பிப்போமாயின் அந்த உருவத்தின்மீது காதலும் கனிவும் பற்றும் பாசமும் பிறக்கும். அது எழுப்புகின்ற சுருதிக்கேற்ப நம்முடைய இதயகீதம் அமையும். மிஸ்டிக்ஸ் (**Mystics**) என்று அழைக்கப்பெறுகிற மெய்ப்பொருள்ஞானிகள் அந்த முறையையே கையாளுகின்றார்கள். அவர்களுடைய அனுபவமெல்லாம் வாக்கிறந்த மாண்பு காட்டி நிற்கின்றது.

சில ஆராய்ச்சியாளர்களுக்கு மெய்ப்பொருள் ஞானிகள் அனுஷ்டிக்கும் முறையில் சந்தேகம் ஏற்படுகிறது. தத்துவமெல்லாம் அவர்களுக்குப் பிடிக்கிறது. ஆனால் அதனை அனுபவமாக மாற்றும் முறை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. மெய்ப்பொருள் ஞானிகள் தத்துவத்தை அனுபவமாக மாற்றுகிறார்கள். அவ்வளவுதான். வேறொன்றும் இல்லை. அவ்வாறு அனுபவமாக மாற்றவேண்டும் என்றால், உள்ளத்தால் தழுவுதற்குரிய உருவைக் கற்பித்து அதனுடன் உறவு கொள்ள வேண்டும். மனைவியுடன் புருஷன் எப்படிப் பழகுவானோ அப்படிப் பழகவேண்டும்.

இப்படிச் சொல்வதை ஆராய்ச்சியாளர்கள், பாவம், விஞ்ஞான மோஸ்தரில் மயக்குற்ற காரணத்தால் பரிகசிக்கின்றார்கள். மிஸ்ற்றிசிஸம் (**Mysticism**) பற்றி அவர்கள் கூறும் கூற்றுக்களைச் சிறிது ஆராய்வோம்.

1. "மிஸ்ற்றிசிஸம் (மெய்ப்பொருள் ஞானம்) அகமயமான அனுபவம் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் புறமயமான உண்மை என்பதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது"

---

1. As an experience I believe in its Subjective Validity but not in its objective truth."

இம்மட்டோடு நின்றுவிடவில்லை. இன்னும் போகிறது.

2. "தட்டுக்கெட்ட பால்விளியின் சாகஸங்கள்."
3. "நரம்புக் கோளாறு."
4. "விரகப் போக்கு"
5. "வெறி"
6. "புடமிட்ட பால் உணர்ச்சி"

என்று இவ்வாறு மிஸ்ற்றிசிஸம் பற்றிக் கூறுகிறார்கள்.

இந்தக் கூற்றுகளைப் பார்க்கும்போது அறிஞன் லிண்ட் (Lynd) சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது.

7. "எவ்வளவுக்கெவ்வளவு விஞ்ஞானம் விஞ்ஞானம் என்று கத்து கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு குழப்பந்தான் கண்டபலன்" என்கிறான்.

குளிக்கப் போனவன் சேற்றைப் பூசிக்கொண்ட கதை தான் என்பதை தெளிவாகச் சொல்லிவிட்டான்.

முதுகெலும்பு போன்றிருக்கிறது ஒரு உண்மை. மெய்ப் பொருளாகிய பரம்பொருளின் அருள் வெள்ளத்தில் திளைத்து மகிழ அந்த உண்மையின் சேவை அளப்பரிது. அது பின்வரு மாறு. **உள்ளம் தழுவும் உருவைக்கண்டு உறவாட வேண்டும்.** கண்ட கண்ட உருவங்களையெல்லாம் உள்ளம் தழுவுமாயின் அது **கற்புடைய** உள்ளம் ஆகாது. சோபான ரீதியில் அனுபவங்களைப் பெற்று மேல்நிலை அடையவல்ல தகுதி அதற்கு வாய்க்காது. தனக்குரிய ஞானபலம், தத்துவத் தெளிவு, அனுபவ உறுதி ஆகிய இவற்றின் பயனாக எந்த உருவம் உள்ளத்தை இடை விடாது பற்றுகிறதோ அந்த உருவத்துடன் இடைவிடாது பழகவேண்டும். ஊடவேண்டும். கூடவேண்டும். உள்ளுரு கிப் பாடவேண்டும். குறைகளைச் சொல்லி அழவேண்டும். தொழவேண்டும்.

"ஊற்று நீர்போல் நெக்கு நெக்கு உள்ளே உருகி ஓலமிட்டுப்" போற்றவேண்டும். மாணிக்க வாசகர் வழிகாட்டுகிறார்.

ராகம் : சாவேரி

"சூடுவேன் பூங்கொன்றை, சூடிச் சிவன் திரள் தோள்
கூடுவேன் ; கூடி, முயங்கி மயங்கி நின்று

---

2. "Adventures of a perverted biological instinct."
3. "Nervous unsoundness."
4. "Amatory flirtation"
5. "Emotional abnormality"
6. "Sublimated Sexuality"
7. "More Science only adds more confusion."

"In deifying the mind we have abandoned God; we have become tools of reason and the dupes of Scientific truth."

**ஊடுவேன், செவ்வாய்க்கு உருகுவேன், உள் உருகித்
தேடுவேன்; தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்;
வாடுவேன், பேர்த்து மலர்வேன்; அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்."**

குறைந்தது பத்து முறையாவது இப்பாசுரத்தை மனமுருகிப் பாடவேண்டும். இப்பாடலின் மூலம் கிடைக்கக்கூடிய சுகம் பரிபூரணமாக வாய்க்கும்படி சாவேரி ராகம் பெருந்துணை செய்கிறது.

உருவ வழிபாட்டை வற்புறுத்தும் நோக்குடன் இதனை எழுதுவதாக அன்பர்கள் முடிவுகட்டிவிட வேண்டாம். மன இயல்பை அறிந்து கூறும் உண்மையாக இதனை மதிக்க வேண்டும்.

8. "பகுத்தறிவிற்குத் தெரியாத காரணங்கள் இதயத்திற்கு உண்டு."

என்று கூறுகிறார் அறிஞர் மாக்ஸ்முல்லர்.

அவருடைய கூற்று வெறுங்கூற்றில்லை. [9]மதம் என்பது ஒருவகையான மனப்போக்கு. பகுத்தறிவு, தர்க்கம் ஆகிய இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, அந்த மனப்போக்கானது பரம்பொருளைப் பல்வேறான நாமரூபாதிகளின் வாயிலாக உணர்ந்து கொள்ளும்படி மனிதனுக்குத் துணை செய்கிறது.

உள்ளம் தழுவி உறவு கொள்வதற்குரிய உருவைக்கண்டு அந்த உருவுடன் மனமாரப் பழகவேண்டும். மகான்கள் அதனை நன்றாகச் செய்து காட்டியிருக்கிறார்கள்.

**" தத்துவச் சேற்றில் ஆழ்ந்தித் தலைதடுமாறிப் பொல்லா
வித்தகம் பேசிப் பேசி வீண்பொழு தளக்கல் வேண்டாம்."**

ஒழுக்கத்திற்காகத்தான் மதம் என்பதில்லை. ஊனும், உயிரும், உள்ளும், புறமுமாய் உளதாகின்ற உண்மையைக் காணும் காட்சி மதமாகும். "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்" "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய்" நிற்கின்ற நிலையைக் காணுவது மதமாகும். அதிகம் சொல்வானேன். மதம் ஒருவகையான தரிசனம். ஒருவகையான அனுபவம். உயர்ந்த முறையில் அதனைப் பெறுதற்கு வேண்டிய மார்க்கத்தை இதுவரை பார்த்தோம். அவ்வளவுதான்.

---

8. "The heart has reasons which reason does not Know"

9. "Religion is a mental faculty or disposition which independent of, nay, inspite of sense and reason enables man to apprehend the Infinite under different names or under varying disguises."

நீர் என்னும் அற்புதம்

பெ. நா. அப்புஸ்வாமி

நாம் வாழும் பூமி அற்புதமானது; அற்புதங்கள் நிரம்பியது. ஆயினும், அதிலுள்ள அற்புதங்களை நாம் பெரும்பாலும் உணருவதில்லை. ஏனென்றால், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்களை உணருவதற்கு ஏற்றவையாக நமக்கு ஐம்பொறிகள் இருக்கின்றன. ஆனால், அற்புதம் என்னும் உணர்ச்சியை நாம் அறிந்து கொள்வதற்கு நமது உடலில் யாதொரு தனிப் புலனும் இல்லை.

இதற்கு ஓர் உதாரணமாக 'நீர்' என்னும் பொருளை எடுத்துக் கொள்ளுவோம். இதன் பெயரைக் கேட்ட உடனேயே 'இதில் என்ன அற்புதம் இருக்கிறது?' என்றுதான் எண்ணத் தோன்றும்.

நீர் என்பது அபூர்வமாகவோ, அருகியோ காணப்படும் பொருள் அன்று. நமது பூமியின் மேற்பரப்பில் முக்கால் பங்கு நீராக அமைந்திருக்கிறது. பசிபிக், அட்லாண்டிக் போன்ற மிகப் பெரியவையான ஆழ் கடல்கள் இல்லாமலிருந்தால், நமது பூமியானது எங்கும் ஒன்றரை மைல் ஆழத்தில் கடலுக்குள் ஆழ்ந்து கிடக்கும்.

நீரானது கடலில் இருப்பது; நிலத்தில் இருப்பது; வானிலும் இருப்பது. அது மூன்று வகையாய் உருவெடுத்துத் தோன்றுகிறது. அது கட்டிப் பொருளாகவும், திரவப் பொருளாகவும், வாயுப் பொருளாகவும் உருமாறிக் காட்சியளிக்கிறது. ஆதலால், காளமேகப் புலவரின் பாட்டைச் சற்றே மாற்றி,

'காரென்று பேர்படைத்தாய் ககனத்து றும்போது;
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்;
ஊரெங்கும் கடுங்குளிரால் உறைந்துபனிக் கட்டியெனப்
பாரெங்கும் பேர்படைத்தாய்; பல்பேரும் பெற்றாயே'

என்று அதை புகழ்ந்து கூறலாம்.

நீல வானத்தினிடையே தூய பஞ்சிழையைப்போல் மெல்லென மிதக்கும் வெண்மேகம் நீர். காலை வேளையிலும், மாலைப் பொழுதிலும் பன்னிறச் சோதியோடு விளங்கும் மேகங்கள் யாவும் நீர். மின்னியும், இடி இடித்தும், மழை பொழிந்தும், உலகத்தை அச்சுறுத்தி மகிழ்விப்பதும், குளிர்விப்பதும் நீர். வானத்திலே நவரத்தினங்களால் இழைத்த அழகிய தோரண வளையம்போல் விளங்கும் வானவில்லை அமைப்பது நீர். தேவலோகத்திலிருந்து உதிரும் வெண்தாமரை இதழ்களோ என

மெல்லென உதிர்ந்து, நிலத்தின்மீது வெள்ளிபோன்ற பனிப் போர்வையைப் போர்த்துவது நீர். தரையில் படிந்து, கற் பாறைபோல் உறைந்து, தெள்ளிய படிகம்போல் விளங்குவது நீர். ஆறும் நீர்; அலையும் நீர்; கடலும் நீர்; அருவியும் நீர்; ஆவியும் நீர்; 'மூங்கில் இலை மேலே தூங்கும் பனி நீரும்' நீர்.

நமது பூமியிலுள்ள எல்லா உயிர்களுக்கும் இன்றியமையாதது நீர். அவ்வுயிர்களுக்கு மூலாதாரமாக உள்ளதும் நீர். இவ்வுலகிலே உயிர்கள் தோன்றியது நீரிலே. இப்பொழுதும் பெரும்பான்மை உயிர்கள் நீரிலேதான் வாழக் காண்கிறோம்.

உலகில் உயிர் தோன்றுமாறு வழிவகுத்ததும் நீர். ஆதியிலே முழுதும் பாறையாக இறுகிக்கிடந்த இவ்வுலகின் மேற்பரப்பைக் கோடானுகோடி வருஷங்களாகப் பலவகையாய்த் தாக்கியும், தகர்த்தும், கரைத்தும், மண்ணாக்கி வளம்பெறச் செய்ததும் நீர். அற்ப உயிராகிய அமீபா முதல் சிறந்த உயிராகிய மனிதன் வரையுள்ள ஒவ்வொரு பிராணியின் உடலிலும் பெரும் பகுதியாக உள்ளது நீர். மனித உடலிலே நீர் முக்கால் பகுதியாக உள்ளது. நமது இரத்தம், தசை, எலும்பு முதலிய ஒவ்வொரு பகுதியிலும் நீர் இருக்கிறது.

நீரில்லா நிலம் பாழ், தாவரங்கள் யாவும், தங்களால் இயன்றவாறு, வேராலோ, தண்டாலோ, இலைகளாலோ நீரை ஏற்று உயிர் வாழ்கின்றன. நீரில் கரைந்துள்ள பொருள்களை ஏற்று வளர்ச்சி பெறுகின்றன.

நமது வாயுமண்டலத்தில் மறைந்து கிடக்கும் நீரானது சூரிய வெப்பம் நம்மை வறுத்து விடாமல், குடைபோல் காப்பாற்றுகிறது. பிரபஞ்ச வெளியின் குளிர் நம்மை விறைத்து விடாமல், போர்வைபோல் பாதுகாக்கிறது.

நம்மைக் காப்பதும் நீர். நம்மை அழிப்பதும் நீர். நமது அடிமையும் நீர். நமது அரசனும் நீர். நமது உணவை வெப்பத்தால் சமைப்பது நீர். நமது உணவைக் கெடாமல் குளிர்ச்சியால் பாதுகாப்பது நீர்.

JUST ARRIVED

LATEST MODELS B. S. A. MOTOR CYCLES

AND

HUDSON AUTO CYCLES

PEAREY LAL & SONS LTD.,

QUEENSWAY, NEW DELHI

Phone No. 47253

இந்த விந்தைப் பொருளின் அமைப்பையும் பிறப்பையும் கவனிப்போம். மூன்று வகையாக அவதரித்துத் தோன்றும் இந்த அற்புதப் பொருளானது இரண்டு வாயுக்களின் சேர்க்கையால் அமைந்தது. அவற்றுள் ஒன்று ஆக்ஸிஜன் ; மற்ருென்று ஹைடிரஜன். ஆக்ஸிஜன் நிறமும் மணமும், சுவையும் அற்றது. பல பொருள்களோடு நட்புக் கொண்டாடும் இயற்கையை உடையது. உயிருக்கு இன்றியமையாதது. இதை நீரின் தந்தை என்று ஒருவாறு கூறலாம். ஹைடிரஜனும், ஆக்ஸிஜனைப் போல், நிறமும், மணமும், சுவையும் அற்றது. நட்புச் சுபாவம் மிகுந்தது. உயிரை அளிப்பது. இதை நீரின் தாய் என்று ஒருவாறு கூறலாம். இரண்டும் இணை சேரும்போது, சோதி உதயமாகிறது. நெருப்புத் தோன்றுகிறது. அளவிறந்த வெப்பம் உண்டாகிறது. இச் சேர்க்கையால் பிறப்பது குளிர்ச்சியே உருவாகிய நீர். வெப்பத்தைத் தணிக்கும் நீர். நெருப்பை அவிக்கும் நீர்.

நாம் நீரைப் பருகுகிருேம். நீரை உண்கிருேம். உருளைக் கிழங்கில் நூறுக்குக் கிட்டத்தட்ட எண்பது பங்கு நீர் ; பாலில் இருப்பதைவிட டொமாட்டோவில் அதிக அளவில் நீர் இருக்கிறது. நீரை நமது உடலில் எங்கும் புக விடுகிருேம் ; எங்கும் அதைத் தாங்குகிருேம். அதை நமது உடலில் இயற்றுகிருேம். உடலினின்று அதைப் பலவகையாய் அப்புறப் படுத்துகிருேம். நீரானது உடலின் உள்ளே புகுவது அவசியம் : தங்குவது அவசியம் ; வெளிப்படுவதும் அவசியம்.

நீரானது உயிரையும், உணவையும், ஒளியையும் சக்தியையும் அளித்து வருவதால், நமது முன்னோர்கள் அதைப் பாராட்டினார்கள். அதை வியந்து கொண்டாடினார்கள். உபநிஷதம் முதலிய வடமொழி மறைகளும், தமிழ் மறையாகிய திருக்குறளும் அதை அமிர்தம் என்றே குறிப்பிட்டன. அதன் இயல்புகளை மேன்மேலும் அறிந்துள்ள நாம், அவர்களைக் காட்டிலும் அதிக அளவில், அதன் அற்புதங்களை எண்ணி, மகிழ்ந்து பாராட்டுவோமாக.

FOR YOUR

Clothing Requirements

DHOTIES, SAREES, VOILES, COATING & SHIRTING

Remember

The West End Rehabilitation Co-operative Stores Ltd.,

101, BAIRD LANE MARKET,

NEW DELHI

Phone: 45614

கற்பனை பேசுவையோ!

'வேனு'

வானத்து வில்லின் வர்ணஜாலங்களில்
        வாழ்கின் ருயோ நீ
கானத்துப் புட்களின் 'கல்கல்' ஓசையில்
        களிக்கின் ருயோ நீ
ஞானத்து மோனமாம் நிலையொரு அமைதியில்
        நிலைத்துவிட் டாயோ நீ
ஏனிந்த மாயமாய் எனைவிட்டே நீ
        ஏகிவிட்டாய் உயிரே?
மின்னிடும் தாரகை தன்னிலுன் கண்சுடர்
        மிளிர்வதும் காணுதடி
பொன்னவிழ் மாலையில் போதவிழ் மலரிலுன்
        புன்னகை தோன்றுதடி
என்னைவிட்டே தனித் தெங்கிருந்தோ உன்
        ஏற்றங்கள் காட்டுகிருய்
கன்னலே! நீயென் கருத்திலே வளர்ந்து
        கற்பனை பேசுவையோ!

ஒய்யாரி உலா

"சுந்தா"

"சிடு மூஞ்சி அம்மா வெளியே போயுட்டாங்களா?" என்று, வீட்டு வேலைக்காரன் கேட்டான்.

"ஒழிஞ்சு போயுட்டா ஒய்யாரி" என்று, சமையல்க்காரி பதில் சொன்னாள்.

அவர்களுடைய எஜமானி, அந்த வேளையில் ஜோராகக் காரில் சென்று கொண்டிருந்தாள். அவளுடைய அன்றைய அலங்காரத்தின் நயங்களை யெல்லாம், கண்ணாடியில் ஜாடையாய்ப் பார்த்தவாறே, காரை ஓட்டிக் கொண்டிருந்தான் டிரைவர். விசாலமான தெரு ஒன்றை அணுகியதும், "டிரைவர்" என்று அவள் கூப்பிட்டாள். "காரை நிறுத்து" என்று அவள் சொல்வதற்குள், தானாகவே அவன் அதை நிறுத்தி விட்டான். அவளுடைய வழக்கம் அவனுக்கு நன்றாகத் தெரியும். ரொம்ப சிரமப்பட்டு சிங்காரித்துக் கொள்ளும் நாட்களில், அவள், முதலில் கொஞ்ச தூரம் காரில் சவாரி செய்வாள்—செல்வக் கொழிப்பைக் காட்டுவதற்காக, பின்னர் நடந்து செல்லுவாள்—அழகையும் அலங்காரத்தையும் காட்டுவதற்காக.

"நீ ஆபீஸுக்குப் போய், ஐயாவைக் கூட்டிக்கிட்டுப்போ" என்று,அவள் சொல்லி முடிப்பதற்குள், உருமிக்கொண்டு கார் சென்றுவிட்டது.

ஒய்யாரி நடந்தாள்—தன் அழகையும் அலங்காரத்தையும் பற்றிய நினைவே இல்லாதவள் போல்! ஆனால் உண்மையில், நினைவெல்லாம் தன்நினைவாகவே இருந்தது. தன்னைத்தானே கற்பனைக் கண்ணாடியில் பார்த்துப் பார்த்து, உள்ளம் பூரித்தவாறே நடந்தாள். அவளுடைய அழகு, அவளையே சொக்க வைத்தது; அவளுடைய கூந்தலிலிருந்தும், முகப்பவுடரிலிருந்தும், சேலையில் தெளித்திருந்த ஸெண்டிலிருந்தும் எழுந்த கதம்ப வாசனை, அவளையே மயக்கியது; சேலையின் சலசலப்பும், வளைகளின் கிலுகிலுப்பும், வாசனையுடன் போட்டி போட்டுக்கொண்டு, சுற்றிலும் விரிந்து பரவின.

எதிரே வந்த இளைஞன் ஒருவன், அவளைக் கண்டு திணறினான். அவனுடைய மார்பு படபட வென்று அடித்துக் கொண்டது; நடை தடுமாறிற்று. அவளை நெருங்க நெருங்க நெஞ்சம் பதை பதைத்தது. அவளைக் கடந்து செல்லுகையில், கால்கள் துவண்டன. வேதனையுடன் அவளைத் தாண்டிச் சென்றபின், ஒரு தரம் திரும்பிப் பார்த்தான். பார்த்துப் பெருமூச்செறிந்தான்.

மற்றொரு இளைஞன், அவளுக்குப் பின்னே வந்தான். முன்னழகு எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக, ஆவலுடன் விரைந்து நடந்தான். முன்னால் சென்ற பின், ஒரு தரம் திரும்பிப் பார்த்தான்; அப்புறம் பலதரம் திரும்பிப் பார்த்தான்.

அவளைப் பார்ப்பதிலேயே லயித்திருந்த காரணத்தால், ஒரு ஸைக்கிளின்மேல் மோதிக் கொண்டான். அது ஒரு லாரியாய் இருந்திருந்தால்? இந்த எண்ணத்துடன், இன்னொரு எண்ணமும் தோன்றியது அவனுக்கு. கலியாணம் செய்து கொண்டால், அவளைப்போல் ஒருத்தியைச் செய்து கொள்ள வேண்டும்!

கலியாணம் ஆனவன் ஒருவன், அடுத்தாற்போல் எதிரே வந்தான். ஒய்யாரியைப் பார்த்ததும், அவன் தடுமாறவில்லை; வியப்புற்று விழவில்லை. ஆனால், எதிரே வந்தவளை, வீட்டில் இருப்பவளுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டான். "எனக்கு வாய்த்தது அவ்வளவு தான்" என்று, தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

கணவனும் மனைவியுமாய் இருவர் வந்தார்கள். அவர்களில், கணவனானவன் பாராட்டுப் பார்வையுடன் சிங்காரியைப் பார்த்தான்; அதை மனைவியானவள் கவனித்துச் சிடுசிடுத்தாள். அதுவரையில் கைகோத்து நடந்து வந்த அவ்விருவரும் பின்னர் முன்னும் பின்னுமாய் நடக்கலாயினர்.

தனியாக வந்த ஸ்திரீ ஒருத்தி, அழகியைப் பார்த்ததும், அவளுடைய முகத்தோற்றத்தையும், உடலமைப்பையும், ஆடை ஆபரணங்களையும், ஒன்றுவிடாமல் மனத்தில் பதிய வைத்துக்கொண்டாள்.

கையில் காமராவுடன் வந்த ஒருவன், அவளை ஒரு படத்தில் பதித்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்தான். தான் படம் பிடிக்க முயலுவதை அவள் கண்டு, கன்னத்தில் அறைந்தால் என்ன செய்வதென்று அஞ்சி, சும்மா சென்றுவிட்டான்.

அவளுடைய நடை அழகைக் கண்ட, நடன ரஸிகர் ஒருவர் "இவள் நாட்டியம் ஆடினால் எவ்வளவு நன்றாய் இருக்கும்" என்று நினைத்துக்கொண்டார்.

"அம்மா தாயே!" என்று, ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் கெஞ்சினான். அருகே வருவது ஒரு ஸ்திரீ தான் என்பதை, காலடி ஓசையினால் ஊகித்துக் கொண்டான் அவன். அவனைப் பொறுத்தவரை, அவள் அழகி அல்ல; சிங்காரி அல்ல; ஒய்யாரி அல்ல. எல்லா ஸ்திரீகளையும் போல் ஒரு ஸ்திரீ தான்.

கண் பார்வை மங்கி, கனத்த கண்ணாடி போட்டுக் கொண்

For

PATENT MEDICINES
SURGICAL GOODS
BABY FOODS
TOILET & COSMETIC
REQUIREMENTS
SUN & VISUAL GLASSES
with attractive & beautiful frames

PLEASE VISIT:

Bhagwant Singh & Co.,
High Class Dispensing Chemists
& Registered Pharmacists
& Opticians,
Ajmal Khan Road, Karolbagh,
NEW DELHI-5
Phone: 44927

டிருந்த கிழவர் ஒருவர், அவளைக் கண்டு, என்றோ மாறிப் போன தமது இளமையை நினைந்து ஏங்கி, கால்கள் மேலும் தள்ளாட நடந்தார்.

கிழப்பருவத்துக்கும் நடுப்பருவத்துக்கும் மத்தியிலிருந்த ஒருவர், அவளைக் கண்டு, தன்னை அவள் பார்க்காமல் இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டார். தலையில் விழுந்திருந்த வழுக்கைக்காக வெட்கப்பட்டார் அவர். அவருடைய தலையில், காலம் செய்திருந்த கோலத்தை, இதற்கு முன்னால் எத்தனையோ பேர் பார்த்து, கேலி செய்து சிரித்திருக்கிறார்கள்; தாமும் கூடச் சேர்ந்து சிரித்திருக்கிறார். ஆயினும் அந்த யௌவன சுந்தரி, அந்தக் கோலத்தைப் பார்க்கலாகாது என்று அவர் எண்ணி, ஒருபக்கமாய் ஒதுங்கிச் சென்றார்.

குஷால்ப்பேர்வழிகள் இருவர், அந்த நாகரிகப் பெண்ணைக் கண்டனர். அவர்களில் ஒருவன், "இயற்கையிலே இவள் இத்தனை அழகோ, செயற்கையினாலோ" என்று, ஏதோ ஒரு ஸினிமாவில் கேட்ட பாட்டின் அடி ஒன்றை, மெள்ளப் பாடினான். "ஆயினும் என்ன?" என்று, மற்றவன் அந்த அடியை முடித்தான்.

அதுவரை, எதிரே வந்தவர்களையெல்லாம், பார்த்தும் பாராதவள்போல் நடித்த அந்த ஒய்யாரி, அடுத்தாற்போல் வந்த ஒருவனை, லேசாக ஒரு பார்வை பார்த்தாள். பார்த்த மாத்திரத்தில், அவனுடைய மன வெளியிலே, வான வில்லும், வைர மின்னலும் மாறி மாறி வெட்டின; பூமாரியும் தேன்மாரியும் பொழிந்தன; எல்லாம் கண நேரத்தில். இவ்வாறு கண்ணினால் மாய ஜாலம் செய்வித்த அந்தச் சிவப்பாடைச் சிங்காரியும், கண நேரத்தில் கடந்து சென்றாள்.

அவளுடைய சிவப்புச் சேலையைக் கண்டு ஒரு மாடு மிரண்டது. அதைக் கண்டு அவள் பயந்து, அருகிலிருந்த பூங்காவுக்குள்ளே புகுந்தாள்.

வித விதமான பூக்கள் அங்கே பூத்துக் குலுங்கின; அவற்றில் எந்த மலரும் அவளைக் கண்டு நாணவில்லை. வண்ணக் கொடிகள் பல ஓடிக் கிடந்தன; அவற்றில் எதுவும் அவளுடைய சிற்றிடையைக் கண்டு பொறாமைப்படவில்லை. மயில்கள் ஏதும் அங்கே இல்லை; அப்படியே இருந்திருந்தாலும், அவளைக் கண்டு ஏதும் நினைத்திருக்காது. மான்களும் இல்லை; இருந்திருந்தாலும், அவை, புல் மேய்வதிலேயே முனைந்து இருந்திருக்கும். அவை அவளை இலட்சியம் செய்யாதது போலவே, அவளும் அவற்றை லட்சியம் செய்யாமல், பூங்காவின் மறு வாயிலை நோக்கிச் சென்றாள்.

ஆயினும், அவளையும் அவற்றையும் லட்சியம் செய்வதற்கு அங்கே ஓர் இளங்கவி உட்கார்ந்திருந்தான். பூங்காவினோதத்தை ஒரு பாட்டில் திரட்டுவதற்காக முயன்று கொண்டிருந்த அவன், அந்த எழிலாளைக் கண்டதும், "கண்டேன் காட்சி, கொண்டேன் கவிதை" என்று மகிழ்ச்சி அடைந்தான். எதுகை மோனை

கள் நிறைந்த சொல்லடுக்குகள் ஓடோடி வந்தன. அவற்றைப் பிற்பாடு ஆய்ந்து தேர்ந்து, யாப்பு இலக்கணப்படி ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம் என்று எண்ணி, அப்படி அப்படியே, மன ஏட்டில் குறித்துக் கொண்டான் :

நாணின மலர்கள் ;
கோணின கொடிகள் ;
கனிந்தன காய்கள் ;
குனிந்தன கிளைகள் ;
மருண்டன மயில்கள் ;
வெருண்டன மான்கள்
சிங்காரியாம் நங்கையைக்
கண்டு.........
ஓவியப் பெண்ணோ ?
காவியப் பெண்ணோ ?...
நனவுச் சோலையிலே
கனவுக் காரிகை !...
மோகினி வந்தாள்
மாலையிலே
சுந்தரி வந்தாள்
சோலையிலே !.....

தாறுமாறாக உருவாகிக்கொண்டிருந்த அந்தப் பாட்டின் "தலைவி," அவளுடைய வீட்டை அடைந்தாள். ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்த அவளுடைய கணவன், அவளை ஆசையுடன் பார்த்து, "கொஞ்சம் ஊஞ்சல் ஆடுவோம் வா" என்று அழைத்தான். "பாதி நாவல் பாக்கி இருக்கிறது" என்று அவள் வெடுக்கெனச் சொல்லி தடதட வென்று மாடிப் படிகளில் ஏறிச் சென்றாள். கணவன் கோபத்துடன் ஏதோ சொல்ல வாயெடுத்தான் ; ஆனால் அதைச் சொல்லாமல் அடக்கிக்கொண்டு, தரையை ஓங்கி மிதித்து, ஊஞ்சலை வேகமாய் ஆட்டினான்.

வெறுப்புக்கும் விருப்புக்கும் இடையே அவனுடைய மனமும் ஊசலாடிற்று.

உறையூர் கலர் நூல் புடவைகள்

கெட்டிச்சாயம் ! நீடித்த உழைப்பு !! நாகரிகமான உடை !!!

—: தயாரிப்பாளர் :—

"முருக விலாஸ்"

P. S. J.

முத்துகுமாரசாமி செட்டியார்

கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்

39. பஞ்சவர்ணசுவாமி கோவில் தெரு

உறையூர் P. O., திருச்சிராப்பள்ளி.

எங்கள் சொந்த கைத்தறிகளில் 100 செ. கலர் நூல் புடவைகள் புதுரக பார்டர்களுடன் 10, 9, 8, 7, 6 கெஜங்களில் தயாராகின்றன. 100 செ. 60 செ. வேட்டிகளும் 8, 9, 10 × 6 முழங்களில் கிடைக்கும்.

தாயுமானவரின் கவிதை

முத்துசாமி வரதராசன், எம். ஏ.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தேயும் முன் தோன்றி மூத்துப் படைப்புக் காலந்தொட்டு அழியாது நின்று, ஓங்கி, கவின்பெறப் பூத்துக் குலுங்கி நவினமாக நிற்பது தமிழ். தமிழ் என்றாலே போதும், 'தேன் வந்து பாயுது காதினிலே.' ஆம். இதில் வியப்பென்? அமுதூறும் இன்மொழி. மாந்தருள்ளம் அவ் வின்பத்தை மாந்தி மாந்தி, இன்னும் தெவிட்டாமல் உவகைக் கடலில் மூழ்கி ஆனந்தத்தால் துடிக்கா நிற்கும். தமிழ் என்ற வெறும் சொல்லைக் கேட்ட தருணத்திலேயே இத்துணைக் களிப்பு நம்மகத்தே எழுமாயின், இனி தமிழ்க் கவிதையைக் கேட்டால்......இன்பப் பெருக்கால் பைத்தியமே பிடித்து விட்டதோர் நிலைதான்.

'இந்திரியக் குஞ்சரத்தை ஞான இருங்கயிற்றால் கட்டி சிந்தனைத் தூண் பூட்டிச் சேர்த்தியே' நிறுத்தி வைத்தல் இயலாத செயல். மனித உள்ளம் 'யானை கட்டின மரம்' போலே. ஒரு கட்டிலடங்காது. வாரணம் போல் கட்டுத் தறியிலடங்காது. சங்கம் ஆர்க்கும் கயற்குழு துள்ளும் பெருங் கடற்றிரைகளேபோல் ஒரு நிலையிலமையாது. அலை பாய்ந்து நிற்கும். அதிலும், இன்பம், துன்பம், உவப்பு, வியப்பு, கோபம், அழுக்காறு போன்ற மன நிலைகளால் எழும் எண்ணங்கள் எண்ணிலடங்கா. மேலும், அவை கோவையாகவுமிரா. குரங்கு கையில் பூமாலையைக் கொடுக்கிறோம். மனமிருந்தால், முகரும், ஆர்ப்பரிக்கும். மகிழ்ந்து பல்லிளிக்கும். இல்லையெனில் பிய்த்து எறிந்து கொக்கரிக்கும். அதன் செயல்களிலே ஒரு கோவை இருக்காது. அதேபோல் இந்தச் சுவைகளால் அலைக்கழிக்கப்பட்ட மனத்திலும் எண்ணங்கள் ஓர் ஒழுங்கு, நேர்மை, அமைதி இவற்றுடன் அமையா. இந்த நிலையிலேதான், மனிதன் வெடித்தெழும் உணர்ச்சி அலைகள்வாய்ப்பட்டு தன்வயமிழந்து தத்தளிக்கும்போதுதான், அவ்வுணர்ச்சிகளை உருவகப்படுத்த முயலும் தருணத்திலேதான், 'கவிதை' பிறக்கிறது.

உதாரணமாக, சூலுற்ற மேகங்கள் முழவு கொட்டுமாப் போலே ஒலிக்கின்றன. அந்தப் பேரொலியைச் செவிமடுத்து மயிலினங்கள் நடுங்குகின்றன. மழையை எதிர் நோக்கி களியாட்டம் ஆடுகின்றன. இதைக் கண்டான் மனிதன். எழிலைப் பருகினான். இதயம் நிரம்பி களியூற்று வழிந்தோடியது. ஆயினும் மன நிறைவு கொண்டானில்லை. அதைச் சொற்சித்திரமாகப் புனைய வேண்டும் என்ற அவா உள்ளத்திலே சிலிர்த்தெழுந்து நிற்கின்றது. "வானத்தின் மேலே மயிலாடக் கண்டேன்...மடமயிலாடுதடி" என்ற இன்னிசைதான் எழுப்புகிறது அவன் உள்ளம். இதுவே கவிதை. ஆழ்ந்த உணர்வுத் தளங்களினின்றும் எழும் 'பொங்கியெழும் ஊற்று'.

கவிதைப் பெருக்கு 'பக்தி' எனும் நீர்த்தேக்கத்தினின்றும் தொடங்கி வருமாயின், அதன் இனிமையை அளவிடுதலும் ஒல்லுமோ! ஏனெனின், இவ்வுலகியலைப் பற்றியோ, இயற்கையைப் பற்றியோ, அல்லது ஏனைய உயிர்ப் பொருளைப் பற்றியோ கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டுக் காவியம் புனைவதைவிட, நம்மனோரனைவரிலும் மேலான, அசேதனமான, நித்தியமான ஒரு பொருளைச் சுற்றிக் கவிதை வரைந்தால், அதன் தகைமையே அலாதிதான்.

திருமங்கையாழ்வாரின் கவிகளிலே இனிமை இருக்கிறது என்றால், அவர் 'நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக' 'பாவை யென்று சுழன்று திரிவேனே' என்ற உணர்ச்சியில் ஈடுபட்டு, 'தம்மை நிகர் மறையெலாம் இன்னும் அளவிட நின்ற' ஒரு பரம்பொருளை நினைந்து நினைந்து, அந்நினைவிலே நினைவிழந்து,

உணர்விழந்து, இசைத்ததன் பயனே யாம் என்பதில் ஐயமுண்டோ?

"அன்பெனும் பிடியுள் அகப்படுமலையே, அன்பெனுங் குடில்புகுமரசே, அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே" என்று அருட்பெருஞ்சோதி வள்ளலார் நம்மை கவியிசையிலே கட்டினால், அதன் காரணம் வேறில்லை. அப் பேரன்பைச் சரிவர உணர்ந்த பேராற்றலினுற்றுன்! "பகரனந்தானந்தம் அமலம் உசிதம் சிற்பதம் சதானந்த சாரம்" என்றபடி அப் பேரன்பின் இயல்பிலே, தன்மையிலே தன்னெஞ்சைப் பறிகொடுத்து 'ஆண்டி' யாகி நின்ற காரணத்தினுற்றுன்! "அப்பனும் நீ, அம்மையும் நீ, ஒப்பரிய மாமனும் நீ, மாமியும் நீ, பொன் நீ, மணி நீ" என்று பிதற்றினால், அது அன்புப் பிதற்றல். அவ்வன்புக் கவிதையிலே ஒரு தனி ஈயம் மிளிர்கின்றது. அதைப் படிக்குந்தோறும் புதுப்புது நயங்கள் தோன்றுநிற்கின்றன. 'நவிலொறும் நூல்நயம்' வந்த காரணமே இவ்வாறு 'பக்தி' ஈடுபாட்டினால்தான் என்று ஒருவாறு கூறலாம்.

தமிழே, இன்பம். தமிழ்க் கவிதை பேரின்பம். பக்திப் பெருக்கும் கவிதை ஊற்றும் ஒன்று சேர்ந்திழைந்தால் தடுத் தடங்கலின்றி மலை முகட்டினின்றும் கடலை நோக்கி காதலியைப் பிரிந்த காதலன் மீண்டும் அவளைப் புல்லும் அவாவினால் உந்தப்பட்டவனாய் ஓடி வருவதுபோல் இழியா நிற்கும் காட்டாறு தான்! பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பர் பொதுவில். ஆம். தமிழ் இலக்கியத்திலேயும் கவிதையும் பக்தியும் பிரிந்திருந்த நாட்கள் உண்டு. ஆனால் காலத்தின் போக்கிலே பெஸ்கி எனும் வீரமாமுனிவர் கிறிஸ்துவ சமய உணர்விலே எழுந்த கவிதை முகட்டுக்கு அடிகபாலினர். பிள்ளைப் பெருமாள் அது போன்று 'வைணவ சம்பிரதாயத்'திலே திளைத்த, முளைத்த, தமிழிலக்கியத் துக்குத் தலைமை வகித்தார். ஓமார் முதலியோர் இஸ்லாமிய மத நெறியிலே இலக்கியப் பூங்காவை நிறுவினர். அப்பூங்காவும் தழைத்தது ஏன்? தமிழ் மொழி கவிதை, பக்தி என்ற மூன்றே மூன்று மூலப் பொருள்கள். அரும் பெருங்கனிகள்.

தாயுமானர் பெரிய மேதாவி. வடமொழியிலும் சிறந்த புலமை நிறைந்த தகைமையாளர். இதையேதான் 'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்று தொடங்கும் பாட்டும் அத்துணைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. மௌனகுருவான மெய்க் கொண்டாரால் 'சும்மா இரு' என்று உபதேசம் பெற்ற பெருமாள். முக்கியமாகத் தமிழ்மொழி வாயிலாகவே அன்பைத் தெரிவிக்கலாகும் என்ற மனப்பான்மை கொண்டவர். இது அவரது தமிழார்வத்தைக் குறிப்பிடுவதோடு நமது முன்னுரையையும் மெய்ப்படுத்தும் :—

என் தமிழனுக்கு,
இன்னல் பகராதுலகம் ஆராமை
மேலிட்டிருத்தலால் இத்
தமிழையே
சொன்னவன் யாவன் அவன்
முக்தி சித்திகளெல்லாந்

PINDI TENT HOUSE (Estd. 1895)

For Marriages and Parties
Shamianas, Tents, Kanats, Durries,
Furniture, Crockery, Brass Utensils
Loud Speakers etc. etc.

Head Office :
63, Faiz Road,
Karol Bagh, Delhi.

Branch Office :
35, Irwin Road,
Hanuman Mandir, New Delhi

தோய்ந்த நெறியே படித்தீர்
என்று பாடிச் சென்றுர்.

இவரது பாடல்களிலே, கிரேக்க, லத்தீன், சமஸ்கிருத பாஷைகளிலே மிஞ்சிக் கிடக்கும் 'ஒலியொற்றுமை' நிறைந்து நிற்கின்றது. ஒரு சொல் இன்னெரு சொல்லுடன் இணையும் பான்மை, இரண்டும் மேவி யணைந்து உடலிரண்டு உயிரொன்ருய் நிற்கும் தகைமை வியத்தற்குரியது. ஆனுல் இதில், வியப்பென்னே! 'பெண்ணை இடத்திலே வைத்த இறைவன் தன் சடாம—குடத்திலே கங்கை யடங்கும்' என்னுமாப்போல் பக்தி வயப்பட்டோர்க்குத் தமிழன்னை சென்னியைச் சாய்த்து நிலமிசை தோயுமாறு இணக்கத்துடன் விளங்குகிருள். அது, மொழி தான் பிறந்த மெய்ப் பொருளுக்குச் செலுத்தும் தலையாய வணக்கம்தான்.

'நாதாந்த ரூபமே வேதாந்த
மோனமே
நானென்று மகந்தை தீர்த்தென்

INDIAN GLOBE
INSURANCE CO., LTD.,
Head Office :
315/321, Dadabhai Navroji Road,
FORT, BOMBAY.
★
Transacting :
LIFE, FIRE, MOTOR,
MARINE, ACCIDENT
ETC.
★
Regional Office for N. India :
70, Queensway (Back),
NEW DELHI-1.

மதியுண்டு மதியான மதிவதன
வல்லியே
மது சூதனன்றங்கையே
வரை ராசனுக் கிருகண்மணி
யாயு தித்தமலே
வளர் காதலிப் பெண் உமையே'

என்ற இடத்திலே என்ன பொருட் செறிவு, உணர்ச்சித் திண்மை, ஒலியுவகை மிளிர்கின்றது பாருங்கள்! தாயுமானுர் இந்தப் பான்மையிலே சொற்களைப் பிணைக்குங்கால் எழச் செய்யும் மதுரமான ஒலி நமக்குக் கலிங்கத்துப் பரணியைத் தான் மனசுக்குக் கொண்டு வருகின்றது. பரணியிலே படைகள் எழுச்சி, உணர்ச்சிப் படைகள், போர்க்கள முழக்கங்கள் இவற்றைக் கேட்கிறேம். தாயுமானுரோ 'சீவாத்மா' 'பரமாத்மா'வுடன் நிகழ்த்தும் போர்க்கள ஓசைகளை எழுப்பித் தருகிருர்! சீவாத்மா முறியடிந்தவுடன் நம்மை மறந்து ஆரவாரம் செய்கிறேம்!

இன்னுமொரு பாடலிலே காதற் பிச்சை கேட்கின்றது சீவாத்மா. 'பசு'வாகிய உள்ளம், அல்லது சூக்கும ஆன்மா, 'பதி'யாகிய மூலப் பொருளிடத்தே கொண்ட காதலே, 'பாச'த்தினுல் ஏற்பட்ட 'ஆணவம், கன்மம், மாயை' என்ற மலங்கள் மறைக்கின்றன. ஆனுல் கடைசியில் நிர்மலமாய் எழும்பி நிற்கின்றது 'பசு' 'பதி'யைக் குறித்து, ஆனந்தக்களிப்பு மேலிட்டால் பாடுங்கால், அந்த பெருவகையிலே தன்னைக் காதலனுகவும் அப் பேரின்ப வாரிதியை, குணக்குன்றை, மறைப் பொருளைக் காதலியாகவும் உருவகப்படுத்தி நாத்தழுதழுத்து நிற்கின்றது. கடைசியில் இறைவன் திருவடிகளில் இரண்டற, சூடிக்கொடுத்த பூங்கோதையெனக் கலக்கின்றது. 'சங்கர சங்கர, சம்புசிவ' என்று அடுத்தடுத்து வரும் ஓசைகள் நம் மனத்தைக் கரைக்கின்றன. முதலில் நீ வேறு, நான் வேறு, எனது, உன்னுடையது, என்றெல்லாம் பிதற்றிக் கடைசியில் அவ்வொளிப் பிழம்பிலே கலக்கும் ஆற்றலைத் தாயுமானுர் போல் தெள்ளிய

தமிழிலே தீட்ட வேண்டுமானால் இன்னொரு தாயுமானார் தான் பிறக்க வேண்டும் !

உள்ளது மில்லது மாய்முன்
உணர்வது வாயுன் னுளங்
கண்டதெல்லாம்
தள்ளெனச் சொல்லி
யென்னையன்—என்னைத்
தானாக்கிக் கொண்ட
சமர்த்தைப் பார்தோழி

என்று சேடியை விளிக்கும் குரல் இன்னும் நம் செவிகளில் ரீங்காரம் செய்கின்றது. இன்னும் சற்றுப் பொறுத்து ‘அன்றென்னும் ஆம் என்று முண்டோ’ என்பதைத் தெளிவிக்க ‘மறை நீதி யெம்மாதி நிகழ்த்தினான் தோழி’ என்று உவகைப்படுகிறார். இந்த முரண்பாட்டைத் தவிர்த்து வைத்த தன்மையை ‘சித்தர் கணம்’ எனும் பாட்டில்

‘வேதாந்த சித்தாந்த சமரச நன்
னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே’

என்று குறிப்பிடுகின்றார்.

கடவுளைக் கண்டார் இயற்கையைக் கண்டாரோ என்ற ஐயப்பாடு எழலாம். வரண்ட தத்துவங்களைப் போதித்த மக்களிலேயே ‘தேனருவித் திரையெழும்பி வானின் வழியொழுகும், செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்’ இயற்கை யன்னையின் பொற்பு வளத்தைக் காணவும் அவருக்குக் கண்கள் உண்டு. அதைச் சொற் சித்திரமாக்கச் சொற்களும் உண்டு. உதாரணமாக,

‘கொந்தவிழ் மலர்ச்சோலை நன்
னீழல் வைகினுங்
குளிர் தீம்புனற் கையள்ளிக்
கொள்ளுகினு மந்நீரிடைத்
திளைத் தாடினுங்
குளிர் சந்தவாடை மடவார்
வந்துலவுகின்ற தென முன்
றிடையுலவவே
வசதிபெறு போதும் வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல
நிலவுதர
மகிழ்போதும் வேலையமுதம்

என்ற பாடலைப் பாருங்கள். அந்த வருணனையில் நம்முணர்வை யிழக்கின்றோம். ‘பொங்கரின் நுழைந்து, வாவிபுகுந்து, பங்கயம் துழாவி’ என்றெல்லாம் முதலில் மந்தமாருதத்தைப் பாடிக் கடைசியில்.

‘சந்ததமு நின்னருளை மறவா
வரந்தந்து
தமியேனை ரக்ஷை புரிவாய்
சர்வ பரிபூரண வகண்ட தத்துவ
மான
சச்சிதானந்த சிவமே.’

என்ற தன் கடப்பாட்டைக் கணமேனு மறக்காமல் முடிக்கும் அழகுதான் என்னே !

ஒரே பாடலில் வடமொழி தென்மொழி இவையிரண்டையும் கலந்து, அக்கலப்பு ‘வெளிரெ ’ன்று தோன்றாமல் அவற்றை இசையுடன் இணைத்த

MARINA

Ceiling, Table & Pedestal
FANS in all Sizes

★

Stockists:

ORIENTAL ELECTRIC CO.,
MAHALAKSHMI MARKET,
Chandni Chowk, DELHI.
Phone : 25644

தகைமையை என்னென்பது. 'பூரணி புராதநி சுமங்கலை சுதந்தரி புராந்தகி த்ரியம்பகி' என்று தொடங்கும் பாட்டில் முதற்பாதி முழுதும் வடமொழி. ஆனால் முடிக்குந் தருணத்திலோ 'வாரணியு மருங்கொங்கை மாதர் மகிழ்கங்கை புகழ் வளமருவு தேவையரசே............உமையே ' என்று 'பொடி' வைத்து 'நகை'வேலை செய்திருப்பது விந்தையே!

கடைசியாக, தத்தித்தத்தி, துள்ளித் துள்ளி நடன 'கதி'யிலே செல்லும் பாட்டு அவர் மனதுக்குகந்தது என்பதற்குச் சான்று வேண்டுமாகில்

பாடுகின்ற பனுவலோர்க
டேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றி
லாடுகின்ற வழகனே

என்னும் பாட்டே போதும். எத்துணை நளினம்! துள்ளல்! இளமை முறுக்கு! பாருங்கள்! இது போன்று, இசைக்கும் தாயுமானவர் பாட்டுக்கும் நனிசிறந்த தொடர்பு உண்டு என்பதற்கு 'ஆழாழி கரையின்றி நிற்கவில்லையோ கொடிய ஆலவமுதாக வில்லையோ' என்று தொடங்கி 'பாழான என்மனம் உய்யவொரு தந்திரம் பண்ணுவதுனக் கருமையோ, பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே' என்ற பாட்டே சான்று.

தாயுமானாரியல்பைக் கண்டோம். அவரது தமிழின் மென்மையை, இனிமையை, பெருமையை உணர்ந்தோம். 'வையந் தகளியா வார்க்கடலே நெய்யாக' ஏற்றிய ஞான விளக்கு நமது மன இருளை விரட்டுகின்றது. மலங்கள் கழிந்து நிர்மலமான இடத்திலே தமிழ்த்தென்றலின் சுகந்தம் வீசுகின்றது. இந் நறு நாற்றம் தமிழ் உள்ளளவும் குறையாது.

THE JUPITER GENERAL INSURANCE COMPANY, LTD.

(Established 1919)

Head Office: **Bank Street, Bombay-1**

LIFE, FIRE, MARINE, MOTOR, AVIATION, PERSONAL ACCIDENT AND SICKNESS, WORKMEN'S COMPENSATION, BURGLARY, FIDELITY GUARANTEE, LIVE-STOCK ETC.

Total Assets Over Rs. 3,35,00,000

Administrator: **Dewan Bahadur R. Varadachari**

மனமாற்றம்

ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன்

"இதோ பார் அம்மா, என் கஷ்டம் நீ அறிந்ததே! பட்டணத்தில் நல்ல வரன் இருப்பதாகப் பெரிய மாமா எழுதியிருக்கிறார். இரண்டாம் கல்யாணம்; என்றாலும் சிறு வயது—நல்ல உத்தியோகம்......" திடீரெனத் தந்தை தொடங்கிய பேச்சைப் பூர்த்தியாகக் கேட்கு முன்னேமே நந்தினியின் தலை சுழல ஆரம்பித்து விட்டது. வழி வழியாக ஹிந்துப்பெண்களுக்கு ஏற்படும் சோதனையிலிருந்து தான் தப்பமுடியும் என்று அவள் எண்ணியிருந்தாள். ஏழைக் குடும்பத்தில் பிறந்தாலும் கல்லூரிப் படிப்பைப் பெற்று விட்டதால் வரதக்ஷிணை, வறுமை என்ற இரு அசுரர்களையும் ஒரே அடியில் வீழ்த்தி விடலாமெனக் கனவு கொண்டிருந்தாள். ஆனால் இன்று!

"என்ன அம்மா! பேசாமலிருக்கிறயே! சீர் செனத்தி என்று வேண்டாமாம். பெண் பிடித்தால் போதுமாம். ஜாதகப் பொருத்தமிருக்கிறது" என்று ஆவல் ததும்ப, அவளுடைய பதிலை எதிர்பார்த்தார் ராம ஐயர்."

"எல்லாம் சரிதான். இளையாள் என்ற பேரு. கொசுறு ஒரு குழந்தை..." என்று இழுத்தாள் லக்ஷ்மி அம்மாள்.

நந்தனி திடுக்கிட்டாள். இளையாளா? மாற்றாந்தாய் பட்டம் சூட்ட ஒரு குழந்தை. வரதக்ஷிணைக் கொடுமைபோல வழிவழியாக வந்த கொடுஞ்சொல் அல்லவா! இன்முகமும் அன்பும் காட்டினாலும் இடித்துக் காட்டும் மாற்றாந்தாய் என்ற பெயர்! வேண்டாம் என்று சொல்லி விடலாமா? அப்பாவின் மனம் நோகுமே! அதற்காக வாழ்வு முழுவதும் சுடுசொல் பெறுவதா!—இப்படிக் கிளைத்தது நந்தினியின் சிந்தனை.

"உன்னை யாரு கேட்டது" என்று ஐயர் கடிந்த சொல் கேட்டதும் நந்தினி தன்னிலை அடைந்தாள். ஐயர் சொல்லிக் கொண்டிருந்தார். "நந்தினி படித்த பெண். நம்முடைய நிலையையும் ஆசையையும் அறிந்தவள். நான் ஏழைதான். ஆனல் அவளைக் கொண்டு போய் பாழுங் கிணற்றில் தள்ள நான் விரும்புவேனா?"

நந்தினியின் கடைக் கோடியில் நீர் கட்டியது. "அப்பாவுக்குத்தான் என் மீது எவ்வளவு நம்பிக்கை!" என்று எண்ணும்போது அவளுடைய நெஞ்சிலே கிளுகிளுப்புக் கிளைத்தது. ஆனலும் அந்த வரனை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் இருக்கத்தான் இருந்தது.

"நான் படித்த படிப்பு வீணகத்தானே போகிறது, அப்பா! இப்போது கல்யாணத்திற்கு என்ன அவசரம்? இரண்டு வருஷங்கள் வேலை பார்த்து விட்டுக் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாமே!" என்று குழைந்து கூறினள்.

"நந்து, பெண்கள் வேலைக்குப் போவதை நான் விரும்பவில்லை. உன்னுடைய உழைப்பினல் நம்முடைய குடும்பத்திற்குச் சௌகரியம் ஏற்படலாம். ஆனல் குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டிய வயதைத் தாண்டி நீ கல்யாணம் செய்து கொள்வதில் எனக்குச் சம்மதமில்லை. உனக்கும் வாழ்க்கையில் திருப்தியிராது. நீ சுகமாக வாழ்வதில் எனக்கு ஆசை இல்லையா?" என்றார் கனிவுடன்.

நந்தினி சிறிது மௌனமாக இருந்தாள். பிறகு "உங்கள் இஷ்டம் அப்பா" என்று சொல்லி இடத்தை விட்டு நகர்ந்தாள்.

2

நந்தினி சுரத்தில்லாமல் காலங் கடத்தினள். சிந்தித்துச் சிந்தித்து தலைவலியும் பலவீனமும்தான் மிஞ்சிற்று. கல்யாணம் என்னும்போதே, குழந்தையைப் பராமரிக்கும் ஆயாவின் பொறுப்புத் தலையில் விழுகிறதே

என்று எண்ண எண்ண அவளுக்கு ஏக்கம்தான் மிஞ்சிற்று. தாய்மையின் பெருமையை அவள் அறியாதவளல்ல! ஆனால் இங்கு பொறுப்புத்தானே மிஞ்சுகிறது! விதி என்று நொந்து கொள்ளவும் மனம் இடந்தரவில்லை.

கண் நிறைந்த கணவனை 'விலை கொடுத்து' வாங்கத் தந்தையிடம் பொருள் இல்லை. ஏழைக் குடும்பஸ்தரான அவர் மூன்று பெண்களுக்குக் கல்யாணம் செய்து கை சளைத்தவர். தமக்கைகளைப்போல அல்லாமல் நந்தினி ஒருவிதத்தில் பாக்கியசாலிதான். சிறு வயதிலேயே அவள் அத்தையின் செல்லப் பெண்ணாகி விட்டாள். பிள்ளைகளையே பெற்ற அத்தை, பெண்ணில்லாக் குறை தீர, நந்தினியைச் சீராட்டி வளர்த்து, கல்லூரிப் படிப்பும் கொடுத்து விட்டாள். கல்யாணம் செய்ய வேண்டும் என்று ராம ஐயர் விரும்பியபோதுதான் நந்தினி தாய் வீடு வந்து சேர்ந்தாள். வரன் வேட்டையில் அப்பா படும் அல்லல்களைக் கண்டு அவள் அசந்து விட்டாள். சிவனே என்று ஓர் உத்தியோகத்தைப் பார்த்துக் கொண்டால் குடும்பத்திற்கு உதவியாக இருக்குமே என்பதுதான் அவள் விருப்பம். ஆனால், அதற்கு அவள் தந்தை இணங்கினால் தானே! காலா காலத்தில் கல்யாணம் செய்து கொண்டு குழந்தை குஞ்சுகளுடன் குடித்தனம் செய்வதுதான் பெண்களுக்கு அழகு என்ற கட்சியைச் சேர்ந்தவர் அவர்.

மாதவன் வந்து பெண்ணைப் பார்த்தான். நந்தினியின் கனவும் கற்பனையும் தகர்ந்தன. மாதவனுடைய வசீகரத் தோற்றமும் நடையும் அவளை மயக்கிவிட்டன. இளையாள் என்ற முள், காம்பில் மறைந்து, ரோஜாவின் அழகைக் காட்டுவது போலாயிற்று. அவனுடைய அழகிலும் கம்பீரத்திலும் அவள் தன்னையே மறந்து நின்றாள். அவனும்தான் அப்படி! நந்தினியின் அழகும் களைசொட்டும் முகமும் அவனுக்குப் பிடித்துவிட்டன. அப்புறம் என்ன! நந்தினி ஸ்ரீமதி நந்தினிதேவி மாதவனாக பெரியவர்கள் முகூர்த்தம் வைத்து விட்டார்கள்.

M. S. RATHNAM & CO.,

FANCY MIRROR MANUFACTURERS

IMPORTERS & EXPORTERS

Office :
7, Narayana Mudali St.,
MADRAS-1.

Factory :
235, Devaraja Mudali St.,
MADRAS.

3

கண் நிறைந்த கணவன். கை நிறைந்த வருமானம். ஆசையும் பாசமும் காட்டும் ஆணழகன் அவன். அவளுடைய வாழ்க்கை இன்பமாகத்தான் இருந்தது. ஆனால் எங்கோ கொஞ்சம் மூளியாக இருப்பதுபோல நந்தினிக்குத் தோன்றிற்று. எங்கே குறை என்பதைத்தான் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

நெஞ்சிலே உறுத்தும் துரும்பை எதிரே காண்பது போன்ற பிரமை ஒருநாள் ஏற்பட்டது அவளுக்கு. கணவனின் மேஜையிலிருந்த தனது மூத்தாளின் போட்டோவைக் காணும் போதெல்லாம் அவளுடைய உறுத்தல் அதிகரிக்கும். ஆனால் அது தானா......?

தினே தினே அவளுடைய இன்ப வாழ்வின் விரிசல் பெரிதாகிக்கொண்டு வந்தது. அமைதியின்மை பெருகி அதிருப்தி வளரத் தொடங்கிற்று. நேரம் கிடைத்தபோதெல்லாம் அவள் கணவனின் மேஜையடியில் நின்று மூத்தாளின் போட்டோவைப் பார்க்கலானாள். அது, தனக்கும் கணவனுக்குமிடையே பெரியதொரு அகழியை வெட்டிவிட்டது போலல்லவா தோன்றுகிறது?

அதை அப்புறப்படுத்தவும் அவள் பயந்தாள். அதைப்பற்றிக் கணவனிடம் பேசவும் அவளுக்குத் திகில். மூத்தாளைப்பற்றி மாதவன் ஒருநாள் கூடப் பேசியதில்லை. ஆனால் அவளிடம் அளவற்ற பாசம் வைத்திருந்தான் என்பதை மட்டும் அவளால் ஊகிக்க முடிந்தது. ஆகவே கிடைத்த பாக்கியத்தைத் திருப்தியுடன் அநுபவிக்கத் தெரியாமல் அவள் தவித்தாள். மாற்றாந்தாய் என்ற நினைப்பே ஏற்பட இடமில்லாமல் செய்திருந்தான் மாதவன். தன்னுடைய குழந்தை ஜோதியை மாமாவின் வீட்டில் வளர விட்டிருந்தான்.

‘நீயும் சிறிசுதானே நந்து! இப்போதிருந்து உனக்கு பிள்ளைப்பாரம் எதற்கு? எவ்வளவுதான் நீ அன்பு சொரிந்தாலும், குழந்தை உன்னிடம் ஒட்டிக்கொண்டு வாழ்வதைக் காண பிறர் சகிக்கமாட்டார்கள். மாமாவின் வீட்டில் நாலுடன் அஞ்சாக அவளும் இருக்கட்டுமே” என்று ஒரு சமயம் குழந்தையைப்பற்றி மாதவன் நந்தினியிடம் குறிப்பிட்டான். அப்போது அது நியாயம் போலவே அவளுக்குப் பட்டது. ஆனால் இன்று! தன்னுடைய பொறுப்பையும் கடமையையும் அவன் சந்தேகித்தானோ! அல்லது தன்னிடம் நம்பிக்கையில்லாமல்......சேச்சே தன்னுடைய கணவன் அப்படிப்பட்டவன் அல்ல!

இனியாளைப் பிரிந்த துக்கம் ஆறின சமயத்தில்தான் மாதவன் தனிமையை உணர்ந்தான். ஆறுதல் காட்ட அருகில் குழந்தையும் இல்லாதிருக்கவே வாழ்க்கை பாலையாகவே இருந்தது அவனுக்கு. நந்தினியைப் பார்த்ததும் நெஞ்சிலே துளிர்விட்டுப் பசுமை பிறந்தது. எப்போதோ எழும் வேதனையை ஒதுக்கிவிட்டு இன்முகத்துடன் நந்தினியுடன் அன்பாக குடித்தனம் நடத்தத் துவங்கினான். ஆனால் அவளுடைய ஏக்கத்தை உணர அவனால் முடியவில்லை.

பெற்றோரைப் பிரிந்த துக்கமோ என்று எண்ணி நந்தினியைத் தாயகம் அனுப்பினான் மாதவன். நந்தினியா கணவனைப் பிரிந்து இருப்பாள்! இனியாள் என்ற சொல் பெயரளவில்தான் அவளிடம் ஒட்டிக்கொண்டிருந்தது. பிறந்த வீடு சென்ற மூன்றாம் நாளே அவள் திரும்பிவிட்டாள்.

ஆனால் மேஜையின்மீது இருந்த படம்—அதைப் பார்க்கும்போதே நெஞ்சில் ஏக்கம் படரும். ஒருவேளை கணவன் தன்னிடம் பாசம் காட்டுகிறானோ—இல்லையோ! தன்னிடம் அன்பு கனிந்து பழகுவது பாசாங்காகக்கூட இருக்குமோ! விவரிக்க முடியாததொரு சஞ்சலம் அவளுடைய நெஞ்சிலே படர்ந்துவிட்டது.

4

அன்று, கணவன் காரியாலயத்திற்குச் சென்றதும் நந்தினி கூடத்தில் உட்கார்ந்திருந்தாள். வாசற் கதவை யாரோ தட்டினார்கள். நந்தினி எழுந்து

கதவைத் திறந்தபோது எதிரே அவளுடைய பள்ளித்தோழி நின்றிருந்தாள்.

"ஹல்லோ! கல்யாணி! வாவா!" என்று மகிழ்ச்சி பொங்க வரவேற்ருள் அவளே நந்தினி.

"நந்து! ஏனடி இப்படி இளேத்திருக்கிருய்! எங்களுடைய அனுதை இல்லத்திற்கு நிதி திரட்ட இங்கு வந்தேன். உன்னுடைய விலாசம் தெரிந்தது—பார்த்து விட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்" என்ருள் கல்யாணி.

"ஏனடி, என்னேப் பார்க்க வந்தாயா? அல்லது என்னிடம் அனுதை இல்லத்திற்குப் பணம் கேட்க வந்தாயா?" என்று கேட்டாள் நந்தினி. நன்கொடையளிக்கும் நிலைமையில் தான் இப்போது இருக்கும் பெருமை பிடிபடாமல்.

"இரண்டும்தான். இந்தக் குழந்தைகளேப் போஷிப்பதே சிறந்த பாக்கியமடி" என்ருள் கல்யாணி சிரித்துக் கொண்டே.

நந்துவுக்கு நெஞ்சிலே சுருக்கென்ற உணர்ச்சி. "போதுமடி, கல்யாணம் செய்து கொள்ளும் யோசனேயே உனக்கு ஏற்படவில்லேயா! நமக்கு என்று ஒரு குழந்தை இருந்தாலும்..." என்று ஆரம்பித்தாள் தன்னேச் சமாளித்துக்கொண்டு.

"எனக்கு என்றுதான் இத்தனே குழந்தைகளே ஏற்றுக் கொண்டிருக்கிறேனடீ. குழந்தைகளின் குஞ்சிரிப்பிலே கிடைக்கும் பாக்கியத்திற்கு ஈடு ஏதடீ! என்னுடைய குழந்தையின் சிரிப்பிலே பாசம் உண்டு. ஆனுல் இந்தக் குழந்தைகள்! நமக்குப் பெற்ருேர்களின் அருமை தெரிவதில்லே. இந்த அனுதைக் குழந்தைகள் அம்மா அம்மா என்று என்னேச் சூழ வரும் போது......அப்பப்பா அந்த மகிழ்ச்சியை விவரிக்க முடியாதடீ.

"குழந்தைகளிடம் பரிவுடன் யாராவது பேசும்போது அவர்களுடைய கண்களில் தெரிக்கும் மகிழ்ச்சியும் பூரிப்பும் காணக் கோடிக் கண் வேண்டுமடீ! நந்து, இந்தப் பிஞ்சு மனம் மகிழ நாம் செய்யும் அன்பை எப்படிச் சொல்வேன்! இந்த இளஞ் செடிகள் தழைக்க, நிழல் காட்டி, அன்பு நீர் ஊற்றுவதில் எவ்வளவு சுகம் உண்டு தெரியுமா!"

நந்தினியின் நெஞ்சிலே சுமையாக அழுந்தி நின்ற பாரம் விலகியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவளுடைய நெஞ்சிலே கனிவு ஏற்பட்டது. அதன் காரணம் உணராமல் அவள் கல்யாணியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

கல்யாணி பேசிக் கொண்டே போனுள்: "எங்களூர் நகர சபை அனுதை இல்லத்திற்கு காலி மனே ஒதுக்கியதுடன் புதுக் கட்டிடம் கட்டவும் பதினுயிரம் ரூபாய்கள் மான்யம் அளித்திருக்கிறது நந்து! இப்போது பெரிய பொறுப்பு ஏற்பட்டதல்லவா! அதனுல்தான் நிதி திரட்ட நான் வெளியே கிளம்பி விட்டேன்."

அவள் பேசப் பேச நந்தினியின் உள்ளத்திலே புரட்சி எழுந்தது. தாயன்பு காட்ட தனக்கும் ஓர் குழந்தை இருக்கிறது. சிற்றன்னே என்ற கொடுஞ்சொல் மாற அந்தக் குழந்தையைச் சீராட்டி வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் துணிவு தனக்கு ஏற்படவில்லேயே என்று எண்ணும்போது அவளுடைய கண்களில் நீர் மல்கிற்று.

கல்யாணியின் வாஞ்சைக்கு எதிரே தன்னுடைய அன்பும் கடமையும் தளர்ந்து விடாது என்ற உறுதி பிறந்தது. நெஞ்சிலே கவிந்திருந்த இருள் விலகி கடமை மலர்ந்தது. அதன் இன்பத்தை உணர்ந்தாள்.

"இரு கல்யாணி!" என்று உள்ளே சென்று திரும்பினுள். "என்னுடைய பங்காக இந்தச் சிறு தொகையை வைத்துக்கொள். கணவன் இருந்தால் இன்னும் அதிகமாகக் கொடுத்திருப்பேன்" என்று பெருமை வழியும் முகத்துடன் ஒரு சில பத்து ரூபாய் நோட்டுகளே அவள் கையில் திணித்தாள்.

"தாங்க்ஸ், நந்து நீ மிகவும் பெரியதொரு காரியத்திற்கு உதவி செய்

கிறுய் என்பதை நினைவில் வைத்துக் கொள்,'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டாள் கல்யாணி.

5

கல்யாணியை வழியனுப்பிவிட்டு நந்தினி உள்ளே நுழைந்தாள். கணவனுடைய மேஜைமீதுள்ள புகைப் படத்தைப் பார்க்க வேண்டுமென்ற அவா மீதுர அவள் மேஜையருகில் சென்றாள். இந்த எண்ணம் எப்படி எழுந்தது என்ற ஆச்சர்யத்துடன் அவள் மேஜையிலிருந்த புகைப் படத்தையே உற்றுப் பார்த்தாள்.

இத்தனை நாளாக அவளுடைய கண்களை உறுத்துக்கொண்டிருந்த அந்தப் படம் இன்று கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளித்தது. குழந்தை ஜோதியை வைத்துக் கொண்டு தன்னுடைய மூத்தவள் நிற்பதைப் பார்க்கும்போது அவளுடைய நெஞ்சிலே தாய்மைப் பாசம் சுரந்து விட்டது. அன்னைக்கு அன்னையாக நான் இருக்கும்போது இந்தக் குழந்தை ஏன் அனாதைபோல பிறர் வீட்டில் வளர வேண்டும் என்ற எண்ணம் வேகம் கட்டியது. ''வாடி கண்ணே'' என்று தன்னையும் அறியாமலேயே அவள் படத்தைப் பார்த்துக் கையை நீட்டி நெருங்கினாள். அந்தக் குழந்தைக்குத் தான் பெரிய அநீதி செய்துவிட்டதாகவே அவள் எண்ணினாள்.

கல்யாணி! அவள் தெய்வப் பிறவி தான்! ஊர்க் குழந்தைகளைத் தன்னுடையதாகவே எண்ணி உழைக்கிறாள்! ஆனால் நான்! என்னுடைய அன்புக்கு உரிமையுள்ள இந்தக் குழந்தையை அலட்சியம் செய்துவிட்டேனே! ஏன் இந்தப் போட்டோ கூட இங்கிருக்கக் கூடாது என்றுகூட எண்ணினேனே!

6

காரியாலயத்திலிருந்து திரும்பிய மாதவன் 'நந்து' என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான். அவனுடைய கையிலே இருந்த காகிதப் பொட்டணத்தைக் கண்ட நந்தினி ''இது என்ன பரிசு'' என்று கொஞ்சும் குரலில் கேட்டாள்.

''நீ கேட்டதுதானே'' என்றான் மாதவன் சிரித்துக்கொண்டே.

''நான் என்ன கேட்டேன்!'' என்றாள் நந்தினி.

மாதவன் அவளுடைய முகமாறுதலைக் கவனித்தானோ என்னமோ! ''யோசித்துப்பார்'' என்று சொல்லிக்கொண்டே திரும்பினான்.

''சரி, நான் கேட்பதைத் தருவீர்களா?'' என்றாள் நந்தினி சட்டென.

அவளுடைய முகத்தில் தெறித்த பிரகாசத்தைக் கண்டு மாதவன் பிரமித்துப் போனான். அவளுடைய முகத்தில் அசாதாரணப்பொலிவுபடர்ந்தது.

''என்ன கேட்டாயாம்?''

''குழந்தை வேண்டும்.''

மாதவன் சிரித்துக்கொண்டே ''வா, வா, கடைக்குப் போகலாமா?'' என்று கேட்டான்.

அவனுடைய கேலியும் சிரிப்பும் நந்தினிக்குத் தாளவில்லை. அவள் சிணுங்கினாள்.

''அடேடே! உன்னுடைய கோபத்தில்தான் என்ன அழகு'' என்று சீண்டினான் அவன்.

''எனக்குக் குழந்தை வேண்டும். என்னுடைய ஜோதி வேண்டும்'' என்றாள் நந்தினி திடமான குரலில்.

''யாரு?'' என்று திடுக்கிட்டுக் கேட்டான் மாதவன்.

மனைவியின் மனமாறுதலை அவன் எப்படி அறிவான்?

''என் குழந்தை! ஜோதி! நம்முடைய...''

அவளுடைய குழைவைக் கண்டு மாதவன் ஆச்சர்யமடைந்தான்.

உணர்ச்சியை அடக்கிக்கொண்டு அவள் தலை நிமிர்ந்தபோது, மாதவன் கடிதம் எழுதிக்கொண்டிருந்ததைப் பார்த்தாள்.

அன்புள்ள........,

குழந்தை ஜோதியைப் பார்க்க நந்தினி ஆசைப்படுகிறாள். ஆகவே நாங்கள் இருவரும் நாளை ரெயிலுக்கு......

மேலே படிக்க முடியாமல் நந்தினியின் கண்ணீர்த்திரை மறைத்தது.

"வெண்மையான, சுத்தமான லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது . . ."

என்கிறார் *நிருபா ராய்*



இந்தியாவில் தயாரித்தது.

நிருபா ராய் மேலும் கூறுவதாவது: "சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப் ஒன்றுதான் என் சருமத்தை நன்றாக சுத்தம் செய்கிறது. அதன் மிருதுவான நுரை சருமத்தின் துவாரங்களில் புகுந்து மேனியின் இயற்கை அழகை வெளிக்கொண்டு வந்து, ஒரு தனிப்பொலிவை அளிக்கிறது. இந்த சுத்தமான, வெண்மையான சோப் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தையும் நான் மிகவும் விரும்புகிறேன்."

"... அதனால்தான் என் சருமத்தை எழிலோங்கச் செய்ய லக்ஸ் டாய்லட் சோப்பைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 410-50 TM

நட்சத்திரம்

பாக்கியம் சங்கர்

அம்மா ! அம்மா ! வானத்திலே
மீனும் உண்டோம்மா ?
நட்சத்திரம் என்று ஒரு
பேரும் உண்டோம்மா ?
தூர தூரத் தொலைவிலேயே
நிற்ப தேனம்மா ?
துரத்தி துரத்திப் பின்னலேயே
வருவ தேனம்மா ?
கூரைக்குள்ளே எட்டி எட்டிப்
பார்ப்ப தேனம்மா ?
சிறுவர்போலச் சிரித்துச் சிரித்து
கூட்டம் போடுதேம்மா ?
கோலம் போல ஆகாசத்தில்
கோடி பாயுதம்மா
கண்ணைக் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டி
சேதி சொல்லுதம்மா
சிறுவன் துருவன் பெரிய ஒரு
நட்சத்திரமம்மா.

★

வாழ்க்கை மலர—கலை

பாலு சகோதரர்கள்

வாழ்க்கைக் கொடி வயிற்றைச் சுற்றிக் கிடப்பதோடு வளர்ச்சியை நிறுத்திக் கொண்டால்—அதுதான் விலங்கு வாழ்வு. வயிற்றைச் சுற்றிக் கிடக்கும் வாழ்க்கைக் கொடி எழுந்து இதயத்தில் படர்ந்து எண்ணத்தில் அடர்ந்து மலர்ந்து மணம் வீசினால்—அதுதான் மனித வாழ்வு! கணக்கின் விரல்களுக்கு அடங்காது உலகத்தில் உருவத்தால் மனிதர்களாய் இருப்பவர்கள் உள்ளத்தால் விலங்குகளாய் வாழ்கின்றனர். விலங்காக இருக்கும் உள்ளத்தை மனிதனாக மாற்றும் அரும்பணியைத்தான் கலை செய்கிறது.

பணி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு கலை பிறப்பதில்லை—பயிர்களுக்கு உயிரளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடா மழை பெய்கிறது? என்றாலும் மழை பயிர்களுக்கு உயிரளிப்பதுபோல், உயிரளிக்கும் பணியைச் செய்வதுபோல், கலை தன் பணியைச் செய்கிறது. மண்ணில் விழும் மழை நீரை மனிதன் தன்னுடைய நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வதைப்போல், கலையையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இது தவறல்ல—இயற்கையின் கட்டளை!

கலையின் உருவங்கள் பல; முன்னோர் எண்ணிக்கையால் வரையறுத்திருந்தனர். ஆனால் கலையின் உருவங்கள் எண்ணிக்கையால் குறித்து நிறுத்த முடியாதன.

✲

கலைகளில் சிறப்புடைய பகுதி இசை, ஓவியம், நடனம் இவை போன்ற கவின் கலைப் பகுதியைச் சார்ந்தவை. கவின்கலைகளில் ஓவியத்துக்கு உள்ள இடம் உயர்ந்தது. எழுத்து மொழியின் தொடக்கம் ஓவியம்தான். மனிதன் காட்டில் வாழ்ந்து கொண்டிருந்தபோது எண்ணத்தை வெளியிட எழுத்துக்களை உண்டாக்கினான். அந்த எழுத்துக்கள் கோட்டால் வரைந்த சித்திரங்களே. மொழி நூல் அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவு இது. ஒருவனுக்கு அம்மை நோய் கண்டுள்ளது என்ற எண்ணத்தை அயலூருக்கு எழுதி அனுப்பினான் காட்டு மனிதன். எப்படி? தலையை எழுதி அதன் மேல் நிறைய புள்ளிகளை இட்டான். சிங்கம் அடித்து விட்டது ஒருவனை என்றால், ஒரு மனிதனைக் கீழே கிடப்பதுபோல் வரைந்து அவன் மார்பின்மீது சிங்கம் நிற்பதுபோல் எழுதிச் செய்தி அனுப்பினான். மனிதன் கண்ட முதல் எழுத்துக்கள் சித்திரங்களே என்றால் சித்திரம் தோன்றிய காலம் எவ்வளவு பழைமையானது!

விரல்களாலும் கருவிகளாலும் தீட்டப்பட்ட சித்திரம்தான் மனிதன் தோன்றிய பிறகு தோன்றியது. ஆனால் தீட்டப்படாத, தானே தோன்றும், சித்திரம், மனிதன் உண்டாவதற்கு முன்பே தோன்றி விட்டது. கண்ணும் மனமும் பெற்ற உயிர்கள் உலகில் தோன்றிய காலத்திலிருந்தே சித்திரம் தோன்றி விட்டது. 'சிம்ம சொப்பனம்' என்கிறோம். பொருள் என்ன? யானை உறங்கும்போது சிங்கம் தன் முன்னே வருவதுபோலக் கனவுகாண்கிறது. கனவில் சிங்கம் தோன்றுமென்றால் நினைவிலும் சிங்கம் தோன்றும். யானையின் நினைவுத் திரையில் சிங்கத்தின் சித்திரம் தீட்டப் பெறுகிறது. டார்வின் கொள்கைப்படி விலங்குகளுக்குப் பிறகு தானே மனிதன் உண்டானான். மனிதனுக்கு முன்பே உயிர்களிடத்தில் நினைவுச் சித்திரங்கள் தோன்றி விட்டன.

காட்டை விட்டு மனிதன் நாட்டுக்கு வந்தான். சித்திரமும் அவனோடு வந்தது. மனிதன் வளர்ந்தான் சித்திரக்கலையும் அவனோடு வளர்ந்தது. நாட்டில் எல்லோருக்கும் ஒரு மன்னன் இருந்த காலத்திலிருந்து எல்லோரும் இந்நாட்டு மன்னர்களாக வாழும் இக்காலம் வரை சித்திரக்கலை

வாழ்ந்து வந்திருக்கிறது. இதன் வாழ்க்கை ஒரு தொடர் கதை. ஆனால் வளர்பிறை! இதற்கு அளிக்கப்பட்ட பெருமையோ மன்னர்கள் காலத்தில் இருந்ததுபோல மனிதர்கள் காலத்தில் இல்லை. இன்றும் காவியம் செய்யும் புலவர் ஆஸ்தான கவிஞராக இருக்கிறார். ஆனால் ஓவியம் தீட்டும் புலவர் ஆஸ்தான ஓவியராக இருக்கிறாரா?

எது எப்படியேனும் போகட்டும்! ஓவியத்தின் பயன் மட்டும் என்றும் சிறப்போடுதான் நின்று நிலவுகிறது.

✲

சுவரை வைத்தே சித்திரம் எழுத வேண்டும் என்பது நீண்ட காலத்துப் பழமொழி. சுவர் பல்வேறு வகைப்பட்ட துணி—இவை ஓவியம் குடியிருக்கும் வீடுகள்—அன்றும், இன்றும்! இன்று காகிதமும் ஒரு புது வீடாக சேர்ந்துவிட்டது ஓவியத்துக்கு.

ஒரு திரை—சிறு சுவர்—அல்லது வெறுங் காகிதம்......சிறு சிறு வட்டில்களில் வண்ணக் குழம்புகள்...... தூரிகை......இவ்வளவோடு, தேர்ந்த கற்பனை, ஆழ்ந்த பயிற்சி......விளைவு? ஓவியம் தயாராகி விடுகிறது! வண்டு மலருக்கு மலர் தாவி, பூந்தோட்டத்துக்குப் பூந்தோட்டம் பறந்து திரிந்து, தேனை உறிஞ்சிக்கொண்டு வந்து கூட்டில் சேர்ப்பதுபோல், ஓவியன் உலகத்துக் காட்சிகளில் தென்படும் அழகையெல்லாம் கூட்டி வந்து ஏட்டில் தீட்டிக் காட்டுகிறான் ஓவியங்களாக. சித்திரங்கள் உயிர் பெற்றுப் பேசுகின்றன. அதைப் பார்க்கும் உயிருள்ள மனிதர்கள் சிலைகளாகி நின்று விடுகின்றனர். எல்லோரும் காணும் காட்சிதான். ஆனால் ஓவியன் அதைத் தீட்டிக் காட்டும்போது, ஏதோ ஒரு மாயசக்தி சித்திரம் முழுதும் நின்று காண்பவர்களைச் சொக்க வைக்கிறது. அதுதான் கலை!

கணநேரத்தில் அழியும் அழகுக் காட்சியை காலத்துக்கும் அழியாக் களிப்புக் காட்சியாக்கும் வல்லமை ஓவியக் கலைக்குப் பெருஞ் சிறப்பு அளிக்கிறது.

அந்தக் காலத்தில் 'டெலிவிஷன்' ஏது? தன் கருத்தைப் பறிகொடுத்து விட்ட காதலனுக்குக் காதலியின் காவியமும் ஓவியமும்தான் இந்தக் குறையைத் தவிர்த்தது. 'தூரம்' என்ற பாவி இருவர்க்கும் இடையே நின்று தடுத்தபோது ஓவியம்தான் அவளாக உயிர் பெற்றெழுந்து அவனோடு பேசி அவன் துயரத்தைக் குறைத்தது. இது மட்டுமா? காதலின் தூதாகவும் சென்று ஓவியம் நிகழ்த்திய கதைகள் எண்ணற்றவை.

ஆலயங்களுக்குச் சென்றால் சுவர்கள் புராணங்களைச் சொல்லுகின்றன. எப்படி? எண்ணற்ற வண்ண ஓவியங்களால்! ஓவியங்கள் புராணிகர்களாகிக் கதை பேசுகின்றன.

பள்ளிக்குச் செல்வோம். பாலகனின் கையில் பிரித்து வைக்கப்பட்டுள்ள பாட புத்தகத்தில் படங்களே நிறைந்துள்ளன. ஓவியம்தான் அங்கே கல்வி போதிக்கிறது!

✲

அரசியலார் எவ்வளவோ திட்டங்களைத் தீட்டுகின்றனர். அவைகளை மக்களுக்கு அறிவிக்க ஓவியங்கள் துணை செய்கின்றன. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு கிராமம் இப்படி இருக்கும் என்று ஒரு படம் கூறும். படத்தில் கிராமம் இராது. அழகிய சிறு நகர் இருக்கும். பார்ப்பவரின் மனம் விம்மும்; ஏக்கமடையும்.

Remember to obtain reliable, prompt & less expensive services :

Dr. N. RAJKUMAR, D. O. Sc.

Sight Testing Specialist & Optician,

127, IRWIN ROAD :: NEW DELHI

புகைவண்டி நிலையங்களுக்குப் போனாலோ, சுவர்களில் கண்ணையும் கருத்தையும் இழுக்கும் விளம்பரங்கள். பனி படர்ந்த மலை—பசுமை அடர்ந்த சோலை—பரந்த ஏரி—அதில் படகு வீடு......படம் அழைக்கும். 'காஷ்மீருக்கு வாருங்கள்—படகு வீட்டில் தங்கிக் காட்சிகளைப் பாருங்கள்' என்று! டிக்கட் வாங்கிக்கொண்டு அடுத்த வண்டியிலேயே காஷ்மீர் செல்லவேண்டும் என்று நினைப்போம். ஓவியத்தின் திறனல்லவா இது!

வியாபாரியின் விளம்பரத்துக்கு ஓவியம் வேண்டித்தான் இருக்கிறது. இக்காலத்தில் சினிமாவும் பத்திரிகையும் ஓவியத்தை விலக்கி விட்டால் நிச்சயம் பாதி உயிரை அவை இழந்து விடும்.

இலக்கியப் பணியும் அறிவுப் பணியும் புரிவோர்க்கு ஓவியக் கலை பணி புரிந்து வருகிறது. மாளிகைகள்போல் வீடுகள் நிறைந்த பெரிய வீதியில் நடைபாதைகளில் மனிதர்கள் உறங்குவதை ஓவியம் எடுத்துக் காட்டும்போது சிந்திக்காதவர் யார்? அகநானூற்றுக் காதலையும் புறநானூற்று வீரத்தையும் ஓவியக் கலை சித்திரங்களாக்கிச் சித்தரிக்கும்போது பண்டிதர் பெரும் இன்பம் பாமரரும் பெறுகின்றனர்.

ஓவியக் கலை இன்று மனிதனின் வாழ்க்கையில் பெரும் பங்கு ஏற்றுப் பணி செய்கிறது. சித்தன்னவாசல் சித்திரங்களும், அஜந்தா சித்திரங்களும் புகழை நிலை நாட்டியுள்ள நாட்டில் ஓவியக் கலை வளர்ந்துதான் வருகிறது. ஆனால் **அதை உணர்ந்து போற்றும் கலையுணர்வு மட்டும் இன்னும் பெருக வேண்டும்.** காவியம் தரும் இன்பம் கற்றறிந்தவர்களால் தான் உணர முடியும்; பெற முடியும். ஆனால் அதே இன்பத்தை ஓவியம் தருகிறது. கற்றறிந்தவர்க்கு மட்டுமல்ல, கற்றறியாத எல்லோர்க்கும். எழிலோவியத்தை எழுத்தறிவில்லாதவர்கள் கூட உணர்ந்து மகிழ முடிகிறதல்லவா! ஏன்? ஓவியம் எழுத்தறிவில்லாதார் உணரும் காவியம்—அதனால் தான்!

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:  மதராஸ்

புது டெல்லி கிளை: எம். 5, கன்னாட் சர்க்கஸ்,
(நார்த்தர்ன் ரயில்வே புக்கிங் ஆபீஸ் சமீபம்) **போன்: 45504**

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ. 1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ. 72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ. 57,80,000
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ. 76,00,000
31-12-53ல் உள்ள டெபாஸிட்டுகள்		ரூ. 21.85 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் செய்யப்படும்.

என். கோபால அய்யர், செக்ரடரி.

தமிழ் விழாவில் :

ஜனாதிபதிக்கு வரவேற்பு



டில்லி பிரதம மந்திரி ஸ்ரீ பிரம் பிரகாஷ், அமைச்சர் அளகேசன், திரு அவனாசிலிங்கம் செட்டியார் கலைக் கண்காட்சியைப் பார்வையிடுகிறார்கள்.



இலங்கை ஹைகமிஷனர் திரு. குமாரசாமி, டாக்டர் கிருஷ்ணன், திரு. அவனாசிலிங்கம் செட்டியார், ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்

நினைவு அலைகள்

திருவாவடுதுறை டி. என். ராஜரத்தினம்

தஞ்சாவூர் ஜில்லாவில் திருமருகல் என்றொரு சிவஸ்தலம் உண்டு. பரம்பரையாக நாதோபசனை செய்துவரும் சிவபக்த இசைவேளாள குடும்பத்தில் நடேசன் பிறந்தார். பிள்ளைப் பிராயத்திலேயே அவர் சிறந்த வித்வானுகப் பிரகாசித்தார். பிற்காலத்தில் பிரபல நாதஸ்வர வித்வானுகப் பரிணமித்து சீரும் சிறப்புமாக வாழ்ந்தார்.

திருமருகல் நாதஸ்வர வித்வான் நடேசபிள்ளையின் சகோதரியான கோவிந்தம்மாளின் புத்திரன்தான் நான். என்னுடைய தந்தையாரும் நாதஸ்வர வித்வானே. அந்தக் காலத்தில் திருவாவடுதுறை மடாலயத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக ஸ்வாமிகள் சிவஸ்தல யாத்திரை செய்து கொண்டு திருமருகல் வந்து தங்கினுர்கள். அப்போது நடேசப் பிள்ளைக்கு இருபது பிராயமிருக்கும். ஆலயத்தில் வரவேற்ற போது நாதஸ்வரம் வாசித்த நடேசப்பிள்ளையின் சங்கீதத்தைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதிகள், நடேசப் பிள்ளையை திருவாவடுதுறைக்கு வந்துவிடுமாறு பணித்து, வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்தார்கள்.

அந்தக் காலத்தில் மகாவித்வான் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், சங்கீத திலகங்களான மகா வைத்தியநாத ஐயர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர், ராமநாதபுரம் பூச்சி ஐயங்கார், கோனேரிராஜபுரம் வைத்தியநாத ஐயர் போன்ற பெரியோர்கள் திருவாவடுதுறையில் தங்கி சதஸை அலங்கரித்தார்கள். திருமருகல் நடேசப்பிள்ளைக்கு சங்கீத சாஸ்திர அப்பியாசம் செய்துவைக்கும்படி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சமஸ்தான வித்வான்களுக்குப் பணித்தார்கள். ஒரு சில வருஷங்களுக்குள்ளேயே எல்லாரும் பிரமிக்கும்படி நடேச பிள்ளை சங்கீத உலகில் பேரும் புகழும் பெற்றுவிட்டார். புத்திரப்பேறின்றி அவர் இரண்டாவது தாரம் மணம் செய்தும் அந்தப் பாக்கியம் கிடைக்காததால் என்னை சுவிகாரம் செய்து கொண்டார்.

கீர்த்தி ஓங்கியிருக்கும்போது, தமது இருபத்தெட்டாவது வயதில் நடேசபிள்ளை இயற்கை எய்தினுர். அப்போது எனக்கு இரண்டரை வயது. என்னைக் காப்பாற்றி சங்கீத சிக்ஷையும் செய்து வைத்தவர்கள் என்னுடைய பாட்டனுர் சிவஞானம் பிள்ளை அவர்களே.

என்னுடைய ஐந்தாம் பிராயத்தில் கல்விப் பயிற்சியும் சங்கீத சிட்சையும் ஆரம்பமாயிற்று. மகாவித்வான் திருக்கோடிக்காவல் கிருஷ்ணையர் அவர்களும், பிறகு கோனேரி ராஜபுரம் வைத்தியநாத ஐயர் அவர்களும் என்னுடைய சங்கீத ஆசிரியர்கள். ஒன்பதாம் வயதிலேயே நான் வாய்ப் பாட்டுக் கச்சேரி செய்யும் ஆற்றல் பெற்றுவிட்டேன். மிருதங்க வித்வான் அழகன் நம்பியாபிள்ளை அவர்களும் குற்றாலம் குப்புசாமிப் பிள்ளை அவர்களும் எனக்குப் பக்கவாத்தியம் வாசித்து ஆதரவு காட்டியிருக்கிறார்கள்.

என் வாய்ப்பாட்டைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மகாசந்நிதானம் அவர்கள் கார்வார் பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் மூலம் நாதஸ்வரப் பயிற்சியளிக்க உத்திரவிட்டார்கள்.

ஆதீனத்தில் விசேஷ காலங்களில் செம்பொன்னார்கோவில் ஸ்ரீ ராமஸ்வாமி நாதஸ்வரக்காரரும் நாகூர் ஸ்ரீ சுப்பய்யா நாதஸ்வரக்காரரும் நாதஸ்வரம் வாசித்துச் சேவை செய்வார்கள். அப்போதெல்லாம் இவர்களுடைய வாசிப்பு முறையைக் கேட்டு மகிழ்வதுடன், நானும் அப்படியே சாதகம் செய்து பார்ப்பது என் வழக்கம். என்னுடைய பன்னிரண்டாவது வயதில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முன்னிலையில் நாதஸ்வர சேவை செய்யும் பாக்கியம் கிடைத்தது. என்னுடைய வாசிப்பைக் கேட்டு மகிழ்ந்த ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்கள் அன்று முதல் என்னை ஆதீன வித்வானாகச் சேர்த்துவிட்டார்கள்.

குழந்தைப் பருவம் முதலேயே எனக்குத் துணிச்சல் அதிகம். சங்கீத உலகில் போட்டியின்றி ஜ்வலிக்க வேண்டும் என்ற ஆவலும் உண்டு. பதின்மூன்றாவது வயதில் நான் சங்கீதப்போட்டியில் கலந்துகொண்டிருக்கிறேன். அப்போதே எனக்கு இந்தக் கட்டுப்பாட்டுச் சங்கீதத்தைத் தகர்த்தெறிய ஆவல் உண்டு. என்னுடைய பதினான்காவது வயதில் ஸ்ரீ சின்னப்பக்கிரியாபிள்ளை அவர்களின் நாதஸ்வர வாசிப்பைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அது என் வாழ்க்கையில் ஒரு திருப்பமாகும். என்னுடைய சங்கீதபாணியையும் மாற்றியமைத்துக் கொண்டேன். ஒரு சில மாதங்களுக்கெல்லாம் நீடாமங்கலம் தவுல் வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளைக்கு விவாகம் நடந்தது. அப்போது நான் நாதஸ்வரம் வாசித்தேன். அங்குதான் எனக்கும் கல்யாணம் நிச்சயமாயிற்று. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையின் சிறிய தகப்பனாரின் குமாரியும், தற்போது பிரபலஸ்தாராக இருக்கும் பி. எஸ். வெங்கடகிருஷ்ணப்பிள்ளையின் சகோதரியுமான சாரதாம்பாளை எனக்குத் திருமணம்

செய்து வைத்தார்கள். அப்போது சாரதாம்பாளுக்கு எட்டு வயது. என்னுடைய கல்யாணத்தில் பல வித்வான்கள் சங்கீதக் கச்சேரி செய்து கௌரவித்தார்கள். சின்னப்பக்கிரியாபிள்ளை நாதஸ்வரம் வாசித்து தம்முடைய அன்பைக் காட்டினார்கள்.

சிறுபிராயமுதலே நான் சுதந்திரப் பிரியன். என்னுடைய உழைப்பில் நம்பிக்கையும் கௌரவமும் உண்டு. அந்தக் காலத்தில் பணக்காரர்கள் நாதஸ்வர வித்வான்களை சேவைக்கு அமர்த்திப் படாதபாடு படுத்தி வந்தார்கள். வெயில் மழை என்று பாராமல், நிசிநேரம் ஏதுமில்லாமல் அவர்கள் விரும்பும் போது பாடி மகிழ்விக்கவேண்டும். உழைப்புக்கேற்ற உரிமையும் அந்தஸ்தும் ஏற்படப் பாடுபட நான் உறுதி செய்து கொண்டேன். இதனால் செல்வர்களின் விரோதமும் குரோதமும் எனக்கு ஏற்பட்டது. பல இடையூறுகளும் நேர்ந்தன. நான் மனஞ்சலிக்கவில்லை.

மைசூர் தசரா விழாவுக்கு நான் வருஷா வருஷம் சென்று நாதஸ்வரம் வாசிப்பதுண்டு. நிறையச் சம்பாவனைகளும் கிடைக்கும். ஆனாலும் நான் உள்ள நிறைவோடு சங்கீத சேவை செய்து மன்னரை மகிழ்விக்கவேண்டும் என்ற ஆசையுண்டு. என் மனம் சந்தோஷமாக இருக்கும்போது மன்னரைப் பார்க்க முடியுமா? யானையின்மீது மன்னர் பவனி வருவார். நான் மண்ணில் நின்று நாதஸ்வரம் வாசிப்பேன். நிலை வேறுபாட்டை நான் உணர்ந்தேன். எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்று மகாகவி பாரதியார் சொன்ன வாக்கு என் மனத்தில் இடம் பெறலாயிற்று. நான் மைசூருக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டேன். என் சௌகரியப்படியும், எனக்குத் திருப்தியாகவும் நடந்து கொண்டவர்களுக்கு நான் மனமார நாதஸ்வரம் வாசித்து மகிழ்வித்து வரலானேன்.

ஒரு சமயம் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பாளையங்கோட்டையில் கல்யாண ஊர்வலத்தில் நாதஸ்வரம் வாசிக்க ஒப்புக்கொண்டேன். அப்போது காலஞ்சென்ற எஸ். ஜி. கிட்டப்பா ஐயரும் என்னுடன் இருந்தார்கள். அவருடைய மாமனார் வீட்டில், வீரராகவபுரத்தில், நாங்கள் ஜாகை இறங்கியிருந்தோம்.

தனிகர் வீட்டுக் கல்யாணம். பிரமாத ஏற்பாடுகள். இரவு ஒருமணி வரையில்தான் கச்சேரி செய்வேன் என்று முன் ஒப்பந்தம் செய்துகொண்டே நான் சென்றிருந்தேன். இரவு இரண்டு மணியாயிற்று. தனிகர் என்னை விடவில்லை. தொடர்ந்து வாசிக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். மூன்று மணி வரையில் நாதஸ்வரம் வாசித்தேன். அப்போதும் அவருக்குத் திருப்தியில்லை. நானோ, என்னுடன் வாசித்த

நாதஸ்வரக்காரரையும், தவுல்காரர்களையும், ஊர்வலத்தை வீட்டில் கொண்டு விட்டு வாருங்கள் என்று கூறிவிட்டு காரில் ஏறி ஜாகைக்குப் போய்விட்டேன்.

விடிய ஒரு நாழிகை இருக்கும். பாளையங்கோட்டையிலிருந்து ஓர் ஆள் ஓடிவந்தான். அந்தத் தனிகர் என்னுடைய கோஷ்டியினரை ஓர் அறையில் போட்டுப் பூட்டி வைத்திருப்பதாகக் கூறினான். எனக்கு ஆத்திரம் தாளவில்லை. உடனிருந்த ஸ்ரீ கிட்டப்பா, 'ஒரு நிமிஷம் பொறு' என்று கூறி வெளியே சென்றார். சிறிது நேரத்திற்கேல்லாம் ஒரு லாரி நிரம்பப் போலீஸ் படையை ஏற்றிக்கொண்டு ஓர் சர்க்கிள் இன்ஸ்பெக்டருடன் திரும்பி வந்து என்னையும் அழைத்துச் சென்றார். போலீஸ் வரும் செய்தி முன்னதாகவே எட்டிவிட்டது போலும். அந்தத் தனிகர் எங்கோ ஓடி ஒளிந்துவிட்டார். எங்களுடைய மனிதர்களும் விடுதலை பெற்றார்கள். இதற்கிடையில் போலீஸார், அந்தத் தனிகரைத் தேடிப்பிடித்துவிட்டார்கள். ஒரு சில பிரமுகர்கள் மத்யஸ்தம் செய்தார்கள். எங்களுக்குப் பேசிய பணத்துடன் அதிகமாக ஓராயிரம் கிடைத்தது. வழக்குத் தொடராமல் சமரஸம் செய்து கொண்டோம்.

எனக்கு இருபத்தைந்து பிராயமாகியும் புத்திரப்பேறு இல்லாததால் என்னுடைய மனைவி சாரதாம்பாளும் உறவினரும் என்னை மறு விவாஹம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினார்கள். மதுரை நாதஸ்வர வித்வான் செல்லய்யா பிள்ளையின் புத்திரி ஸ்ரீமதி சுப்புத்தாயியை விவாஹம் செய்துகொண்டேன். மேலும் பல வருஷங்களாகியும் இரண்டாம் மனைவிக்கும் புத்திரப்பேறு இல்லாததால், மீண்டும் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டேன்.

இதன் நடுவே என் முதல் மனைவி சாரதாம்பாள் கருவுற்றாள். பேறுகாலம் தாண்டியும் பேறு கிட்டாததால் டாக்டர்களைக் கலந்தாலோசித்தேன். நோய் என்றனர் சிலர்; கருவுற்றிருக்கிறார்களா என்ற ஐயம் சிலருக்கு. ஒரு வருஷமாகியும் பிரசவமாகாததால் சென்னையில் வந்து டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியார் அவர்களைக் கலந்தாலோசித்தேன். அவர்கள் நன்றாகப் பரிசோதனை செய்து சத்திரம் செய்யத் தீர்மானித்தார்கள். வயிற்றில் கட்டியிருந்தது. குழந்தையும் இருந்தது. உயிருடன் குழந்தை வேறு தாய் வேறாக்கி விட்டதுடன் மூன்று மாத காலம் தம்முடைய கண்காணிப்பில் டாக்டர் வைத்துக்கொண்டிருந்தார். பிறகு விடை கொடுத்தார். இந்தச் சமயத்தில் தான் கவி காளமேகமாகத் திரைப்படத்தில் நான் நடிக்க ஏற்பாடுகள் நடந்தது.

நாதஸ்வர வாசிப்பில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்து வித்வான்களுக்கு அந்தஸ்தும் ஏற்படுத்திய நான், வாத்தியத்திலும் சில மாறுதல்களைக் கையாள விரும்பினேன். பல வருஷங்களுக்கு முன்பு வெள்ளி நாதஸ்வரம், தங்க நாதஸ்வரம் என்று பெரிய வித்வான்கள் வைத்துக்கொள்வதுண்டு. நாதஸ்வர சுருதியும் அஞ்சு கட்டை ஆறு கட்டை வைத்துக் கொள்வார்கள். நானும் இந்த சுருதிகளிலேயே வாசித்து வந்தேன். தங்க நாதஸ்வரத்தின் நாதம் எனக்கு இசையவில்லை. சுருதியையும் குறைக்க ஆர்வங்கொண்டேன்.

நாதஸ்வர வாத்தியம் செய்வதில் தேர்ச்சி பெற்ற திருவானைக்காவல் சுப்பிரமணிய ஆச்சாரியை அழைத்து வந்து என் விருப்பப்படி மரத்தில் ஓர் வாத்தியம் செய்துதரச் சொல்லி வாசித்துப் பார்த்தேன். மிகவும் திருப்தியாக வாசிப்பு அமைந்தது. நாதஸ்வரத்திற்குக் கீழே போடப்படும் அனசு பெரியதாக இருந்தால் ஒலி கம்பீரமாகவும் இழைந்தும் வருமோ என்ற சந்தேகம் எனக்குத் தோன்றிற்று. வீட்டிலிருந்த கிராமபோன் குழாயை நாதஸ்வரத்தில் இணைத்து வாசித்துப் பார்த்தேன். மிகவும் பிரமாதமாக அமைந்து விட்டது. உடனே ஆசாரியை அழைத்து வந்து நான் சொல்லும் அளவு, அமைப்புப்படி அனசு அமைக்கச் சொல்லி, வாசித்துப் பார்த்தேன். இன்று நாதஸ்வர வாத்தியத்தில் நான் செய்த மாறுதலுள்ள அனசு சகஜமாகிவிட்டது.

நாதஸ்வர வாத்தியம் கண்ணியமானது; சாஸ்திரியமானது. இந்தக் காலத்தில், அதுவும் சினிமா சகஜமாகிவிட்ட பிறகு, கர்நாடக சுத்தம் தவறி, சினிமா மெட்டுக்களையும், மகுடிகளையும் நாதஸ்வரக்காரர்கள் வாசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் சங்கீத உலகிற்கே தீங்கிழைக்கிறார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாதஸ்வாத்தின் மேன்மையை வெளி நாட்டினருக்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. சென்ற ஆண்டில் ஜுலை—அக்டோபர் மாதங்களில் கோஷ்டியுடன் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பினேன். சென்ற இடமெல்லாம் அமோக வரவேற்புதான்! ஆசையுடன் அனேக ஆயிர மக்கள் திரண்டு கூடி, கச்சேரியை மிகவும் ரஸித்தனர். இவ்வருஷம் ஆகஸ்டுமீ அமெரிக்க நாடுகளைச் சுற்றுவதாக திட்டமிட்டுள்ளேன்.

என்னுடைய சங்கீத பரம்பரையை வளர்க்க, என் குமாரன் சிரஞ்சீவி சிவாஜிக்கு பயிற்சியளித்திருக்கிறேன். பத்தொன்பது பிராயமுள்ள அவனுக்கு வாய்ப்பாட்டும் நாதஸ்வரமும் சிக்ஷையுண்டு.

For

Good Butter and Ghee

Please remember to
contact

BUTTERWAYS DAIRY

Kashmere Gate, Delhi.

Suppliers to the South India Club Co-operative Supply Society Limited, and several messes.

Telephone { *Office* : **24357**
Res : **24980**

அசோகவனம்

S. ஸ்ரீநிவாசன்

இலங்கை முழுவதிலும் சீதையைத் தேடித் திரிந்த அனுமன் அவளை எங்கும் காணுமல் அசோகவனம் அடைகிருன். நள்ளிரவு கோர விகார ரூபிகளான கொடிய அரக்கிமார்கள் வெகு நேரம் காவல் செய்த களைப்பினுல், சற்று நழுவ விட்ட ஆயுதங்களை மறுபடி எடுத்துக்கொண்டு எழுகிருர்கள். எதற்காக இப்பெண்கள் ஆயுதந் தாங்கி சேனை போலத் திரண்டிருக்கிருர்கள்? உற்று நோக்குகிருன். கரிய மேகக் கூட்டங்களின் உள்ளிருந்து அவைகளைப் பிளந்து கொண்டு வெளிப்படுகின்ற மின்னலைப் போல அந்தக் கரிய அரக்கி மார்களிடையே சீதை விளங்கக் காண்கிருன். இராமன் கூறிய இலக் கணங்களெல்லாம் இவளிடத்தில் இருக்கின்றன. இவள் இவ்வாறு கற்பினைக் காத்திருக்கும் காட்சியைக் கண்ணுல் காணும் பாக்கி யத்தை இராமன்

"காணநோற்றிலன், கமலக் கண்களால்"

என்று சிந்தித்துநிற்கும் சமயத்தில் இராவணன் தோன்றுவாஞ யினுன்.

* * *

என்ன கம்பீரம்! என்ன அந்தஸ்தின் பெருமிதம்! என்ன செல்வத்தின் செருக்கு! இராவணேஸ்வரனல்லவா? சீதையினிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க, பார் அதிரும்படி நடந்து வருகிருன். இராவணனது கரிய பெரிய தேகம் கடல் போலக் காண்கிறது. அவனது பத்துத் தலைகளாகிய உதயகிரிகளின் மேலே, பத்து சூரியர் போலப் பத்துக் கிரீடங்கள் பிரகாசிக்கின்றன. இவ்வொளியால் அந்நள்ளிரவும் இருள் நீங்கிப் பகல் போலாயிற்று!

யார் யார் கூட வருகிருர்கள்? ஊர்வசியும், மேனகையும், திலோத்தமையும் பின்தொடர்கிருர்கள். ஊர்வசி உடைவாளேந்திப் பயத்துடன் வருகிருள்; அடிக்கு அடி வெற்றிலை மடித்துத் தந்து கொண்டே மேனகை நகர்கிருள். திலோத்தமைக்கும் நல்ல உத்தியோ கந்தான் கிடைத்திருக்கிறது. இராவணனுடைய செருப்பை ஏந்தி செல்லுகிருள்! மற்றைத் தேவ மாதர்கள் புடைசூழ, தீபமேந்தி எண் ணிறந்த மடந்தையர் செல்ல அன்னங்கள் ஒலித்துக்கொண்டு நடத் தல் போலக் காற் சிலம்பு ஒலிக்க யாவரும் படர்ந்து நடக்கின்றனர்.

அவர்களின் நடுவில் நடந்து வருகிறான் இலங்கை வேந்தன்; பர்வதம் பெயர்ந்து வருவதுபோல் பூமி அதிர்கிறது. ஏன்? இவன் பாரத்தினால் என்று நினைக்கிறீர்கள்? இல்லை!

இவன், இவனைச் சூழ்ந்து வரும் அரம்பையர் கூட்டம்—இவர்கள் அணிந்திருந்த கர்ப்பூரம், கலவைச் சந்தனம், புஷ்பமாலை, இவைகளின் பரிமள கந்தம் எட்டுத் திசைகளிலும் வீசுகிறது. இவ்வுலகத்தைத் தாங்கி நிற்கும் எட்டு திக்கஜங்களின் நீண்ட மூக்கில் இந்த வாசனை போய்த் துளைக்கின்றது; துளைக்கவே அவை தங்கள் தலைகளை இப்படியும் அப்படியும் மூச்சு விட்டுக் கொண்டே அசைக்கின்றனவாம். அதனாலல்லவோ அவை தாங்கியிருக்கும் இப்பூமி அதிர்கிறது!

என்ன கற்பனை! கம்பன் தான் சொல்லட்டுமே!

"உருப்பசி உடைவாள் எடுத்தனள் தொடர,
மேனகை வெள்ளடை உதவ,
செருப்பினைத் தாங்கி திலோத்தமை செல்ல,
அரம்பையர் குழாம் புடைசுற்ற,
கருப்புரம், சாந்தம், கலவையும், மலரும்,
கலந்துமிழ் பரிமள கந்தம்,
மருப்புடை பொருப்போர் மாதிரக் களிற்றின்
வரிக்கைவாண் மூக்கிடை மடுப்ப"

METRO

High Class Tailors & Dry Cleaners

64-A, KHAN MARKET :: NEW DELHI

OUR SPECIALITIES ARE :

Ladies & Gents Tailoring

- SHORT BUTTONED UP-COATS, TROUSERS, SUITS, BUSH SHIRTS & SHIRTS
- LADIES SUITS & BLOUSES

Dry Cleaning & Dyeing

- GABERDINE, SHARK SKIN SUITS, SAREES DRY CLEANING
- SAREE DYEING
- CARPET DARNING & CLEANING

Quality, Promptness & Service are our Motto.

கலைஞர் உள்ளம்

'ராஜு'

வீணை சுந்தரம் ஐயரை ஜனங்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. அவர் காலமாகி பதினைந்து வருஷங்கள்தான் ஆகின்றன. அவர் வாழ்ந்த நாளில் அவரை 'சரஸ்வதியின் மறு அவதாரம்' என்றும் 'அவருக்கு இணை அவரேதான்' என்றும் பாராட்டிய ரசிகர்கள் மேற்கொண்டு அவரைப் புகழ்வதற்கு அடைமொழி தெரியாமல் திண்டாடினார்கள். வீணா கானத்தில் சுந்தரம் ஐயர் மகா விற்பன்னர் என்பதில் அபிப்பிராய பேதமே இருக்கவில்லை.

ஆனால் அபிப்பிராய பேதத்துக்கு இடம் கொடுத்த விஷயம் ஒன்று இருந்தது: அவருடைய வாழ்க்கை வரலாறு. பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். வரித்த மனைவி இருந்தும் வேறு ஒருவளிடம் அவர் கொண்ட காதலே அவருடைய திடீர் மரணத்துக்குக் காரணம் என்று சிலர் கூறினார்கள். பத்தரைமாற்றுத் தங்கமான மனைவியை அன்புடன் நடத்தாமல் பல தொல்லைகளுக்கு இலக்கானார் என்று வேறு சிலர் சொன்னார்கள். அவருக்குப் பைத்தியம் பிடித்துப் போய் வீணை வாசிப்பதை அறவே நிறுத்தி விட்டார் என்றும் கேள்வி.

எல்லாம் வதந்திகள் என்றாலும் ஒவ்வொன்றிலும் ஏதோ உண்மை இருக்கவேண்டும் என்று என் உள்ளுணர்வு கூறிற்று. உண்மை எந்த மட்டில் என்பதை எப்படிக் கண்டறிவது?

நம்பிக்கை தேய்ந்து, வீணை சுந்தரம் ஐயர் என் சிந்தனைகளிலிருந்து அநேகமாய் மறைந்து போன சமயம், என் முயற்சிக்குப் பலன் கிட்டியது, எதிர்பாராத இடத்தில். ஆம், மகாபலிபுரத்தில்.

* * * *

இந்த வாய்ப்பை அளித்தவருக்கு வயது நாற்பதுக்கு மேல் இருக்கும். சத்திரம் போல காணப்பட்ட பெரிய வீடு ஒன்றில் அவரை, நான் சந்தித்தது, அவருடன் மலைச் சிற்பங்களைப் பார்வையிடச் சென்றது, வீணை சுந்தரம் ஐயரைப் பற்றி அவர் பேச்சு எடுத்தது— இதை எல்லாம் இங்கே விவரிக்க இடம் இல்லை.

* * *

வீணை சுந்தரம் ஐயர் சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர் என்று பொதுவாக எல்லோரும் நினைக்கிறார்கள். அவருடைய பாட்டனாருக்குப் பாட்டனார் தஞ்சாவூர் அரண்மனையில் வித்வானாக இருந்ததைத் தவிர அந்த வம்ச வழியில் வேறு யாருக்கும் சங்கீதத்தில் அக்கறை இருக்கவில்லை. 'சங்கீதப் பித்து' ஒரு காலத்தில் அவருடைய குடும்பத்தை ஆட்கொண்டிருந்தது என்பதற்கு சாட்சியாக வீணை ஒன்று ஒரு மூலையில் கவனிப்பாரற்றுக் கிடந்தது. சுந்தரம் ஐயரின் தாத்தா கிராம முன்சீப்பாகவும், தகப்பனார் கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாகவும் வேலை பார்த்தவர்கள்.

சிறு வயதிலேயே சுந்தரத்துக்குத் துடுக்குத்தனம் அதிகம். அவருக்குப் படிப்பு சொல்லித் தர முற்பட்ட வாத்தியார்கள் தோல்வியை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை, 'உங்கள் பிள்ளை மகா துஷ்டனாய் இருக்கிறான்' என்று சுந்தரத்தின் தகப்பனார் காதில் போட்டு வைத்தார்கள்.

பெண்களும் ஆண்களும் ஒன்றாகப் படித்த பள்ளிக்கூடம். சுந்தரத்தின் 'வால்த்தன'த்தைக் கண்டு பெண்கள் அஞ்சினார்கள். சுந்தரம் என்றால் அவர்களுக்கு சிம்ம சொப்பனம்.

வீட்டிலும் சுந்தரம் சும்மா இருக்க மாட்டார். மூலையில் கிடந்த வீணையை மீட்டிவிட்டு ஓடி ஒளிந்து கொள்வார். ஸ்நானம் செய்து பகவானை ஸ்மரித்துவிட்டு பயபக்தியுடன் வீணையைக் கையில் எடுக்க வேண்டும் என்பது தகப்பனார் கட்டளை. அதை மீறுவதில் பிள்ளைக்கு அளவிலாத ஆனந்தம்.

பிள்ளை படிக்கவும் செய்யாமல் சொன்ன பேச்சைக் கேட்பதும் இன்றி ஊரைச் சுற்றித் திரிவது கண்டு தகப்பனார் மனம் புழுங்கி ஒரு தீர்மானத்துக்கு வரத் தூண்டி விட்டது. அவசர அவசரமாக ஏதோ ஒரு இடத்தில் பொருத்தம் பார்த்து பிள்ளைக்கு கல்யாணம் செய்வித்தார். தம் வாழ்க்கையிலேயே அவர் செய்த மகத்தான தவறு இது ஒன்று தான். அப்போது சுந்தரத்துக்கு வயது பதினைந்து.

அவருக்கு வாழ்க்கைப்பட்ட பத்மா அவரைவிட ஏழு வயசு சின்னவள். சின்ன வயதிலேயே 'கால்கட்டு' ஏற்பட்டு விட்டால் பிள்ளை பொறுப்பை உணர்ந்து அடங்கிப் போவான் என்று தகப்பனார் எதிர்பார்த்தார். ஏமாந்து போனார். சுந்தரம் பழைய நடத்தைக்குச் சிறிதும் பழுதின்றி நடந்தார். பொறுக்க முடியாமல் ஊரார் சுந்தரத்தின் தகப்பனாரிடம் வந்து "உமது பிள்ளைக்கு காலில் சங்கிலி போட்டு வீட்டில் கட்டி வைக்கிறீரா அல்லது நாங்கள் போலீஸில் 'கம்ப்ளெயிண்ட்' கொடுக்கவா? என்று மிரட்டினார்கள். சுந்தரத்தின் தகப்பனாருக்கு வெறி கண்டதோ என்னவோ, பிள்ளையை விளாசு விளாசு என்று மூங்கில் கொம்பால் பிய்த்து வாங்கி விட்டார். அன்றிரவு கோபித்துக்கொண்டு

Rana

Fountain Pen

For

Durability and Smooth Writing



Use

Rana Ink

and Ensure Longer Life

For Your Pen

Manufacturers:

RANA LABORATORIES :: MADRAS-14.

Distributors for Delhi:

Messrs. VADULA AGENCIES,

Post Box No. 89. :: New Delhi-1.

வீட்டைவிட்டு வெளியேறிய சுந்தரத்தைப் பற்றி அடுத்த பத்து வருஷங்கள் ஒரு தகவலுமே கிடைக்கவில்லை.

சுந்தரம் அந்தப் பத்து வருஷ காலத்தில் எங்கே போனார், என்ன செய்தார் என்பது நாளது வரையில் புரியாத மர்மம்தான். அந்தப் பத்து வருஷமும் பத்மா அனுபவித்த வேதனையும் கொஞ்ச நஞ்சம் இல்லை. கணவனின் பிரிவினால் அல்ல. அந்தப் பிரிவை உணரக்கூடிய வயது இல்லையே! ஊரார் வாயில் அவள் விழுந்து புறப்பட வேண்டியிருந்த நிர்ப்பந்தத்தினால் தான். 'துடைகாலி! இவள் போன எந்த இடம் தான் உருப்படும்!' இதுபோல வசைமாரிகள். பிஞ்சு மனம் இனம் தெரியாத குழப்பத்தில் சிக்கித் தவிக்கும். 'சுந்தரத்தை நானா விரட்டினேன்?' என்று அவள் தனக்குத் தானே கேட்டுக் கொள்வாள்.

சுந்தரம் திரும்பி வந்தபோது அவர் வெகுவாய் மாறிவிட்டதாக ஊரார் நினைத்துக்கொண்டார்கள். தகப்பனார் பிள்ளையை அணைத்துக் கொண்டு கதறி அழுதார். 'இந்தப் பத்து வருஷகாலம் என்னப்பா செய்தாய்?' என்று ஆனமட்டும் கேட்டுப் பார்த்தார். பிள்ளை அதைப்பற்றி வாய் திறக்கவேயில்லை. அதிகம் வற்புறுத்திக் கேட்டால் மறுபடியும் பிள்ளை ஓடிப்போய் விடுவானோ என்ற பயத்தில் தகப்பனார் அதற்கு மேல் வாய்திறக்கவில்லை.

என்ன காரணத்தாலோ பத்மாவுக்கு காணமற்போன கணவர் திரும்பிவரக் கண்டும் அவ்வளவு சந்தோஷம் ஏற்படவில்லை. 'என்னைத் தவிக்கவிட்டு ஊரார் வசைக்கு ஆளாக்கிப் போனாரே' என்ற துக்கம் அவள் உள்ளத்தைத் துளைத்து ஆறுதரணம் உண்டாக்கிவிட்டிருந்தது போலும்.

சுந்தரத்தின் நடத்தையில் இப்போது மாறுதல் காணப்பட்டது. தன் வயதையொத்த பெண்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. வீட்டு மூலையில் சொஸ்தமாக தூங்கிக்கொண்டிருந்த வீணையைத் தந்தி மீட்டி எழுப்பினார். கோவில் பிராகாரம் ஒன்றில் போய் உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்கில் வீணையை மீட்டினார் ஒருநாள். பிறகு அதுவே தினசரி வழக்கமாகவந்துவிட்டது.

'வீணையை மீட்டிக் கொண்டே இருந்தால் இலையில் சாதம் வந்து விழுமா?' என்று பத்மா ஆத்திரம் தீர ஒரு நாள் கேட்டுவிட்டாள்.

"பொறுமை இருந்தால் நிச்சயம் விழும்" என்று பதில் கூறினார் சுந்தரம்.

'இடிதான் விழும்' என்று கூறி பத்மா தலையில் இடித்துக் காட்டி நொந்துகொண்டாள்.

இன்னொரு சமயம் வார்த்தை தடித்துவிட்டது.

'வேலை செய்து சம்பாதிக்காமல் இப்படி உட்கார்ந்து கொண்டு அப்பா சொத்தைக் கரைப்பதற்கு உங்களுக்கு வெட்கமாய் இல்லை! உங்களுக்குத்தான் சூடு சுரணை கிடையாது என்றால் எனக்குக் கூடவா?' என்று பத்மா விசும்பினாள்.

"எனக்கு யார் வேலை கொடுக்கிறார்கள்? இந்த வீணை இருக்கக் கொண்டு கொஞ்சமாவது கவலைகளை மறந்திருக்க முடிகிறது" என்றார் சுந்தரம் பதிலுக்கு.

'அந்த வீணையை ஒரு நாள் உடைத்து எறியப் போகிறேன். பார்த்துக்கொண்டே இருங்கள்' என்று ஆத்திரத்துடன் பேசினாள் பத்மா.

'அப்புறம் நீ உயிருடன் இருப்பதை நானும் பார்த்துவிடுகிறேன்' என்று வார்த்தைகளில் அனல் வீசப் பேசினார் சுந்தரம்.

ஊரில் மற்ற கணவன்மார்கள் அவரவர் வேலையைச் சரிவரச் செய்து சம்பாதித்துக் கொண்டு வர பெண்டுகள் அழகாகச் குடித்தனம் செய்வதைக் கண்ட பத்மா தானும் அவ்விதம் செய்ய முடியாத நிலைமையில் இருப்பதைக் கண்டு வெதும்பினாள். கணவன்மீது ஆத்திரமும் வெறுப்பும் பொங்கி எழுந்தன. ஆத்திரப்பட்டு என்ன பிரயோஜனம்? யாருக்கு என்ன கொடுத்து வைத்திருக்கிறதோ அதைத்தானே அனுபவிக்கலாம்?

அவமானம் தாங்காமல் புருஷனுடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு பிறந்தகத்துக்காக பத்மா ஊரைவிட்டுப் போவதற்கும் நீடாமங்கலம் மஹாலிங்க சாஸ்திரிகள் அங்குவந்து சேருவதற்கும் சரியாக இருந்தது. சுந்தரம் அவரிடம் சிஷ்யராக அமர்ந்து இரண்டு வருஷம் சிக்ஷை சொல்லிக் கொண்டார். குருவின் வேஷ்டிகளைத் துவைத்து உலர்த்தி மடித்துவைப்பது உள்பட அவருக்கு உரிய பணிவிடைகளில் ஒன்றுக்கும் குறை வைக்கவில்லை.

இந்த விதமாய் பத்து வருஷங்கள் ஓடிவிட்டன.

சுந்தரத்துக்கு வீணையில் நல்ல பயிற்சி ஏற்பட்டிருந்தது. ஊர்க் கோவிலில் நடந்த கும்பாபிஷேகத்துக்கு அவருடைய வீணைக் கச்சேரி அரங்கேற்றமாயிற்று. இந்த அரங்கேற்றத்துக்கு அடுத்த முக்ய சம்பவம் பந்தநல்லூர் ஜமீன்தார் ஒருவர் வீட்டுக் கல்யாணத்தில் கல்யாணியை அவர் முதன் முதலாகச் சந்தித்ததுதான்.

கல்யாணி அழகி என்று சொல்வதற்கில்லை. சுமாரான தோற்றம் தான். ஆனால் கண்களில் ஒரு குறுகுறுப்பு இருந்தது. சுந்தரத்தின் வீணா கானத்தில் அன்று மெய்ம் மறந்துபோய் உட்கார்ந்துவிட்டாள். அவளையுமறியாமல் கண்களில் நீர் மல்கிற்று. உணர்ச்சிப் பரவசத்துடன் சுத்தரத்தைக் கை கூப்பி வணங்கி 'ரொம்ப அற்புதமாய் இருந்தது. என் அம்மா இதைக் கேட்டால் பூரித்துவிடுவாள். எழுந்து நடமாடக் கூடிய நிலையில் இல்லையே என்று வருத்தப் படுகிறேன்' என்று கூறினாள்.

சுந்தரம் என்ன நினைத்தாரோ, 'அதற்கென்ன உங்கள் வீட்டிலும் ஒரு கச்சேரி வைத்துவிட்டால் போகிறது' என்றார். கல்யாணிக்கு தன் காதுகளை நம்ப முடியவில்லை.

அதன் பிறகு கல்யாணி வீட்டில் அவர் செய்த கச்சேரி ஒன்றல்ல இரண்டல்ல; அதற்கு ஒரு கணக்கு இருக்க முடியாது.

சுந்தரத்தின் வீணையின்பால் கல்யாணி கொண்ட காதல் நாளடைவில் அவரையே அவள்பால் ஈர்த்தது. மாதம் ஒரு முறையாவது கல்யாணி இருந்த ஊருக்கு வராமல் இருந்தால் அவருக்கு மனம் நிம்மதியாய் இராது. கல்யாணியை அடிக்கடி அவர் பார்க்க வந்து போனது ஊர் வாயைக் கிளறிவிட்டது. சுந்தரம் அதை லக்ஷியம் செய்யவில்லை. கல்யாணியின் முகத்தில் அவர் கண்ட உற்சாகத்தை மறுக்க ஊருக்கு உரிமை இல்லை என்று மனம் வாதித்தது.

பத்மாவின் காதிற்கும் இந்த விஷயம் எட்டிற்று. கலக்கத்துடன் ஓடிவந்து கணவனின் காலில் விழுந்தாள். தான் செய்த தவறுகளை மன்னித்துத் தன்னை ஏற்றுக்கொள்ளும்படிக் கெஞ்சினாள். 'அக்னி சாட்சியாக உன்னை வரித்த

பிறகு உன்னை நிராகரிக்க எனக்கு மனம் இல்லை. உன்னைப் போஷிக்க வேண்டிய என் கடமை தப்பாது. ஊரார் கண்களில் மட்டுமே நாம் தம்பதிகள்' என்று சுந்தரம் கூறி விட்டார். உடைந்துபோன அவரது உள்ளத்தில் பரிவுக்கே இடம் இருக்கவில்லை.

ஐந்து வருஷங்கள் இவ்விதம் அவருடைய வாழ்க்கைப் படகு ஓடிற்று. கல்யாணியின் தாயார் கண் மூடினாள். தன்னந்தனியாக விடப்பட்ட கல்யாணிக்கு தன் வீட்டில் அடைக்கலம் கொடுத்தார் சுந்தரம். சுந்தரத்தின் வீணை கானத்தில் கல்யாணி தன்னை மறந்து கண்ணீர் உகுத்தது பத்மாவுக்கு புதுமைக் காட்சியாக இருந்தது. தன்னுடைய பிசகு அவளுக்கு லேசாகப் புலப்பட ஆரம்பித்தது. ஆனால், புலப்பட்டுப் பயன்?

சங்கீதத் துறையில் சுந்தரம் ஐயரைப் புகழ் தேடிக்கொண்டு வந்தது. தான் கச்சேரி செய்யப் போன இடங்களுக்கெல்லாம் கூட கல்யாணியை அழைத்துக்கொண்டு போனார். தனக்குக் கிடைத்த பிராபல்யத்துக்கு அவள் அதிர்ஷ்டமே காரணம் என்று அவர் நம்பினார். சதஸில் அவள் உட்காராவிட்டால் வீணைத் தந்தியில் அவருடைய விரல்கள் பதிய மறுத்தன. அன்பில் அவள் செய்த சிச்ருஷைகளைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார். யார் எவ்வளவு உயர்வாகப் பேசினாலும், அவர் ஒரு பொருட்டாகவே நினைக்கமாட்டார். கல்யாணி வாய் திறந்து 'இன்று வாசிப்பு ரொம்ப நன்றாய் அமைந்து விட்டது' என்று சொல்லிவிட்டால் போதும் அவருக்கு. அதைத்தான் அவர் விரும்பினார், ஏற்றுக்கொண்டார்.

அவருக்கு அப்போது வயது நாற்பத்தைந்து. கவலையால் மனம் நலிந்துபோன பத்மாவை காச நோய் பிடித்துக்கொண்டது. மரணப் படுக்கையில் இருந்தபடி கணவனுக்குச் சொல்லி அனுப்பினாள். சுந்தரம் ஐயர் வந்து மனைவி இருந்த கோலத்தைக் கண்டு திடுக்கிட்டார். பத்மாவுக்கு மனம் பேதலித்து விட்டிருந்தது; ஏதேதோ பிதற்றினாள். 'என் வாழ்க்கையில் சத்ருவாக அந்த வீணை வந்து சேர்ந்தது. நான் போகிறேன்...' என்று வேறு என்னவோ முணுமுணுத்தாள். அவள் ஆவி அவளைவிட்டு பிரிந்துவிட்டது.

சுந்தரம் ஐயர் வாழ்க்கையில் இன்னும் ஒரு சம்பவம் முக்கியமானது. அவர் மனம் உடைந்து போனதற்கு அதுவே காரணம். ஒருவேளை மனைவியின் ஆருத்துயரம் அவரைப் பழி வாங்கிற்றோ என்னவோ?

பத்மா மறைந்து பதினைந்து வருஷங்கள் சங்கீத உலகில் மங்காத புகழுடன் விளங்கினார் சுந்தரம் ஐயர். வீணைவாசிப்பில் தனக்கு நிகர் யாருமில்லை என்பதில் அவருக்கு உள்ளூர கர்வம்கூட ஏற்பட்டிருந்தது. ஆனால் தன்னடக்கம் அதை மறைத்து விட்டது. கல்யாணி எப்போதும்போல் அவரை இமை காப்பதுபோல் காத்து வந்தாள்.

அன்றொரு நாள்—

......ஊரில் சங்கீத மண்டபத்தில் அவருடைய கச்சேரி. புறப்படும்போதே அவருக்கு கால் இடறிற்று. கல்யாணி சமாதானம் சொல்லி அவரை கச்சேரிக்கு அழைத்துக்கொண்டு போவதற்குள் போதும் என்றாகிவிட்டது. அன்று வாசிப்பில் அவர் மனம் ஏனோ ஈடுபடவே இல்லை. அவரே வாத்யத்தை எடுத்துக் கொள்வதுதான் வழக்கம். அன்று வழக்கத்துக்கு மாறாக சிஷ்ய கோடிகளில் ஒருவனை வீணை

யைக் கொண்டுபோய் காரில் வைக்கச் சொன்னார். சிஷ்யன் பயபக்தியுடன் வாத்யத்தை எடுத்துக் கொண்டு வாசலை நோக்கிச் சென்றான். ஓரிடத்தில் வழுக்கலாக இருந்திருக்கிறது. சிஷ்யன் கால் இடறி விழுந்துவிட்டான். வீணையும் 'பொத்'தென்று விழ, 'டணார்' என்று ஒலி கேட்டது. வீணைக்குடம் இரண்டாகப் பிளந்து சிதறிற்று.

சப்தம் கேட்டு பதறியபடி ஓடி வந்த சுந்தரம் ஐயர் அந்தக் காட்சியைக் கண்டதும் ஸ்தம்பித்து நின்று விட்டார். ஒரு நிமிஷ நேரம் முச்சுப்பேச்சில்லை. அவரை அறியாமல் கண்களில் நீர் பொல பொலவென்று உதிர்ந்தது. தரையில் உட்கார்ந்து குழந்தைபோலத் தேம்பி அழுதார். கல்யாணி எவ்வளவோ தேர்தல் சொல்லியும் அவருடைய மனம் ஆறவே யில்லை.

உயிருக்கு உயிராய் வைத்திருந்த வீணை—பரம்பரைப் பொக்கிஷமாக இருந்த வாத்தியம்—உடைந்து போனதிலே அவர் உள்ளத்திலும் விரிசல் கண்டுவிட்டது. அன்று அவர் செய்த அந்தக் கச்சேரிதான் கடைசி. பிறகு வேறு வீணை எதையும் கையால் தொட மறுத்துவிட்டார். 'வீணையைப் பூஜித்து வைத்துக்கொள்ளத் தகுதி இல்லாதவன் நான். இனி அதைத் தொட்டு வாசிக்க லாயக்கற்றவன்' என்று தன்னை வெறுத்துப் பேசினார். அவ்வளவுதான். அதன் பிறகு அவர் ஒரு நாள்கூட வீணையைக் கையால் தொட்டவர் அல்ல. ஆறு நிமிஷம் அவருடைய வாசிப்பை ஒலிப்பதிவு செய்து கொள்ள அனுமதித்தால் ஐம்பதினாயிரம் ரூபாய் தருவதாக கிராமபோன் கம்பெனியார் முன்வந்தார்கள். கண்டிப்பாக முடியாது என்று கூறிவிட்டார். அவருக்குப் பின் வரும் சந்ததியார் அவருடைய வீணா கானத்தைக் கேட்டு மகிழக் கொடுத்துவைக்காதவர்கள். அவருடன் அந்த வீணையின் கம்பீர த்வனியும் மறைந்து விட்டது. இனி அந்த த்வனி கேட்க எத்தனை ஆயிரம் ஆண்டுகள் செல்லவேண்டுமோ?

* * *

கதை—இல்லை—வரலாறு முடிந்துவிட்டது. எனக்கு ஒரே ஒரு சந்தேகம் பாக்கி இருந்தது. 'கதை' சொன்ன ஆசாமிக்கு மட்டும் இவ்வளவும் எப்படித் தெரிந்திருந்தது? ஒரு வேளை அந்த சோக சம்பவத்தில்—வீணையைக் கை தவறி கீழே போட்ட.........

மனதில் எழுந்த கேள்வியைக் கேட்க அந்த ஆசாமியை ஏறெடுத்துப் பார்த்தேன். நான் கேட்காத கேள்விக்கு அவருடைய கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் பதில் சொல்லாமலே சொல்லிற்று.

ஸ்ரீ

ஸெலக்ஷன் ஸ்டோர்ஸ்

(Order Suppliers)

(முன்னுள் மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்)

25, கான்மார்க்கெட், நியூ டில்லி.

பலசரக்கு சாமான்கள், வெண்ணெய், பத்திரிகைகள் முதலியவை குறித்த காலத்தில் நியாயமான விலையில் வீட்டிற்கு சப்ளை செய்யப்படும்

★

கல்யாணம், டீபார்ட்டி முதலியவற்றுக்குத் தேவையான ஸ்வீட்டுகளும், ஸேவரிகளும் காண்ட்ராக்டில் சப்ளை செய்கிறோம்.



10-ல் 10-பேரும் பெறலாம்

சுதந்திரம் பெருக்கும் பாதுகாப்பு

உங்கள் சுதந்திரம்—ஆயுள் பரியந்தம் முன்னேறிச் செல்லவும், மனதிற்குகந்த பணியிலும், சேவையிலும் ஈடுபடவும் சந்தர்ப்பங்களை அளிக்கும் மட்டற்ற சுதந்திரம். அத்துடனின்றி பழுதிலாப் பாதுகாப்பும் கூட.

பிருத்வி உங்கள் பாரத்தைத் தாங்குகிறது. சுதந்திரத்தை நிலைநாட்டும் பூரண பாதுகாப்பையும் அளிக்கிறது. பிருத்வியின் ஆயுள் கால திட்டத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்.

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நேதாஜி ரோட் :: மதருஸ்-1

செத்துப் பிழைக்கலாம்

டி. என். சிவதாணு

ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ
மானிலத்தின் கண்.

என்பது ஒரு முதுமொழி.

இந்தக் காலத்தில் வைத்திய முறையிலாவது விஞ்ஞான முறையிலாவது, போன உயிரை மீட்டுக் கொடுக்கும் சக்தி மனிதனுக்கு இன்னும் ஏற்படவில்லை. சாவித்திரியைப் போல எமனுடன் சண்டை போட்டு போன உயிரைத் திரும்ப வாங்கும் பெண்களும், உயிரை வாங்க வந்த எமனைத் துரத்தியடித்துப் பதினாறு வயது பாலகனாகவே இருப்பதற்கு விருப்பங் கொண்ட மார்க்கண்டேயர்களும் இருப்பதாகத் தெரியவில்லையே இந்த நாகரிக உலகத்தில்.

மேலும் பண்டைக் காலத்தில் பயந்தோடிய எமனும் சித்திரகுப்தனும் இப்போது இல்லையே! மனித நாகரிகத்திற்கு வழிகாட்டியாயுள்ள விஞ்ஞான சக்திகளெல்லாம் தானே மனிதனுக்கு எமனாகத் தோன்றியிருக்கின்றன. மோட்டாராகவும், ஆகாய விமானமாகவும், அணுகுண்டாகவும், இன்னும் பலபல விதமான எமன்கள் இருக்கும்போது எந்த எமனுடன் சண்டை போடுவது?

பழைய எமனுக்கு மக்களின் உயிரைக் கவர்வதைத் தவிர வேறு வேலை கிடையாது. இந்தக் காலத்தில் எமன்களோ மக்களின் வாழ்க்கையோடு இணைந்து, தன் வளர்ச்சியால் மக்களுக்கு நன்மையும் செய்ய முடியும், தீமையும் செய்ய முடியும்.

ஆகவே இந்தக் காலத்திலுள்ள எமன்களுடன் சண்டை போட்டுத் துரத்திவிட்டு மக்கள் வாழ முடியாது என்பது உறுதி.

✲

மக்களின் உயிரை மீட்கும் சக்தியில்லாமல், எப்படிச் செத்தவர்களை பிழைக்க வைக்க முடியும்? என்று கேட்கிறவர்களுக்கு ஒரே பதில்.

பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்பும் உத்தமர்கள் நினைத்தால் ஒரே வினாடியில் மாண்டவரை மீளச் செய்வார்கள்.

சில சமயங்களில் தினசரிப் பத்திரிகைகளில் வரும் செய்திகள் நம்மைத் திடுக்கிடச் செய்வதுடன் 'கிழமொழி' களைக் கிண்டல் செய்வதாகவும் இருக்கிறது.

"மாண்டவன் மீண்டான்," "திருடனைக் கையுங் களவுமாகப் பிடித்தப் பிணத்தின் திறமை" இது போன்ற செய்திகள் யாரைத்தான் அதிசய உலகத்திற்கு அழைத்துப் போகாது?

✲

மனிதனை அழித்து நாட்டைக் கபளீகாரஞ் செய்வதற்கு புதுப் புது ஆயுதங்களைத் தயார் செய்யும் ஏகாதிபத்ய வெறியர்கள் கூட யோசனை பண்ணக் கூடிய நிலைமையில் கொண்டு வந்து விடுகிறது, மனிதன் உயிர் பெற்று எழும் செய்தி.

சமீபத்தில் ஒரு தினசரி பத்திரிகையில் கீழ்க்கண்ட செய்தி வந்தது:

"இறந்து போன ஒரு பெண்ணைப் புதைத்து விட்டுத் திரும்பி விட்டார்களாம் சுற்றத்தார்கள். அந்தப் பெண்ணுடைய வீட்டு வேலைக்காரனாகிய திருடன் பிணத்தின் மேல் போட்டிருந்த நகைகளுக்காக ஆசைப் பட்டு பிணக்குழியைத் தோண்டியதும், பிணம் உயிர் பெற்று எழுந்து, திருடனை துரத்திப் பிடித்துக் கொண்டது"

எவ்வித ஆராய்ச்சியும் சிரமமுமில்லாமல் பேனாவின் மகத்துவத்தால் இறந்தவர்களை உயிர் பெற்று எழச் செய்யும் சக்தியைப் படைத்த பத்திரிகைகளுக்குச் செய்திகள் அனுப்பும் பரமாத்மாக்களின் மகிமை மூளையுள்ளவர்களை அதிசயிக்கச் செய்யும்.

என்னைப் பொறுத்த வரைக்கும் ஆச்சரியப்பட மாட்டேன். மயக்கத்தோடு இருப்பவனை மரணமடைந்தவனாகப் புனைந்துரைக்கும் பூமான்களாகிய பத்திரிகைச் செய்தியாளர்களின் ஆகாச வெடிகள் எனக்கு அதிர்ச்சியைக் கொடுப்பதில்லை. ஏனென்றால் நான் ஒரு முறை செத்துப் பிழைத்தவன் என்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் ஹரிச்சந்திரர் நாடகம் நடந்தது. பழங்காலத்தில் ஹரிச்சந்திரனாக நடிப்பதில் புகழ் பெற்ற நடிகர் ஒருவர் அன்று ஹரிச்சந்திரனாக நடிப்பதற்கு தனியாக வரவழைக்கப்பட்டிருந்தார். (அவரின் நடிப்பைப் பார்த்ததும் புகழ் அற்ற நடிகரென்று மக்கள் தீர்மானித்து விட்டார்கள்.) நாடகம் நடந்து கொண்டிருக்கும் போது நாடகாசிரியர் என்னைக் கூப்பிட்டு இறந்து போகும்படி உத்திரவும் பிறப்பித்தார்.

ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றேன். நீ செத்துப் பிணமானால் தான் நன்றாக இருக்கும். நேரமாய் விட்டது. சீக்கிரம் இறந்துவிடு என்று மறுபடியும் கட்டளை பிறந்தது.

நான் இறந்து போவதில் என் ஆசிரியருக்கு எவ்வளவு மகிழ்ச்சி. இறந்து போக வேண்டிய சமயம் நெருங்கி விட்டது. என் உயிரைக் கொண்டு போவதற்கு எமனுடைய வரவை எதிர்பார்த்தேன். எமன் வராததினால் ஆசிரியரின் வார்த்தையை எமனாக பாவித்து, கீழே படுத்தேன். அவ்வளவுதான் என் உயிர் போய் விட்டது. 'கண்களை நன்றாக மூடிக் கொள். சிரிக்காமலும், அசையாமலும் படுத்திருக்க வேண்டும். நீ இறந்து விட்டாய்.' இது போன்ற பல சொற்கள் என் காதில் விழவே நான் இறந்தது உண்மையென எனக்குள் தீர்மானித்து விட்டேன்.

பிணத்திற்காகத் தயார் செய்து வைத்திருந்த விமானத்தில் என்னைத் தூக்கி வைத்து ஒரு கோணிப்பையில் இறுகக் கட்டினதும் என் நண்பர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். அது சர்க்கரையிருந்த கோணி போலும். ஏனென்றால் என் உடலில் அங்குமிங்கும் தினவு எடுத்தது. செத்தவன் கை அசையாதே! நான் சும்மா இருந்தேன். எறும்புகள் தாராளமாகப் பிடுங்கத் துவங்கின. நண்பர்கள் மீண்டும் சிரித்தார்கள். இறந்து கிடக்கும் என்னைக் கண்டு துக்கமடையாமல் சிரித்து மகிழ்கிறீர்களே என்று பிணமாகிய அடியேனுடைய வாய் பேசிற்று. பிணமாவதற்குத் தகுதியுள்ளவன் நீ தான் என்ற மறுமொழி என் காதில் விழுந்தது. மீண்டும் சிரிப்புதான்! ஆனால் நான் விரைத்து கொண்டேன்.

நான்கு பேர் பிணத்தைத் தூக்கிக் கொண்டு மேடையில் தோன்றியதும் மக்களின் சந்தோஷ ஆரவாரம் கொட்டகையை பிளந்தது. மக்களின் ஆரவாரத்தைக் கேட்டதும் கோணிக்குள் ஒளிந்து இருந்த எறும்புகளுக்குக் கோபம் வந்து விட்டதோ என்னவோ

For

LACED DHOTIES, SAREES & HANDLOOM CLOTH IN 80s, 100s, 110s & 120 counts

Remember :

S. M. S. R.
BALASUNDARAM CHETTIAR
Handloom Cloth & Sarees Manfr.,
Wholesale & Retail Merchants,
36, Panchavarnaswamy Koil St.,
WORIUR P. O.,
TIRUCHIRAPALLI (S. India)

P. B. 211 **Tel.: ESEMESARBE.**

பிணத்திற்குச் சுறுசுறுப்பைக் கொடுக்க ஆரம்பித்து விட்டன.

நடு மேடையில் விமானத்துடன் பிணத்தைத் தூக்கிக்கொண்டு "இது ஒரு அனாதைப் பிணம். நீங்கள் ஏதாவது உதவி செய்தால்தான் பிணத்தைச் சாம்பலாக்க முடியும்" என்று நாடகம் பார்க்க வந்த மக்களிடம் ஒரு நடிகர் வேண்டுகோள் விடுத்ததுதான் தாமதம், செப்பு நாணயங்களால் பிணம் தாக்கப்பட்டது. ஒரு புறம் எறும்புகளின் கடி. மற்றொருபுறம் செப்பு நாணயங்களால் ஏற்படும் வலி. இவைகளைத் தாங்க முடியாமல் இறந்து கிடந்த என்னுடைய உயிரே போய் விடும் போலிருந்தது.

✲

திடீரென்று நாடகம் பார்க்க வந்தவர்களிடமிருந்து கூக்குரல் கிளம்பிற்று. அனாதைப் பிணமல்ல. எங்களுடைய பிணமென்று அழுதுகொண்டு ஓர் ஆணும் இரண்டு பெண்களும் மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். கொட்டகை பூராவும் பரபரப்பு ஏற்பட்டிருக்கும்போது, என்மனம் எப்படியிருந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

பிணத்தின் சொந்தக்காரர்கள் என்னைத் தூக்கிக்கொண்டுபோய்ச் சமாதி கட்டி விடுவார்களோ என்ச் பயத்தால் சாகவில்லை என்று கூக்குரல் போடலாமா என்ற யோசனை செய்து கொண்டிருக்கும்போது அவர்கள் அலறி அடித்துக்கொண்டு மேடைக்கு வந்து சேர்ந்து என்மேல் விழுந்து அழ ஆரம்பித்து விட்டார்கள். எனக்குக் கொஞ்சம் சமாதானம் ஏற்பட்டது.

ஏன்! அவர்களும் எங்கள் நடிகர் குழாமைச் சேர்ந்தவர்கள் என்பதை எழுதத் தேவையில்லை.

ஒருவாறாக அந்தச் சுடுகாட்டு சீன் முடிந்ததும், நான் பிழைத்து விட்டேன். ஆனாலும் அந்த எறும்புகளின் கடிகளை இன்னும் மறக்க முடியவில்லை.

உண்மையை ஒளித்துரைக்கும் உத்தமர்கள் இல்லாதபடியால் அந்தக் காலத்தில் செத்துப் பிழைத்த செய்தி பத்திரிகைகள் இடம் பெறவில்லை.

எம்பயரின்

1952-ம் வருஷத்திய ரிப்போர்ட்டின் குறிப்பிடத்தக்க அம்சங்கள்:

மொத்த ஆஸ்திகள் ரூ. 11,52,70,583

செலுத்தப்பட்ட க்ளெயிம்கள் மொத்தம் ரூ. 13,24,80,080

31-12-1952ல் உள்ள மதிப்பீட்டின்படி போனஸ் விவரம்:

முழு ஆயுளுக்கு ரூ. 1000/-க்கு வருஷத்திற்கு ரூ. 10/-

எண்டௌமெண்ட் ரூ. 1000/-க்கு வருஷத்திற்கு ரூ. 8/-

எம்பயர் ஆப் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

(ஸ்தாபிதம் 1897)

எம்பயர் ஹவுஸ் - ஹாரன்பி ரோடு - பம்பாய்

பிரதிநிதித்வம் வகிப்பதற்கும், இன்ஷ்யூர் செய்வதற்கும் ஓர் சிறந்த ஸ்தாபனம்.

இந்தியாவெங்கும் பிராஞ்சுகள் உள்ளன.

அட்மினிஸ்ட்ரேட்டர்: திவான்பகதூர் ஆர். வரதாச்சாரி

இரவல் - ஒரு கலை

சாந்தா ஜயராமன்

இரவல் வாங்குவது இருக்கிறதே அதுவே ஒரு தனிக் கலை. அந்தக் கலையில் நிபுணர்கள் எங்கள் அடுத்த வீட்டு அருணசலம் ஐயரும், அவர் குடும்பத்தாரும். பொழுது புலரும்போதே கனம் ஐயரவர்கள் தாழ்வாரத்தில் வந்து நிற்பார். அன்றையப் பத்திரிகையை என் கணவரிடமிருந்து வாங்கிப்போகத்தான். அதேசமயம் அவருடைய தர்ம பத்தினி காமாட்சி அம்மாள் சமயலறையில் எழுந்தருளி என்னிடமிருந்து சேவை பிழியும் இயந்திரம், காப்பிக் கொட்டை அறைக்கும் மிஷின் எல்லாம் வாங்கிக்கொண்டு போவார்கள். பெற்றோர்கள் எட்டடி தாண்டினல் குழந்தைகள் பதினறு அடி தாண்டுவார்கள். தினந்தோறும் என் குழந்தைகளுக்கு நான் கொடுக்கும் பென்சில்கள் பள்ளிக்கூடம் போனதும் அவர்கள் கைக்குப் போய்விடும். அவர்களுக்கு இரவல் வாங்கத் தெரியுமே ஒழிய, திருப்பிக்கொடுக்கத் தெரியாது. அக்கறை இருந்தால் நாமே அவர்கள் வீட்டுக்கு நடையாய் நடந்து, தேடிப்பார்த்து நம் பொருள்களை எடுத்து வரவேண்டும். இல்லாவிட்டால் போனது போனதுதான்.

என் சிநேகிதர்களில் மற்ருெரு சாரார் இருக்கிருர்கள். அவர்கள் இரவல் வாங்கிக் கொண்டுபோகும் பொருள்களைச் சிரழிக்கும் கலையில் தேர்ந்தவர்கள். ஊற்றுப் பேனவைக் கேட்டு வாங்கிக் கொண்டுபோனல், பேன உருப்படியாகத் திரும்பி வராது. மூடி உடைந்திருக்கும்; நிப்பும் நசுங்கியிருக்கும். தையல் மிஷினைக் கொடுத்தால் ஓட்டு ஓட்டு என்று ஓட்டி சின்னபின்னம் செய்து, மராமத்துச் செய்ய என்னிடம் திருப்பி அனுப்புவார்கள். கிராமபோன் பெட்டியை வருஷக் கணக்கில் என்னிடமிருந்து பிரித்து ஒருவழியாகத் திருப்பிக் கொடுத்தார்களானல் குறைந்தது பத்துப் பிளேட்டுகள் உடைந்திருக்கும். இவர்களுக்கெல்லாம் பயந்து கொண்டுதான் நான் இப்போதெல்லாம் அதிகமாக ஒன்றும் வாங்குவதே இல்லை. இதனல் எனக்குக் கொஞ்சம் இடைஞ்சல் இருந்தாலும் பரவாயில்லை. இரவல் வாங்க வருவோரின் தொந்தரவுகளை என்னல் பொறுக்க முடியவில்லை.

ஏதோ எனக்கு சிறிது கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டதால் அப்படி சொல்லுகிறனேயொழிய எனக்கு என்னவோ இரவல் வாங்குவது ரொம்பப் பிடிக்கும். என் சொந்த மோட்டாரில் போவதைவிட என் அத்தை வீட்டுக் காரில் போனல்தான் குஷியாக இருக்கிறது. இந்தப் பெரிய உலகத்தில் இரவல் இல்லாத இடம் எது? சந்திரன் தன் ஒளியைச் சூரியனிடமிருந்துதான் பெறுகிருன். பள்ளிக்கூடத்திலே நமக்கு முதல் வகுப்பில் கழித்தல் எப்படிச் சொல்லிச்

கொடுக்கிறார்கள்? "பத்து ஸ்தானத்திலிருந்து ஒன்று ஸ்தானத்துக்குக் கடன் வாங்கி அதன்பின் கழி" என்றுதானே! ஆசிரியர் நமக்கு இளம் வயதில் கெட்டதையா போதிப்பார்?

தற்சமயம் நம் வெள்ளித்திரையில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அநேக நட்சத்திரங்கள் பாடும் சமயத்தில் பெண் குயில்களிடமிருந்து குரலை இரவல் வாங்கிக்கொள்ளுகிறார்கள். அந்தக் கோகில கான மாதுசிரோன்மணிகளும் இரவல் குரல் கொடுப்பதை உயர்வாகவே கருதுகின்றனர். பாட்டி காலத்தில் இப்படி ஒரு சமாசாரம் கேள்விப்பட்டிருப்பார்களா? அப்படியிருக்க நாம் காலத்திற்கேற்ப முன்னேறி இரவலுக்கு 'ஜே!' போடவேண்டியது அவசியம் தானே!

அரசியல் வாதிகளும், பிரசங்கிகளும் அயல்நாட்டு எண்ணங்களையும், கொள்கைகளையும் இரவல் வாங்கிக்கொண்டுதானே மேடை மீதேறிப் பிரசங்கமாரி பொழிகிறார்கள்! அதைக் கேட்டு நாம் கூவி, கூச்சலிட்டு கைதட்டி, "சபாஷ், ஹியர், ஹியர்" என்றெல்லாம் சொல்லுவதில்லையா என்ன!

நம் நடை உடை பாவனைகளில்கூட எத்தனை இரவல் இருக்கிறது! தொன்றுதொட்டு வரும் நம் நாட்டுச் சம்பிரதாயங்களைப் புறக்கணித்துவிட்டு மேனாட்டுப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து வருகிறோம். பேசும்போது அன்னிய மொழி கலக்காமல் பேசுவதில்லை. சாப்பிடும்போதும் மேனாட்டாரைப் போன்று மேஜை மீது பண்டங்களைப் பரப்பி கத்தி, கரண்டி, முள்க்கரண்டி முதலியவைகளை உபயோகித்துச் சாப்பிடுவதையே பலர் விரும்புகின்றனர். வீட்டை அலங்கரிப்பதும், குழந்தைகளை அலங்கரிப்பதுங்கூட மேனாட்டு முறையில் செய்வதுதான் சிலாக்கியமானதென்று கருதுகிறார்கள்? இவையெல்லாம் இரவல் இனத்தைச் சேராதா என்ன?

"கடன் வாங்குபவனாகவும் இருக்காதே, கடன் கொடுப்பவனாகவும் இருக்காதே" என்கிறார் ஷேக்ஸ்பியர். அது நடைமுறையில் சாத்தியமா என்ன? மாதக் கடைசியில் கையில் பணமில்லையென்று அரிசி வாங்காமல் பட்டினியிருக்கமுடியுமா? அல்லது குழந்தைக்கு அசௌக்கியமாயிருந்தால் வைத்தியரிடம் காட்டாமலிருக்க முடியுமா? "அதெல்லாம் போகட்டும் ஐயா! கீழ்வீட்டிலிருந்து இரும்புலக்கை இரவல் வாங்க வேண்டுமே என்று எத்தனை நாள் பட்சணம் சாப்பிடாமலிருப்பேன்?" என்று புலம்புகிறார் இந்த ஊர் சாப்பாட்டு ராமர் ஒருவர்.

இரவலின் பெருமை எழுதித் தொலையாது. ஆனால் நான் தற்போது இக்கட்டுரையை வரைய உபயோகிக்கும் பேனா, இங்க், பேபர் எல்லாம் இரவல்தான்.

இதென்ன மறதி!

பூர்ணம் விச்வநாதன்

காட்சி—1

[பகல் மணி பதினொன்று. வீட்டு வாசலில் பங்காருவின் வருகைக்காகக் காத்திருக்கும் ராக்கம்மா பொறுமையிழக்கப்போகும் சமயம் பங்காரு கையில் பையுடன் வருகிறான்.]

ராக்கம்மா: (எரிச்சலை அடக்கிக்கொண்டு) எத்தினி நேரமாக்கிட்டீங்க!

பங்காரு: எத்தினி நேரமாக்கிட்டேன்?.........ஹூம், இதென்ன நடைப்பந்தயமா, கடையைத் தொட்டுட்டுத் திரும்பி வந்துர்ரதுக்கு? காரியத்தை முடிச்சுட்டுத்தானே வரணும்? (பையை நீட்டுகிறான்.)

ராக்: சரிசரி, குடுங்க அந்தக் காகறியை!......(பையை வாங்கிப் பார்த்தவள் திடுக்கிட்டு) இதென்ன வெறும் பையை வீசிட்டு வந்திருக்கீங்க?......காய்கறி கெடைக்கலியா?

பங்: (விரலைக் கடித்து உதறி) ஐயையோ, நிறுத்துத் தனியா வாங்கி வச்சவன் பையிலே போட்டுவர மறந்துட்டேன் ராக்கம்மா......பையிலே காகறி இருக்குதுன்னு நெனைச்சு ரொம்ப சாக்ரதையா தூக்கி வந்தேனே!

ராக்: (எரிச்சல் தாங்காமல்) பைசாவைக் குடுத்து காகறி வாங்கி, அதைக் கடைக்காரனுக்கே தருமமா அள்ளி வீசிட்டீங்களோ?

பங்: (திடீரென்று) இரு இரு ராக்கம்மா, அவன் பாக்கி சில்லரை தரலியே!......(யோசித்த வண்ணம்) இல்லாட்டி வாங்கி எங்கேயாச்சியும்.........

ராக்: ஐயையோ, அது வேறயா? எவ்வளவு கோட்டை விட்டீங்க?

பங்: (ஞாபகம் வந்து) ஓ சரிதான் சரிதான், அவன் பாக்கிச் சில்லரை குடுத்துட்டான்......சே பாவம், நல்ல பய......ராக்கம்மா, அந்த பைசா பத்திரமாத்தான் இருக்குது, கவலை வேணும்.

ராக்: எங்கே? எடுங்க.........

பங்: இங்கே எங்கே?......அந்தக் காகறியோடு கலந்து கிடக்குது. (சிரித்துக்கொண்டே) நான் என்ன செய்தேன், காகறியோடு அந்தப் பாக்கிப் பைசாவைப் போட்டு வச்சேன். எல்லாத்தையும் சேத்து அள்ளிப் போட்டுக் கொணுந்துரலாம்னு......அது என்னடான்னா.........

ராக்: சிரிக்காதிங்க......ரெண்டு காரியத்துக்குப் போனீங்களே, இன்னொண்ணு என்ன ஆச்சு?

பங்: இன்னொண்ணு ஏது? நான் காகறி வாங்கத்தானே போனேன்?

ராக்: (ஏளனமாக) அதான் வாங்கிவந்திருக்கீங்களே பைநெறைய!.....அதைத் தவிர செருப்பு சரிபண்ணணும்னு சொன்னீங்களே, அதை யாச்சியும்.........

பங்: (பதறி) ஐயையோ, சரியாப்போச்சு......நான் ஒரு முட்டாள் ராக்கம்மா.........

ராக்: ஒங்களைப்பத்திப் பெறகு பேசிக்கலாம்; மொதல்லே செருப்பைப்பத்திச் சொல்லுங்க......காலுலே காணமே!

பங்: நடந்ததைக் கேளு ராக்கு........

ராக்: கேக்கத்தான் காத்திருக்கேன்; நீங்க சொல்லவேண்டியது தான் பாக்கி.

பங்: நான் காகறி வாங்கிட்டுக் கௌம்பினேனு,.........

ராக்: "காகறி வாங்கிக் கடையிலே வச்சிட்டுக் கௌம்பினேனு" என்னு சொல்லுங்க......உம், எங்கே கௌம்பினீங்க?

பங்: நேரே செருப்புக்கடைக்குப் போயி, "இந்தச் செருப்பைக் கொஞ்சம் சரி பண்ணப்பா" என்னு சொல்லிக்கிட்டே காலே ஒதரு ஒதருன்னு ஒதர்ரேன்......செருப்பு உளுந்தாத்தானே?

ராக்: ஏன்? காலோடு ஒட்டிக்கிடுச்சோ?

பங்: காலோடு ஏது? காகறிக்கடையோடு ஒட்டிக்கிடுச்சு. அங்கே வச்சு மறந்துட்டேன்.......

ராக்: (ஆத்திரத்துடன்) நீங்க என்ன, நம்ப சொத்து பூராவையும் அந்தக் காகறிக் கடைக்காரனுக்கு எளுதிவச்சிட்டீங்களா?........ அங்கே ஏன் செருப்பைக் களட்டணும் நீங்க? அதென்ன, கோயிலா?

பங்: (ரோசமாக) சும்மா வெரட்டாதே ராக்கம்மா, அவன் கடைக்குள்ரபோயி கத்தாரிக்காயைப் பொறுக்கவேண்டியிருந்திச்சு. அதுக்காக செருப்பைக் களட்டிட்டு உள்ளே போனேன்...........

ராக்: இப்ப அந்தச் செருப்பு என்ன ஆச்சு? அதைக் காகறிக் கடையிலிருந்து எடுத்து வாரதுக்கென்ன?

பங்: செருப்புக் கடையிலிருந்து காகறிக் கடைக்குப் பொறப்பட்டவன்தான், நடுவிலே எவனோ ஒருத்தன் கௌட்டுப்பய பேச்சுக் கொடுத்தான். எல்லா ஞாபகமும் கலேஞ்சுபோயி நான் நேரே இங்கே வந்துட்டேன்.

ராக்: யாரு அது பேச்சுக்கொடுத்தது?

பங்: எவனோ ஒரு கௌடன், "என்ன பங்காருசாமி, சௌக்கியம் தானு"ன்னு நடுத்தெருவிலே நிறுத்தினுன் என்னே. எனக்கா படுஎரிச்ச வந்திரிச்சு......"எல்லாம் சௌக்கியம்தான். இப்ப வேலேயா இருக்கேன்; பெறகு பாக்கலாம், தொந்தரவு செய்யாதீங்க"ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.........

ராக்: யாரு அவன், வம்பு புடிச்சவன்? ஒங்க சிநேகித ஆளா?

பங்: உம், எவனோ ஒரு குப்பான்! கையிலே பெட்டியும், படுக்கையும் தூக்கிக்கிட்டு எங்கேயோ போறவன், நடுவிலே பேச்சு குடுக்காட்டி என்ன? அவனைப் பாத்ததாவே ஞாபகம் இல்லே எனக்கு...

ராக்: இப்ப என்ன செய்யப் போறீங்க? கடைவீதிக்கு மறுபடி........

பங்: மறுபடியா? பேசக்கூடாது. எனக்கு வெத்துச் சோறு போதும். (சிரித்துக்கொண்டே) சோறு திங்கதுக்கும், ஒரு தூக்கம் போடுத்துக்கும் செருப்பு வேண்டியதில்லேயே. சாயங்காலமாப் போறேன். (சுற்றுமுற்றும் பார்த்தவன் திடீரென்று) அடடே, இதென்ன, தபாலு வந்திச்சா? திண்ணேயிலே கடாசிட்டானே தபாலு ஆளு!

ராக்: எங்கே, நான் கவனிக்கலியே!

பங்: (கடிதத்தை எடுத்துப் பார்த்து) அடேடே ஒனக்குல்லே போலிருக்குது!.........பார்த்த கையெழுத்துமாதிரி இருக்குது......... (கொடுக்கிறான்.)

ராக்: (வாங்கிப் பார்த்து மகிழ்ச்சியுடன்) அடேடே, நாயனு எளுதியிருக்காங்க......(வாசித்துப் பார்த்து) நாயனு வர்ராங்களாம், இருபத்திரண்டாம் தேதி........

பங்: அடுத்த மாசமா?......பாவம், வரட்டும்.........

ராக்: இல்லியே, இந்த மாசம்தான்......(திடீரென்று பதறிப்போய்) ஐயையோ, இருபத்திரண்டாம்தேதின்னு, இன்னைக்கின்னுல்லே ஆகுது?......எங்களூரிலேருந்து வண்டி ஒம்பது மணிக்கே வந்துருது, இப்ப மணி பதினொண்ணுக்குமேலே ஆகுதே!......ரயில் டேசனுக்கு ஒங்களை வரச்சொல்லியிருக்காங்களே!

பங்: (முகம் வெளிறிப்போய்) ஐயையோ ராக்கம்மா, ஒங்க நாயனு வந்துட்டாரு......இப்ப இந்த ஊர்லேதான் இருக்காரு...........

ராக்: என்ன? நெசமாவா?

பங்: ஆமாம்......பஜார்லே நான் தூக்கியெறிஞ்சு பேசின கௌவரு ஒங்க நாயனுதான்.

ராக்: (வீறிட்டலறி) ஐயோ, நாயனுவைக்கூடவா நீங்க அடையாளம் தெரிஞ்சுக்கிடலை?

பங்: ராக்கு, அந்த சமயம்பாத்து, இந்த மறதிவந்து கெடுத்திரிச்சு... ......அவரு நிச்சயம் கோவிச்சுக்கிட்டுத்தான் போயிருப்பாரு...... சேச்சே.........

ராக்: ஐயோ, ஊருக்கே திரும்பிப் போயிருப்பாங்களோ ஒருவேளை?

பங்: (தன்னையே நொந்துகொண்டு) நான் நடந்துகிட்டத்துக்கு யாராயிருந்தாலும் கோவிச்சுகிட்டு இந்த தேசத்தைவிட்டே போயிருவாங்க. நான் என்ன ஆளு! முட்டாப்பய!

ராக்: (விம்மியழுது) நமக்குக் கண்ணாலமானபெறகு இப்பதான் மொதவாட்டி வர்ராங்க அவுங்க நம்மகிட்ட......நீங்களே லெட்டரு எளுதி வரவளிச்சுட்டு, இப்பிடி வெரட்டிட்டீங்களே!

பங்: அளாதே ராக்கம்மா, நான் இப்பமே போயி, அவரைத் தேடிக் கண்டுபிடிச்சுக் கூட்டி வந்துர்ரேன். ஊரையே அலசிர்ரேன்.
[ஓடுகிறான். ராக்கம்மா அயர்ந்து உட்காருகிறாள்.]

காட்சி—2

[அதே சமயம், ஊருக்கு வெளியே ஸ்டேஷன் ரஸ்தாவில் பங்காருவின் மாமனாரை துளசிங்கம் சந்திக்கிறான்.]

துள: (வியப்புடன்) அடடே, யாரு போறது?......(அருகில் வந்து பார்த்து) நீங்க நம்ம ரங்கசாமி நாயுடு இல்லே?

ரங்க: (தலைச்சுமையுடன் திரும்பி) ஆமாம், நீ யாரு?

துள: என்னைத் தெரியலியா? நான்தான் தொளசிங்கம்...பங்காருவுக்கு சிநேகிதன். அவன் கண்ணாலத்துக்கு வந்திருந்தேனே!

ரங்க: ஓ தொளசிங்கமா? எளைச்சுப் போயிட்டயே! ஒன்னை மறக்க முடியுமா? எம் மக கண்ணாலத்துலே நீ கொஞ்ச நஞ்ச வேலையா செய்தே?

துள : இப்போ எங்கே கெளம்பினீங்க ?

ரங்க : ஹூம், ரெண்டு மணி வண்டியிலே ஊருக்குத் திரும்பிப் போறேன்.

துள : அப்படின்னு நீங்க இங்கே வந்து ரொம்ப நாளாச்சுதோ ?

ரங்க : இப்பதான் வந்தேன். இதோ திரும்பிப் போறேன்...(அழாத குறையாக) போதும் தொளசிங்கம், போதும். கண்ணாலம் கட்டிக் குடுத்து அனுப்பிச்ச பெறகு, மொதவாட்டி இப்பதான் மக வீட்டுக்கு வர்ரேன். இந்த மாப்பிளைப் பய டேசனுக்கும் வரலே. அதோடு என்னைக் கடை வீதியிலே எல்லா சனங்களுக்கும் மத்தியிலே அவமானப்படுத்திட்டான் தொளசிங்கம்...

துள : ஐயையோ! அவமானப்படுத்திட்டானா ?

ரங்க : நான் பெட்டி படுக்கையோடு இதே கோலத்துலே வந்துகிட்டிருந்தபோது அவனைக் கடை வீதியிலே பாத்து, "என்ன பங்காருசாமி, சௌக்கியமா"ன்னு கேக்கறேன். "எல்லாம் சௌக்கியம்தான், தொந்தரவு செய்யாதேயும்"னு சொல்லி எரிஞ்சு விழுந்துட்டுப் போயிட்டான்...

துள : சேச்சே, ஏன் அப்பிடி நடந்துகிட்டான்னு தெரியலியே! ஒங்களைப்பத்தி அவன் எத்தினி நல்ல அபிப்பிராயம் வச்சிருக்கான்! சொந்த நாயனா கிட்டகூட அத்தினி பிரியம் கிடையாது.

ரங்க : இனி இவுங்க இருக்கற பக்கமே திரும்ப மாட்டேன். வேணும்னே என்னை அவமானப்படுத்தறதுக்காக சூழ்ச்சி செய்து, லெட்டரும் போட்டு வரவளிச்சிட்டு...உம்? இனி இவங்க மொகத்துலே...

துள : அப்படியெல்லாம் சொல்லாதீங்க, ஒங்க மகளையும் சேர்த்து... எனக்கு தெரிஞ்ச மட்டுலே, பங்காரு மாதிரியும், ஒங்க மக மாதிரியும் தங்கமான ஆளுக வேறே கிடையாது.

ரங்க : அப்பிடித்தான் நானும் நெனைச்சு ஏமாந்தேன், தொளசி.

துள : எதையும் தீர விசாரிக்காமப் பேசக் கூடாது. பங்காருவுக்காக இல்லாட்டியும், ஒங்க மகளுக்காக—அதுவும் ஒரே மக, அவுங்களுக்காகவாவது நீங்க இப்பிடி கோவிச்சுகிட்டு ஓடக் கூடாது... மகளைப் பாத்து விசாரிப்போம், நீங்க நெனைக்கதுபோல அவுங்களும் இருந்தாங்கன்னா, திரும்பிப் போயிருங்க...நானே வந்து ரயிலேத்தி விடறேன். சரிதானா ?

ரங்க : அவுங்க வீட்டுக்குப் போறதா? ஒரு நாளும் முடியாது.

துள : அப்பிடியெல்லாம் சொல்லாதீங்க. இதே கோபத்தோடு நீங்க திரும்பிப் போயிட்டாலும், ஒங்க மனசு என்ன பாடு படும்? அதுவும் அவுங்க மேலே குத்தமில்லாம இருந்து நீங்க போனா...

ரங்க : (சற்று யோசித்து) உம்?... சரி தொளசிங்கம், வர்ரேன்... ஆனா கொஞ்சம் ஏதாச்சியும் ஏக்கச்சக்கம்னு தெரிஞ்சிச்சின்னா, மறு நிமிசமே கொளம்பிருவேன். நிச்சயம்.

துள : அதான் சரின்னுட்டேனே...(சந்தோஷத்துடன்) அந்தப் பெட்டி படுக்கையை நான் தூக்கி வர்ரேன். (வாங்கிக் கொண்டே) சே, இந்த பங்காரு என்ன, சொய புத்தியைக் கூடவா மறந்துட்டான் ?

(இருவரும் ஊரை நோக்கி நடக்கிறார்கள்.)

காட்சி—3

[பங்காருவின் வீடு. வாயிற்படியில் ராக்கம்மா தலையில் கை வைத்து உட்கார்ந்திருக்கிறாள். துளசிங்கமும், ரங்கசாமி நாயுடுவும் வருகிறார்கள். ராக்கம்மா தலை நிமிர்ந்தவள் துள்ளிக் குதிக்கிறாள்.]

ராக் : (நாயுடு பக்கம் ஓடி) நாயனு, எங்களை மன்னிச்சிருங்க... விளுந்து கும்பிடறேன் (அவர் காலில் விழுகிறாள்.)

ரங்க : (விலகி நின்று) ராக்கு, நீயும் சேர்ந்துதானே என்னை இப்பிடி அவமானப்படுத்திட்டே? பரவாயில்லை.

ராக் : (ஓவென்று அலறி) நாயனு, ஒங்களை யாரும் அவமானப் படுத்தலை. அவுங்க மனசு ஒடிஞ்சு போயி, சோறு தண்ணிகூட இல்லாம, ஒங்களைத் தேடிக் கிட்டு ஓடியிருக்காங்க.

ரங்க : (ஆத்திரத்துடன்) அவனைப் பத்திப் பேசாதே எங்கிட்ட. அவனும் ஒரு மனிசனு? அவன் இவ்வளவு பெரிய அயோக்கியன்னு தெரிஞ்சிருந்தா ஒன்னை அவனுக்குக் கட்டிக் குடுத்திருக்க மாட்டேன் ராக்கம்மா. நான் லட்டெரு போட்டதுக்கு டேசனுக்குக் கூட வராம, என்னை 'பப்ளிக்'கா அவமானமும் படுத்தி...

ராக் : நாயனு, ஒங்க கிட்ட அப்பிடி யோசியாமப் பேசிட்டு வந்த பெறகுதான் அவுங்க ஒங்க லெட்டரைப் பாத்தாங்க. பாத்துட்டு அப்பிடியே பதறிக்கிட்டு ஓடியிருக்காங்க.

துள : அட லெட்டரு சரியான சமயத்துலே வராட்டி என்ன? தகவல் சொல்லாம வர்றதுக்கு மாமாவுக்கு பாத்தியதை கெடையாது?

ரங்க : அதைக் கேளு தொளசிங்கம். என்ன அக்குருமம்!

ராக் : (பரிதாபமாக அழுதுகொண்டு) நாயனு, அவுங்க ஒங்களை யாருன்னே அடையாளம் தெரிஞ்சுக்கிடலை நாயனு.

ரங்க : என்ன? அடையாளம் தெரியலியா? ஏன் பொய் பேசறே ராக்கு?

ராக் : பொய்யே இல்லை நாயனு. அவுங்களோட ஞாபக மறதி எப்படிப்பட்டதுன்னு ஒங்களுக்குத் தெரியாது. கண்ணாலமான பெறகு நீங்கள் அவுங்ககூடப் பளகவே இல்லியே! இண்ணைக்கு ரெண்டு காரியத்துக்காக காலையிலே எட்டு மணிக்குப் போனவங்க, பதினொரு மணிக்கு வந்தாங்க. இன்னமும் ஒரு காரியம் கூட முடியலை......

துள : (குறுக்கிட்டு) ஓஹோஹோ, இருக்கும் இருக்கும். அந்தப் பங்காருப் பய தன்னையே மறந்துட்டு "நான் எங்கே, நான் எங்கே"ன்னு தேடற ஆசாமியாச்சே!...சரி சரி, இப்போ விசயம் புரிஞ்சு போச்சு. கண்ணாலத்துக்குப் பெறகு ஒங்களை அவன் பாக்கவேயில்லை. பாத்திருந்தாலே அடியோடு மறந்துர்ரவன்,......

ராக் : நாயனு, லெட்டரு மட்டும் சரியா வந்திருந்தா இப்பிடியெல்லாம் நடக்குமா? (தூரத்தில் பங்காரு வருகிறான்.)

துள : (உற்றுப் பார்த்து) அதா வர்ரானே கருடாள்வார் மாதிரி.

ரங்க : (பதறி) யாரு பங்காருவா? நான் போறேன் ராக்கு......

ராக் : (அப்பாவின் கையைப் பிடித்து) அப்பா எம்மேலே அன்பு இல்லையா?

துள : ஆமாம் போகாதீங்க......

(ரங்கசாமி நாயுடு தயங்குகிறார். அதற்குள் பங்காரு வந்து சேருகிறான்.)

பங்: (வரும்போதே) ஊர் பூராவும் அலசிட்டேன், அவுங்களைக் காணோம் ராக்கம்மா......(மாமனாரைப் பார்த்து விட்டு) அடடே மாமாவா?......மாமா, என்னை மன்னிச்சிடுங்க, விளுந்து கும்பிடறேன்.

(ஓடி வந்து மாமனார் காலில் விழுகிறான்.)

ரங்க: (வியர்த்துக் கொட்ட) ஐயையோ, இதென்ன இப்பிடிக் கால்லே விளுந்திட்டீங்க? எளுந்திரிங்க மாப்பிளே......

பங்: (மாமனார் காலை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு) நீங்க மன்னிச்சதாச் சொன்னாத்தான் நான் எளுந்திருப்பேன். இந்தப் பாளாப் போற ஞாபக மறதியாலே ஒங்களை அவமானப்படுத்திட்டேன். தெரியாமே நடந்து போச்சு.

ரங்க: (தொண்டை தழுதழுக்க) ஐயையோ மாப்பிளே, ராக்கு எல்லாம் சொல்லிட்டா, எளுந்திரிங்க. ஒங்க தங்கமான கொணம் எனக்குத் தெரியாதா?

பங்: (எளுந்திருந்து பெரு மூச்சுடன்) அப்பா, பெருமாளு காப்பாத்தினாரு.

துள: (சிரித்துக் கொண்டே) இத்தினி ஞாபக மறதியைப் பத்தி யாருமே கேள்விப்பட்டிருக்க மாட்டாங்க.

பங்: (துளசிங்கத்தை உற்றுப் பார்த்து விட்டு) சார் யாருன்னு தெரியலியே! கேட்ட கொரலாவும் இருக்குது.

துள: (திடுக்கிட்டு) ஏண்டா பங்காரு, தொளசிங்கத்தைக் கூடவா மறந்துட்டே?

பங்: யாரு? தொளசிங்கமா? (நினைவு வந்து) ஐயையோ, என்ன வெக்கக்கேடுரா இது! ஒன்னைக்கூட மறந்துர்ர நெலைமை வந்திரிச்சா எனக்கு?

ராக்: நாயனா, இப்பவாச்சியும் கவலை தீந்துதா ஒங்களுக்கு?

ரங்க: (தலையைச் சொரிந்த வண்ணம்) தீர்ரதா? கவலை வலுப்படுது அம்மா, வலுப்படுது. மாப்பிள்ளேயோட மறதி எப்பிடித் தீரப் போகுதோ! ஒரே கவலையா இருக்குது.

The INDIAN RESTAURANT thanks all Patrons (North & South Indians) who have helped it to complete a decade of service in the catering line.

For LUNCHEONS, DINNERS, TEA & GARDEN PARTIES

Consult

INDIAN RESTAURANT

Block 4, Shahjahan Road, **NEW DELHI**

Prop: **S. S. MANI**

இலங்கை மந்திரிகள்



......டில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு......



விஜயம் செய்தார்கள்



கலைக்கும் பண்பாட்டுக்கும் சிறந்த தொண்டு செய்துவரும் திரு. வாஸன் அவர்களுக்கு டில்லித் தமிழர்கள் பாராட்டுக் கூறி மகிழ்ந்தார்கள்.

"சோறு ருசிக்குதில்லை — கிளியே"

சுப்பராமனும் கல்யாணியும் கானாட் பிளேஸைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். கல்யாணிக்குத் தனிக் குடித்தனம் வைத்ததில் பெருமைதான்; மனசில் மட்டும் குறை இருக்கத்தான் இருந்தது. அந்தி நேரத்தில், ஆசைக் காதலன் அருகில் நிற்க ஐஸ் கிரீமைச் சுவைத்துக்கொண்டு கானாட் பிளேஸ் புல்வெளியில் நிற்கப் போகிறோம் என்று அவள் கனவு கண்டதில்லை! சமேலிக் கொத்தையும் வாஸந்தித் தொடிலையும் வாங்கி, நடுத்தெருவில் நின்று தன்னுடைய நாயகன் அன்புடன் தலையில் சூட்டுவான் என்று எதிர்பார்க்கவில்லை. "கல்யாணி! சற்றுத் திரும்பேன்!" என்று அன்பு தழைக்கும் குரலில் சமேலிக் கொத்தை வைத்துக்கொண்டு சுப்பராமன் கொஞ்சியபோது, நாணத்தால் கல்யாணியின் முகம் சிவந்தது, ஆனால்...

'ஆனால்' என்ற வார்த்தையே சிடுக்குத்தான். ஆலுவும் அட்டை போன்ற சப்பாத்தியும் சப்ஜியும் அவளுக்கு அலுத்து விட்டது. சாம்பாரும் ரஸமும் சாப்பிடும் ஆசை தலை தூக்கி நின்றது. கணவரிடம் சொன்னால் 'தாட்' சாப்பாடு வந்து விடும். ஆனால் அது திருப்தி அளிக்குமா? தன் கையால் தயாரித்த உணவுக்கு ஈடாகுமா? அதிலும் தான் சமைத்ததை பெருமையுடன் பரிமாறும்போது "அட கண்ணு! அமிர்தமாயிருக்கே!" என்று சுப்பராமன் கூறும் வார்த்தைகளைக் கேட்க அவளுடைய நெஞ்சு ஏங்கிற்று. அன்புக் கணவரின் ஆசை வார்த்தைகளின் மதிப்பை அனுபவித்தவர்கள்தான் அறிவார்கள்!

நெஞ்சிலே புரளும் வேதனையை வெளியே கொட்டி, கணவரின் சந்தோஷத்தைக் கெடுக்கவும் அவள் விரும்பவில்லை. கலகலப்பாகத்தான் அவள் பழக முயன்றாள்.

கண்ணாடி அலமாரியிலிருக்கும் புலித்தோல் சட்டையைப் பார்த்துக் கல்யாணி வியந்து நின்றாள். புள்ளி போட்ட சோளி! தலையில் கட்டிக் கொள்ள பட்டுச் சவுரி......இன்னும் என்ன என்ன பொருளோ அலமாரியில் இருந்தன!

"பார்த்துக் கொண்டே நிற்கப் படாது கல்யாணி! பட்டிக்காடு என்று நினைத்துக் கொள்வார்கள். ஏதாவது வேண்டுமானால் கேள்! உள்ளே போய் வாங்கலாம்" என்றான் சுப்பராமன், அன்பு கலந்த கண்டிப்பில்.

கல்யாணி சட்டெனக் கடைக்குள் நுழைந்தாள். சுப்பராமனுக்கு ஆச்சர்யம் தாளவில்லை. பாஷை தெரியாத கல்யாணி உள்ளேபோய் என்ன கேட்கப் போகிறாள்?

என்ன வேண்டும் என்று அவர்களை நெருங்கினான் கடை சிப்பந்தி.

"அதோ—அந்தப் பொட்டலம்—K. G. K. சாம்பார் பொடியும் K. G. K. ரஸப்பொடியும்" என்று கையைக் காட்டினாள், கல்யாணி.

அவள் சொன்னது புரியாவிட்டாலும், K. G. K. என்று கேட்ட மாத்திரத்திலேயே, அழகாக பாக் செய்யப்பட்ட K. G. K. ரஸப் பொடி டின் ஒன்றையும் K. G. K. சாம்பார் பொடி டின் ஒன்றையும் அவன் எடுத்து விட்டான்.

"அசட்டுப் பெண்ணே!" என்றான் சுப்பராமன். வளையும் பட்டும் பகட்டுப் பொருளும் வாங்கப் போகிறாள் என்று எண்ணியவனுக்கு ஏமாற்றமே எஞ்சிற்று. ஆனால்.........

அவனுடைய நெஞ்சு சந்தோஷத்தால் விம்மிற்று, அன்றிரவு செய்யப் போகும் அறுசுவை உண்டியைப்பற்றி, நெஞ்சில் சந்தோஷம் குமிழியிட்டது.

"கல்யாணி! என்றான் சுப்பராமன். அவள் திரும்பினாள். அவளுடைய பொலிவும் பூரிப்பும் கண்டு திகைத்தான். 'நான்' பாக்கியசாலி" என்று வாய் முணுமுணுத்தது. 'நானும் தான்' என்றாள் கல்யாணி. ஆனால்..... அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமலேயே அவனும் சிரித்தான்.

(Advt.)

YOU CANNOT WALK LONG ON CRUTCHES

Successful Implementation of FIVE YEAR PLAN
Demands

VIGOUR AND HEALTH

You can Ensure both with

Union Dairy Farm (REGD)

Telegraphic Address : "UNION DAIRY"

Telephone No. 45263

97. BAIRD ROAD-NEW DELHI

PRODUCERS OF HIGH QUALITY DAIRY PRODUCTS

Certified by :

THE HON'BLE MINISTER OF FOOD & AGRICULTURE, GOVERNMENT OF INDIA (1952)
COMMANDERS-IN-CHIEF OF INDIAN ARMY & THE NAVY, ROYAL HOUSES,
HIGH GOVERNMENT OFFICIALS, EMBASSIES, CLUBS, HOTELS & SCHOOLS

Which undertakes to supply you

FRESH PURE AND REASONABLY PRICED PRODUCTS

Their Specialities

1. TABLE BUTTER
2. COOKING BUTTER FOR GHEE
3. CREAM 4. CHEESE 5. GHEE

THAT IS WHY SOUTH INDIAN PATRONS INSIST UPON

UNION DAIRY'S PRODUCTS

ESTABLISHED IN 1932

அதிர்ஷ்டசாலி

ச. மகாதேவன்

"கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிளந்து கொண்டு கொடுக்கும்" என்பது போல, வாசுவுக்கும் அதிர்ஷ்ட தேவதையின் அருள் சுரந்து விட்டதா? வாசு உண்மையில் அவ்வளவு அதிர்ஷ்டசாலியா? வாசுவால் நம்ப முடியவில்லை.

மாற்றாந்தாயின் கொடுமையைப் பொறுக்க முடியாமல், வாசு யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல், ஆழ்வார் திருநகரியை விட்டு ஓடி வந்து சென்னையை அடைந்து நான்கு நாட்களே ஆகியிருந்தன. செலவு போக மீதியாக இருந்த பணம் எல்லாம் செலவாகி விட்டது. வாசு சென்னைக்கு வந்தது ஏதாவது வேலை கிடைக்கும் என்ற எண்ணத்துடன். ஆனால் வேலை அவ்வளவு சுலபமாகக் கிடைத்து விடுகிறதா? அவன் எஸ். எஸ். எல். ஸி. தேறினவன்தான். ஆனால் அவன் மிதித்த ஆபீஸ்களில் எல்லாம் வேலை காலி இல்லை என்று சொல்லி அனுப்பி விட்டார்கள்.

ஏற்கனவே நான்கு நாட்கள் அரை வயிற்றுக்கு சாப்பிட்டு வந்ததால் ஒரு நேரமாவது வயிறு நிறைய உண்ண முடியாதா என்று எண்ணினான். உலகத்தில் வயிற்றுப் பசியைப் போக்க இவ்வளவு சிரமமா? வாசு எல்லாவற்றையும் வெறுத்தான். வாழ்க்கையை வெறுத்தான். ஆம் இனிமேல் ஒரே வழிதான் அவனுக்கு உண்டு. பட்டினியைப் போக்கத் தெரியாமல் அவன் இருந்து என்ன பயன்?

வாசு எல்லா நம்பிக்கையையும் இழந்து உயிரைக் கடலில் மாய்த்துக் கொள்வது என்று தீர்மானித்து விட்டான். உயிரை விடும்போது கூடவா அவன் நடந்து போக வேண்டும்? கையில் மூன்று அணா இருந்தது. அதைக் கொண்டு பஸ்ஸில்தான் திருவல்லிக்கேணிக்குப் போய் 'பீச்சை' அடையலாமே என்று எண்ணினான் அவன்.

தியாகராயநகரிலிருந்து திருவல்லிக்கேணிக்கு டிக்கட் வாங்கிக் கொண்டான். பஸ்ஸில்தான் அதிர்ஷ்டம் அவனை வரவேற்றது. அப்படித்தான் அவன் நினைத்தான். அந்த நினைப்பு பசுமை மாறாமல் மனசில் தங்கி விட்டது. அதிர்ஷ்ட தேவதையின் அரண்மனை வாசலுக்கு அழைத்துச் செல்ல அவன் யாருடைய உதவியையோ எதிர்பார்த்தான். அவள் கிடைத்தாள். ஆனால் அதிர்ஷ்டத்தைக் காட்டாமல் கண்ணாம்பூச்சி விளையாடி விட்டாள். ஆனால் இன்று...

II

வாசு தன் கையில் ஒரு தோல் பையை வைத்துக்கொண்டு அதிர்ஷ்டத்தைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அந்தப் பையை அவன் பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கும்போது, அவன் அருகில் உட்கார்ந்திருந்த ஒரு யுவதி வைத்து விட்டு போய் விட்டாள். எல்லோருக்கும் கடைசியாக அவன் பஸ்ஸிலிருந்து இறங்கினான். சாகத் துணிந்தவனுக்கு அவசரம் ஏது! ஆனால் மனசு என்பது விசித்திரமானது. இறங்கும்போது அந்தப் பையை அவன் எடுத்து வைத்துக்கொள்ள நேர்ந்து விட்டது. ஆம், என்ன செய்வது? அவன் பொறுப்

புணர்ச்சியில் பழக்கப்பட்டவன். பஸ் கண்டக்டர் அல்லது டிரைவரிடம் பையைக் கொடுத்தால் அவர்கள் அந்த யுவதியிடம் அதைச் சேர்ப்பார்களோ என்னவோ! சாவதற்கு முன்பு ஒரு நல்ல காரியத்தைத்தான் செய்து விடுவோமே என்று தோன்றிற்று அவனுக்கு. அதற்கு வேறு காரணமும் (நீங்கள்) கற்பிக்கக் கூடும். அந்தப் பெண்ணின் பால் வடியும் முகம்; பேசும் கண்கள், போதையூட்டும் முறுவல், அவனுடைய மனசை இளக்கி விட்டது என்று சொல்லி விடலாம். சாகத் துணிந்தவனுக்கு.........வாலிபத்தின் அனுதாப உணர்ச்சி பெண்மைபால் எழுந்த கவர்ச்சி.........சேச்சே, கடமை உணர்ச்சிதான் அவனுடைய சாவுத் திட்டத்தை ஒத்தி வைத்தது.

பஸ்ஸை விட்டு இறங்கினதும், வாசு அவசரமாகப் பையைத் திறந்து பார்த்தான். பையில் அந்த யுவதியின் விலாசம் ஏதேனும் இருக்கலாம், அங்ஙனம் விலாசம் தெரிந்தால் அதை அவளிடம் நேரில் சென்று கொடுத்து விடலாம் என்று ஆசை. ஆனால் பையில் விலாசம் ஒன்றும் கிடைக்கவில்லை. நான்கு ஐந்து ரூபாய் நோட்டுகள்—யுவதியின் 'போட்டோ' ஒன்று, ஒரு காகிதத் துண்டு—மற்றும் பௌடர், கைக்குட்டை முதலியன பையில் இருந்தன. காகிதத் துண்டிலும் யுவதியின் விலாசம் காணவில்லை. அதில் எழுதியிருந்தது, சில சினிமாக் கம்பெனிகளின் பெயர்கள் மட்டுமே.

பணத்தைக் கண்டதும் சாவின் உறுதி குலைந்தது. சாகவா பிறந்தான் அவன்? மனசிலே சலசலப்பு! அந்தப் பணத்தை அவன் எடுத்துச் செலவு செய்யலாமா? கூடாது. அவன் இளம் வயதிலேயே சத்தியமாக நடந்து கொள்ளப் பழகினவன். பணத்தை எடுத்துக் கொண்டால் திருட்டு ஆகாதா?

வாசுவின் மனதில் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் பையில் கண்ட போட்டோவை எடுத்து, எடுத்துப் பல தடவை பார்த்தான். எவ்வளவு அழகான பெண்! என்ன மோகனப் புன்னகை. அவள் போட்டோவில் எவ்வளவு அழகாக 'லதா' என்று கையொப்பமிட்டிருந்தாள்! அவள் யாரோ—தான் யாரோ! வாசுவின் நெஞ்சிலே கனல் சூடு. திடுக்கிட்டு நிமிர்ந்தான். பதிந்து கிடக்கும் கடலில் ஒரு கப்பல் அசைந்து சென்றது. அடிவானத்தைத் தொடும் கப்பல் உருக்கரையும்; மறையும். அவனுடைய நெஞ்சிலும் சாவின் உறுதி கரையலாயிற்று; மறையவும் கூடும். அந்தப் பெண் பையைக் காணமல் என்ன என்ன எண்ணுவாளோ! எப்படி எப்படித் தவிப்பாளோ! பணம் தொலையட்டும். படமும் பையும் இருக்கின்றனவே. அவை அன்புப் பொருளாக இருந்தால் அவற்றின் மதிப்பு எவ்வளவு! பெற்றவர்களுக்கல்லவா அதன் மதிப்பும் அருமையும் தெரியும்? உடையவரிடம் பொருளை ஒப்பிக்குமட்டுமாவது உயிரை விடாமலிருக்கக் கூடிய இக்கட்டு நேர்ந்து விட்டதே!

வாசு திரும்பத் திரும்ப யோசித்தான். பையில் வைத்திருந்த முகக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டபோதுதான் அவனுக்கு எல்லாம் சரியாகப் புலனாயிற்று, வாசுவினுடைய இளமையும், அழகும் லதாவை கவர்ந்திருக்க வேண்டும். எப்

படியோ அவனுடைய அவலக் கதியை எண்ணி, அவனுக்கென்றே அந்தப் பையில் பணத்தை வைத்துப் போயிருக்கிறாள்! வாசுவுக்கு அதிர்ஷ்ட தேவதை, லதா மூலம் அருள் புரிந்து விட்டாள்.

இவ்வாறு வாசு எண்ண, லதா பஸ்ஸில் ஏறிய விதமும் இறங்கின விதமும் ஒரு விதத்தில் உதவியாக இருந்தது. பஸ்ஸில் பெண்களுக்கென்று தனியிடமிருந்தும் லதா அங்குப் போய் உட்காராமல், வாசுவின் அருகில் போய் உட்கார்ந்தாள். இறங்கும்போதும், 'பஸ் ஸ்டாப்'பில் இறங்காமல், அவசர அவசரமாக 'ஸ்டாப்' தாண்டி இறங்கினது.

வாசு என்ன யோசித்தாலும் சரி, கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். தெய்வாதீனமாக அவனுக்குப் பண உதவி கிடைத்திருக்கிறது. அவன் பையில் உள்ள பணத்தை உபயோகிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. பணத்தை உபயோகித்து விட்டாலும், அந்தப் பணத்தைக் கூடிய சீக்கிரம் திருப்பிக் கொடுத்து விடலாமே? லதாவின் விலாசம் தெரியாவிட்டால் என்ன? அவள் எழுதி வைத்திருந்த ஸினிமாக் கம்பெனிகளில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே? இவ்வாறு ஒரு முடிவுக்கு வந்தான் வாசு.

III

பையில் கண்டெடுத்த பணத்தைக்கொண்டு வாசு இன்னும் சில நாட்களைத் தள்ளினான்; ஒரு சிறு வேலையைத் தேடிக் கொண்டான். 'பஸ் ஸ்டான்டி'ல் பத்திரிகைகள் விற்கும் வேலைதான் கிடைத்தது. வாசுவுக்கு இந்த வேலை பெரிய ஆறுதல் அளித்தது. அதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று பிச்சை எடுக்காமல் வாழ்க்கையை நடத்த முடிந்தது; இரண்டாவது என்றாவது ஒரு நாள் அவன் உயிரைக் காப்பாற்றிய லதாவைச் சந்திக்கலாம் என்ற எண்ணம். லதாவைச் சந்தித்தால் தான் ஜாக்கிரதையாக வைத்துக் காப்பாற்றி வந்த தோல் பையையும் பணத்தையும் திருப்பிக் கொடுத்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் வழக்கம் போல 'பஸ் ஸ்டான்டில்' வாசு பத்திரிகை விற்றுக் கொண்டிருந்தான். சட்டென்று ஒரு பெண்மணி பஸ்ஸில் வந்து ஏறினாள். வாசு அவளிடம் ஒரு பத்திரிகையை நீட்டினான். என்ன ஆச்சரியம்! அந்த யுவதி லதா!!

"என்னப்பா, பத்திரிகை வேண்டியதுதான். ஆனால் இப்போது கையில் காசு கொஞ்சம் குறைவாக இருக்குதே" என்றாள்

N. SUNDRAM

(Madras Stores, Empees' Restaurant, A.I.R. Canteen)

WISHES ALL HIS CUSTOMERS SUCCESS & HAPPINESS

DURING **JAYA** YEAR

(22nd year of his service to New Delhi Society)

Telephone: 43632 **Telegrams: EMPEES.**

லதா அவனைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே.

"அதனுலே என்னம்மா? உள்ளதைக் கொடுங்கள். பாக்கியைப் பின்னுலே வாங்கிக் கொள்கிறேன்" என்றுன் வாசு. நெஞ்சிலே வார்த்தை கிளுகிளுப்பு; அவனுக்கு வாய் குளறிற்று.

சிறிது யோசித்து, லதா, "வேண்டாமப்பா, நீ என்னேடு வீடுவரை கொஞ்சம் வா. பாக்கியையும் தந்து பத்திரிகையை வாங்கிக் கொள்கிறேன்" என்றுள்.

அவள் கூட வீடு வரை போய், விலாசம் அறிந்து வருவது நல்லது அல்லவா? பிறகு அவள் வீட்டிலே போய் அந்தப் பையைக் கொடுத்து விடலாமே. யாரோ, சிறு வயதில், அவன் ரேகையைப் பார்த்து அவனுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும் என்றது சட்டென ஞாபகம் வந்தது, அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

RAMANUJAM'S
BOARDING & LODGING
OFFERS YOU
EXCELLENT DECENT AND
HOMELY
BOARDING & LODGING
AT COMPETITIVE RATES

Boarding & Lodging Rs. 60/-
(Including Two Coffees)

Meals (Monthly) Rs. 30/-

For more particulars contact :—

RAMANUJAM'S
(Boarding & Lodging)
Krishna Market,
4/73, W. E. A. KAROL BAGH,
NEW DELHI-5.

"என்னப்பா, கேட்கிறேன். பதில் சொல்லாமல் சிரிக்கிறுயே!" என்றுள் லதா.

அவன், தன்னைச் சமாளித்துக் கொண்டான். அதிர்ஷ்டம் என்பது தேவதை தானே! பெண்ணே தேவதையாக.........வாழ்க்கையை வெறுத்து இருக்கும்போது எதிர் பாராமல் லதா உதவியதுபோல இப்பொழுதும் அவன் எதிர்பாராமல் தன்மீது அன்பும் அருளும் சொரிந்து,.........காதல் கல்யாணம், கீர்த்தி, அந்தஸ்து என்ற காட்சிகள் மனத்திரையில் தோன்றி மறைந்தன. நெஞ்சிலே பூரிப்புத் தோன்ற 'வாருங்கள்' என்ற குரலுடன் வழிகாட்டி முன் நடந்தான். ஒருவேளை அவளுடைய வாழ்க்கைக்கும் வழிகாட்டும் அதிர்ஷ்டம் கிடைத்து விட்டால்...........

IV

போகும் வழியில் வாசுவும் லதாவும் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. லதாவின் வீடு வந்தது.

"அப்பா, நான் சொன்னேனே, அந்த ஆள் இதோ வந்திருக்கிறுர்" என்றுள் லதா, வராந்தாவிலிருந்த ஓர் பெரியவரைப் பார்த்து.

லதாவின் தகப்பனுர் எழுந்து நின்றுர். அவரைக் கண்டதுமே வாசு நடுநடுங்கி விட்டான். கண் மூடிக் கண் திறக்குமுன் அவன் மனதில் என்ன என்னவோ தோன்றி மறைந்தது. பெண்களே வஞ்சகப் பேய்கள் தானு? எவ்வளவு சாமர்த்தியமாக லதா அவனைப் பஸ் ஸ்டான்டிலிருந்து வீடுவரை அழைத்து வந்து விட்டாள்! அவனுடைய மானமான வாழ்க்கைக்கு முடிவு வந்து விட்டதா? அவன் ஏன் அந்தப் பையை எடுத்தான்! அட, அதிர்ஷ்டமே! அட துரதிர்ஷ்டமே!.........

அவர் அணிந்திருந்த உடை அவர் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் என்று தெளிவாக எடுத்துக் காட்டியது. வாசுவுக்குச் சந்தேகமே இல்லாமல் தெரிந்தது— லதா அவனைப் போலீஸாரிடம் ஒப்படைத்து விட்டாள் என்று.

ஆயினும் நம்பிக்கையை இழக்காமல், லதாவின் தந்தையிடம், தன் வரலாற்றைக் கூறி, தான் பையைக் கண்ட சந்தர்ப்பத்தை விளக்கி, மன்னிப்புக் கேட்டு விடலாம் என்று வாசு எண்ணினான்.

"ஐயா, மன்னிக்கவேணும் நான்......" என்று தீனக் குரலில் ஆரம்பித்தான் அவன்.

"என்னய்யா மன்னிக்கணும்? எனக்கு எல்லாம் தெரியும். லதா எல்லாவற்றையும் சொன்னாள்"—என்றார் லதாவின் தந்தை. அவருடைய குரலிலிருந்த மிடுக்கும் எடுப்பும் அவனைக் கலகலக்கச் செய்துவிட்டன.

"ஸார், சொல்கிறதைக் கொஞ்சம் கேட்டுட்டு அப்புறம்........."

"எனக்குத்தான் எல்லாம் தெரியுமே. இன்னும் என்ன தான் கேட்க வேண்டியிருக்கு?

"ஸார், நான் சொல்கிறதைக் கொஞ்சம் கேட்டபின் தீர்மானம் செய்தால் நல்லது."

"அது என் வழக்கமே இல்லை. நான் ஒரு தீர்மானத்திற்கு வந்தால், வந்தது வந்தது தான். அதை யாராலும் மாற்றமுடியாது. இன்றிருந்து உமக்கு........."

வாசு போலீஸ் அதிகாரியின் பேச்சைக் கண்டு அஞ்சினான்.

போலீஸ் அதிகாரி மீண்டும் தொடர்ந்து "நானும் துப்பு அறியும் வேலையில் ஈடுபட்டு பதினேழு வருடங்கள் ஆகிவிட்டன. எனது முறைகள் ஒருகாலும் தவறினது இல்லை. இந்த லதாவின் விஷயத்திலும் அது மாதிரியே நடந்திருக்கிறது. உம்மைச் சும்மா விடலாகாது, சரியான......"

"தண்டனை" என்று வாசு மனதில் பூர்த்தி செய்துகொண்டான்.

"லதா அதை எடுத்துக் கொண்டு வா."—என்றார் அவர்.

வாசு மிரட்சியுடன் அவளைப் பார்த்தான். அவளோ 'மின் சிரிப்புக்' காட்டி மறைந்தாள்.

லதா ஒரு 'கவரை' எடுத்து தந்தையிடம் நீட்டினாள். தந்தை அதை வாசுவிடம் நீட்டி, "இந்தாரும், இதை எடுத்துப் படித்துப் பாரும் எல்லாம் விளங்கும்." என்றார்.

வாசு நடுங்கிக் கொண்டே அவசர அவசரமாக கவரைப் பிரித்துப் படித்தான்.

ஐயா,

எனக்கு உங்கள் விலாஸம் தெரியாது. ஆனால் என்றாவது ஒருநாள் உங்களை நேரில் கண்டு இதை அளிக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

லதாவுக்கு வந்துள்ள அதிர்ஷ்டம் உங்களால்தான். அவளுக்கு நேற்றுதான் "மெர்குரி மூவிடோன்" என்கிற பிலிம் கம்பெனியுடன் ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு ஒப்பந்தம் ஆயிற்று.

உங்களுக்கு ஒன்றும் புரியாது. சற்று விவரமாகவே சொல்கிறேன். நான் சொன்னதின் பேரில்தான் தோல்பையை லதா வைத்துவிட்டுப் போனாள். எனக்கு லதாவைப் பெரிய சினிமா நடிகை ஆக்க வேண்டும் என்று எண்ணம். நானாகவே நேரில் பிலிம் கம்பெனிகளை அணுகினால் போதிய பலன் கிடைக்காது. பிலிம் கம்பெனிக்காரர்களே போட்டியிட்டுக்கொண்டு, அவளை ஒப்பந்தம் செய்து கொண்டால், அவளுடைய—லதாவினுடைய மதிப்பு உயரும். இக்காரியத்தை

நிறைவேற்றவே உங்களை நம்பினேன். காரியமும் நிறைவேறியது.

பையில் கண்ட கடிதத்தில் எழுதியிருந்த பிலிம் கம்பெனிகளைத் தாங்கள் சந்தித்து லதாவின் போட்டோவைக் காண்பித்து அவளுடைய விலாசத்தைக் கேட்டிருக்கின்றீர்கள். அந்தக் கம்பெனிகளும் லதாவினுடைய எழிலைக் கண்டு வியந்து, சினிமாவில் நடிக்க அவளை ஒப்பந்தம் செய்து கொள்ள போட்டியிட்டு முன் வந்தனர். நானும் கம்பெனிகளுடன் பேரம் செய்து, கடைசியில் "மெர்குரி மூவிடோ"னுடன் ஒப்பந்தம் செய்துவிட்டேன்.

லதா இன்று பெரிய நடிகை. பெரிய அதிர்ஷ்டக்காரி.

லதாவின் அதிர்ஷ்டத்திற்குக் காரணமாக இருந்து உதவிய உங்களுக்கு என்ன கைம்மாறு செய்தாலும் மிகையாகாது. இத்துடன் என் நன்றியின் அடையாளமாக இரண்டாயிரம் ரூபாய்களுக்குச் 'செக்' ஒன்று வைத்திருக்கிறேன். தயவுசெய்துபெற்றுக்கொள்ளவும்.

மேலும், உங்களுக்கு ஆட்சேபனை யில்லாவிட்டால் நீங்களே லதாவின் அந்தரங்கச் காரியதரிசியாக—மாதம் முன்னூறு ரூபா சம்பளத்தில் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள

....

கடிதத்தை வாசித்து முடித்தான் வாசு. அவனால் அவன் கண்களையே நம்பமுடியவில்லை. கடிதத்துடன் 'செக்' இருந்தது.

"என்ன யோசிக்கிறீர்கள். யோசனை ஒன்றும் வேண்டாம். எடுத்துக் கொள்ளுங்கள் செக்கை. நீங்கள் அதிர்ஷ்டசாலி" என்று முடித்தாள் லதா.

"ஆம், நாம் அதிர்ஷ்டசாலிகள்" என்று ஒப்புக் கொண்டான் வாசு.

A Reputed House For

Telephone : 24254
Gram : SUNFLOWER, DELHI

★ **PRINTING MACHINERY**

Offsets, Wharfedales, Treadles & Allied Material

★ **PAPER**

Writing, Printing etc.

★ **RUBBER BLANKET**

★ **ROLLER COMPOSITION 'EDINA'**

★ **ALUMINIUM PLATES**

J. Mahabeer & Co. Ltd.,

Jama Masjid, Delhi.

A VISIT SOLICITED SATISFACTION ASSURED

“தில்லியிலே புது தில்லியிலே”

தி. ர. பஞ்சாபகேசன்

(நந்தவனத்திலோர் ஆண்டி—மெட்டு)

கானுட்டு ப்லேஸென்ருேர் மார்க்கெட்—அதில்
மேனுட்டுப் பெண்டிர்போல் மேக்கப்பு*ப்பூசி
இந்நாட்டுப் பெண்டிர்ந டப்பார்—கூட
கொரநாட்டுப் புடவையும் கொசவானும் உண்டு.

காப்பொன்று கையிலே மாட்டி—வர்ணப்
பூப்போட்ட சட்டையும் புதுசூட்டும் போட்டு
தலைப்பாகை சர்தார் ந டப்பார்—கூட
டப்பாக்கட் டுக்கட்டி சுப்பன்ந டப்பான்.

சாந்தினி சவுக்கென்ருேர் மார்க்கெட்—அதில்
தாந்தீனிப் பண்டத்துக் குண்டோவோர் எல்லை
எந்தநே ரத்தில்சென் ருலும்—அங்கே
கந்தேவா லாகடை முன்னுலே கூட்டம்.

நயாப சாரிலே சாமான்—வெகு
நயமாகக் கிடைப்பதாய் நாலுபேர் சொல்ல
பையோடு சைகிளில்ப் போயி—அங்கே
ஓயாதே மாறுவான் ஏகலைப்பிச்சன்.

பாகாரு கஞ்சுமோர் மார்க்கெட்—அதில்
வேகாத கறிகாய்க்கும் இல்லையே பஞ்சம்
சேர்கால ணுதானே லாபம்—ஆனல்
ஓர்காதம் போய்வாங்கிச் சொல்வான்ப்ர தாபம்.

இத்தோடு விடுவாளோ இல்லாள்—ஒரு
நாத்திக்கி முமைஸப் ஜீமண்டிக் கோட்டி
மொத்தமாய் வாங்கிவா என்பாள்—அவன்
முத்தலாய் தடி†வெண்டை வாங்குவான் பாரீர்.

---

*பாடபேதம்: மேம்பூச்சு
†தடி—ஐந்து சேர் எடை

அணுச் சக்தி

டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

சுமார் நூறு வருஷங்களுக்கு முன் பூமியின் வயதைப்பற்றி ஒரு பெரிய விவாதம் நடந்தது விஞ்ஞானிகளுக்குள். பூமி மற்ற கிரகங்களுடன் சூரியனிடமிருந்து பிரிந்தபோது பூமியினுடைய உஷ்ண நிலையும் சூரியனுடைய உஷ்ண நிலையும் ஒன்றாக யிருந்திருக்க வேண்டும். பிறகு பூமி குளிர்ந்திருக்க வேண்டும். பூமியின் மேல் பரப்புகள் வெகு விரைவாகவும் அதன் உட்புறம் வெகு நிதானமாகவும் குளிர்ந்து வந்திருக்க வேண்டும். இதற்குக் காரணம் உள்ளிருக்கும் வெப்பம் வெளிப்பாகங்களுக்குப் பரவி அங்கிருந்துதான் பூமியைவிட்டு வெளியேற முடியும். ஆனால் மண், பாறை போன்ற பூமிப்பொருள்களோ வெப்பத்தை எளிதாகக் கடத்தும் இயல்புடையனவல்ல. ஆகையால்தான் இன்றைக்கும் பூமி வெப்பம் இழக்கத் தொடங்கி வெகு காலமாகியும், பூமியின் உட்பாகங்களின் உஷ்ணநிலை உயர்ந்தே யிருக்கிறது. தரையிலிருந்து கீழே பூமிக்குள் செல்லச் செல்ல உஷ்ணநிலை அதிகரித்துக் காண்கிறது. இது ஆழமான சுரங்கங்களில் வேலை செய்து வருபவர்களுடைய பொது அனுபவம்.

சூரியனுடைய உஷ்ண நிலையோ அன்றைக்கு எப்படி யிருந்ததோ சுமாராக அதே நிலையில்தான் இன்றைக்கும் இருக்கிறது என்று கொள்வதற்கு வலிமையான சான்றுகளுண்டு. உஷ்ண நிலைமை மாறாமலிருப்பதற்குப் போதுமான காரணங்களுமுண்டு. அவைகளை இக்கட்டுரையின் பின் பாகங்களில் விவரிப்போம். ஆகையால் பூமி சூரியனை விட்டுப் பிரிந்தநாளில் பூமியினுடைய உஷ்ண நிலை எப்படி யிருந்ததென்று தெரியும். அதனுடைய தற்கால நிலையும் தெரியும். நாம் இப்பொழுது காண்கிற உஷ்ண நிலைக்குப் பூமி குளிர எத்தனை கோடி வருடங்கள் கழிந்திருக்க வேண்டுமென்று சுலபமாகக் கணக்கிடலாம். இப்படிக் கணக்கிடுவதற்குத் தேவையான விஷயங்கள் (1) சூரியனுடைய தற்கால உஷ்ண நிலைமை என்ன? அதுவே பூமி சூரியனிடமிருந்து பிரிந்தபோது பூமியின் உஷ்ண நிலையுமாகும். (2) பூமியின் தற்கால உஷ்ண நிலையென்ன? (3) பூமியின் உட்பிரதேசங்களிலிருந்து உஷ்ணம் வெளிப் பரவுவது எந்த அளவுக்கு? இம்மூன்று கேள்விகளுக்கும் நிச்சயமான பதில்கள் நமக்குத் தெரியும். ஆகையால் இவைகளைக் கொண்டு பூமியின் வயதை வெகு எளிதாகக் கணக்கிடலாம். இப்படி முதன்முதலாகக் கணக்கிட்டவர் லார்ட் கெல்வின். பூமியின் வயது சுமார் ஐம்பது கோடி வருஷங்களுக்கு மேற்பட முடியாதென்பது அவர் கட்டிய முடிவு.

ஆனால் இந்த வயது நிர்ணயம் பூமி நூல் பயின்றவர்கள் ஒப்புக்கொள்ளத் தக்கதாக இல்லை. பூமியின் மேல் பரப்புகளில் நாளடைவில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளேற்பட முன்னூறு நானூறு கோடி யாண்டுகளாவது வேண்டியிருக்கும். லார்ட் கெல்வின் கொடுத்த 50 கோடியெங்கே! நமக்குத் தெரிந்த பூமியின் மாறுதல்களுக்குத் தேவையான 300 அல்லது 400 கோடி களெங்கே! ஆதலால் பெரு விவாதம் நடந்தது.

இதனிடையில், சூரியனுடைய அபாரமான சக்திக்குக் காரணம் என்னவென்பதைப்பற்றியும் ஒரு விசாரணை நடந்து வந்தது. இந்தியா போன்ற தேசங்களில் நடுப்பகலில் கிடைக்கும் சூர்யசக்தி சுமார் 3,4 'ஹார்ஸ் பவர்' ஒரு சதுர கஜத்திற்கு, அதாவது 4,000 குதிரை வேகம், ஒரு ஏகருக்கு, ஒரு சதுரமைலில் 640 ஏகர். பூமியின் மொத்த பரப்போ சுமார் 20 கோடி சதுரமைல்கள். சூரியனிடமிருந்து நாலாபக்கங்களில் வெளிவரும் கிரணங்களில் பூமிக்குக் கிடைப்பது எத்

தனையோ கோடியிலொருபாகம். இதிலிருந்து சூரியனுடைய சக்தி எவ்வளவு அபாரமானது என்று தெரியவரும்.

இவ்வபார சக்திக்குக் காரணமென்ன? பூமியில் நமக்குத் தெரிந்த கரி, எண்ணெய் போன்ற எரிபொருள்கள் எரிந்து வருவது காரணமாகயிருந்தால், ஏதோ சில ஆயிர வருஷங்களுக்குமேல் தாங்காது. ஆகையால் இம்மாதிரியான பொருள்கள் எரிந்து வருவது சூரியனுடைய சக்திக்குக் காரணமாக முடியாது.

சூரியனுடைய சுற்றளவு நாளடைவில் சுருங்கி வந்தால் அது ஏராளமான சக்தி உற்பத்திக்குக் காரணமாகலாமென்று ஹெல்ம்ஹோல்ட்ஸ் முதன் முதலாக எடுத்துக்காட்டினர். ஆனல் இதுவும் போதுமான காரணமாக மாட்டாது. சூரியன் ஆதியில் எவ்வளவு பெரியதாயிருந்தாலும், நாம் இப்போது காண்கிற அளவுக்குச் சுருங்குவதால் கிடைக்கும் சக்தி 20 கோடி வருஷங்களுக்குமேல் தாங்காது. ஆகையால் ஹெல்ம்ஹோல்ட்ஸ் எடுத்துக்காட்டிய காரணமும் சூரியனுடைய அபார சக்திக்கு இடங்கொடாது.

பூமி குளிர்ந்து வரும் வேகம் கெல்வின் கணக்கிட்ட அளவுக்கு வெகு குறைவாக இருக்கவேண்டும். அதாவது பூமிக்குள் தன்னிடையே சூடுண்டாவதற்கு ஏதோ காரணமிருக்க வேண்டும். சூரியனுடைய அபார சக்திக்கும் வேறு ஆதாரம் வேண்டும். இந்த இரண்டு முடிவுகளுக்கும் சமாதானம் நமக்கு இப்பொழுது தெரியும், அணுவின் சக்திதான் இவ்விரண்டுக்கும் காரணம் என்று. ஆனல் பூமிக்குச் சூடுதரும் அணுச்சக்தி ஒருவிதம். சூரியனுடைய சக்திக்குக் காரணமாகும்அணுச்சக்தி வேறுவிதம். அணுவின் சக்தியை இரண்டு விதமாக நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சென்ற ஐம்பது வருஷகால ஆராய்ச்சிகளிலிருந்து நமக்குத் தெரியும். அவ்விரு வழிகளையும் முறையே அடியாகக் கொண்டு பூமியின் சூட்டுக்கும் சூரியனின் அபாரமான சக்திக்கும் காரணங்கள் அமைந்திருக்கின்றன. அவ்விரண்டு வழிகளைப் பற்றியும் சற்று இங்கு ஆராய்வோம்.

ஐன்ஸ்டைனுடைய ரிலடிவிட்டி ஸித்தாந்தத்துக்கு அடிப்படையாக அமைந்தது பிண்டசக்தி சமத்துவம். பிண்டத்திற்கோ, சக்திக்கோ ஒரு நாளும் அழிவு கிடையாது என்பது வெகு நாளாக விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆனல் பிண்டத்தைச் சக்தியாக மாற்றலாம். அதே மாதிரி சக்தியைப் பிண்டமாக மாற்றலாமென்று நமக்குத் தெரியவந்தது ஐன்ஸ்டைனின் சித்தாந்தத்திலிருந்து. இருவகையான இம்மாற்றங்கள் ஐன்ஸ்டைனுடைய சித்தாந்தத்திற்கு அடிப்படையாக அமைந்தது தவிர, நாம் இன்று ஆராய்ச்சி சாலைகளில் செய்துகாட்டக் கூடியவை. இப்படி பிண்டம் சக்தியாகவும் சக்தி பிண்டமாகவும் மாறும்போது இம்மாறுதல் அளவுபட்டிருக்கும்.

அதாவது ஒரு கிராம் பொருளை முற்றிலும் சக்தியாக மாற்ற முடியுமானல் அதிலிருந்து சுமார் 9×10 எர்க் சக்தி கிடைக்கும். முற்றிலும் சக்தியாக மாற்ற முடியுமானல் என்று சொன்னேம். பிண்டத்தைச் சக்தியாக ஆக்குவது சுலபமல்ல. அதற்கு எத்தனையோ நிபந்தனைகள் உள்ளன.

அணுவில் அமைப்பு எப்படியென்றல் அதனுடைய பிண்டத்தின் பெரும் பாகம் அணுவில்நடுவே ஒருசிறு இடத்தில் அடங்கியுள்ளது. அதைச் சுற்றி எலெக்ட்ரான் என்று சொல்லக்கூடிய மின்னணுக்கள் பறந்து கொண்டிருக்கும். ஆனல் இம்மின்னணுக்களுக்களின் பிண்டம் வெகு குறைவானது. (Mars) அணுவின் சுருங்கிய மத்திய பாகத்தின் பிண்டத்தில் வெகு சிறு பாகம் தான், வெளிச்சுற்றும் மின்னணுக்களின் பிண்டம். யுரேனியம் அணுவை உதாரணமாக எடுத்துக் கொண்டால் அதன் மொத்த பிண்டத்தில் ஐயாயிரத்திலொரு பாகம் தான் அதனுடைய மின்னணுக்களின் பிண்டம்.

அணுவின் பெரும்பான்மையான பிண்டம் அடங்கியுள்ள சுருங்கிய

மத்திய பாகத்துக்கு நியூக்ளியஸ் என்று பெயர். மற்ற அணுக்களின் பிண்டங்களை அளவிடுவதற்கு ஹைட்ரஜன் அணுவின் பிண்டத்தை அடிப்படையான அளவுகோலாகக் கொண்டால் அவ்வணுக்களின் பிண்டங்கள் படிப்படியாக ஒன்றிலிருந்து சுமார் இருநூற்று நாற்பது வரை ஏறிவரும். இந்தக் கணக்கில் ஹீலியம் அணுவின் பிண்டம் 4, பிராணவாயு அணுவின் பிண்டம் 16, இரும்பு அணுவின் பிண்டம் 56, காரீயம் 208, ரஸம் 200, தோரியம் 232, யுரேனியம் 238 என்று கணக்குக் கிடைக்கும். ஒரே அணுவுக்கு பிண்டங்கள் வேறுவேறாகவும் இருக்கலாம். உதாரணமாக, காரீய அணுவின் பிண்டம் பின்வரும் எண்களில் ஏதாவதொன்றாக இருக்கலாம். 204, 206, 207, 208 - இவைகளெல்லாவற்றையும் ஈய அணுவின் ஐஸ்டோப்புகள் என்று கூறுவார்கள். பிண்டங்கள் வேறு வேறாக விருந்தாலும் ஈய அணுவின் ஐஸடோப்புகள் எல்லாம் ஈயத்தின் குணங்களுடையனவாகவே இருக்கும். அவைகளெல்லாம் ஈயமே. இதே மாதிரித்தான் மற்ற அணுக்களின் பிண்டங்களும்.

ஆனால் இங்குக் குறிப்பாக நாம் சொல்ல வேண்டுவது ஒன்றுண்டு. அதாவது அணுக்களில் பிண்ட அணுவைக் குறிப்பிடும் எண்களெல்லாம் முழு எண்கள். நாம் சாதாரணமாக ஆராய்ச்சிச் சாலையில் கையாளும் க்ளோரினை எடுத்துக்கொண்டு, மேலெழுப் பார்த்தால் அதன் அணுவின் பிண்டத்தின் அளவு 35·45 என்று தெரியவரும். ஆனால் ஆழ்ந்து ஆராய்ந்தால் அதன் அணுக்கள் ஒரேமாதிரியானவையல்ல வென்றும் 35 பிண்ட அளவுகொண்ட க்ளோரின் ஐஸடோப்பும் 36, 37 கொண்ட ஐஸடோப்பும் கலந்தவை என்றும் தெரியவரும். அவைகளைத் தனித்தனியாகப் பிரிக்கலாம். பிரித்து அளந்தால் பிண்ட அளவுகள் முழு எண்களாகவே தேறும்.

இப்படி பிண்ட அளவுகள் முழு எண்களாக அமைந்திருப்பதற்குக் காரணம் எல்லா அணுக்களின் நியூக்ளியஸும், ப்ரோடான், நியூட்ரான் என்ற இரண்டு பரமாணுக்களால் ஆக்கப்பட்டவை. ப்ரோடானுக்கும் நியூட்ரானுக்கும் பிண்டத்தில் வித்தியாசமில்லை. இவ்விரண்டு பிண்டங்களின் அளவும் ஹைட்ரஜன் அணுவின் அளவாகவே யிருக்கும். ஆனால் ப்ரோடானில் மின்சாரமுண்டு. நியூட்ரானுக்குக் கிடையாது.

பிண்டங்களின் அளவுகளெல்லாம் முழு எண்களாகக் காணப்படுகின்றனவென்று சொன்னேம். ஒரு அணுவின் பிண்டத்தைக் குறிக்கும் எண் அந்த அணுவின் நியூக்ளியஸ்ஸில் மொத்தம் எத்தனை ப்ரோட்டான்களும் நியூட்ரான்களும் கூடினவை என்பதைத் தெரியப்படுத்தும். இந்த எண் முழு எண்ணாகத்தானே இருக்க முடியும். இந்த முடிவு பொதுவாக உண்மையானாலும் வெகு நுட்பமாக அணுக்களின் பிண்டங்களை அளந்து பார்த்தால் முழு எண்களிலிருந்து மிகச் சிறிது வேறுபடுகின்றன. வேறுபடுவதற்குக் காரணமுண்டு. அணுசக்தியைப் பயன்படுத்தும் முறையும் அதிலிருந்து ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

அநேகம் ப்ரோட்டான்களும் நியூட்ரான்களும் ஒன்றுகூடி அணுவின் நியூகிளியஸில் சுருங்கிக் கிடக்கின்றன என்று சொன்னேம். இவைகள் தனித்தனியே எளிதில் பிரிக்க முடியாதபடி ஒன்றேடொன்றுகூடி இணைந்திருப்பதற்குக் காரணங்களைப்பற்றி அநேக வருஷங்களாக ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இன்னும் சந்தேகமற சமாதானம் கிடைத்ததாகச் சொல்ல முடியாது. ஆனால் எவ்வளவு இறுக அவைகளின் கூட்டுறவு என்று மாத்திரம் எளிதாகச் சொல்லலாம். கூட்டுறவு இறுக இறுக, பிணையின் வலிமையை ஒட்டி அந்த நியூக்ளியஸின் பிண்டம் சற்று குறைவுபட வேண்டும். இந்த வலுத்த பிணையின் சக்திக்கு ஆதாரம் வேண்டுமே. பிண்டத்தில் வெகு சிறிய பாகம் சக்தியாக மாறி

யிருந்தாலல்லவோ இப்பிணை நிகழக் கூடும். ஆகையால் இவ்வணுக்களின் பிண்டங்களை வெகுநுட்பமாக அளந்து பார்த்தால், அணுவில் கூடியுள்ள ப்ரோடான், நியூட்ரான்களுடைய பிண்டங்களின் மொத்தத்திற்குச் சற்று குறைவுபட்டுக் காணவேண்டும். இக்குறைவு எவ்வளவோ அவ்வளவாக இருக்கும் அந்த நியூக்ளியஸில் அடங்கியுள்ளப் ப்ரோட்டான் நியூட்ரான்களின் பிணை வலிமை. நியூட்ரான்களையும் ப்ரோட்டான்களையும் தனித்தனியே நியூக்ளியஸிலிருந்து பிரிக்க வேண்டுமானால் இந்த அளவுக்குச் சக்தி உபயோகிக்க வேண்டியிருக்கும்.



நமக்குத் தெரிந்த அணுக்களில் ப்ரோட்டான் நியூட்ரான் கூட்டுறவினால் ஏற்படும் பிண்டக் குறைவுகள் மேலே குறித்திருக்கும் சித்திரத்தில் வரையப்பட்டிருக்கின்றன. இந்தக் குறைவுபாடு அதிகமாகக் காணப்படுவது இரும்பு போன்ற அணுக்களில். ஒருபுறம் ஹைட்ரஜன் போன்ற அணுக்களும், மறுபுறம் யுரேனியம் போன்ற அணுக்களும் படத்தில் ஏறிக் காண்கின்றன.

இதிலிருந்து இரண்டு முக்கிய முடிவுகள் நாம் கொள்ளலாம். யுரேனியம் போன்ற அணுக்களை வேறு கனக் குறைவான அணுக்களாக மாறும்படி சிதைத்தால் ஏராளமான சக்தி உண்டாக்கலாம். இதுவே அணுக்குண்டுகளின் மர்மம். ஒரு சிறிய அளவிற்கு இது பூமிக்குள் இயற்கையாகவும் நடந்துவருகிறது. இதுவே நாம் மேலே சொன்ன பூமியின் சூட்டுக்குக் காரணம்.

அதேமாதிரி ஹைட்ரஜன் போன்ற அணுக்களை இணைத்து ஹீலியம் போன்ற அணுக்களாக மாற்ற முடியுமானால் அதுவும் ஏராளமான சக்திக்குக் காரணமாகும். இது ஹைட்ரஜன் அணுக்குண்டின் சக்திக்குக் காரணம். இயற்கையில் சூரியனுடைய அபாரமான சக்திக்கும் இதுவே காரணம்.

✲

நாட்டுக்கு ஆபரணம்

பிராயம் முதிர முதிர உடலும் செல்வமும் முதிர வேண்டுமென்று கருதி அவற்றிற்குரியவற்றைச் செய்பவர்கள் பெரும்பாலும் மலிந்த இந்த உலகத்தில் நாளுக்கு நாள் பிராயம் முதிர்வதற்கு முன் அறிவு முதிரும் முயற்சிகளை மேற்கொள்ளும் கல்விமான்களே ஒரு நாட்டுக்கு ஆபரணமாகத் திகழ்பவர்கள்.

—டாக்டர் ஐயரவர்கள்

நடனம்

ஸ்ரீ V. S. கணபதி சாஸ்திரிகள், B.A., B.L. புதுக்கோட்டை

இராகம்: அடாணு தாளம்: ஆதி

பல்லவி

என்றும் அவன் நடனம்
எழுலோ கமும் ரங்கம்
ஸப்தஸ்வரம் கடந்தான்
ஸ்வயம்பு த்வனி கொண்டான் (என்றும்)

அநுபல்லவி

நட்டுவனார் இல்லை—
நாதம்கொ டுப்பார் இல்லை—
எட்டுத் திக்கில் ஓடும்
இவன் ஸ்வரமே சாக்ஷி (என்றும்)

சரணம்

நவரச தாண்டவம்
நாதப்பிரும் மாண்டத்தில்
சிவரச சாகரம் சிவகாமி சிந்தையில்
புவன ஸௌந்தர்யத்தில்
பிரமன் கைக்கலையில்
ஆடிய பாதத்தை
அவனியார் அறிவரோ (என்றும்)

A Reputed House For

Phone: 24254
Telegram: BALBIRCO

* PRINTING MACHINERY
Offsets, Wharfedales, Treadles & Allied Materials.

* PAPER
Writing, Printing Etc.

* ZINC PLATES

Balbir Brothers, Ltd.,
Jama Masjid, Delhi.

A VISIT SOLICITED SATISFACTION ASSURED

நமஸ்காரம்

அறிவுச் சுடரின் அதிதேவதை சரஸ்வதி. சரஸ்வதியில் ஞான சரஸ்வதி என்ெருரு மூர்த்தத்தைக் கல்லில் வடித்து வணங்கி மகிழ்ந்தார்கள் நம்முன்னோர்கள். சிற்பக் கலைக்குச் சிகரமாக விளங்கிய சோழ நாட்டிலுள்ள கங்கைகொண்ட சோழபுரத்திலிருக்கும் ஞான சரஸ்வதியை சுடரின் அட்டைப் படமாக அலங்கரித்து உதவியிருக்கிருர்கள் பிரபல சித்திரக் காரர்களான திரு. பாலு சகோதரர்கள். நந்தா விளக்கும் பின்னணிச் சிற்பமும் மைசூரிலுள்ள ஹளேபட் சிற்பங்கள்.

தமிழ்ச் சங்கத்திடம் மாருத அன்புகொண்ட பாலு சகோதரர்களுக்கு நமது நன்றி.

நம்முடைய விருப்பத்தை ஏற்று தமிழ் நாட்டு அறிஞர் களும், டில்லிவாழ் எழுத்தாள நண்பர்களும் எழுத்தோவியங் களை உதவி சிறப்பாக ஆதரித்தார்கள். அவர்களுக்கும் நமது நன்றி.

சுடரை எல்லா அம்சங்களிலும் சிறப்புறச் செய்த பெருமை பல அன்பர்களைச் சேர்ந்தது. தேன் கூட்டிலுள்ள ஈக்களில் எந்த ஈயின் சேவையைப் பெரிதெனக் கொள்ள முடியும்? விளம்பரம் சேகரிப்பதிலிருந்து, மனங்கோணுமல் குற்றேவல் செய்தது வரையில் பல அன்பர்கள் பங்குகொண் டார்கள். சமூக அந்தஸ்தும், அறிவுத்திறனும் படைத்த அன்பர்கள் சங்கத்தின்பாலுள்ள அன்பு காரணமாகச் செய்த தொண்டுக்கு தமிழ்ச் சங்கம் கடமைப்பட்டுள்ளது.

பத்திரிகை எனப் பெயர் பெற்றதும் அதன் ஜீவநாடி விளம்பரம் என்பது பழக்கத்தில் வந்த சொல்லும் செயலு மாகிவிட்டது. சுடருக்கு விளம்பரம் கொடுத்து ஆதரித்த அன்பர்கள் இமயம் முதல் குமரிவரையுள்ளவர்கள். அனை வருக்கும் நமது நன்றி.

புது தில்லி
ஜய ஹூ சித்திரைமீ

ஆசிரியர்

தில்லித் தமிழ்ச் சங்கம்

★ தலைநகரில் வசிக்கும் தமிழ் அன்பர்களை ஒன்று கூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலைகளை அனுபவிக்கச் செய்கிறது.

★ தமிழ் இலக்கியத்தின் சிறப்பை, பிறமொழியினருக்கு அறிவிக்கிறது.

★ தமிழ்க் கவிகளையும், பெரியோர்களையும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.

★ பொங்கல், வருஷப் பிறப்பு போன்ற தமிழ் விழாக்களைக் கொண்டாடுகிறது.

★ ஸ்ரீ. சத்தியமூர்த்தி நூல் நிலையம், இலவச வாசகசாலை, இலவச ஹிந்தி வகுப்பு ஆகியவற்றை நடத்துகிறது.

★ ஸ்ரீ. வ. வெ. சு. அய்யர் ஆங்கிலத்தில் எழுதிய 'கம்பராமாயணம்—ஓர் ஆராய்ச்சி' என்ற நூலை வெளியிட்டிருக்கிறது.

★ ஆண்டு தோறும், 'சுடர்' மலரை வெளியிடுகிறது.

வைரங்கள், நகைகள்

பருமனைக்கொண்டு மட்டும் வைரத்தின் மதிப்பை அளவிட முடியாது.
வர்ணம், பட்டை பிரகாசம், இவற்றையும் கொண்டே மதிப்பிட வேண்டும்.
ஆகையால் வைரமோ, வைரம் பத்த நகைகளோ வாங்கும்போது, நம்பிக்கை
யும் அனுபவமும் வாய்ந்த நகைவியாபாரியின் உதவியை நாடவேண்டும்.

உம்மிடி
ராமையா செட்டி குருசாமிசெட்டி & கோ.

23-25, சைனா பஜார் ரோடு, சென்னை

உம்மிடியார் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்களைக் கொண்டு உங்கள் வீட்டை பிரகாசப்படுத்துங்கள்

டீ செட்டுகள், போஜன பாத்திரங்கள், பழாஸ செட்டுகள் மற்றும் எல்லாவிதமான சமையல் பாத்திரங்களும், ஆர்டரின் பேரில் தயாரித்துக் கொடுக்கப்படும். உயர்ந்த ரக அப்பழுக்கற்ற ஸ்டீல்—உன்னத வேலைப்பாடுகள்—நவீன நாகரிக கலைத்திறமையான கவர்ச்சிகரமான ரகங்கள்.

ஷைனோ பாத்திரங்களைத் துலக்கும் கலவை. வெள்ளி, ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்களைத் துலக்குவதற்கு உன்னதமான சாதனம்.

உம்மிடியார் (Mfrs.) லிட்., மதராஸ்-2.



நீங்களும் உங்கள் வம்சத்தினரும் அனுகூலமடைய
இவ்வுத்தரவாதம் பெற்ற செக்யூரிடிகளில்

முதலீடு செய்யுங்கள்

நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்	ரு. 100 முதலீடு செய்தால் 12 வருடங்களில் ரு. 150 ஆகக் கிடைக்கும்.
பத்து வருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாசிட்டுகள்	$3\frac{1}{2}$ சத விகித வட்டி உண்டு. வருடம் ஒருமுறை வழங்கப்படும். அசல் தொகை 10 வருட காலம் முதலீட்டிலிருக்கும்.
போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் டிபாசிட்டுகள்	ரு. 10,000 வரை டிபாசிட்டுகளின் பேரில் 2% வட்டி சேரும். ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் கூட்டுக்கணக்குகளானால் ரு. 20,000 வரை வட்டியுண்டு.

இவ்வித வட்டிக்கு இந்திய வருமான வரி கிடையாது

முன்னேற்றப்பாதைக்கு வழிகாட்டிகள்

இந்தியாவின் சுபீட்சத்திட்டம் வெற்றிபெறுமாக

இதர விவரங்கள் மற்றும்/அல்லது இம் முதலீடுகள் சம்பந்தமான விதிகளையறிய நேஷனல் ஸேவிங்ஸ் கமிஷனர், கஸர்ட்டன் காஸில், ஸிம்லா-3 விலாசத்திற்கோ அல்லது உங்கள் ராஜ்யத்திலுள்ள ரீஜனல் நேஷனல் ஸேவிங்ஸ் ஆபீஸருக்கோ தயவு செய்து எழுதவும்

A.C. 514-TM

A Turning Point in the History of
Insect Pests Control

Use the famous German Insecticides

Manufactured by

MESSRS.

FARBENFABRIKEN BAYER AKTIENGESELLSCHAFT

Represented by :

Messrs. CHIKA LTD., BOMBAY

Specialities :

1. **FOLIDOL E.605 (Conc.)**

   A spray of high potency for controlling insect and mite pests in farm, garden and orchard.

2. **FOLIDOL E.605 (Dust)**

   Specially indicated in controlling pests in cotton.

3. **CUPRAVIT (OB. 21)**

   A proven remedy for pests relative to Apples, Bananas, Citrus, Straw Berries, Mangoes, Potatoes, Cabbage, Tomatoes, Onions, Tobacco and also Roses and other Garden plants.
   A BOON to combat BLISTER BLIGHT in TEA and Leaf and Black Rot disease in COFFEE.

4. **CERESAN (Both Dry and Wet seed dressing)**

   A universally effective seed dressing for control of seed-borne diseases on the seeds of cereals, vegetables and other crops. A protection from soil-borne fungi and Bacteria. Increased germination saves seeds and results in higher yields.

Available with Distributors throughout India

ENQUIRIES SOLICITED

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்.

போன் : 250 (5 லைன்)-மதுரை தந்தி : "ஹார்வி"

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள்

நாங்கள் சப்ளை செய்வது

நெம்பர் 80 வரை நூல்கள்

13817

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள் மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

போன் : 420 (5 லைன்) தந்தி : "ஹார்வி"

Edited and Published by Sri. T. G. Anantaswami
for The Delhi Tamil Sangam, New Delhi.
Printed by K. S. S. Rajan at The Jupiter Press Ltd., Madras-18.

MAHAMAHOPADHYAYA

வாஸனுக்கு வாகை மாலை



சூட்டுவதும் ஒரு தலைவர்—மாலை
சூடுவதும்—ஓர் தலைவர்
விஞ்ஞானப் பெரியோனும்
விஜயனும் படாதிபதியும்
தம்மிருவருள்ளே—புன்முறுவல் பூத்ததென்னே ?

தமிழ்ச் சங்கத் தலைவர்—

அவ்வை யெனும் படம் பிடித்த
அண்ணலே—அவனிபுகழ்ச் செம்மலே—வருக !
ஆடவரும் நாரியரும் ஆர்வமுடன்
சுவைக்கும் ஆனந்த விகடன் ஆசிரிய—வருக !
வரையாது நன்மை வழங்கி வரும்
வள்ளலே நீ வருக !

படாதிபதி—

அன்பெனும் அக்கிரத்தால்
இங்குளோர் எனைப்பிணைத்தார் !
ஆற்றலும் நம்மதன்றே
ஆண்டவன் அருட்கூத்தன்றோ ?

[ந்யூ டெல்லி டவுன் ஹாலில் சென்ற மார்ச்சுமீ 15ட யன்று டெல்லி தமிழ்ச் சங்கம் ஸ்ரீ எஸ். எஸ். வாஸனுக்கு வரவேற்பளித்தது. சங்கத் தலைவர் டாக்டர் க. ஸ்ரீ. கிருஷ்ணன் ஸ்ரீ வாஸனுக்கு மாலையிட்டார்.]

எங்கள் குழலோசை எல்லோர்க்கும் இனிமை சேர்க்கும்
ஜெமினி
ஸ்டுடியோஸ்
இன்பமளிக்க இனிய
படங்களைத் தயாரிப்பவர்கள்